வாழ்வை மாற்றும்

ஆவிக்குரிய

# ஆற்றல்

உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தி,
உங்கள் வாழ்வினை மாற்றியமைக்கும்
ஆறு நூல்களின் தொகுப்பு

டெரிக் பிரின்ஸ்

# வாழ்வை மாற்றும் ஆவிக்குரிய ஆற்றல்

RHEMA BIBLE INSTITUTE
Date. 10. 3. 2007
P.O. BOX: 16., NAGERCOIL

டெரிக் பிரின்ஸ்

DPM

Derek Prince Ministries - India

Originally published in English under the title
**"LIFE-CHANGING SPIRITUAL POWER"**

Copyright © 2003 Derek Prince Ministries - International

Published by Derek Prince Ministries-Asia/Pacific
PO Box 2029, Christchurch, New Zealand 8015
admin@dpm.co.nz

Printed by Derek Prince Ministries

C30 TA/3000/0306/SR/Ed.2
All rights reserved.

ISBN 81-87858-84-2

"LIFE-CHANGING SPIRITUAL POWER" (Tamil)
**"VALVAI MATRUM AVIKURIYA ATRAL"**

Published by permission in the Tamil language.
Translated into Tamil language by:
**MR. G. SAMUEL KARUNAKARAN**

No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or by means of any information storage and retreival system, without permission in writing from the publisher.

For orders & other enquiries please contact :
**DEREK PRINCE MINISTRIES - INDIA**
18/32 Mangammal Salai, Renganagar
Trichy - 620 021, Tamil Nadu, S.India.
E-mail: r_m_c@vsnl.com
Phone : 00-91-431-2459464 / 2457181
Fax: 00-91-431-2459564

DPM

www.derekprince.org

# பொருளடக்கம்


I தெய்வீக பரிசுத்தம் ........................................................ 9

II சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து செல்வது எவ்வாறு

1. ஆசீர்வாதங்கள் ........................................................ 31
2. சாபங்கள் ........................................................ 34
3. ஆசீர்வாதங்களும் சாபங்களும் வெளிப்படும் விதம் ........................................................ 54
4. சாபங்களின் தொகுப்பு ........................................................ 55
5. சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து செல்வது எவ்வாறு ........................................................ 57
6. தேவனைத் துதிப்பதின் மூலம் இதனை முடிவிற்குக் கொண்டு வா ........................................................ 63

III உங்களில் உள்ள தூய ஆவியானவர்

1. பெந்தெகொஸ்தேக்கு முன்பு ........................................................ 66
2. இயேசுவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் ........................................................ 72
3. பெந்தெகொஸ்தேயில் நடந்தது என்ன ........................................................ 77
4. நமக்குள்ளே வசித்து உதவுபவர் ........................................................ 83
5. தேவனுடைய வசனத்தின் வெளிப்பாடு ........................................................ 88
6. இயற்கைக்கு அப்பாற்பட்ட தளத்திற்கு உயர்த்தப்படுதல் ........................................................ 93
7. ஜெபத்தில் உதவி ........................................................ 99
8. நம்முடைய சரீரங்களுக்கு ஜீவனும் ஆரோக்கியமும் ........................................................ 103
9. தெய்வீக அன்பின் வெளிப்பாடு ........................................................ 108
10. பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை ஒப்புக் கொடுப்பது எவ்வாறு ........................................................ 114

IV தேவனின் மருந்து புட்டி

1. என் வார்த்தைகளுக்குச் செவி சாய் ........................................................ 126
2. என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய் ........................................................ 129
3. அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக ........................................................ 133

4. அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக் கொள் ....................137

## V ஆவிக்குரிய போராட்டம்

### பகுதி 1: யுத்தத்தின் தன்மை

1. இரண்டு எதிரிடையான ராஜ்யங்கள் ....................143
2. சாத்தானின் தலைமையிடம் ....................148
3. தேவ தூதர்களின் யுத்தம் ....................153
4. ஆயுதங்களும் போர்க்களமும் ....................158
5. நமது வெற்றியின் அடிப்படை ....................162

### பகுதி 2: நமது பாதுகாப்புக் கவசம்

6. தேவனுடைய சர்வாயுத வர்க்கம் ....................168
7. சத்தியம் என்னும் கச்சை ....................172
8. நீதியென்னும் மார்க்கவசம் ....................174
9. சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை ....................179
10. விசுவாசமென்னும் கேடயம் ....................182
11. இரட்சணியமென்னும் தலைச்சீரா ....................185
12. ஆவியின் பட்டயம் ....................191
13. பாதுகாப்பற்ற பகுதி ....................195

### பகுதி 3: தாக்கும் ஆயுதங்கள்

14. தாக்கும் நிலையை மேற்கொள்ளுதல் ....................198
15. ஜெபம் என்னும் ஆயுதம் ....................203
16. துதி என்னும் ஆயுதம் ....................208
17. பிரசங்கம் என்னும் ஆயுதம் ....................213
18. சாட்சியின் ஆயுதம் ....................219

## VI சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள்

முன்னுரை: மாணவர்களுக்கான அறிவுரை ....................226

வேதத்திலுள்ள புத்தகங்களைச் சுருக்கமாக எழுதும் முறையின் அட்டவணை ....................232

1. தேவனுடைய மீட்பின் திட்டம் ....................234
2. தேவனுடைய மீட்பின் திட்டம் (தொடர்ச்சி) ....................241
3. நமது உடல் நலம் குறித்த தேவனுடைய திட்டம் ....................248

4. நமது உடல் நலம் குறித்த தேவனுடைய திட்டம் (தொடர்ச்சி) ....................255
5. வேதபுத்தகம் தேவனுடைய வார்த்தை ....................262
6. பரிசுத்த ஆவியானவர் ....................270
7. பரிசுத்த ஆவியில் கிட்டும் ஞானஸ்நானத்தின் விளைவுகள் ....................277
8. ஆராதனையும் ஜெபமும் ....................285
9. தண்ணீர் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) எப்படி? எப்போது? ஏன்? ....................292
10. சாட்சி பகர்தலும் ஆத்தும ஆதாயம் செய்தலும் ....................299
11. செழிப்பான வாழ்வு குறித்த தேவனுடைய திட்டம் ....................306
12. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ....................314
13. கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்கள் ....................322
14. திருப்புதல் ....................329

இந்தப் பாடங்களுக்கான மதிப்பெண்கள் ....................332

ஆசிரியரைப்பற்றி. . . ....................334

# தெய்வீகப் பரிமாற்றம்

# ஓர் அழைப்பு

மனுக்குலம் அனைத்திற்கும் "வருத்தப்பட்டு. . . என்னிடத்தில் வாருங்கள்" *என்னும் அழைப்பை இயேசு விடுத்துள்ளார். உங்கள் பிரச்சினை, தேவை, கஷ்டங்கள் எவ்வளவு பெரிதாயினும் தேவன் அதற்கான பதிலை வைத்திருக்கிறார்.

ஒரே ஓர் இடத்திலிருந்து மட்டுமே நீங்கள் பதிலைப்பெற முடியும்: அது இயேசு மரித்த சிலுவையாகும். சிலுவையின் மூலமாக மட்டுமே உங்கள் தேவைகள் சந்திக்கப்படும், பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும், பாரங்களுக்கு பதில் கிடைக்கும்.

எதிர்பார்ப்புடன் தொடர்ந்து படியுங்கள்.

* மத்தேயு *11:28.*

# தெய்வீகப் பரிமாற்றம்

சுவிசேஷ செய்தி முழுவதும் ஓர் ஒப்பற்ற சரித்திர சம்பவத்தை மையமாகக் கொண்டு சுழல்கிறது. அச்சம்பவம் சிலுவையில் இயேசுவின் தியாக மரணம் ஆகும். இதைக் குறித்து எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் ஆசிரியர் எழுதும்போது, "ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் (இயேசு) என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (எபிரெயர் 10:14). இங்கு "பூரணப்படுத்தியிருக்கிறார்" என்னும் வார்த்தையும் "என்றென்றைக்கும்" என்னும் வார்த்தையும் ஆற்றல் நிறைந்த இரு வார்த்தைகள். இவ்விரண்டும் மனுக்குலம் முழுவதின் எல்லாத் தேவைகளையும் சந்திக்கின்ற ஒரு தியாக மரணத்தை தெளிவாய் விளக்குகிறது. அதனுடைய பலன்கள் தொன்றுதொட்டு நித்தியம் வரை தொடர்கிறது.

இந்தத் தியாகத்தின் அடிப்படையில் பிலிப்பியர் 4:19ல் பவுல் "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி ***'உங்கள் குறைவை எல்லாம்'*** ***'கிறிஸ்து இயேசுவுக்குள்'*** மகிமையிலே நிறைவாக்குவார்" எனக் கூறுகிறார். 'உங்கள் குறைவை எல்லாம்' என்று சொல்லும் பொழுது குறிப்பாக சாபத்திலிருந்து உனக்குத் தேவையான விடுதலையும் அதில் அடங்குகிறது. ஆனால் முதலில் நீ இந்தச் சத்தியத்தை முழுமையாகப் பார்க்க வேண்டியது அவசியமாகும்— உன்னதமான தேவனின் ஓர் ஒப்பற்ற தனிச் செயல் மனுக்குலத்தின் எல்லா பாவத்தையும், துயரத்தையும் ஒரு உச்ச காலகட்டத்திற்கு கொண்டு வந்தது.

மனுக்குலத்தின் எண்ணிறந்த பிரச்சனைகளுக்கு பலவிதமான தீர்வுகளை தேவன் கொடுக்க முற்படவில்லை. அதற்கு மாறாக, அவர் எல்லாவற்றையும் சந்திக்கும் ஆற்றலை உள்ளடக்கிய ஒரு தீர்வை நமக்குத் தருகிறார். அதுதான் எல்லா பிரச்சனைகளுக்கும் அவருடைய பதிலாக உள்ளது. நமது பின்னணி பலதரப்பட்டதாக இருக்கலாம். நாம் ஒவ்வொருவரும் நமது சொந்தத் தேவைகளை சந்திக்க முடியாதவாறு பாரப்பட்டிருக்கிறோம். ஆனால் தேவனுடைய பதிலைப் பெற்றுக்கொள்ள நாம் அனைவரும் வரவேண்டிய இடம் ஒன்றே. அது இயேசுவின் சிலுவையே.

சிலுவையில் நிறைவேற்றப்பட்ட காரியத்தின் முழுமையான விவரத்தை ஏசாயா தீர்க்கதரிசி அது நடைபெறுவதற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு கூறியுள்ளார். ஏசாயா 53:10ல் தீர்க்கதரிசி பாவ நிவாரணபலியாக தேவனுக்கு செலுத்தப்பட வேண்டிய "கர்த்தருடைய ஊழியனின்" ஆத்துமாவைப் பற்றி விளக்குகிறார். புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் ஒருமனதாக பெயர் குறிக்கப்பெறாத இந்த ஊழியரை இயேசு என இனம் கண்டுள்ளனர். இந்த தியாக பலியினால் நிறைவேற்றப்பட்ட தெய்வீக நோக்கம் ஏசாயா 53:6ல் தொகுத்து கூறப்பட்டுள்ளது:

> ***'நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.***

மேற்கூறப்பட்டுள்ளது மனுக்குலம் அனைத்திற்கும் உண்டான அடிப்படை பிரச்சனையாகும்: நாமெல்லாரும் வழிதப்பித் திரிந்து ஒவ்வொருவரும் தம்தம் வழியிலே போனோம். அநேக குறிப்பான பாவங்கள், கொலை, விபசாரம், களவு போன்றவைகளை நம்மில் அநேகர் ஒருபோதும் செய்ததில்லை. ஆனால் நாம் எல்லாரும் ஏகமாய் செய்த ஒன்று உள்ளது: நாம் நமது சொந்த வழியில் செல்லலானோம். அப்படி செய்ததின் மூலம் "***நமது முதுகுகளை தேவனை நோக்கித் திருப்பியுள்ளோம்.***" இதைத் தொகுத்துக் கூறும் எபிரெயச் சொல் "அவான்" (AVON) என்பதாகும். இது "***அக்கிரமம்***" என்று இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதை வேறு விதமாய் சொன்னால் "முரட்டாட்டம்" எனலாம். இது மனிதனுக்கு விரோதமானது அல்ல. தேவனுக்கு விரோதமானது. இது உபாகமம் 28ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சாபங்களுக்கும் இதுவே பிரதான காரணம் ஆகும்.

"***அக்கிரமமோ,***" "***முரட்டாட்டமோ***" வேறு எந்த தமிழ் சொல்லோ "***அவான்***" என்னும் வார்த்தையின் முழு அர்த்தத்தை நமக்கு எடுத்துக் காட்டுவதில்லை. வேதாகமத்தில் உபயோகத்தின்படி "***அவான்***" என்பது அக்கிரமத்தை மாத்திரமல்ல, அக்கிரமத்தோடு வரக்கூடிய ***தண்டனையையும், தீய விளைவுகளையும்*** குறிப்பதாக உள்ளது.

உதாரணமாக ஆதியாகமம் 4:13ல் தேவன், தன் சகோதரனைக் கொன்றதற்கு காயீனுக்கு நியாயத்தீர்ப்பு வழங்கியபோது, காயீன் "எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது" என்றான். இங்கே "தண்டனை" என்னுமிடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் "***அவான்***" என்பதாகும். இது காயீனுடைய "அக்கிரமத்தை" மாத்திரமல்ல அதற்குரிய "தண்டனையையும்" உள்ளடக்கிக் கூறுகிறது.

லேவியராகமம் 16:22ல் பாவநிவாரண நாளிலே போகவிடப்பட்ட ஆட்டைக்குறித்து கர்த்தர் சொல்லும் போது, "அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களை எல்லாம் தன் மேல் சுமந்து கொண்டு, குடியில்லாத தேசத்துக்குப் போவதாக" என்று கூறுகின்றார். இந்த உவமானத்தில் அந்த வெள்ளாடு இஸ்ரவேலர்களின் அக்கிரமங்களை மட்டுமல்ல அக்கிரமங்களுக்கான தண்டனையையும் சுமந்து செல்கிறது.

புலம்பல் 4ம் அதிகாரத்தில் ***"அவான்"*** என்னும் சொல் இதே அர்த்தத்தில் இரண்டு தடவை வருகிறது. 6ம் வசனத்தில் "என் ஜனமாகிய குமாரத்தியின் **அக்கிரமத்துக்கு வந்த தண்டனை ...**" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மீண்டும் 22ம் வசனத்தில் "சீயோன் குமாரத்தியே, உன் ***அக்கிரமத்துக்கு வரும் தண்டனை***" என்று வருகிறது. இந்த இரண்டு இடத்திலும் "அவான்" என்ற தனிப்பதம் "அக்கிரமத்துக்கு வந்த தண்டனை" என்னும் முழு அர்த்தத்தை குறிக்கும்படி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொன்னால் "அவான்" என்பது அக்கிரமத்தை மாத்திரமன்று, அக்கிரமத்தின் மேல் தேவ நியாயத்தீர்ப்பு கொண்டு வரும் எல்லா ***தீய விளைவுகளையும்*** ஒன்று சேர குறிக்கிறது.

இது சிலுவையில் இயேசு செய்த தியாகத்தைக் குறிக்கிறது. இயேசு தாமே எந்தப் பாவத்தையும் செய்யவில்லை. ஏசாயா 53:9ல் தீர்க்கதரிசி, "அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" என்று கூறுகின்றார். ஆனால் 6ஆம் வசனத்தில் "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்" என்று கூறுகின்றார். நம்முடைய அக்கிரமத்தை மட்டும் இயேசு ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த அக்கிரமத்தினால் உண்டான எல்லா தீயவிளைவுகளையும் அவர் ஏற்றுக் கொண்டார். தன்னை சித்தரித்த அந்த வெள்ளாட்டுக்கடாவைப் போலவே, நமது அக்கிரமத்தையும் அதற்குரிய தண்டனையையும் நம்மீது திரும்பி வராதபடி நிரந்தரமாய் அவரே சுமந்து தீர்த்தார்.

இதுவே சிலுவையின் முக்கிய அர்த்தமும் நோக்கமுமாயிருக்கிறது. இதிலே தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு பரிமாற்றம் நடைபெற்றது. முதலாவதாக, நாம் இருக்க வேண்டிய இடத்தில் இயேசு இருந்து நமது அக்கிரமத்திற்குரிய தெய்வீக நியாயத்தீர்ப்பின் எல்லாத் தீய விளைவுகளையும் அவர் ஏற்றுக்கொண்டார். இதற்குப் பதிலாக தேவன் நம்மனைவருக்கும் பாவமற்ற இயேசுவின் கீழ்ப்படிதலினால் உண்டாகக்கூடிய எல்லா நற்பலன்களையும் வழங்குகின்றார்.

இரத்தினச் சுருக்கமாகக் கூறினால் தீமையின் காரணமாக நம்மேல் வர இருந்த தீயபலன், இயேசுவின் மேலும் இயேசுவிற்கு உரிய நற்பலனின்

நன்மை நம்மேலும் வந்தது. தேவன் தமது சொந்த நித்திய நியாயத்தீர்ப்பைக் கைவிட்டுவிடவில்லை. நமது அக்கிரமங்களினிமித்தமாக நியாயமாய் நம்மேல் வர இருந்த தண்டனையைத் தாம் ஏற்றுக் கொண்டதினாலே, தேவனால் இவ்வாறு நமக்கு நன்மை செய்ய முடிந்தது.

இவை அனைத்தும் அளக்க முடியாத தேவ கிருபையினால் மட்டுமே நமக்கு வருகிறது. இது முற்றிலும் விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. இதற்கு நாம் காரண காரியத்தை தர்க்கரீதியில் கூற முடியாது. இப்படிப்பட்ட ஈவைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியாக நாம் யாரும் எதையுமே செய்ததில்லை. நம்மில் எவரும் எக்காலத்திலும் எதையாவது செய்து இதை சம்பாதித்துக் கொள்ளவே முடியாது.

வேதம் இந்த பரிமாற்றத்தின் பலவிதமான பரிமாணங்களைப் பற்றியும் அது பெற்றுத்தரும் பலவிதமான நற்பலன்களைப் பற்றியும் விளக்குகிறது. இவையனைத்திற்கும் கீழ் ஒரே அடிப்படைக் கொள்கை தான் உள்ளது: **இயேசுவினால் வரும் நற்காரியங்கள் நமக்கு கொடுக்கப்படும்படி, நம்மேல் வரவேண்டிய தீமை அனைத்தும் இயேசுவின் மேல் வந்தது.**

இந்தப் பரிமாற்றத்தின் இரு முக்கியக் கூறுகளை ஏசாயா 53:4–5ல் அறியலாம்:

> **[4]மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை (சரியான பதம் நோய்களை) ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் (சரியான பதம்: வலிகளை) சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.**
>
> **[5]நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை (தண்டனை) அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் (காயங்களால்) குணமாகிறோம்.**

இங்கு இரு சத்தியங்கள் பிணைந்து வருகின்றன. ஒன்று ஆவிக்குரியது, மற்றொன்று சரீரப்பிரகாரமானது. ஆவிக்குரிய தளத்தில், நமது மீறுதல்களுக்கும், அக்கிரமங்களுக்குமான தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டார். இதன் மூலம் நாம் மன்னிக்கப்பட்டு தேவனுடன் சமாதானம் பெறுகிறோம். (ரோமர் 5:1யைப் பார்க்கவும்). சரீர தளத்தில் இயேசு நமது நோய்களையும், வலிகளையும் ஏற்றுக் கொண்டார். ஆகவே அவரது காயங்களின் மூலம் நாம் குணமாகிறோம்.

சரீரப் பிரகாரமான ஆசீர்வாதத்தைக் குறித்த பரிமாற்றம் புதிய

ஏற்பாட்டில் இரண்டு பகுதிகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மத்தேயு 8:16–17 ஏசாயா 53:4யைக் குறிப்பிட்டு "இயேசு ... பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்:

***[17]அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்.***

என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது. நிறைவேறும்படி இப்படி நடந்தது" என்று கூறுகிறது.

மீண்டும் 1 பேதுரு 2:24ல் அதை எழுதியவர் ஏசாயா 53:5–6யைக் குறிப்பிட்டு இயேசுவைப் பற்றி இவ்வாறாகக் கூறுகிறார்:

***[24]நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் (காயங்களால்) குணமானீர்கள்.***

மேலேயுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள இருநிலை பரிமாற்றத்தை நாம் கீழ்கண்டவாறு தொகுத்துக் கூறலாம்:

**நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.**

**நாம் சுகத்தைப் பெற்றுக் கொள்ளும்படி இயேசு காயமடைந்தார்.**

இந்த பரிமாற்றத்தின் மூன்றாவது கூறு ஏசாயா 53:10ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பிதாவாகிய கர்த்தர், இயேசுவின் ஆத்துமாவை "குற்ற நிவாரண பலியாக" ஒப்புக் கொடுத்தார் என்று கூறப்பட்டுள்ளது. பலவிதமான பாவநிவாரண பலிகளுக்கான மோசேயின் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். பாவம் செய்த மனிதன் தன் பாவத்திற்கான பலியை—ஓர் ஆடாகவோ அல்லது வெள்ளாடாகவோ அல்லது ஒரு காளையாகவோ அல்லது வேறு ஒரு மிருகமாகவோ ஆசாரியனிடத்தில் கொண்டுவர வேண்டும். அந்தப் பலியின் மேல் அவன் தன் பாவத்தை அறிக்கையிடுவான். பலியாட்டின் மேல் அறிக்கையிடப்பட்ட பாவத்தை அறிக்கையிட்டவன் மேலிருந்து எடுத்து அந்த மிருகத்தின் மேல் சுமத்தப்பட்டதாக அடையாள நிலையில் ஆசாரியன் செய்வான்.

தேவனுடைய எல்லையற்ற ஞானத்தில் இவையெல்லாம் எல்லாவற்றிற்கும் போதுமான இயேசுவின் ஒரே பலியினால் ஈடுசெய்ய இருப்பதின் நிழலாட்டமாய் உள்ளது. சிலுவையில் உலகத்தின் பாவமனைத்தும் இயேசுவின் ஆத்துமாவிற்கு மாற்றப்பட்டது.

இதனுடைய விளைவு ஏசாயா 53:12ல் "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி" என்பதிலிருந்து அறியலாம். இயேசு தம்முடைய ஒப்பற்ற தியாக மரணத்தினால், மனுக்குலம் அனைத்தின் பாவத்திற்கும் பரிகாரம் செய்தார்.

2 கொரிந்தியர் 5:21ல் பவுல் ஏசாயா 53:10யைக் குறிப்பிட்டு இப்பரிமாற்றத்தினால் வரும் முற்போக்கான பலனைச் சொல்லுகிறார்:

**21 நாம் அவருக்குள் (இயேசுவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை (இயேசுவை) நமக்காகப் பாவமாக்கினார்.**

இங்கு பவுல் நமது சொந்த முயற்சிகளினால் நாம் அடையக்கூடிய எந்த விதமான நீதியைப் பற்றியும் சொல்லவில்லை. ஆனால் பாவத்தையே அறியாத தேவனுடைய சொந்த நீதியைக் குறித்து சொல்லுகிறார். நம்மில் யாரும் இதை ஒருபோதும் சம்பாதிக்க முடியாது. பூமிக்கு வானம் எவ்வளவு உயரத்தில் இருக்கிறதோ, தேவனுடைய நீதியும் நம்முடைய சொந்த நீதியிலிருந்து அவ்வளவு உயர்வானதாய் இருக்கிறது. இதை விசுவாசத்தின் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

பரிமாற்றத்தின் இந்த மூன்றாவது, பகுதியை கீழ்கண்டவாறு தொகுத்து கூறலாம்:

***"இயேசுவின் நீதியினால் நாம் நீதியாகும்படிக்கு, நம்முடைய பாவங்களினால் அவர் பாவமாக்கப்பட்டார்."***

இந்த பரிமாற்றத்தின் செயல்பாடு இதற்கு முந்திய கூற்றிலிருந்து தொடர்வதாக உள்ளது. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகியவற்றை கொண்ட வேதம், பாவத்தின் இறுதிப் பலன் மரணம் என்று வலியுறுத்துகிறது. எசேக்கியல் 18:4ல் கர்த்தர் "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" என்று சொல்கின்றார். யாக்கோபு 1:15ல் அப்போஸ்தலர் "பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" என்று கூறுகின்றார். இயேசு நமது பாவத்தை ஏற்றுக்கொண்ட பொழுது பாவத்தின் விளைவான மரணத்தையும் அனுபவிக்க வேண்டுமென்பது தவிர்க்க முடியாததாய் இருந்தது.

இதையே உறுதிப்படுத்தி எபிரெயர் 2:9ல் அதன் எழுத்தாளர், "... தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்திரித்ததினிமித்தம் ..." என்று கூறுகின்றார். அவர் ஏற்றுக்கொண்ட மரணம் தன்மேல் அவர் ஏற்றுக்கொண்ட மனித பாவத்தின் தவிர்க்க முடியாத விளைவாக இருந்தது. அவர் மாந்தர்

அனைவரின் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு எல்லா மனிதர்களுக்குரிய மரணத்திலும் பங்கேற்றார்.

அவருடைய தியாக மரணத்தை ஏற்றுக் கொள்ளும் அனைவருக்கும் அவர் நித்திய ஜீவனை ஈராக அளிக்கிறார். ரோமர் 6:23ல் பவுல் இவ்விரண்டையும் ஒப்பிட்டு "பாவத்தின் சம்பளம் (நியாயமான வெகுமானம்) மரணம்; (சம்பாதியாத) தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" என்று கூறுகின்றார்.

பரிமாற்றத்தின் நான்காவது பகுதியை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்:

***"நாம் இயேசுவினுடைய ஜீவனில் பங்குள்ளவர்களாகும்படி அவர் நமது மரணத்தை ஏற்றுக் கொண்டார்."***

இந்தப் பரிமாற்றத்தின் அடுத்த பகுதி பவுலினால் 2 கொரி. 8:9ல் கூறப்பட்டுள்ளது: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே." இந்த பரிமாற்றம் தெளிவாக உள்ளது: வறுமையிலிருந்து செல்வத்திற்கு மாற்றப்பட்டுள்ளோம். நாம் ஐசுவரியவான்களாகும்படி இயேசு தரித்திரரானார்.

எப்பொழுது இயேசு தரித்திரரானார்? சிலர் அவரது பூலோக ஊழியம் முழுவதிலும் அவர் ஏழையாக இருந்ததாக சித்தரிக்க முற்படுகின்றனர். ஆனால் இது சரியான கணிப்பு அல்ல. அவர் தாமே பெருமளவில் பணத்தைச் சுமந்து செல்லாவிட்டாலும் அவருக்குத் தேவையானது எதுவுமே எவ்வேளையிலும் குறைவுபட்டதில்லை. அவருடைய சீஷர்களையும் அவர் அனுப்பிய பொழுது அவர்களுக்கும் ஒன்றும் குறைவுபடவில்லை. (லூக்கா 22:35யைப் பார்க்கவும்) ஏழைகளாய் இல்லாமல் அவரும் அவருடைய சீஷர்களும் ஒழுங்காக ஏழைகளுக்கு உதவினார்கள். (யோவான் 12:4–8; 13:29 பார்க்கவும்).

சில வேளைகளில் இயேசு விநோதமான முறையில் பணத்தைப் பெற்றார் என்பது உண்மைதான். ஆனால் ஒரு வங்கியிலிருந்து எடுத்தாலும் அல்லது ஒரு மீனின் வாயிலிருந்து எடுத்தாலும் பணத்தின் மதிப்பு ஒன்று தான். (மத்தேயு 17:27) சில வேளைகளில் அவர் உணவளித்த விதமும் வியப்பிற்குரியதாய் இருந்தது. ஒரு மனிதன் ஐயாயிரம் ஆண்களுக்கும், பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும்

திருப்தியாக உணவளிப்பார் என்றால் அவரை ஏழை என்று எந்த நிலையில் சொல்லக்கூடும்! (மத்தேயு 14:15–21 யைப் பார்க்க.)

உண்மையில் தம்முடைய பூலோக ஊழியம் முழுவதிலும் இயேசு "பரிபூரண" வாழ்விற்கு உதாரணமாய் வாழ்ந்தார். தம்முடைய சொந்த வாழ்வில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற அவருக்கு தேவையான யாவற்றையும் அவர் எப்பொழுதும் உடையவராயிருந்தார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவர் மற்றவர்களுக்கும் கொடுத்தார். அவருக்கு எப்பொழுதுமே இல்லை என்ற நிலை வரவில்லை.

இயேசு எப்பொழுது நமது நிமித்தமாய் ஏழையானார்? அதற்கான பதில் : "***சிலுவையில்***" என்பதாகும். உபாகமம் 28:48ல் மோசே, தரித்திரத்தின் முழுமையை நான்கு வார்த்தைகளில் தொகுத்து கூறுகிறார்: பட்டினி, தாகம், நிர்வாணம், சகலத்திலும் குறைவு—இவை அனைத்தின் முழுமையையும் இயேசு சிலுவையில் அனுபவித்தார்.

அவர் ***பசியுள்ளவராய்*** இருந்தார். அவர் சுமார் 24 மணி நேரம் உணவு உட்கொள்ளவில்லை.

அவர் தாகமுள்ளவராய் இருந்தார். அவருடைய கடைசி வாசகங்களில் ஒன்று: "நான் ***தாகமாயிருக்கிறேன்***" என்பதாகும் (யோவான் 19:28).

அவர் ***ஆடையற்றவராய்*** இருந்தார். போர்ச்சேவகர்கள் அவருடைய வஸ்திரங்கள் அனைத்தையும் அவரிடமிருந்து எடுத்துக் கொண்டனர். (யோவான் *19:23*)

அவர் ***சகலத்திலும் குறைவு பட்டிருந்தார்.*** அவருக்கு எதுவுமே சொந்தமாக இல்லை. அவருடைய மரணத்திற்குப் பின்பு அவர் கடன் வாங்கப்பட்ட ஆடையுடன் கடன் வாங்கப்பட்ட கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார் (லூக்கா 23:50–53). இவ்வாறாக இயேசு ஏழ்மையின் உச்சகட்டத்தை நமது நிமித்தமாய் ***முழுமையாக*** ஏற்றுக் கொண்டார்.

2 கொரிந்தியர் 9:8ல் இந்த பரிமாற்றத்தின் நற்பலனை பவுல் விபரமாக விளக்குகிறார் : "மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்." இந்தப் பரிமாற்றத்திற்கு தேவனுடைய ***கிருபை*** மாத்திரமே அடிப்படை காரணம் என வலியுறுத்தும்படி கவனமாக உள்ளார். இதனை ஒருபோதும்

சம்பாதிக்க முடியாது. இதை விசுவாசத்தின் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளமுடியும்.

அநேக தடவைகளில் இயேசு கிறிஸ்துவிற்கு பூலோக நாட்களில் உண்டாயிருந்த "அபரிமிதம்" நமக்கும் உண்டாயிருக்கும். நமது கையில் அதிக பணமிருக்காது அல்லது வங்கியிலும் அதிக சேமிப்பு நம்பேரில் இருக்காது. ஆனால் நமது அன்றாட தேவைகளுக்குப் போதுமானது போக மற்றவர்களுக்கும் கொடுக்க நம்மிடம் அதிகம் இருக்கும்.

தேவைகள் இவ்விதமாய் சந்திக்கப்படுவதின் ஒரு முக்கிய காரணம் அப்போஸ்தலர் 20:35ல் கூறப்பட்டுள்ள இயேசு சொன்ன வார்த்தைகளினால் விளக்கப்படுகிறது: "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்." தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் உயர்ந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்க வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாய் உள்ளது. ஆகவே அவர் நமது சொந்த தேவைகளுக்கும் கொடுத்துவிட்டு மற்றவர்க்கும் கொடுக்கும்படியான நிலையில் நம்மை வைக்கிறார்.

இந்த பரிமாற்றத்தின் ஐந்தாம் பகுதியை இவ்வாறு தொகுத்து கூறலாம்:

**"இயேசு நமது ஏழ்மையை ஏற்றுக் கொண்டு ஏழையானார்."**

சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றம் மனிதனுடைய பாவத்தை தொடரும் உணர்ச்சிக்கடுத்த விளைவுகளின் துயரத்திற்கும் பரிகாரம் அளிக்கிறது. மீண்டும் இங்கு நாம் நன்மையையே அனுபவிக்கும்படி, இயேசு தீமையை ஏற்றுக்கொண்டார். நம்முடைய அக்கிரமம் நம்மேல் கொண்டு வந்த இரண்டு கொடூரமான காயங்கள் **வெட்கமும், புறக்கணிப்புமாகும்.** இவைகள் இரண்டும் சிலுவையில் இயேசுவின் மேல் வந்தன.

***வெட்கம்*** என்பது கேவலமான மனக்கவலையிலிருந்து அருகதையற்ற மனப்பான்மை வரை நீண்டதாய் இருக்கலாம். இது ஒருவனை தேவனுடனான அல்லது மனிதனுடனான அர்த்தமுள்ள ஐக்கியத்திலிருந்து பிரித்து விடுகிறது. இதற்கான பொதுவான காரணங்களில் ஒன்று—நம்முடைய தற்கால சமுதாயத்தில் அடிக்கடி காணப்படுவது—பாலுணர்ச்சியை தகாதமுறையில் பயன்படுத்துதல் அல்லது பிள்ளைப்பருவத்தில் அனுபவித்த இடையூறு. இவைகள் அடிக்கடி காயத்தின் தழும்புகளை நம்மில் உண்டாக்குகிறது. இத்தழும்புகள் தேவகிருபையினால் மட்டுமே குணமடையக்கூடும்.

சிலுவையில் தொங்கிய இயேசுவைக்குறித்து சொல்லும் பொழுது எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் " ***'அவமானத்தை எண்ணாமல்,'*** சிலுவையைச் சகித்து" என்று கூறுகிறார். (எபிரெயர் 12:2). சிலுவை மரணம் எல்லாவித மரணங்களிலும் மிகவும் வெட்கத்திற்குரியது. இது கீழ்த்தரமான கைதிக்கே அளிக்கப்படும். சிலுவையில் அறையப்பட இருக்கும் நபரின் ஆடைகள் அனைத்தையும் எடுத்து விடுவார்கள். அவரின் நிர்வாணத்தை, கடந்து செல்பவர்கள் கண்டு சத்தமிட்டு கேலி செய்யமுற்படுவர். இப்படிப்பட்ட அவமானத்தின் உச்சகட்டத்தை இயேசு சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது அனுபவித்தார். (மத்தேயு 27:35–44).

இயேசு அனுபவித்த வெட்கத்திற்கு பதிலாக தேவனுடைய நோக்கமானது அவரில் நம்பிக்கை வைப்பவர்கள் அவருடைய நித்திய மகிமையில் பங்கு கொள்ள வேண்டும் என்பதாகும். எபிரெயர் 2:10ல் அதன் எழுத்தாளர் "... ***அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில்*** அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை (அதாவது இயேசுவை) உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது" என்று கூறுகின்றார். இயேசு சிலுவையில் சகித்த அவமானம் அவரில் நம்பிக்கை வைக்கும் யாவருக்கும் அவர்களுடைய சொந்த அவமானத்திலிருந்து விடுபடும்படிக்கு வாசலைத் திறந்தது. அது மாத்திரமல்ல. நித்திய உரிமையினாலே, அவருக்குள்ளே மகிமையை நம்முடன் அவர் பகிர்ந்து கொள்ளுகிறார்!

அநேக நேரங்களில் வெட்கத்தைவிட அதிகமாகத் நம்மை வருந்தச்செய்யும் இன்னொரு காயம் உள்ளது. அது புறக்கணிக்கப்படுதல் ஆகும். இது சாதாரணமாக முறிந்த உறவினால் உண்டாகிறது. இது ஆரம்ப நிலையில் தங்கள் பிள்ளைகளைப் புறக்கணிக்கும் பெற்றோர்களால் உண்டாகிறது. புறக்கணிக்கப்படுதல் கடுமையானதாக எதிர்மறையான வழிகளில் வெளிப்படுத்தப்படலாம். அல்லது அன்பு காட்டப்படாத நிலை ஏற்படலாம். கருத்தரித்த ஒரு பெண் தன் கருப்பையில் வளரும் குழந்தைக்கு விரோதமாக எதிர்மறையான எண்ணங்களை அனுமதிப்பாள் என்றால் அந்த குழந்தை அநேகமாக புறக்கணிக்கப்பட்ட ஒரு மனநிலையில் பிறக்கும். அப்புறக்கணிப்பின் விளைவு அதனுடைய முதிர்பருவம் வரை தொடர்ந்து கல்லறை வரை கூடச் செல்லும்.

புறக்கணிப்பின் நிமித்தமாக அடிக்கடி அநேக திருமணங்கள் தோல்வியைக் காண்கின்றன. இது ஏசாயா 54:6ல் கர்த்தருடைய வார்த்தைகளில் அழகாக படம் தீட்டப்பட்டுள்ளது:

**[6]கைவிடப்பட்டு மனம் நொந்தவளான ஸ்திரீயைப் போலவும், இளம் பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார்.**

புறக்கணிக்கப்பட்ட காயத்திற்கு தேவன் தரும் மருந்து மத்தேயு 27:46, 50ல் சொல்லப்பட்டுள்ளது. இது இயேசு துயரத்தின் உச்சக்கட்டத்தில் கூறியதாகும்.

**[46]ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு : ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.**

**[50]இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்.**

உலக சரித்திரத்தில் முதல் முறையாக தேவகுமாரன் தன் தந்தையை நோக்கி கூப்பிட்டபொழுது அவர் ஒரு பதிலையும் பெறவில்லை. இயேசு மனிதனுடைய அக்கிரமத்தை முற்றிலும் ஏற்றுக் கொண்டதினால் விட்டுக் கொடுக்கமுடியாத தேவனுடைய பரிசுத்தமானது அவரை தன் சொந்த குமாரனையும் புறக்கணிக்கும்படியாக செய்தது. இவ்விதமாக இயேசு மிகவும் துன்பம் நிறைந்த புறக்கணிப்பை ஏற்றுக் கொண்டார்: அது ஒரு தந்தையின் புறக்கணிப்பு. அதற்கு பின்பு உடனே அவர் மரித்தார். சிலுவையின் உண்டான காயங்களினால் அல்ல, உடைந்த உள்ளத்தினாலேயே. இவ்வாறாக அவர் சங்கீதம் 69:20ல் "நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது" என்று மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசன வார்த்தைகளை அவர் நிறைவேற்றினார்.

மத்தேயு இதைத் தொடர்ந்து எழுதும்போது, "அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" என்று எழுதுகின்றார். இது பாவமுள்ள மனிதன் பரிசுத்தமான தேவனுடன் நேரடியாக ஐக்கியம் கொள்வதற்கான வழி திறக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது. இயேசு புறக்கணிக்கப்பட்டதால் நாம் தேவனுடைய பிள்ளைகளாய் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு வழி பிறந்தது. இது பவுலினால் எபேசியர் 1:5–6ல் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது :"பிரியமானவருக்குள் தாம் (தேவன்) நமக்குத் தந்தருளின ... நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்." இயேசுவின் புறக்கணிப்பு நம்முடைய ஏற்றுக்கொள்ளுதலின் பலனாய் ஆனது.

வெட்கத்திற்கும், புறக்கணிப்பிற்கும் தேவனுடைய பரிகாரம் முற்காலத்தை விட நமது காலத்தில் மிகவும் அதிகம் தேவையாயுள்ளது.

என்னுடைய கணிப்பின்படி இன்று அமெரிக்க நாட்டிலுள்ள வயது வந்தவர்களுள் குறைந்தது கால் பகுதி வெட்கம் அல்லது புறக்கணிப்பின் காயங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட மக்களுக்கு இயேசுவின் சிலுவையில் இருந்து பாயும் சுகத்தை காட்டுவதில் நான் அளவிடமுடியாத மகிழ்ச்சி கொண்டுள்ளேன்.

புறக்கணிப்பு, வெட்கம் ஆகிய இவ்விரண்டு உணர்வுகள் சிலுவையின் பரிமாற்றத்தில் ஏற்படுத்திய பலன் கீழே தொகுத்து கூறப்பட்டுள்ளது:

***இயேசுவினுடைய மகிமையில்*** *நாம் பங்குள்ளவர்களாகும்படி அவர் நமது* ***வெட்கத்தை*** *ஏற்றுக் கொண்டார்.*

*நாம் தேவனுடைய* ***பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்படும்படி*** *இயேசு நம்மேல் வர இருந்த* ***புறக்கணிப்பை*** *ஏற்றுக்கொண்டார்.*

இப்பரிமாற்றத்தை குறித்து மேலே ஆராய்ந்தோம். இந்த ஆய்வு எல்லா பகுதியையும் விளக்கியுள்ளது என்று கூறமுடியாது; எனினும் மனுகுலத்தின் அடிப்படை முக்கியத் தேவைகளை சந்திப்பதாக உள்ளது. இந்த பரிமாற்றத்திற்கு அப்பாற்பட்ட சந்திக்கப்பட முடியாத மனித தேவை எதுவுமில்லை. உண்மையில் மனிதனுடைய முரட்டாட்டத்தில் விளைந்த அனைத்து தீய பலனும் இந்த பரிமாற்றத்தால் நீக்கப்படுகிறது: ***"நமக்கு நன்மை அளிக்கப்படும்படி இயேசுவின் மேல் தீமை வந்தது."*** இந்த அடிப்படைத் தத்துவத்தை நாம் நமது வாழ்வில் செயல்படுத்த கற்றுக்கொள்வோமானால் நமது எல்லாத் தேவைகளும் தேவ உதவியினால் சந்திக்கப்படும்.

இப்பொழுது உன்னுடைய வாழ்க்கையில் பிரதானமாய்த் தேவையான, ***"சாபத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு"*** நீ இந்த மூல சத்தியத்தை பிடித்துக் கொள்ள வேண்டும். பவுல் பரிமாற்றத்தின் இந்த குறிப்பான பலனை கலாத்தியர் 3:13–14ல் கூறுகிறார்:

***[13] மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.***

***[14] ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.***

பவுல் இயேசு சிலுவையில் தொங்கினது உபாகமம் 21:23ல் கூறப்பட்டுள்ள மோசேயினுடைய நீதிச்சட்டத்தை நடப்பித்தது என

குறிப்பிடுகின்றார். அதன்படி ஒரு மரத்தில் (ஒரு மரக்கம்பத்தில்) அறையப்பட்ட எவனும் தேவனுடைய சாபத்திற்குள்ளாகிறான். பின்பு இதன் பலனாக உண்டாகும் எதிரான காரியத்தை குறிப்பிடுகின்றார்: ஆசீர்வாதம்.

***நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படி இயேசு சாபமானார்***

என்ற இந்த பரிமாற்றத்தின் பலனை ஒரு இறையியல் வல்லுநர் அலசி ஆராயத் தேவையில்லை.

இயேசுவின் மேல் வந்த சாபம் "நியாயப்பிரமாணத்தின் சாபம்" என்று விளக்கப்படுகிறது. உபாகமம் 28ம் அதிகாரத்தில் மோசே அளித்த பட்டியலின் சாபங்கள் அனைத்தையும் இது உள்ளடக்கி இருக்கிறது. இந்த சாபங்கள் ஒவ்வொன்றும் இயேசுவின் மேல் முழுமையாய் வந்தது. இவ்வாறாக அதற்கு ***சமமான முழு விடுதலையைப் பெறவும்*** அதற்கு ஏற்ற ஆசீர்வாதங்களுக்குள் செல்லவும் அவர் நமக்கு வழியை உண்டாக்கினார்.

இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்ததை ஒரு நிமிடம் கற்பனை செய்து பார். அப்பொழுது சாபம் எவ்வளவு கொடூரமானது என்பதை நீ உணர்ந்து கொள்ளலாம்.

இயேசு அவருடைய சொந்த இனத்தாரால் புறக்கணிக்கப்பட்டார்; சீஷர்களில் ஒருவனால் காட்டிக்கொடுக்கப்பட்டார், மற்றவர்களினால் கைவிடப்பட்டார். (சிலர் அவருடைய இறுதி வேதனையைப் பின்பற்ற மீண்டும் திரும்பினர்.) அவர் பூமிக்கும் பரலோகத்திற்கும் இடையே ஆடையற்றவராய் தொங்கிக் கொண்டிருந்தார். அவருடைய சரீரமானது எண்ணிறந்த காயங்களின் வேதனையால் தாக்கப்பட்டது; அவருடைய ஆத்துமாவோ மனுக்குலம் அனைத்தின் பாவத்தினால் தொய்ந்து போனது. பூலோகத்தார் அவரை ஒதுக்கித்தள்ளிவிட்டனர், பரலோகம் அவர் குரலுக்கு செவி சாய்க்கவில்லை. சூரியன் தன் ஒளியை குறைத்துக் கொள்ள இருள் அவரைச் சூழ்ந்தது. அவருடைய ஜீவ இரத்தம் தூசியான கல்லான மண்ணில் வடிந்தது. என்றாலும் அந்த இருளிலும் அவர் மரிப்பதற்கு முன்பு "அது முடிந்தது!" என்று இறுதியாக ஒரு வெற்றிக்குரலை எழுப்பினார்.

கிரேக்கத்திலே "அது முடிந்தது." என்னும் பதம் ஒரே ஒரு வார்த்தையினால் ஆனது. இது "ஒன்றை முற்றுப் பெறச் செய்வது அல்லது பரிபூரணப்படுத்துவது" என்னும் அர்த்தம் கொண்ட வினைச் சொல்லின் முற்றுப்பெற்ற காலமாகும். தமிழிலே இதை "முழுமையான

முடிவு" எனவும் "பரிபூரணம் அடைந்த பரிபூரணம்" எனவும் கூறலாம்.

இயேசு தன் மேலே மனுக்குலத்தின் கீழ்ப்படியாமையினால் வந்த தீய விளைவுகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டார். மீறப்பட்ட தேவ சட்டத்தினால் வந்த ஒவ்வொரு சாபத்தையும் அவர் ஏற்றுக் கொண்டார். அவருடைய கீழ்ப்படிதலினால் உண்டான ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் நாம் பெற்றுக் கொள்ளும்படி இதைச் செய்தார். இப்படிப்பட்ட தியாகம் அதன் நோக்கத்தில் வியப்பானது; எனினும் அதன் எளிமையில் அதிசயமானது.

இயேசுவின் இந்த தியாகத்தையும் அவர் உனக்காய் பெற்றுத் தந்த யாவற்றையும் விசுவாசத்துடன் உன்னால் ஏற்றுக் கொள்ள முடிகிறதா? குறிப்பாக, நீ ஒரு சாபத்தின் நிழலுக்குக் கீழாய் வாழ்ந்து கொண்டு இருப்பாய் என்றால் உனக்காக இயேசு செலுத்திய எல்லையற்ற விலைக்கிரயத்தால் உனக்கு முழு விடுதலை உண்டாயிருக்கிறது என்பதை காண்கிறாயா?

அப்படியென்றால், நீ உடனே செய்ய வேண்டிய ஒரு காரியம் உண்டு—அது உன்னுடைய மெய்யான விசுவாசத்தை வெளிப்படுத்தும்படி "உமக்கு நன்றி" எனக் கூறுவதாகும்.

அதை இப்பொழுதே செய்! "உமக்கு நன்றி! ஆண்டவராகிய இயேசுவே நீர் எனக்காய் செய்த யாவற்றிற்கும் உமக்கு நன்றி! நான் இதை முற்றிலும் புரிந்து கொள்ளாவிட்டாலும் நான் விசுவாசிக்கிறேன். நான் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன்!" என்று சொல்.

இப்பொழுது தொடர்ந்து உன்னுடைய சொந்த வார்த்தைகளில் அவருக்கு நன்றியைத் தெரிவி. அவருக்கு நீ அதிகமாய் நன்றி செலுத்தும் போது அவர் உனக்கு செய்ததை அதிகமாய் நீ விசுவாசிக்கிறாய் என்று பொருள். நீ அதிகமாய் விசுவாசிக்கும் பொழுது நீ அதிகமாய் அவருக்கு நன்றி செலுத்துவாய்.

*“நன்றி செலுத்துவதே விடுதலையின் முதல்படி.”*

# சிலுவையில் நிறைவேற்றப்பட்ட பரிமாற்றம்

நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.[1]

நாம் சுகம் பெறும்படி இயேசு காயப்பட்டார்.[2]

அவருடைய நீதியினால் நாம் நீதியாகும்படி இயேசு நமது பாவங்களினால் பாவமாக்கப்பட்டார்.[3]

நாம் அவருடைய வாழ்வை வாழும்படி அவர் நமது மரணத்தை ஏற்றார்.[4]

நாம் ஆசீர்வாதத்தைப் பெறும்படி இயேசு சாபமானார்.[5]

அவருடைய பரிபூரணத்தில் நாம் பங்குகொள்ளும்படி இயேசு நமது வறுமையை ஏற்றுக் கொண்டார்.[6]

நாம் அவருடைய மகிமையில் பங்கு கொள்ள இயேசு இகழப்பட்டார்.[7]

நமது புறக்கணிப்பை இயேசு அனுபவித்ததாலே நாம் பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறோம்.[8]

மரணத்தால் இயேசு தேவனை விட்டு பிரிக்கப்பட்டதாலே நாம் தேவனால் நித்தியமாக இணைக்கப்பட்டுள்ளோம்.[9]

நமது பழைய மனிதன் அவரில் மரித்ததினாலே புதிய மனிதன் நமக்குள்ளே ஜீவன் பெற்றுள்ளான்.[10]

---

1 ஏசாயா 53:4–5
2 ஏசாயா 53:4–5
3 ஏசாயா 53:10, 2 கொரிந்தியர் 5:21
4 எபிரெயர் 2:9
5 கலாத்தியர் 3:13–14
6 2 கொரிந்தியர் 8:9, 9:8
7 மத்தேயு 27:35–36, எபிரெயர் 12:2, 2:9
8 மத்தேயு 27:46–51, எபேசியர் 1:5–6
9 ஏசாயா 53:8, 1 கொரிந்தியர் 6:17
10 ரோமர் 6:6, கொலோ. 3:9–10

| | |
|---|---|
| நாம் **மன்னிக்கப் படும்படி** | இயேசு **தண்டிக்கப்பட்டார்** |
| நாம் **சுகம்** பெறும்படி | இயேசு **காயப்பட்டார்** |
| அவருடைய நீதியினால் நாம் **நீதியாகும்படி** | இயேசு நமது பாவங்களினால் **பாவமாக்கப்பட்டார்** |
| நாம் அவருடைய வாழ்வை **வாழும்படி** | அவர் நமது **மரணத்தை** அடைந்தார் |
| அவருடைய **பரிபூரணத்தை** நாம் பங்குகொள்ளும்படி | இயேசு நமது **வறுமையை** ஏற்றுக் கொண்டார் |
| நாம் அவருடைய **மகிமையில்** பங்கு கொள்ள | இயேசு **இகழப்பட்டார்** |
| பிதா நம்மை **ஏற்றுக் கொள்ளும்படியாக** | அவர் நம்நிமித்தம் **ஒதுக்கி தள்ளப்பட்டார்** |
| நாம் **ஆசீர்வாதத்தைப்** பெறும்படி | இயேசு **சாபமானார்** |

# சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருதல்

# சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து செல்வது எவ்வாறு

இந்நூல் அநேக மக்களுக்கு பெருமளவில் உதவியாயிருக்கும் என்பதை நான் விசுவாசிக்கிறேன். இச்செய்தி சமுதாயத்தையும் திருச்சபைகளையும், நாடுகளையும் தனிப்பட்ட வாழ்க்கையையும் மாற்றக்கூடிய செய்தி. அநேக மக்கள் தங்களால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றுடன் தங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து போராடுவதை நான் கண்டுபிடித்தேன்—ஏதோ ஒரு சோகம் நுழைந்து அவர்கள் வெற்றியை சுதந்தரித்துக் கொள்ள முடியாதபடி, தடுத்து நிறுத்துகிறது. அவர்கள் விரும்பும் வண்ணம், முழு சுயாதீனத்துடன், மெய்யான வெற்றியை அனுபவித்து கர்த்தரை சேவிக்க முடியாதபடி ஏதோ ஒன்று அவர்களைத் தடுத்து நிறுத்துவது போல் காணப்படுகிறது. பெரும்பாலான வேளை, அவர்கள் எதிர்த்துப் போரிடும் பிரச்சனையைப் பற்றி அவர்கள் இனம் கண்டு கொள்ளவில்லை. அவர்களால் புரிந்து கொள்ள முடியாத அந்தக் காரியம், அவர்கள் வாழ்க்கையின் மேலுள்ள ஒரு சாபமே.

முதலாவதாக, நான் இச்சத்தியத்திற்குள் எவ்வாறு வழி நடத்தப்பட்டேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அநேக ஆண்டுகளுக்கு முன்பாக நான் அமெரிக்காவில் உள்ள மக்களுக்கு, கட்டுகளிலிருந்து விடுதலையை வழங்கக்கூடிய ஒரு ஆராதனையை நடத்தி வந்தேன். நான் என் செய்தியை முடித்த போதிலும் ஊழியம் செய்ய ஆரம்பிக்கவில்லை. நான் பிரசங்க மேடைக்குப் பின் நின்று கொண்டிருந்த போது, எனக்கு முன் உள்ள இடதுபக்கத்து முதல் வரிசையில் நான் ஒரு குடும்பத்தைக் கண்டேன்– அங்கு ஒரு தகப்பனார், ஒரு தாய், ஒரு வாலிபப் பெண் இருந்தனர். நான் அவர்களை நோக்கிப் பார்த்த பொழுது "அக்குடும்பத்தின் மேல் ஒரு சாபம் உள்ளது" என ஆவியானவர் என்னிடம் சொல்லுவது போல் இருந்தது. இவ்வாறு நான் நினைப்பதற்கு எந்தக்

காரணமும் இல்லை, கர்த்தரே இதை எனக்குச் சொன்னது போல் தோன்றியது. ஆகவே நான் பிரசங்க மேடையின் பின்னிருந்து, அந்தத் தந்தையிடம் சென்று "ஐயா உங்கள் குடும்பத்தின்மேல் ஒரு சாபமிருப்பதாக தேவன் எனக்குக் காட்டுவதாக நான் விசுவாசிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் அந்த சாபத்தை நீக்கி உங்களுக்கு விடுதலை வழங்கும்படி நான் செய்யட்டுமா?" எனக்கேட்டேன். உடனே அவர் "சரி" என்றார். அவ்வேளையில் அந்த எண்ணத்தை உடனே அவர் ஏன் ஏற்றுக் கொண்டார் என்பது எனக்குப் புரியாததாக இருந்தது. நான் பிரசங்க மேடைக்கு பின்பு சென்று ஒரு எளிய, சிறிய ஜெபத்தைச் செய்தேன். நான் அவர்களை விட்டு சற்று அப்புறம் நின்ற பொழுதிலும் அவர்களுடைய சாபத்தை இயேசுவின் நாமத்தில் முறித்த பொழுது ஒரு மாற்றம் அவர்கள் ஒவ்வொருவரின் சரீரத்திலும் காணப்பட்டது. பின்பு அந்த வாலிபப் பெண்ணை நான் நோக்கினேன். அவளது இடது காலில், மேல் தொடங்கி பாதம் வரை மாவுக்கட்டு போடப்பட்டிருந்தது. மீண்டும் நான் அவளுடைய தகப்பனாரிடம் சென்று "உங்களுடைய மகளின் தெய்வீக ஆரோக்கியத்திற்காக நான் ஜெபிக்கட்டுமா?" என்று கேட்டேன். அதற்கு அவர் "சரி, ஆனால் இவள் பதினெட்டு மாதங்களில் இதே காலை மூன்று முறை முறித்துக் கொண்டாள் என்பதையும், இது சுகமடையாது என மருத்துவர் இவளைப் பற்றி கூறியுள்ளதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

இப்பொழுது ஒருவர் பதினெட்டு மாதங்களில் ஒரே காலை மூன்று முறை முறித்துக் கொண்டதைச் சொல்வாரென்றால், அக்குடும்பத்தில் சாபம் உள்ளது என்பதை மற்ற ஆதாரங்களின்றியே நான் புரிந்து கொண்டிருப்பேன். ஆனால் அவ்வேளையில் மாவுக்கட்டுப் போட்டிருந்த அந்தக் காலை, என் கரத்தில் பிடித்து ஜெபித்தேன். அவள் சுகம் பெரும்படியாக, ஒரு சிறிய ஜெபம் செய்தேன். கொஞ்ச நாட்களுக்குப் பின்பு அவளின் தாயாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர்கள் மருந்தகம் சென்று அந்தக் காலை எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்த்தபோது, அந்த எக்ஸ்ரே படத்தில் அவள் சுகம் பெற்றதாகக் காணப்பட்டதினால் அந்த மகளுடைய மாவுக் கட்டை உடனே எடுத்து விட்டதாக எழுதியிருந்தனர்.

இந்த அனுபவத்தை நான் தியானம் செய்த பொழுது தான் இந்த எண்ணம் எனக்கு வந்தது. அந்தக் குடும்பத்தின் மேல் ஒரு சாபமிருப்பதை தேவன் எனக்குக் காட்டினார். அம்மகளின் சுகத்திற்காக ஜெபிக்கும்படி தேவன் அனுமதிப்பதற்கு முன்பு, அக்குடும்பத்தின் மேல் ஒரு சாபமிருக்கிறதென்றும் அதை முறிக்க வேண்டும் என்றும் கூறினார். ஏன்? அந்த சாபம் முறிக்கப்பட்டாலன்றி, அவள் சுகத்தைப்

பெற்றிருக்க முடியாது என்பதே இதற்கு அர்த்தம். வேறு வார்த்தைகளில் சொன்னால், அவள் பெற்றுக் கொள்ள வேண்டுமென தேவன் விரும்பிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதபடி காணக்கூடாத தடை ஒன்று இருந்தது. அது சாபமே. இதற்குப் பின்புதான், தேவன் எனக்கு ஆசீர்வாதங்களைப் பற்றியும், சாபங்களைப் பற்றியும் கற்றுத் தந்தார். நான் வேதத்தைத் திருப்பிப்பார்த்த பொழுது, வசனங்கள் இதைப் பற்றி எவ்வளவு அதிகம் சொல்லுகிறது எனக் கண்டு ஆச்சரியப்பட்டேன். எனினும், எனக்குத் தெரிந்த, அநேக இடங்களிலுள்ள திருச்சபைகளில் இதைக் குறித்து மிகவும் குறைவாகவே பிரசங்கிக்கப்படுகிறது. நான் தென் ஆப்பிரிக்காவில் சில ஆண்டுகள் இருந்தபோது, இயேசுவில் விசுவாசம் வைத்து, இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியில் அபிஷேகம் பெற்ற ஒரு யூதப் பெண்ணைச் சந்தித்தேன். அவள் கீழ்க் கண்ட சாட்சியை என்னிடமும் ரூத்திடமும் கூறினாள். அவள் அதிகம் கற்ற தலைமைக் காரியதரிசி. சில கிறிஸ்தவர்களின் தொடர்பினால், அவள் பெற்றுக் கொண்ட போதனையின் அடிப்படையில் கேட்டவுனிலேயே நல்ல சம்பளத்தைத் தரக்கூடிய ஒரு வேலைக்காக அவள் ஜெபித்தாள். அவ்வாறே அதையும் பெற்றுக் கொண்டாள். தானே தலைவராக இருந்து தன் சொந்த வியாபாரத்தை நடத்திவரும் ஒரு மனிதரிடம் இவள் வேலைக்கு அமர்ந்தாள். அவர் ஒரு பெண் தீர்க்கதரிசியினால் நடத்தப்பட்டு வரும் ஒரு பொய்யான மதப்பிரிவைச் சார்ந்தவராய் இருந்தார்.

கொஞ்ச காலத்திற்குப் பின்பு அவளுடைய தலைவர் அவளை நோக்கி, "எங்கள் பெண்குரு எங்கள் பேரில் ஆசீர்வாதங்களைக் கூறியுள்ளார். அதை நீ எங்களுக்குத் தட்டெழுத்து செய்து தரவேண்டும்" எனக் கேட்டார். அதை அவள் தட்டெழுத்து செய்ய ஆரம்பித்த பொழுது, கூறப்பட்டவை ஆசீர்வாதங்களல்ல என அவள் கண்டதால், ஒரு மெய்யான கிறிஸ்தவளாகிய அவளால் தொடர்ந்து அதைத் தட்டெழுத்து செய்ய முடியவில்லை. ஆகவே அவள் தன் தலைவரிடம் சென்று சூழ்நிலையைப் பற்றி விளக்கினாள். அவளுடைய தலைவரும் வருத்தப்பட்டு, அவள் மனசாட்சிக்கு விரோதமான காரியத்தைச் செய்யும்படி சொன்னதற்காக மன்னிப்பைக் கேட்டுக் கொண்டார். அதற்குப் பின்பு என்ன நடந்தது என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாவிடினும், அந்தப் பெண்குரு இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டு இந்த காரியதரிசியின் மேல் ஏதோ ஒரு ஜெபத்தைச் செய்தாள். அப்படிப்பட்ட ஜெபம் பிசாசுக்கு வாயிலைத் திறக்கும் ஜெபம் என உங்களுக்குச் சொல்லத் தேவை இல்லை.

என்னவாயினும், உடனே அந்தக்காரியதரிசி தன் இரு கரங்களிலும் அதிகமான வலியை உணர ஆரம்பித்தாள். அவளுடைய விரல்கள்

வளைந்து, அசைக்க முடியாமல் மறத்துப் போயின. விரல்களை அவளால் மடக்க முடியவில்லை. தாங்க முடியாத வலி இருந்ததினாலே அவளால் தன் வேலை எதையும் செய்ய முடியவில்லை. இரவில் அவளால் தூங்கமுடியவில்லை. அவளுடைய கணவர் படுக்கையில் திரும்பிப் படுத்த பொழுது படுக்கையின் அசைவினால் அவள் விரல்களில் தாங்கொண்ணா வலி ஏற்பட்டது. இதை ஒரு மருத்துவரிடத்தில் சென்று கூறினாள். அவர் இதனை முடக்குவாத நோய் எனக்கணித்தார்.

அவளுடைய வேறொரு கிறிஸ்தவ சிநேகிதி "சாபங்கள், காரணம், குணமடைதல்" என்ற தலைப்பில் என்னுடைய மூன்று ஒலிநாடா செய்திகளைக் கேட்டிருந்ததினால், அவைகளை இந்தக் காரியதரிசிக்குக் கேட்கும்படிக் கொடுத்தாள். அவர்கள் இந்த ஒலிநாடாக்களைக் கேட்டனர். மூன்றாவது ஒலிநாடாவின் இறுதியில் மக்களுடைய வாழ்விலுள்ள சாபம் நீங்குவதற்கான ஜெபத்தை நான் செய்திருந்தேன். அந்தப் பகுதி வந்ததும், ஒலிநாடா சிக்கிக் கொண்டது. அதை முன்னும் நகர்த்த முடியவில்லை, பின்னும் நகர்த்த முடியவில்லை, வெளியேயும் எடுக்க முடியவில்லை. இதற்கு எந்த விளக்கமும் சாதாரணமாகக் கொடுக்க முடியாது.

இருந்த பொழுதிலும் அந்த ஒலிநாடாவைக் கொண்டு வந்த பெண் ஏற்கெனவே இந்த விடுதலையின் ஜெபத்தை தட்டெழுத்து செய்து வைத்திருந்தாள். அந்த யூதப்பெண் அதிகம் படித்திருந்ததால் இவ்விதமான சாபங்களில் நம்பிக்கை கொள்ளவில்லை. தன் சிநேகிதியைத் திருப்திப் படுத்தவே இந்த ஒலிநாடாவைக் கேட்ட அவளுக்கு இந்த விடுதலையின் ஜெபத்தை வாசிக்க விருப்பமில்லை. ஆனால் இறுதியாக தன் சிநேகிதியின் வேண்டுதலுக்கு இணங்க, அந்த ஜெபத்தை உரக்கப்படித்தாள் (மூன்று அல்லது நான்கு நிமிடங்கள் கூடக் கடந்து சென்றிருக்காது) அதற்குள், அவளது விரல்கள் நிமிர்ந்தன. அவளுக்குப் பூரண விடுதலை கிடைத்தது. விடுதலையின் ஜெபத்தை வாசித்து முடித்ததும், வலியும் பூரணமாய் நின்று போயிற்று. அவள் பூரணமாய் சுகமடைந்தாள். அவள் முன்பு சென்ற அதே மருந்துவரிடம் சென்று தன் கரங்களைப் பரிசோதித்தாள். மருத்துவ அடிப்படையில் அவள் பூரணமாய் சுகம் பெற்றதாக அவரும் உறுதியாய் அவளுக்குக் கூறினார்.

இது ஒரே காரியத்தால் வந்தது. சுகத்திற்காக வேண்டிய ஜெபத்தினாலல்ல. சாபத்தினின்று விடுதலை பெறச் செய்த ஜெபத்தால் மட்டுமே இச்சுகம் கிடைத்தது.

* * * *

இப்பொழுது வேத புத்தகத்தில் ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைச் சற்று நோக்குவோம்.

வேதம் இதைப்பற்றி எவ்வளவு சொல்கிறது என்பதை நீங்கள் அறிந்தால் அதிசயப்படுவீர்கள். ஆசீர்வாதங்கள் சாபங்கள் என்னும் வார்த்தைகள் சுமார் 600 தடவைகள் வேதத்தில் வருகின்றன.

ஆசீர்வாதங்களும், சாபங்களும் பொதுவாக வார்த்தைகளினால் வெளிப்படுகின்றன—அது பேசப்பட்ட வார்த்தையாகவோ, எழுதப்பட்ட வார்த்தையாகவோ இருக்கலாம். ஆனால் அந்த வார்த்தைகள் சாதாரண வார்த்தைகள் அல்ல. இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைத் தாங்கி நிற்கும் வார்த்தைகள். அந்த வல்லமை தேவனுடைய வல்லமையாகவோ அல்லது சாத்தானின் வல்லமையாகவோ இருக்கலாம்.

சாபங்கள், ஆசீர்வாதங்கள் இவைகளிலுள்ள முக்கிய அம்சம் என்னவெனில், அது தலைமுறை தலைமுறையாகத் தொடரக் கூடியது. ஒரு ஆசீர்வாதத்தையோ அல்லது ஒரு சாபத்தையோ அனுபவிக்கும் ஒருவன் அது எங்கிருந்து வருகிறது என்பதை எளிதில் கூறிவிட முடியாது. அது கடந்த காலத்தில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து வரக்கூடியதாக இருக்கலாம்.

நான் இந்தப் போதனையை ஆஸ்திரேலியாவிலுள்ள அடிலேய்ட் என்ற பட்டணத்தில் வழங்கினேன். அதற்குப் பின்பு ஒரு பெண் எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள். அவளுடைய முன்னோர்கள் ஸ்காட்லாந்து நாட்டைச் சார்ந்த நிக்சான் என்னும் இனத்தைச் சார்ந்தவர்கள். இதைக்குறித்து அவள் எனக்கு சரித்திர பூர்வமான சான்றுகளைக் (போட்டோ காப்பி மூலம்) கொடுத்தாள். 16ம் நூற்றாண்டில் ஸ்காட்லாந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமிடையே போராட்டம் ஏற்பட்டதால், ஸ்காட்லாந்து பேராயர் ஒருவர் அவ்வினத்தவரின் பேரில் ஒரு சாபத்தைக் கூறியிருந்தார். நான்கு நூற்றாண்டுகள் கடந்ததற்குப் பின்பும் அவருடைய குடும்பத்தில் நடந்த சம்பவங்களில் இந்த சாபத்தை உணர முடிந்ததாம். இந்த வாசகத்தைக் கேட்டு நீங்கள் வியக்கலாம். ஆனால் இதற்கு என்னால் வேத ஆதாரத்தைத் தரமுடியும்.

ஆசீர்வாதங்களும், சாபங்களும் வார்த்தைகளில் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையதாக இருக்கக்கூடும்—அது தேவனுடைய வல்லமையாகவோ, அல்லது பிசாசின் வல்லமையாகவோ இருக்கலாம்.

மக்களின் வாழ்க்கையை வார்த்தைகள் தாக்கி, பெருமளவில் அவர்களின் முடிவை நிர்ணயிக்கிறது. பெரும்பாலான வேளைகளில், அது ஒரு தலைமுறையிலிருந்து மறு தலைமுறைக்கு ஆயிரக்கணக்கான வருடங்களைக் கடந்து செல்லக்கூடும்.

இப்படியிருப்பினும், நான் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறேன். ஒரு சாபம் உங்கள் வாழ்வின் பேரில் இருக்குமானால் தேவனால் அதை நீக்கிப்போட முடியும். இந்தத் தீர்வை விளக்குவதற்கு முன்பு ஆசீர்வாதங்களைக் குறித்த இரு உதாரணங்களை வேதத்திலிருந்து கொடுக்க விரும்புகிறேன்.

## ஆசீர்வாதங்கள்

முதலாவதாக ஆதியாகமம் 22ம் அதிகாரத்தில் நாம் பார்ப்பது, தேவனுடைய வேண்டுகோளுக்குக் கீழ்ப்படிந்து ஆபிரகாம் தன் மகனாகிய ஈசாக்கை பலியிட முன் வருகிறான். இறுதி நேரத்தில் ஈசாக்கிற்கு பதிலாக தேவன் ஓர் ஆட்டை அளிக்கின்றார்.

> 15 ***கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு :***
>
> 16 ***நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக் கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்;***
>
> 17 ***நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், கூறினார்.***
>
> **ஆதியாகமம் 22:15-17.**

இங்கு ஈசாக்கின் சந்ததியாரின் பேரில் தலைமுறை தலைமுறையாக ஆசீர்வாதம் கடந்து வருவதாகக் கூறப்படுகிறது என்பதைக் கவனிக்கவும்.

> ***18ம் வசனத்தில் தேவன் : "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்றார்.***

ஆசீர்வாதத்திற்கான காரணத்தை இங்கு கவனிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாய் உள்ளது—ஆபிரகாம் தேவனுடைய குரலுக்குக்

கீழ்ப்படிந்தான். எந்த ஒரு மனிதனுடைய வாழ்விலும் ஆசீர்வாதம் வருவதற்கான அடிப்படைக் காரணம் கீழ்ப்படிதலே. சற்றுக் கடந்து, ஆதியாகமம் 27ம் அதிகாரத்தை நீ பார்ப்பாயானால், அங்கு ஈசாக்கு தன் மகன் யாக்கோபை ஆசீர்வதிப்பதைக் காண்கிறோம். ஆனால் இதில் விந்தையான காரியம் என்னவெனில், ஈசாக்கு முதற்பிறப்பான ஏசாவை ஆசீர்வதிப்பதாக எண்ணினான். ஆனால் ஏசா வேட்டைக்குச் சென்று ஈசாக்கு கேட்ட இறைச்சியைக் கொண்டு வரும் முன்பு ரெபேக்காள் (ஈசாக்கின் மனைவி) தனக்கு அன்பான மகனான யாக்கோபை ஏசாவிற்குப் பதிலாக நிறுத்தினாள். கண் தெரியாத ஈசாக்கை ஏமாற்றும்படி யாக்கோபிற்கு ஏசாவின் உடைகளை அணிவித்து, வேட்டைக் கறிக்குப்பதிலாக ஆட்டிறைச்சியை சமைத்துக் கொடுக்க முற்பட்டாள். அதைத் தன் கணவன் விரும்பிய வண்ணம் பரிமாறினாள். அந்த ஆட்டுக்குட்டியின் தோலை எடுத்து யாக்கோபின் கழுத்திலும், கையிலும் போட்டாள் (யாக்கோபு முடியற்றவனாகவும், ஏசா முடி நிறைந்தவனாகவும் காணப்பட்டான்). ஏசாவைப் போல் யாக்கோபு காணப்படும்படி அவள் இப்படிச் செய்தாள்.

இங்கே யாக்கோபு ஏசாவைப் போல நடித்தவனாக வருகிறான். ஈசாக்கு "நீ என் மகனாகிய ஏசா தானா?" என்றான். அதற்கு யாக்கோபு "நான் தான்" என்றான்.

இது ஒரு பொய்யான வார்த்தை! பின்பு ஈசாக்கு தயார் செய்யப்பட்ட உணவைக் கேட்கிறான்.

> **25 என் குமாரனே, நீ வேட்டையாடிக் கொண்டுவந்ததை நான் புசித்து, என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கும்படி அதை என் கிட்ட கொண்டுவா என்றான். . .** (ஆதியாகமம் 27:24,25a)

இங்கே ஈசாக்கு மாம்சீகத்திற்கு அடுத்தவனாயிருக்கிறான் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். தனக்குப் பிரியமான உணவினால் தன் வயிற்றை நிரப்பியதற்குப் பின்பே, ஆசீர்வாதங்களைக் கூற விரும்பினான்!

> **25b ...அவன் அதைக் கிட்டக் கொண்டுபோனான்; அப்பொழுது அவன் புசித்தான்; பிற்பாடு, திராட்சரசம் அவனுக்குக் கொண்டுவந்து கொடுத்தான், அவன் குடித்தான்.**
>
> **26 அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனை நோக்கி: என் மகனே, நீ கிட்ட வந்து என்னை முத்தஞ்செய் என்றான்.**
>
> **27 அவன் கிட்டப் போய், அவனை முத்தஞ்செய்தான்; அப்பொழுது அவனுடைய வஸ்திரங்களின் வாசனையை மோந்து; இதோ, என்**

*குமாரனுடைய வாசனை, கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப்போல் இருக்கிறது.*

*[28]தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக.*

*[29]ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும் கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான்."*

**ஆதியாகமம் 27:25b–29.**

ஈசாக்கின் ஆசீர்வாதம் தலைமுறை தலைமுறையாய் கடந்து செல்லக்கூடிய பேராசீர்வாதம். சற்று நேரத்திற்குப் பின்பு ஏசா வேட்டை இறைச்சியைத் தன் தந்தைக்குக் கொடுக்க முற்படுகிறான். அப்பொழுது தான் ஈசாக்கு, ஏசா என்று நினைத்துக் கொண்டு யாக்கோபை ஆசீர்வதித்து தான் ஏமாற்றப்பட்டதை உணருகிறான்.

*[33]அப்பொழுது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி: வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வருமுன்னே அவையெல்லாவற்றிலும் நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான் என்றான்.*

**ஆதியாகமம் 27:33**

இது ஒரு விந்தையான சம்பவமல்லவா? ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிப்பதாக எண்ணினான். ஆனால் அவன் கூறிய வார்த்தைகள், அவனிடமிருந்து புறப்படவில்லை என்பதை அறிந்திருந்தான். அவன் கூறிய ஆசீர்வாதம் தீர்க்கதரிசன ஆசீர்வாதம்—இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் தேவனிடமிருந்து கொடுக்கப்பட்டவை. இதன் காரணமாக அவனால் இதை ரத்து செய்ய முடியவில்லை.

இப்படிப்பட்டதோர் ஆசீர்வாதம் இயற்கைக்கு அப்பாற்பட்டது. இது மனித எண்ணமோ, மனித விருப்பமோ அன்று. இது இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமையுடையதாய் ஒருவனுடைய வருங்காலத்தையும், தொடர்ந்து வரும் சந்ததியின் ஆசீர்வாதத்தையும் நிர்ணயிக்கத் தக்கது. சாபங்கள் ஆசீர்வாதங்கள் இவற்றைப் பொருத்தமட்டில் இது உண்மையாக உள்ளது.

## சாபங்கள்

முதலாவதாக நீதிமொழிகள் 26:2க்குத் திருப்புவோம்.

***²அடைக்கலான் குருவி அலைந்து போவது போலும், தகைவிலான் குருவி பறந்து போவது போலும், காரணமில்லாமல் இட்ட சாபம் தங்காது.***

இது மிகவும் முக்கியமானது. ஒரு சாபமிருக்குமென்றால் அதற்கு ஒரு காரணமுமிருக்கும். அநேகம் தடவைகளில் இந்த சாபத்திலிருந்து விடுபட அதற்குரிய காரணத்தைக் கண்டு கொள்ள வேண்டியது அவசியம். காரணமின்றி சாபம் 'வராது.

சாபம் ஏற்படுவதற்கான காரணங்களை இனி நோக்குவோம்.

### 1. தேவன் மூலமாக

அநேகம் தடவைகளில் தேவன் ஒரு நாட்டின் மேலேயோ அன்றி தனிப்பட்ட அங்கத்தினர் மேலேயோ சாபத்தைக் கூறியுள்ளார். இது தேவனுடைய கடுமையான நியாயத்தீர்ப்பாக உள்ளது.

#### *i. ஆதியாகமம் 12:1-3*

ஆதியாகமம் 12ல் ஆபிரகாமை தேவன் அழைத்ததைச் சற்று பார்ப்போம். இங்கு தேவன் ஆபிரகாமை (அவ்வேளை அவன் ஆபிராம் என்று அழைக்கப்பட்டான்) கல்தேய நாட்டிலுள்ள ஊர் என்னும் தன் பட்டணத்தைவிட்டு அவன் அறியாத ஓரிடத்திற்குப் போகும்படி கூறுகிறார். இந்த அழைப்பிற்கு ஏழுபடிகள் உள்ளன.

***"கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ."***

இதைத் தொடர்ந்து தேவனுடைய அழைப்பின் ஏழுபடிகள் வருகின்றன.

***1) நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன்.***
***2) நான் உன்னை ஆசீர்வதிப்பேன்.***
***3) உன் பெயரைப் பெருமைப்படுத்துவேன்.***
***4) நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.***
***5) உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்.***
***6) உன்னைச் சபிக்கிறவர்களை சபிப்பேன்.***

*7) பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும். (ஆதியாகமம் 12:2-3)*

ஆபிராமிற்கு தேவனுடைய அழைப்பின் ஏழு ஆசீர்வாதங்கள் இங்கு குறிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இங்கு தேவனுடைய அழைப்பின் ஆறாவது பகுதி ஆபிராமைச் சபிப்பவர்களின் மேல் வரக்கூடிய சாபம் என்பதைக் கவனிக்க வேண்டும். இதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. தேவன் ஒரு மனிதனை ஒரு சிறப்புப் பணியைச் செய்யும்படி அழைக்கும் பொழுது அவன் சாத்தானின் தாக்குதலுக்குத் தானாகவே இலக்காகிறான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவேதான் தேவன் ஆபிராமின் அழைப்பில் அவனுக்குப் பாதுகாப்பளிக்கும் வண்ணமாக: "உன்னைச் சபிக்கிறவர்களை நான் சபிப்பேன்" என்று கூறியுள்ளார்.

பின்பு வேதாகமத்தில் இந்தப் பாதுகாப்பு ஈசாக்கின் மூலம் யாக்கோபிற்கு வருகிறது. (ஆதியாகமம் 27:29). பின்பு இது இஸ்ரவேல் நாடு முழுவதற்கும் வருகிறது. (எண்ணாகமம் 24:9) – அதாவது இது யூதமக்கள் அனைவருக்கும் வருகிறது.

யூதமக்கள் சபிக்கும் அனைவர்மேலும் தேவன் சாபத்தைக் கூறியுள்ளதை இங்கு காண்கிறோம். சாதாரண வழக்காற்றில் இது யூதப்பகைமை என்று அழைக்கப்படுகிறது. இது சாபத்திற்கான பிரதான காரணம்.

இன்று இந்த சாபத்தின் விளைவு பரந்த அளவில் தனிப்பட்டோர் வாழ்விலும் நாடுகளின் வாழ்விலும் காணப்படுகிறது. நாம் ஒவ்வொருவரும் நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நானோ அல்லது என் முன்னோர்களோ யூத மக்களுக்கு விரோதிகளாய் இருந்துள்ளோமா? நாம் அவர்களுக்கு விரோதமாகப் பேசியிருக்கிறோமா? அல்லது அவர்களைச் சபித்திருக்கிறோமா? அப்படியிருக்குமானால் உண்மையாகவே நம்மேல் சாபம் உண்டாயிருக்கும்.

### *ii. உபாகமம் 27:11-26.*

உபாகமம் 27ல் இஸ்ரவேலர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு வந்தபொழுது தேவனுக்கு ஒரு குறிப்பிட்ட வகையில் கீழ்ப்படியாமற்போனால், அதனால் அவர்கள் மேல் வரக்கூடிய பன்னிரண்டு சாபங்களை அவர்கள் கூற வேண்டும் என தேவன் கட்டளையிட்டிருந்தார்.

*[11]மேலும் அந்நாளிலே மோசே ஜனங்களை நோக்கி: [12]நீங்கள் யோர்தானைக் கடந்தபின்பு, ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படும்படி கெரிசீம் மலையில் சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும்.*

*[13]சாபங்கூறப்படும்பொருட்டு ஏபால் மலையில் ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும்.*
*(உபாகமம் 27:11–13)*

வாக்களிக்கப்பட்ட நாட்டில் கீழ்ப்படிதலுள்ளவர்களாய் அவர்கள் இருந்தால் ஆசீர்வாதத்தையும், கீழ்ப்படியாதவர்களானால் சாபத்தையும் அனுபவிக்காமல் அதில் பிரவேசிக்க முடியாது எனக்கூறியிருந்தார். வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் ஆசீர்வாதத்தையோ அன்றி சாபத்தையோ சுதந்தரிக்காதபடி அவர்கள் அதில் பிரவேசிக்க முடியாது. அந்தப் பன்னிரு சாபங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

### (a) சிலை வணக்கமும் பொய்யான கடவுளரும்.

*[14]அப்பொழுது லேவியர் உரத்த சத்தமிட்டு இஸ்ரவேல் மனிதர் எல்லாரையும் பார்த்து:*

*[15]கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டு பண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; அதற்கு ஜனங்களெல்லாரும் பிரதியுத்தரமாக ஆமென் என்று சொல்லக்கடவர்கள் என்றார்.*
*உபாகமம் 27:14,15*

இஸ்ரவேலர்கள் அனைவரும் சிலை வணக்கத்தில் ஈடுபடும்பொழுது அல்லது பொய்யான தெய்வங்களை வணங்கும் பொழுது அல்லது மந்திர வாதம் செய்யும் போது தங்கள் மேல் சாபத்தை வருவித்துக் கொண்டனர். மனிதர்கள் வாழ்வில் ஏற்பட்ட சாபத்தின் முதற்காரணம் சிலைவணக்கத்தில் ஈடுபட்டதாகும். மேலும் பொய்யான கடவுளர்களை வணங்குதலும் மந்திரவாதத்தில் ஈடுபடுதலும் இதில் அடங்கும். யாத்திராகமம் 20:3,4ல் தேவன் "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்... ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" என்றார். மேலும் "நீ அப்படிச் செய்தால் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராய் இருக்கிறேன்." என்றும் கூறினார்.

ஆகவே நீ இப்பொழுது போராடிக் கொண்டிருக்கும் பிரச்சனைக்குக் காரணம் உன் தாத்தாவாகவோ அல்லது அவருடைய தந்தையாகவோ அல்லது உன் பாட்டியாகவோ அல்லது வேறு ஒரு முன்னோராகவோ இருக்கலாம். இந்தப் பிரச்சனைக்குரிய காரணத்தை ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

உபாகமம் 27ல் கூறப்பட்டுள்ள மற்ற சாபங்களின் பட்டியலை நான் வரிசைப்படுத்துகிறேன்.

### *(b) பெற்றோர்களை கனவீனப்படுத்துதல்*

பெற்றோர்களை கனவீனப்படுத்துவது மிகவும் முக்கியமானதோர் பிரச்சனை. இந்தப் புத்தகத்தை வாசிப்பவர்களுள் சிலருக்கு தங்கள் பெற்றோர்களிடம் அவர்கள் சரியாக நடந்து கொள்ளாததினால் நிச்சயம் பிரச்சனை உண்டாயிருக்கலாம். இங்கு ஆசீர்வாதத்திற்குரிய முதலாம் கற்பனையை நினைவிற்குக் கொண்டு வரவும். "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக." என்னுடைய கிறிஸ்தவ ஊழியகாலத்தில், தன் தகப்பனையோ தாயையோ கனவீனப்படுத்திய எவரும் ஆசீர்வாதமாய் வாழ்ந்ததாக நான் காணவில்லை. சொல்லப்போனால் அப்படிப்பட்டவன் வாழாவெட்டியாகவே இருக்கிறான். பெற்றோரை கனவீனப்படுத்துவது உன்னைத் தானாகவே சாபத்திற்குள்ளாக்குகிறது. இதனால் உங்கள் பெற்றோர் சொல்வது அனைத்தையும் நீங்கள் ஒப்புக் கொள்ளவேண்டுமென்றோ அல்லது உன் பெற்றோர் சொல்வது அனைத்தையும் செய்ய வேண்டும் என்றோ நான் சொல்லவில்லை. அது உன்னுடைய பெற்றோரின் வாழ்வைப் பொறுத்தது. ஆனால் உன்னுடைய பெற்றோர் என்ற முறையில் அவர்களை நீ கனப்படுத்த வேண்டும். ஆசீர்வாதத்தைத் தாங்கிய முதற்கட்டளை இதுவே. தங்கள் பெற்றோரை கனப்படுத்த ஆரம்பித்த அநேகருடைய வாழ்வு செவ்வையாக மாற்றப்பட்டுள்ளதை நான் அறிவேன்.

அதைப் போலவே இதைச் சரிசெய்து கொள்ளாதவர்கள் ஆசீர்வதிக்கப்படாததையும் கண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் நாற்பது வயதில் புற்று நோயினால் இறந்தார். அவர் இரட்சிக்கப்பட்டவர், ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர், கர்த்தருக்கு ஊழியம் செய்தவர். எனினும் தன் தாயை மதிக்காததால் அவர் தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவிக்கவில்லை. அவள் ஆவிகளுடன் தொடர்பு கொண்டவள். அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சனைகளை நீங்கள் கற்பனை செய்து பார்க்கக்கூடும். தன் தாயாருடன் உள்ள உறவை

அவர் சரி செய்திருப்பாரென்றால், பல பிரச்சனைகளிலிருந்து, அவர் தப்பியிருக்கக்கூடும். நான் ஏதோ ஒரு கொள்கையைப் போதிக்கவில்லை— என் அனுபவத்திலிருந்து நான் அறிந்தவைகளையே போதிக்கின்றேன்.

### (c) கள்ளத்தனமான அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட பாலுறவு

இயற்கைக்கு அப்பாற்பட்ட பாலுணர்ச்சி வேகம் சாபத்தை வருவிக்கக் கூடியது. இது ஆண் புணர்ச்சியையும் மிருகங்களுடனான தவறான பாலுறவு கொள்வதையும் குறிக்கும். இன்று இலட்சக்கணக்கான குழந்தைகள் தங்கள் தகப்பனாரின் பாலுணர்ச்சிக்கும் மற்ற உறவினர்களின் உள்ளக் கிளர்ச்சிக்கும் இரையாகியுள்ளனர்.

### (d) வறியவருக்கும் உதவியற்றவர்களுக்கும் செய்யும் அநீதி

அமெரிக்க இந்தியர்களுடன் செய்த ஒப்பந்தத்தை அமெரிக்க அரசாங்கம் மீண்டும் மீண்டும் முறித்ததினால் அமெரிக்க இந்தியர்கள் வெள்ளை மாளிகையின் மேல் சாபத்தைக் கூறியுள்ளனர். நான் சொல்வதை நம்புங்கள். அந்த இந்தியர்களுக்கு எவ்வாறு சபிக்க வேண்டும் என்பது நன்கு தெரியும்! ஆகவே தான் 1860 லிருந்து 1980 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஜனாதிபதியும் 20ஆம் ஆண்டில் பணியில் இருக்கும் பொழுதே மரித்துள்ளனர். இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம்: அமெரிக்க அரசாங்கம் அமெரிக்க இந்தியர்களுக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. 1860ல் ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஆபிரகாம் லிங்கன் ஆவித்தொடர்பைச் சார்ந்த ஒருவரை வெள்ளை மாளிகைக்கு தன் மனைவியின் சொற்படி அழைத்து, மாந்திரீகம் செய்தார். பின்பு அவரது மனைவிக்கு புத்திசுயாதீனம் இல்லாமற் போயிற்று. ஆகவே சாபம் என்பது தனிப்பட்ட நபரை மட்டுமன்று, ஒரு நாட்டையே பாதிக்கக்கூடியது.

1980ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ரீகனுக்கும் இதே காரியம் நடைபெற்றிருக்கக்கூடும். அவருடைய வாழ்வின் ஆரம்பக் கட்டத்தில் அவரைக் கொலை செய்யும்படி செய்த முயற்சியின்போது இந்த சாபம் நீங்கியது. அவர் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் எடுப்பதற்கு முன்பு எங்களில் பலர் ஒரு குழுவாகக் கூடி ஜெபத்தினாலும் விசுவாசத்தினாலும் அவரை மட்டுமல்ல, அவர் ஆட்சி செய்யும் நாட்டையே அந்த சாபத்திலிருந்து மீட்டோம். குண்டு அவருடைய இருதயத்திற்கு ஓர் அங்குலம் அருகில் பதிந்தபொழுதிலும் அவருடைய வாழ்வு காக்கப்பட்டது. தேவன் ஜெபத்தைக் கேட்டு சாபத்திலிருந்து அவரை விடுவித்தார். இது நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு கொள்கையன்று.

இது தனிப்பட்ட நபரையும் எங்குமுள்ள நாடுகளையும் பாதிக்கக்கூடிய பொதுவான பிரச்சனை.

*iii 'எரேமியா 17:5-6*

முற்றிலும் மாறுபட்ட சாபத்திற்கான உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது.

***'மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன்.***

பின்பு சாபம் கூறப்பட்டுள்ளது:

***'அவன் அந்தர வெளியில் கறளையாய்ப்போன செடியைப் போலிருந்து நன்மை வருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும் குடியில்லாத உவர் நிலத்திலும் தங்குவான்.***

*(எரேமியா 17:5 –6)*

இது சாபத்திற்குள்ளான மனிதனைப் பற்றிய விளக்கம். மற்றவர்கள் அனைவரும் மழையைப் பெறுகின்றனர். (ஆசீர்வாதங்களையும் செழிப்பையும்) ஆனால் இவைகளுக்கு மத்தியில் அவனோ வறட்சியான இடங்களில் தங்குவான்; நன்மையையும் காண்பதில்லை. ஏன்? சாபத்தினிமித்தமாக. இந்த சாபத்திற்கான காரணம் என்ன?

மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு (மனிதத் திறமைகளையும் பொருளாதாரத்தையும் நம்பி) **கர்த்தரை** விட்டு விலகுகிற இருதயமுள்ளவன் சபிக்கப்பட்டவன்.

தேவனுடைய கிருபையை ருசிபார்த்த அநேக திருச்சபைகளின் பேரில்கூட இந்த சாபம் தங்கியிருக்கிறது. அவருடைய கிருபையால் ஆசீர்வதிக்கப்படுவது எவ்வாறு என்று தெரிந்த இவர்கள் தங்கள் சொந்தத்திறமை, ஞானம், வழிமுறைகள், மதச்சடங்காச்சாரங்கள் இவைகளை நோக்கித் திரும்பி விட்டனர். மாம்சபெலத்தைத் தங்கள் பலமாகக் கருதலாயினர். இதனால் தேவனுடைய ஆசீர்வாதம் நீங்கி அது இருந்த இடத்தில் அந்தச் சபையில் சாபம் வரலாயிற்று. இப்படிப் பட்ட சாபத்திற்குள்ளான திருச்சபைகளில் நான் பிரசங்கித்திருக்கிறேன். அந்த சாபம் நீக்கப்படும்வரை அவர்களால் சாதனைகள் எதுவும் செய்யமுடிவதில்லை.

*iv சகரியா 5:1-4*

சகரியா 5ம் அதிகாரத்தில் இருபுறமும் சாபங்கள் எழுதப்பட்டுள்ள

ஒரு நூற்சுருளை சகரியா காண்கிறார். ஒரு புறத்தில் எழுதப்பட்டசாபம் திருடியவனைப் பற்றியதாகவும், மறுபக்கத்தில் எழுதப்பட்ட சாபம் கர்த்தருடைய நாமத்தினால் பொய்யாணை இடுகிறவர்களைப் பற்றியதாகவும் உள்ளது. எந்த வீடுகளில் உள்ள மக்கள் பேரில் இந்த சாபம் ஏற்படுகிறதோ அது அந்த வீட்டிலுள்ள அனைவரையும் அழிக்கிறது.

சாபம் உட்பிரவேசித்ததால் அநேக வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. சாபத்தின் காரணமாக அநேக குடும்பங்களில் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. திருடுகிறவர்களையும் பொய்யாணை இடுகிறவர்களையும், இப்பட்டியலில் சேர்த்தால் சாபத்துக்குள்ளான மக்களின் எண்ணிக்கையை கணக்கிடக்கூடுமோ! எத்தனை பேர் வரிசெலுத்துவதில் நேர்மையற்றவர்களாய் உள்ளனர். அது நம்மேல் சாபத்தை வருவிக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாட்டிலே ஆலயத்திற்கு ஒழுங்காய் செல்லும் அநேக மக்கள் கூட இப்பட்டியலில் அடங்குவார்கள்.

## 2. தேவ பிரதிநிதியான மக்கள்

தேவபிரதிநிதியான மக்கள் சிலராய் இருப்பினும், அவர்கள் மூலமும் சாபம் வரக்கூடும். யோசுவா இதற்கு முதல் உதாரணம். யோசுவா 6:26ல் இஸ்ரவேல் மக்கள் எரிகோ பட்டணத்தை அற்புதமாகப் பிடித்த போது அதை மீண்டும் கட்ட முற்படுகிறவன் மேல் ஒரு சாபத்தை யோசுவா கூறியிருந்தார்.

> ***26 அக்காலத்திலே யோசுவா: இந்த எரிகோ பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப் பட்டிருக்கக்கடவன்; அவன் அதின் அஸ்திபாரத்தைப் போடுகிற போது தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது தன் இளைய குமாரனையும் சாகக் கொடுக்கக்கடவன் என்று சாபம் கூறினான்.***

இந்த சாபம் கி.மு 1300ல் கூறப்பட்டது. சுமார் கி.மு 800 - ல் ஒரு மனிதன் எரிகோவைக் கட்ட முற்பட்டான். அதைப்பற்றி 1 இராஜாக்கள் 16:34ல் வாசிக்கிறோம்.

> ***34 அவன் நாட்களிலே (சுமார் 500 ஆண்டுகளுக்குப் பின்பு ஆகாப் அரசன் ஆண்ட நாட்களிலே) பெத்தேல் ஊரானாகிய ஈயேல் எரிகோவைக் கட்டினான்; கர்த்தர் நூனின் குமாரனாகிய யோசுவாவைக் கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் அதின்***

***அஸ்திபாரத்தைப் போடுகிறபோது, அபிராம் என்னும் தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிற போது செகூப் என்னும் தன் இளைய குமாரனையும் சாகக் கொடுத்தான்.***

500 ஆண்டுகளுக்குப் பின்பு, யோசுவாவினால் கூறப்பட்ட சாபம் அப்பட்டணத்தைக் கட்டத் தொடங்கியவனின் வாழ்வில் வேலை செய்தது. அவன் இருபிள்ளைகளை இழந்தான். அம்மரணத்திற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்த மருத்துவர்களைப் பற்றி உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? எந்தவித மருத்துவக் காரணமுமின்றி அவர்கள் மரித்தனர். எந்த நுண்கிருமியோ, மருத்துவக் காரணமோ, இல்லாத நிலையில் அவர்கள் மரித்தனர். 500 ஆண்டுகளுக்கு முன்பு தேவனுடைய மனிதன் ஒருவனால் அப்பட்டணத்தைக் கட்டுபவன் மேல் சொல்லப்பட்ட சாபமே இதற்குக் காரணம் என்பதை மருத்துவர்கள் அறிய மாட்டார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகள் உன் வாழ்வை பாதிக்கக்கூடும் என்பதை இப்பொழுது உன்னால் காணமுடிகிறதா?

அடுத்த உதாரணம் 2 சாமுவேல் 1:21ல் சவுலும் யோனத்தானும் மரணமடைந்த பின் தாவீது பாடிய பாடலில் வருகிறது. உள்ளத்தை அச்சுறுத்துகின்ற இதைப்போன்ற சில சாபங்களைத் தாவீது கூறியிருக்கின்றான். சங்கீதப் புத்தகத்தில் இவைகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. அதைப் படிக்கும் பொழுதே உள்ளம் சில்லிட்டுப் போகும்போல் இருக்கும். இது தேவனுடைய மனிதனின் ஊழியத்தின் ஒரு பகுதியாக அமைந்து அவர்கள் மனிதனை ஆசீர்வதிப்பது மட்டுமல்ல, சபிக்கவும் செய்திருக்கின்றனர் எனக் காண்கிறோம்.

யோனத்தானையும், சவுலையும் பற்றி வரும் தாவீதின் அழகான பாடலில் இது வருகிறது;

> ***21 கில்போவா மலைகளே, உங்கள் மேல் பனியும் மழையும் பெய்யாமலும் காணிக்கைக் கேற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்படாதவர் போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே.*** *2 சாமுவேல் 1:21*

இங்கு இவர் மலையுடன் பேசியிருப்பது அர்த்தமுள்ளதாக, உன்னை வியப்பில் ஆழ்த்துகிறதா? தாவீதின் இந்த வார்த்தைகள் கிறிஸ்துவிற்கு 1000 ஆண்டுகட்டு முன்பு பேசப்பட்டன—3000 ஆண்டுகள் கடந்த பின்பும் —இன்றும் நீங்கள் கில்போவா மலைப் பகுதிக்குச் செல்வீர்களானால், அங்கு எந்த விதமான பசுமையான தாவரத்தையும் காண முடியாது. ஆனால்

அதைச் சுற்றியுள்ள மலையின் மற்றப் பகுதிகளில் மரங்களும் தாவரங்களும் வளர்ந்திருக்கின்றன. இஸ்ரவேல் அரசாங்கம் சளைக்காமல் உழைத்து அம்மலையில் மரங்களை நட்டனர். ஆனால் எதுவும் அங்கு வளரவில்லை! இதற்குக் காரணம் என்ன? அதற்குக்காரணம் 3000 ஆண்டுகளுக்கு முன்பு தாவீது கூறிய வார்த்தைகளே. இன்றும் இஸ்ரவேல் நாட்டின் நிலப்பரப்பில் இதற்கான சான்றைக் காணலாம். இது அர்த்தமற்ற கொள்கை அன்று!

எலிசாவிற்கு கேயாசி என்ற வேலைக்காரன் இருந்ததை நீங்கள் நினைவு கூறலாம். நாகமான் அற்புதமாய் சுகமடைந்தபோது எலிசாவிற்குக் கீழ்ப்படியாமல் கேயாசி நாகமானை நோக்கி ஓடினான். அவன் பணத்தையும் உடைகளையும் பெற்றுக் கொண்டு எலிசாவிடமிருந்து அதை மறைத்து வைத்தான். அவன் திரும்பி வந்த பொழுது எலிசா அவனை நோக்கி "என் மனம் உன்னுடன் கூட செல்லவில்லையா?" என்றான். மீண்டும் எலிசா "நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான்" உடனே கேயாசி உறைந்த மழை நிறமான தொழு நோயாளியானான். இது ஏற்படக் காரணம் என்ன? தேவனுடைய மனிதனால் கூறப்பட்ட சாபமே இதற்குக் காரணம்.

புதிய ஏற்பாட்டில் மாற்கு 11:12,13-ல் கீழ்க்கண்டவாறு வாசிக்கிறோம்.

> ***12*** ***மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டுவருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று.***
>
> ***13*** ***அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்கவந்தார். அத்திப்பழக் காலமாயிராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை.***

இவ்விதமான அத்திமரத்தில், பழங்கள் உருவாகுமுன் உருண்டையான செங்காய் முதலில் தோன்றும். அராபியர்கள் இதை தங்கள் மொழியில் "விழக்கூடியவை" என்ற அர்த்தமுள்ள ஒரு சொல்லால் அழைப்பர். அத்திப்பழம் இல்லாத காலத்தில் காரணமின்றி அத்திப்பழங்களை இயேசு எதிர்பார்க்கவில்லை. இந்த முதற்காயே அதில் காணப்படவில்லையாகையால் அத்திப்பழங்களுக்கு அங்கே இடமில்லை. ஆகவே அது கனியற்ற மரம் என இயேசுவிற்கு தெரியும். அவர் என்ன செய்தார்? அவர் மரத்தை நோக்கிப் பேசினார். இதில், ஓர் அர்த்தத்தை நீ காண்கின்றாயா? "ஒருவனும் ஒருக்காலும் உன்னிடத்தில் கனியை புசியாதிருப்பானாக" என்றார். அவருடைய சீஷர்கள் அதைக் கேட்டார்கள். அவர்கள் இயேசு சற்று வேண்டாததைக் கூறிவிட்டதாக எண்ணினார்கள். ஆனால் 20ம் வசனத்தில்:

*[20]மறுநாள் காலையிலே அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப் போயிருக்கிறதைக் கண்டார்கள்*

24 மணி நேரத்திற்குள் அந்த மரம் முற்றிலும் பட்டுப் போனது.

*[21]பேதுரு அதை நினைவுகூர்ந்து அவரை நோக்கி: ரபீ இதோ, நீர் சபித்தமரம் பட்டுப்போயிற்று என்றான்.*

அவன் இயேசுவினிடம் நீர் சபித்த மரம் என்று கூறியதை கவனிக்கவும். அதன் பலனாய், அது பட்டுப் போயிற்று. இதே சம்பவத்தை மீண்டும் மத்தேயு 21:20–21ல் இவ்வாறு காண்கிறோம்.

*[20]சீஷர்கள் அதைக் கண்டு: இந்த அத்திமரம் எத்தனை சீக்கிரமாய்ப் பட்டுப் போயிற்று! என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்.*

*[21]இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசம் உள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப்பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

அந்த அத்திமரத்திற்கு என்ன நேர்ந்தது? அது சபிக்கப்பட்டது. இயேசுவும் சீஷர்களுக்கு சபிப்பதற்கான அதிகாரம் கொடுத்தார். அவர் **"இந்த அத்திமரத்திற்கு செய்ததை நீங்கள் செய்ததுமல்லாமல் இந்த மலையைப்பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்றார்.

இதை நாம் உணர்ந்தால் நமக்குள்ள வல்லமை நமக்கே அச்சத்தைத் தரும். அநேகம் தடவைகளில் நாமும், தேவன் மோசேக்கு எகிப்திற்குச் சென்று இஸ்ரவேலர்களை விடுவிக்கும்படி அழைப்புக் கொடுத்த போது அவன் நடந்து கொண்ட வண்ணமாகவே நடந்து கொள்கிறோம். அவன் என்னிடத்தில் ஒன்றுமில்லை, நான் எவ்வாறு செல்வேன் என்றான்.

கர்த்தர் உன் கரத்தில் உள்ளது என்ன? என்று கேட்டார். அது மேய்ப்பனின் ஒரு கோல் என்றான். அதை நிலத்திலே போடு என்று கர்த்தர் சொன்னார். அது நிலத்தில் பட்டபொழுது பாம்பாக மாறியது. தன் கரத்தில் பிடித்திருந்த அப்பொருளைக் கண்டு அவன் ஓட ஆரம்பித்தான். அவனுக்குத் தேவையானதெல்லாம்—ஒரு கோல் தான்

என்றார். அதை வைத்துக் கொண்டு எகிப்திற்குச் சென்று தன் வேலையை முடிக்கும்படி சொன்னார்.

நம்மில் அநேகர் இவ்வாறே இருக்கிறோம். நாம் ஒரு கோலை கரத்தில் பிடித்திருக்கிறோம். அதை நிலத்தில் எறிந்தால் அது ஒரு பாம்பாகக் கூடும் என்பதை அறியாதிருக்கிறோம்.

நான் ஒரு உண்மைக் கதையை உங்களுக்குச் சொல்லுகிறேன். 1965ம் ஆண்டு நான் சிக்காகோவிலுள்ள ஒரு சபையில் உதவிப் போதகராக இருந்தேன். அந்த ஆலயத்தின் சுவரையொட்டி மறு கோடியில் ஒரு மதுக்கடை இருந்தது. அந்த இடத்தில் மதுவும், போதைப்பொருளும் மட்டுமல்ல, நெறிதவறிய செயல்களும் நடைபெற்றன. அக்டோபர் மாதத்திலே அந்த சபையில் ஒரு ஜெபக்கூட்டம் நடத்தினோம். நான் மேடையில் உட்கார்ந்திருந்தேன். அந்த ஜெபக்கூட்டத்தை ஒரு தலைவர் நடத்தினார்—எந்தவித முன் யோசனையுமின்றி நான் எழுந்து நின்று "இயேசுவின் நாமத்தில் அந்தக் கடையைச் சபிக்கிறேன்" என்றேன். அதற்குப் பின்பு அதைக்குறித்து நான் அதிகம் சிந்திக்கவில்லை.

கிறிஸ்துமஸ் காலத்தில் காலை 4 மணிக்கு என் வீட்டுத் தொலைபேசியில் மணி அடித்தது. "சகோதரன் பிரின்ஸ் அவர்களே! ஆலயம் எரிந்து கொண்டிருக்கிறது. அதை பார்க்க வருகிறீர்களா? என்ற செய்தியைக் கேட்டேன். வெப்பநிலை அவ்வேளை - 20 ° ஆக இருந்தது.

"நான் வந்து பார்க்க விரும்பவில்லை" என்றேன். ஆலயம் எரியும்போது அக்கறை காட்டவில்லையாயின், மக்கள் என்னை கவலையற்றவர் என எண்ணிவிடுவார்களே என்பதற்காக என் மனைவி லீதியாளை அழைத்துக் கொண்டு காரில் அங்கு சென்றேன்.

அவ்விடத்தை நான் நெருங்கிச் சென்றபொழுது அக்கினி சுவாலை வானில் காணப்பட்டது; புகை நிறைந்திருந்தது. நெருங்கிச் சென்ற பொழுது எரிந்து கொண்டிருப்பது ஆலயமன்று, அந்த மதுக்கடையே எனக் கண்டேன். காற்று மிச்சிகன் ஏரியை நோக்கி அடித்ததால் ஆலயம் எரிவது போல் காணப்பட்டது. நாங்கள் அங்கே சென்ற பொழுது காற்றின் திசை 180 ° திரும்பி ஆலயத்திற்கு எதிர்திசையில் சுவாலையைத் திருப்பியது. இதன் பலனாக அந்த மதுக்கடை எரிந்து சாம்பலாயிற்று. புகை படிந்ததைத்தவிர, ஆலயத்திற்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

சிகாகோ நெருப்பு அணைப்பு படையைச் சார்ந்த முதன்மையான அதிகாரி ஒருவர் எங்களுடைய மூப்பர்களுள் ஒருவரிடம் "மாடியிலுள்ள மனிதரிடம் உங்களுக்கு சிறப்பு உறவிருக்க வேண்டும்" எனக் கூறினாராம்.

இது எதனுடைய விளைவு என்று உனக்குத் தெரியுமா? ஒரு சாபத்தின் விளைவு. நடந்ததை நான் கண்டபொழுது "சகோதரன் பிரின்ஸே! இது முதல் நீ ஜெபிக்கும் காரியங்களைக் குறித்து மிகவும் கவனமாயிரு!" என்று எண்ணலானேன். நான் மோசேயைப் போல என் கையிலுள்ளதை அறிந்து நடுக்கம் கொள்ளலானேன்.

## 3. உறவின் முறையாருக்குள்ள அதிகாரம்

இது சாபத்திற்கான இன்னொரு முக்கிய காரணம். ஒரு நபர் மற்ற நபரின் பேரிலோ அல்லது நபர்களின் பேரிலோ சில சூழ்நிலைகளில் அதிகாரம் செலுத்துகின்ற தன்மையை மனித சமுதாயத்தில் தேவன் ஏற்படுத்தியுள்ளார்.

இதற்குப் பிரதான உதாரணம் ஒரு தகப்பனார். அவர் தேவனுடைய வார்த்தையின்படி தன் குடும்பத்தின் பேரில் அதிகாரம் உடையவராய் இருக்கிறார். அவர் தன் குடும்பத்தின் மேல் செலுத்தும் அதிகாரம் மெய்யானது. இதை பிறர் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி. இதைக் குறித்து அவர்கள் சண்டை போட்டாலும் சரி, அல்லது போடாவிட்டாலும் சரி, அது ஒரு பொருட்டல்ல. அவர் அதைப் பயன்படுத்தாதே போவாராயினும் அது இவ்வுண்மையை மாற்றாது. அவருக்கு அதிகாரம் கட்டாயம் உண்டாயிருக்கும்.

அதைப்போலவே ஒரு கணவன் தன் மனைவியின் பேரில் அதிகாரம் உடையவராயிருக்கிறார். வேதம், தேவன் கிறிஸ்துவிற்குத் தலையானவர் என்றும், கிறிஸ்து கணவனுக்குத் தலையாயிருக்கிறார் என்றும், கணவன் மனைவிக்குத் தலையாயிருக்கிறார் என்றும் சொல்கிறது. "பெண் உரிமை கட்சி" ஆதரவு காட்டுவோர் எதைச் சொன்னாலும் சரி, சத்தியம் சத்தியமாகவே உள்ளது. அதற்கு எதிர்த்து நிற்பதினால் சத்தியத்தை மாற்றிவிட முடியாது.

யாக்கோபையும் அவன் குடும்பத்தையும் பற்றிய காரியத்தைப் பார்ப்போம். யாக்கோபு தன் மாமன் இலாபானுக்கு பதினான்கு ஆண்டுகளுக்குமேல் உழைத்திருக்கிறார். அவருக்கு இருமனைவிகளும், மறுமனையாட்டிகளும், பதினொரு குழந்தைகளும் இருந்தனர். தேவன் தனக்கு வாக்களித்துள்ள நாட்டிற்கு ஓடிப்போக அவன் தீர்மானித்தான். அவ்வேளை யாக்கோபிற்கு மனைவிகளாயிருந்த இலாபானின் பெண் மக்களை இலாபான் தக்க வைத்துக் கொள்வான் என்ற பயத்தில் யாக்கோபு இரகசியமாக ஓட முற்பட்டான். இலாபான் அவனைப் பின் தொடர்ந்து இறுதியில் கானான் நாட்டின் எல்லையருகே அவனைப் பிடித்தான்.

அவர்கள் ஓடிய பொழுது இலாபானின் மகளும், யாக்கோபின் இரண்டாவது மனைவியுமாகிய இராகேல் தன் தந்தையினுடைய வீட்டுத் தெய்வங்களைத் திருடிச் சென்றாள். முதலாவதாக அவன் குடும்ப தெய்வங்களை வைத்திருந்திருக்கக் கூடாது. இரண்டாவதாக அவள் அதைத் திருடியிருக்கக்கூடாது. அவள் திருடி விட்டாள்.

வீட்டுத் தெய்வங்கள் எடுத்துச் செல்லப்பட்டதால் இலாபானுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. இலாபான் யாக்கோபைப் பிடித்த போது, சொல்லிக் கொள்ளாது ஏன் அவன் வீட்டை விட்டுச் செல்ல முற்பட்டான் என்றும் ஏன் குடும்ப தெய்வங்களின் சொரூபத்தைத் திருடிச் சென்றான் என்றும் கேட்டான். யாக்கோபிற்கு இராகேல்தான் இதை எடுத்து வந்திருக்கிறாள் என்பது தெரியாது. இராகேல் இலாபான் இதைக் காணாதபடி ஒளித்து வைத்து விட்டாள். தன் மாமனுடைய தெய்வங்களைத் திருடிவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டதால் கோபமடைந்த யாக்கோபு ***"யாரிடத்தில் உமது தெய்வங்களைக் கண்டு பிடிக்கிறீரோ அவரை உயிரோடே விடவேண்டாம்"*** (ஆதியாகமம் 31:32) என்றான்.

இது இராகேலின் கணவனான யாக்கோபினால் கூறப்பட்ட ஒரு சாபம். இராகேலின் மேல் அவனுக்கு அதிகாரம் உண்டு. ஆகவே இவைகள் வெறும் வார்த்தைகளன்று. அவனுடைய அதிகாரம் நிறைந்த வார்த்தைகள்.

என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரியுமா? சற்றுப் பின்பு பிள்ளைப் பேற்றின் காலத்திலே பிள்ளையைப் பெற்றெடுத்த பின் இராகேல் மரித்தாள். தான் அறியாத வண்ணமாக தன் மனைவிக்கு ஒரு முடிவை அவனே அறிவித்தான். இப்படிப்பட்ட சம்பவம் இங்கும் நடைபெறுகிறது.

நான் ஏற்கெனவே கூறியபடி இப்படிப்பட்ட அதிகாரமுடைய ஒரு நபர் தந்தை. இரண்டாவதாக தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு அடுத்தபடி வாழ்வில் விரும்பத்தக்க முக்கியமான காரியம் தந்தையின் ஆசீர்வாதம். இதற்கு எதிர்மறையாக அதிகமாக பயப்பட வேண்டிய மற்றொரு காரியம் தந்தையின் சாபம். அநேகத் தகப்பன்மார்கள் தாங்கள் அறியாத வண்ணம் தங்கள் பிள்ளைகளின் மேல் சாபம் இடுகின்றனர். இந்த மாதிரியான அநேகரை நான் சந்தித்து உதவி செய்ததினால் அதை நான் நன்கு அறிவேன்.

ஒரு தகப்பனாருக்கு மூன்று குழந்தைகள் இருக்கலாம். முதலாவது குழந்தையும், மூன்றாவது குழந்தையும் ஞானமுள்ளதாகவும், மத்தியிலுள்ள பிள்ளை ஞானத்தில் குறைவுள்ளவனாகவும் இருக்கலாம். ஆகவே அந்த மத்தியிலுள்ள குழந்தையின் பேரில் தந்தை விருப்பம் கொள்வதில்லை. (பெற்றோர்களைப்பற்றி நான் கவனித்த காரியம் ஒன்றுண்டு. அவர்கள்

ஒரு குழந்தையை விரும்பவில்லையென்றால் பொதுவாக தன்னிலுள்ள குற்றத்தைவிட அவர்களைப் போலவே இருக்கும் அக்குழந்தையிலுள்ள குற்றத்தை பெரிதுபடுத்துகிறார்கள்) ஆகவே தகப்பனார் அந்தக் குழந்தையைப் பார்த்து "நீ ஒரு நாளும் உருப்படப்போவதில்லை. நீ வெற்றியடைய மாட்டாய். உன் சகோதரர்கள் முன்னேறிச் செல்வர். நீ வாழ்நாளெல்லாம் தோல்வி அடைந்தவனாகவேயிருப்பாய்" என்பதுண்டு.

இது என்ன என்று உனக்குத் தெரியுமா? இது ஒரு சாபம். பெற்றோர்கள் கூறிய சாபத்தினால் வாழ்நாள் முழுவதும் போராடிக் கொண்டிருக்கும் எத்தனையோ பேரைக் கண்டு நான் வியப்படைந்திருக்கிறேன்.

சாபத்தைக் கூறக்கூடிய மற்றொருவர் ஆசிரியராவார். ஓர் ஆசிரியருக்கு தன் மாணவர், மாணவியர் பேரில் அதிகாரமுண்டு. ஓர் ஆசிரியைக்கு ஆரம்ப ஆண்டுகளில் ஒரு மாணவியைப் பிடிக்காமல் இருக்கலாம். ஆகவே அந்த ஆசிரியை "நீ கற்றுக் கொள்ளப் போவதில்லை, எல்லாமே தவறாகத்தான் நீ செய்கிறாய். நீ வெற்றியடைய மாட்டாய்" எனக் கூறலாம்.

இது என்ன? இது ஒரு சாபம். ஆசிரியரினாலே கூறப்பட்ட சாபத்திலிருந்து விடுதலையைப் பெற அநேகருக்கு நான் உதவியிருக்கிறேன்.

சாபத்தைக் கூறும் அதிகாரமுடைய இன்னொரு நபர் போதகர். போதகருக்கு தன்னுடைய சபையின் மேலே ஆவிக்குரிய அதிகாரம் உண்டு. ஒரு போதகருக்கு சபையின் அங்கத்தினர் ஒருவர்பேரில் பிரச்சனை உண்டானதினால் அந்த அங்கத்தினர் தவறான எண்ணங் கொண்ட ஆவியுடன், அச்சபையை விட்டு நீங்குகிறார் என வைத்துக் கொள்வோம். உடனே அந்தப் போதகர் "நீ எங்கே சென்றாலும் வெற்றியடைய மாட்டாய். இச்சபையின் காரியங்களை சரிசெய்யும் வரை எங்கே சென்றாலும் நிம்மதி உனக்கு இருக்காது" எனக் கூறுகிறார்.

இது என்ன? இது ஒரு சாபம். மதப்பிரிவுகளில் இப்படிப்பட்ட தவற்றை அடிக்கடி காணலாம். இவ்விதக் குழுக்களை, நீ விட்டு வருவாயென்றால் அவர்கள் கட்டாயம் உன் பேரில் ஒரு சாபத்தைக் கூறுவர். அதன் விளைவு ஒதுக்கித்தள்ளக் கூடியதாக இருக்காது. இது உண்மையே.

## 4. தன்மேலேயே கூறப்பட்ட சாபம்

தன் மேல் கூறப்படும் சாபம் என்பது மக்கள் வார்த்தைகளால் தன்னையே சபித்துக் கொண்டதாகும். இது சாதாரணமாய் நடைபெறுவதுண்டு. ஈசாக்கு, ரெபேக்காள் சரித்திரத்திற்குக் கடந்து செல்வோம். ரெபேக்காள் ஈசாக்கிடம் ஆசீர்வாதத்தை ஏமாற்றி பெற்றுக் கொள்ளும்படி யாக்கோபைத் தூண்டுகிறாள். ஆனால் யாக்கோபு தான் கண்டு பிடிக்கப்பட்டு விடக்கூடும் என பயப்படுகிறான்.

> ***12** அவன் ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என்மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக்கொள்வேனே என்றான்.*
>
> ***13** அதற்கு அவன் தாய்: என் மகனே, உன்மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும்; என் சொல்லைமாத்திரம் கேட்டு, நீ போய், அவைகளை என்னிடத்தில் கொண்டுவா என்றாள்.* **ஆதி. 27:12-13.**

வேறு வார்த்தைகளில் சொன்னால் "அந்தச்சாபம் உன்மேல் அல்ல, என் மேலேயே வரும்" என்கிறாள். அவளோ அந்த சாபத்தை தன்மேலேயே கூறிக் கொண்டாள். அதே பகுதியில் பின்பு பார்க்கும் பொழுது அவள் தன் கணவனாகிய ஈசாக்கினிடத்தில், ஏசா தான் அனுமதி தராத மனைவிகளைத் திருமணம் பண்ணியதாக குற்றம் சாட்டுகிறாள். ரெபேக்காளின் விருப்பத்தின்படி காரியங்கள் நடைபெறாததினால் அவள் ஈசாக்கை நோக்கி:

> ***46** ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது; இந்தத் தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன என்றாள்.* **ஆதியாகமம் 27:46**

அவள் தன் பேரிலேயே இரு சாபங்களைக் கூறிக் கொள்ளுகிறாள். தன் வாழ்க்கையை வெறுத்து விட்டதாகக் கூறி "தான் உயிருடன் வாழ்வதால் என்ன பயன்—சாவதே மேல்" என்பதுபோல் பேசுகிறாள்.

எத்தனையோ மக்கள் தங்கள் பேரிலேயே "நான் மரித்தால் நலமாயிருக்கும். உயிர் வாழ்வதால் என்ன பயன், என்னால் எதையும் சாதிக்க முடியாது" எனக் கூறி சாபத்தை வருவித்துக் கொள்ளுகின்றனர். இதை அடிக்கடி சொல்லத் தேவையில்லை. இது மரணத்தின் ஆவிக்கு கொடுக்கும் அழைப்பிதழ். அநேகம் முறை அழைப்பைப் பெறாமலேயே

அவன் வர ஆயத்தமாய் இருக்கிறான். இவ்விதமாக எதிர் மறையாகப் பேசியதால் வந்த மரண ஆவியினின்று விடுதலை பெற்ற அநேகரை நான் அறிவேன்.

மேற்கு அயர்லாந்திலே நான் ஒரு கூட்டத்தில் 2000 மக்களுக்குப் பேசிக் கொண்டிருந்தேன். எல்லாருக்கும் மொத்தமாக மரணத்தின் ஆவியிலிருந்து விடுதலைக்கான ஜெபத்தைச் செய்தேன். சுமார் 50 பேர் உடனே விடுதலை பெற்றனர். இவர்களுள் அநேகர் வாலிபர்கள்.

"இந்த நம்பிக்கையற்ற தன்மை எவ்வாறு உண்டாயிற்று?" "வாழ்க்கையில் எந்த நன்மை இருக்கிறது? நான் எதற்காய் வாழ வேண்டும்? மரித்துப்போனாலே நலமாயிருக்கும்" இவ்வாறு கூறுவது மிகவும் ஆபத்துக்குரியது. உன் மேல் தானே இதன் மூலம் நீ ஒரு சாபத்தைக் கூறிக் கொள்ளுகிறாய். பிசாசே இவ்விதமான தந்திரத்தில் உன்னை மாட்டி வைக்கிறான். சோர்வோ அல்லது சிறிய துயரமோ ஏற்படும்போது, பெரும்பாலும் எளிய காரணங்களுக்காக இவ்வாறு அவன் செய்கிறான். எனினும் உன் சொந்த முடிவை நீயே தீர்மானிக்கின்றாய்.

இப்படிப்பட்ட சோகமானதோர் உதாரணத்தை மத்தேயு 27:24,25ல் காண்கிறோம். இது பொந்தியு பிலாத்து இயேசுவை விசாரிக்கும் ஒரு காட்சி.

> 24 ***கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான்.***
>
> 25 ***அதற்கு ஜனங்களெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்.***

இது தனக்குத் தானே சொல்லிக் கொண்ட சாபம். யூதர்களுடைய பத்தொன்பது நூற்றாண்டு சரித்திரத்தைப் பார்க்கும்பொழுது இவ்வாறு அவர்கள் தங்கள் மேலேயே சொல்லிக் கொண்ட சாபம் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்துள்ளதைக் காணலாம். இது புரிந்து கொண்டவர்களுக்குமட்டுமே விளங்கும்—"இவர்களுடைய இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று அந்த யூதர்கள் கூறினர். இங்கு "பிள்ளைகள்" என்னும் வார்த்தை வரவிருக்கும் தலைமுறைகளைக் குறிக்கிறது. இது எவ்வளவு பரிதாபமானது!

இதில் ஒருமாற்றம் ஏற்பட ஆரம்பித்துள்ளது. 1989-ம் ஆண்டு நான் இஸ்ரவேலில் பங்கேற்ற இரண்டு கூட்டங்களில் மேசியாவின் சபையைச் சார்ந்த யூதத் தலைவர்கள் தங்கள் மக்களின் சார்பாக இந்தப் பாவத்தை அறிக்கையிட்டு அதினின்று விடுதலை வேண்டும் என தேவனிடம் கேட்டுக் கொண்டனர். தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. ஏனென்றால் சிலுவையில் இயேசு, "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்கா 23:34) எனக்கூறியதால் இது மன்னிப்பைப் பெற வாய்ப்பைப் பெற்றது.

## 5. சாத்தானுக்குப் பிரதிநிதியான மக்கள்

பில்லிசூனிய மருத்துவர்கள்—பலநாடுகளில் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். – இவர்கள் சாபமிடுவதில் நிபுணர்கள். இதுவே அவர்களுடைய முழுநேர வேலை. இதில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். நான் கிழக்கு ஆப்பிரிக்காவிலே ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு கல்லூரியிலே முதல்வராக இருந்தபொழுது தொலை தூரத்து மலைப்பகுதியிலுள்ளோர் இந்தக் கதையைச் சொன்னார்கள். அம்மாணவனுடைய கிராமத்தில் இரு குடும்பத்தினர் சண்டையிட்டுக் கொண்டனர். அதில் ஒரு குடும்பத்தினர் பில்லிசூனிய மருத்துவருக்கு "அந்தக் குடும்பத்தின்மேல் ஒரு சாபத்தை கூறுங்கள்" எனக்கூறி ஒரு ஆட்டைக் கொடுத்தனர். அந்த பில்லி சூனிய மருத்துவர் சொன்னார்: "நல்லது, ஒரு குறிப்பிட்ட நாளின் நள்ளிரவில் அக்கிராமத்தில் ஓர் ஓநாய் ஊளையிடும். அவ்வேளையில் அக்குடும்பத்தில் உள்ள மகன் ஒருவன் மரிப்பான்" என்றார். அவ்வாறே நள்ளிரவில் ஓநாய் ஊளையிட்டது. அந்த மகன் மரித்தான். அவன் வேறு எந்தக் காரணத்திற்காக மரிக்காது இருந்தாலும் பயத்தினால் அவன் மரித்திருக்க வேண்டும். ஒரு தடவை நானும் ரூத்தும் சாம்பியாவில் இருந்தபொழுது குழந்தைகளே இல்லாத ஒரு மலட்டுப் பெண்ணுக்காக ஜெபித்தோம். ஏழாயிரம் மக்கள் கூடியிருந்த மக்கள் கூட்டத்திலிருந்து இப்படிப்பட்ட நிலையுள்ளவர்களை அழைத்த பொழுது நானூறு பேர் ஜெபத்திற்கு முன் வந்தனர்.

அவர்களுக்காக நான் ஜெபிப்பதற்கு முன்பு என் மொழிபெயர்ப்பாளரை "அவர்களுள் எத்தனை பேர் தாயத்தோ, மந்திரித்த தண்ணீரோ குழந்தைகள் உண்டாயிருக்கும்படி பில்லி சூனிய மருத்துவரிடமிருந்து வாங்கி பயன்படுத்தி இருக்கின்றனர்" எனக் கேட்கச் சொன்னேன். இந்த நானூறு பேரில் இருவரைத் தவிர அனைவரும் கையை உயர்த்தினர்.

ஆப்பிரிக்கப் பகுதி அனைத்திலும் இவ்விதமான பில்லி சூனிய

மருத்துவர்கள் மலிந்து காணப்படுகின்றனர். இம்மக்களுடைய வாழ்க்கை பெரும்பாலும் பில்லிசூனிய மருத்துவர்களின் ஆவிக்குரிய சக்தியினால் கட்டுப்படுத்தப்படுகிறது. நாங்கள் சாபத்திலிருந்து விடுதலையளிக்கக்கூடிய இந்தச் செய்தியைக் கூறிய பொழுது அது அம்மக்களிடத்தில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர்கள் என் போதகத்தைக் கேட்டு பின்பு விடுதலையின் ஜெபத்தை நான் சொல்ல அவர்கள் திரும்பவும் சொல்லியபொழுது மக்கள் முற்றிலும் மாற்றப்பட்டனர். அதுவரைக்கும் அவர்களுடைய முகத்தில் புன்முறுவலே இல்லை. அதற்குப் பின்பு அவர்கள் மகிழ்ச்சி நிறைந்த மக்களாக மாறினர். இரவுக்கும் பகலுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைப் போல இம்மாற்றமும் தெளிவாய்க் காணப்பட்டது.

நான் மேடையிலிருந்து கீழே இறங்கினபொழுது நன்கு உடை உடுத்தியிருந்த செல்வாக்குள்ள ஒரு மனிதன் என் கால்களின் அருகே தரையில் படுத்து உருண்டார். இது அவர்கள் முறையில் எனக்கு நன்றியைத் தெரிவிக்கும் ஒரு பாணியாகும். அவன் என் மொழி பெயர்ப்பாளரை நோக்கி "நான் என் வாழ்நாள் முழுவதிலும் மிகவும் மோசமான மனிதனாக இருந்தேன். அநேக ஆண்டுகள் வலியினால் அவதிப்பட்டேன். இப்பொழுது நான் விடுதலை பெற்றிருக்கிறேன். எனக்கு வலியே கிடையாது. நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன்" என்றான். அவன் முகம் பிரகாசமாய்க் காணப்பட்டது. நான் அவனுக்கு சாபத்திலிருந்து விடுதலைபெற மட்டுமே உதவினேன்.

மக்கள் சில இடங்களில் நாகரீகத்தில் அதிகமாக முன்னேறும் பொழுது இதைப் போன்றதொரு உண்மையான காரியத்தை அறியாமற் போகின்றனர். நாம் அவைகளின் பேரில் நம்பிக்கை வைக்காவிட்டாலும் அவைகள் உண்மையாய் உள்ளன. நீ நுண்கிருமிகள் பேரில் நம்பிக்கையற்றவனாய் இருக்கலாம். ஆனால் அது உன்னைத்தாக்கினால் நீ சுகவீனமாவாய்! சாபங்களும் இந்த நுண்கிருமிகளைப் போல உண்மையாக உள்ளது.

இதற்கு உதாரணம் வேதாகமத்திலுள்ள பில்லி சூனிய மருத்துவர் பிலேயாம் ஆகும். மோவாபிய இராஜாவிற்கு இஸ்ரவேலர்களை சண்டையில் தன்னால் தோற்கடிக்க முடியாது என்பது தெரியும். ஆகவே பிலேயாமை கூலிக்கு அமர்த்தி, அவர்கள் மேல் ஒரு சாபத்தைக் கூறும்படி அவன் கேட்டுக் கொண்டான். ***"நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன். நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன்." (எண். 22:6)*** என பிலேயாமைப் பற்றி அறிந்திருந்தான். ஆப்பிரிக்க மலைவாழ் மக்கள் சண்டையிடும் பொழுது எதிரிகள் மேல் சாபத்தை வருவிக்க பில்லி சூனிய மருத்துவர்களை பயன்படுத்துகின்றனர். இப்படிச் செய்தால் அவர்களைத் தோற்கடிக்க முடியும் என்பது அவர்களின் நம்பிக்கை.

## 6. மனதளவில் செய்கின்ற ஜெபம் அல்லது வாசகங்கள்.

*[14]உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள்.*

*[15]இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. (யாக்கோபு 3:14,15)*

யாக்கோபு இரண்டு விதமான ஞானத்தைக் குறித்துப் பேசுகிறார். அவற்றுள் ஒன்று தேவனுக்கடுத்த ஞானமன்று. அதற்கு மூன்று பண்புகள் இருப்பதாக யாக்கோபு கூறுகிறார். - அவை பூமிக்கடுத்தது என்றும், அடுத்தது கிரேக்கத்தில் ஜென்ம சுபாவமானது (அதாவது ஆவிக்குரியதன்று) என்றும் இறுதியில் பேய்த்தனத்துக்கு அடுத்ததுமாயிருக்கிறது என்றும் கூறுகிறார். சிலருடைய ஜெபங்கள் உன் நிமித்தமாக ஏறெடுக்கப்படாமல் இருப்பதே உனக்கு நல்லது. இது அதிர்ச்சியாக காணப்படுகிறதல்லவா? சிலர் தங்கள் ஜெபத்தால் உன்னைக் கட்டுப்படுத்த விரும்புகின்றனர். அவர்கள் நீ எங்கே வாழ வேண்டுமென்றும் அல்லது யாரைத் திருமணம் செய்ய வேண்டும் என்றும் அல்லது எவ்வித ஊழியம் செய்ய வேண்டும் என்றும் நிர்ணயிக்கின்றனர். எனினும் அவர்களுடைய எண்ணம் தேவனிடமிருந்து வந்ததல்ல. அவர்கள் உலகத்திற்கடுத்த அழுத்தத்தை நம்மில் உண்டாக்கி உன்னைக்குறித்த தேவனுடைய சித்தம் இன்னதென்று நீ கண்டு பிடிக்க முடியாத வண்ணம் செய்கின்றனர். இது பிசாசுக்கு அடுத்ததாய்க் கூட இருக்க வாய்ப்புண்டு.

அல்லது மக்கள் உட்கார்ந்து உன்னைப்பற்றி விமரிசித்துக் கொண்டிருக்கலாம். கிறிஸ்தவர்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் பேசும் பொழுது ஒருவரை மற்றவர் விமரிசனம் செய்யும் பொழுது ஒரு எதிர்மறையான சக்தி உருவாகி அவர்கள் பேசுகின்ற நபர்களுக்கு விரோதமாக செயல்படுகின்றது.

உன்னுடைய பிரச்சனை எங்கேயிருந்து வருகிறது என்பதை நீ அறிந்து கொள்ளவேண்டியது உனக்கு முக்கியமானதாய் இருக்கிறது. சில வேளைகளில் இது உனக்கு அருகிலுள்ள மக்களினால் உண்டாகக் கூடும். மனைவி கணவனைப்பற்றி அவர் மரணமடைய வேண்டுமென விருப்பங் கொண்டதால் பல்லாண்டுகள் சுகவீனமாய் இருக்கும் கணவர்கள் உண்டு.

மனித ஆத்துமாவைக் குறித்து அநேக காரியங்களை நாம் முற்றிலும் புரிந்து கொள்ளாவிடினும் அவை நன்மையையோ தீமையையோ செய்யும் சக்தி வாய்ந்ததாய் இருக்கிறது. அந்த ஆத்துமா பரிசுத்த ஆவியானவரின் கட்டுப் பாட்டிற்குள், வருமாயின் அது நன்மையை உண்டாக்கும். மாறாக அது மற்ற சக்திகளுக்குக் கீழே வருமாயின், தீமையானவற்றை வல்லமையாகச் செய்யும்.

## 7. வேதத்திற்கு முரண்பாடான உடன்படிக்கைகள்.

யாத்திராகமம் 23:32-ல் இஸ்ரவேலர் பிரவேசிக்க இருக்கும் நாட்டைக் குறித்து அவர்களுக்கு தேவன் எச்சரிப்பு கொடுக்கிறார். அவர்கள் தீயவர்களும், சிலைவணக்கம் செய்யும் நாட்டாராயும் இருப்பதினால் தேவன் இஸ்ரவேலை நோக்கி;

> 32 **அவர்களோடும், அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக என்றார்.**

நீ ஒரு ஒப்பந்தத்தைத் தீய சக்திகளுக்குக் கீழே உள்ள மக்களுடன் உடன்படிக்கையாகச் செய்வாயானால் நீயும் அதே வல்லமைக்குள் வருகிறாய். இரகசிய குழுக்களைப்பற்றிய காரியம் இவ்வாறாகத்தான் உள்ளது. அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் இதற்கு உதாரணம் க்ளக்ஸ் கிளான் ஆகும். உலக அளவில் எடுத்துக் கொண்டால் ஃப்ரீமேசன்ஸ் இதற்கு உதாரணம். ஃபிரிமேசன்ஸ் உன்னுடைய சந்ததியாரை அழிவிற்குள் வழி நடத்திச் செல்லும். நடக்கமுடியாத அநேகர், மூளை வளர்ச்சி குன்றியவர்கள் போன்றவர்கள் ஃபிரிமேசனை பின்பற்றிய முன்னோர்களை உடையவர்களுக்கும் பெற்றோர்களை உடையவர்களுக்கும் பிறந்திருப்பதைக் காணலாம். நீ அக்குழுவை விரும்புவதாக நினைக்கலாம். தேவனால் நியமிக்கப்பட்ட இந்த விளைவுகளை உன்னால் மாற்றமுடியாது.

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் மற்ற கிறிஸ்தவர்களுடன் இயேசுவின் இரத்தத்தின் மூலம் உடன்படிக்கையின் உறவிற்குள் வருகிறோம். கிறிஸ்தவர்களுக்குரிய இன்னுமுள்ள ஒரே ஓர் உடன்படிக்கை ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உண்டாகும் திருமண உடன்படிக்கையாகும். இதைத் தவிர வேறு எந்த உடன்படிக்கையின் உறவிற்குள் மக்கள் வந்தாலும் அது மிகுந்த அபாயத்தையே விளைவிக்கும். உடன்படிக்கையினுள் வருபவர்களுக்கு வல்லமையின் சக்தி வாழ்வில் செயல்படும். அது வேதத்திற்கடுத்த உடன்படிக்கையாயின் ஆசீர்வாதத்தையும், வேதத்திற்கு முரண்பாடாயிருப்பின் சாபத்தையும் விளைவிக்கும்.

# ஆசீர்வாதங்களும் சாபங்களும் வெளிப்படும் விதம்.

இக்கருப்பொருளை விளக்க வேதத்தில் ஒரு முழு அத்தியாயத்தையே நாம் காணலாம் — உபாகமம் 28. இதில் முதல் 14 வசனங்கள் ஆசீர்வாதங்களையும், மீதியான 54 வசனங்கள் சாபங்களையும் குறிப்பதாக இருக்கிறது. சாபத்தின் பட்டியலைப் படிக்கின்ற நீ அதில் எதுவும் உன் வாழ்வில் காணப்படாமலிருக்கத் தீர்மானிக்க வேண்டும். ஆசீர்வாதமும் சாபமும் எங்கிருந்து வருகிறது என்பது இங்கு குறிக்கப்பட்டுள்ளது.

> *1 இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.*
>
> *2 நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும். (உபாகமம் 28:1 - 2.)*

ஆசீர்வாதத்தின் அடிப்படைக் காரணம் என்ன? அதற்கான அடிப்படைக் காரணம் தேவனுடைய குரலைக்கேட்டு அவர் சொன்னபடி செய்வதாகும். இதன் அடிப்படையிலேயே தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தார். "நீ என் குரலுக்கு கீழ்ப்படிந்ததினாலே இந்த ஆசீர்வாதங்கள் எல்லாம் உன்மேல் வரும்" என்று கூறி இருந்தார். மெய்யாகவே ஆசீர்வாதத்தைத் தேடி நீ ஓடத் தேவையில்லை. தேவனுடைய நிபந்தனையை நீ சந்திக்கும்போது, ஆசீர்வாதங்களை கர்த்தர் பார்த்துக் கொள்ளுவார். 15ம் வசனத்திலும் அதைத் தொடர்ந்து வரும் வசனங்களிலும் சாபங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

> *15 இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதே போவாயாகில் இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும். (உபாகமம் 28:15)*

சாபங்களுக்கான காரணம் என்ன? இதற்குக் காரணம் தேவனுடைய குரலுக்குச் செவிகொடாது இருப்பதும் அதின்படி நடக்காது இருப்பதுமேயாகும்.

நீ விரும்பினால் சாபங்கள், ஆசீர்வாதங்கள் இவற்றின் முழுப் பட்டியலைப் படித்துப்பார். நான் இதை என் பாணியில் சுருக்கமாகத் தருகிறேன். இதை நீ சரியா என்று சோதித்துப்பார்.

## ஆசீர்வாதங்களின் பட்டியல்

***உயர்த்தப்படுதல் (மேல் நோக்கி உயர்ந்து செல்தல்)***
***நற்சுகம்***
***கனிதரும் தன்மை (வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும்)***
***செழிப்பு***
***வெற்றி***
***தேவனுடைய சலுகை***

ஆசீர்வாதத்தின் சுருக்கம் "நீ கீழாகாமல் மேலாவாய்; நீ வாலாகாமல் தலையாவாய்" என்பதாகும். "வாலாகாமல் தலையாதல் என்றால் என்ன?" என்று ஒரு தடவை நான் கேட்டேன். இதற்குரிய பதில் எளியது. தலை தீர்மானம் செய்ய, வால் அத்திசையில் இழுத்துச் செல்லப்படுகிறது.

எந்தப்பகுதியில் நீ இருக்கிறாய்—தலையாகவா அல்லது வாலாகவா? நடைபெறும் காரியங்களை நீ நிர்ணயிக்கின்றாயா? அல்லது சூழ்நிலையின் கருணையில் பணக்கஷ்டத்தில், உடல் நலக்குறைவில், குடும்பப்பிரச்சனையில் இழுத்துச் செல்லப்படுகின்றாயா? நீ வாலாயிருப்பாயென்றால் அது உனக்கு ஒரு சாபம்; தலையாய் இருப்பாயென்றால் அது உனக்கு ஆசீர்வாதம்.

## சாபங்களின் தொகுப்பு

***தாழ்வு படுத்தப்படுதல்***
***வாழ்வின் எப்பகுதியிலும் எதையும் சாதிக்க முடியாத நிலை.***
***சரீரப்பிரகாரமான, மனோ ரீதியிலான நோய்***
***குடும்பத்தின் சிதைவு***
***ஏழ்மை***
***தோல்வி***
***மனச்சோர்வு***
***முயற்சியில் சிதைவு***
***தேவனுடைய நன்மதிப்பை இழத்தல்***

பல ஆண்டுகளின் அனுபவத்தில் காரியங்களை உற்று நோக்கியதால் நான் கண்டு கொண்ட பட்டியலை மேலே கொடுத்திருக்கிறேன். இது உபாகமம் 28ம் அதிகாரத்திலிருந்து எடுக்கப்பட்டதல்ல. மக்களின் வாழ்வில்

நான் கண்டு பிடித்த ஏழுகாரியங்கள் மக்கள் சாபத்திற்குள் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதாக உள்ளது.

### 1. மனதின் தளத்திலும் உணர்ச்சியின் தளத்திலும் நிலைகுலைவு.

உணர்ச்சித் தளத்தில் நிலை குலைவு வாழ்வில் ஒரு தடவை ஏற்படுமானால் அதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் அது ஒரு குடும்பத்தில் அடிக்கடி ஏற்படுமானால் அந்தக் குடும்பத்தில் சாபம் உள்ளது என்பதை நீங்கள் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

### 2. மீண்டும் மீண்டும் வரும் தீராத நோய்

மருத்துவர்களால் காரணம் கண்டு பிடிக்க முடியாது வரும் நோயை சிறப்பாக நமது கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். நீ மருத்துவரிடம் செல்லும் பொழுது அவர் முதலில் உன் நோய்க்கு ஒரு காரணம் சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். மீண்டும் ஆறு மாதங்கள் கழித்துச் செல்லும் பொழுது அவர் வேறு ஒரு காரணம் அதற்குக் கூறுகின்றார். யாராலும் காரணம் கண்டு பிடிக்கமுடியாதபடி வலி வருகின்றது. இது குடும்பத்தின் அங்கத்தினர்கள் அனைவரையும் பாதிக்கிறது—இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுமாயின் அக்குடும்பம் சாபத்திற்குக் கீழ் உள்ளது என்பதைச் சந்தேகமின்றி நான் கூறுவேன்.

### 3. பெண்களுக்குரிய பிரச்சனையும் கருச்சிதைவும் அடிக்கடி ஏற்படுதல்

இப்படிப்பட்ட தேவைகளுக்காக நானும் ரூத்தும் அநேகப் பெண்களுக்கு ஜெபித்திருக்கிறோம். இந்தக் காரியத்தை அவர்கள் மூலம் கேள்விப்படும் பொழுது அதை ஒரு சாபமாகக் கருதி செயற்படுகிறோம். இதைக்குறித்து மேலும் எந்த ஆராய்ச்சியும் செய்யாத வண்ணம் அநேக மக்கள் வியக்கத்தக்க வண்ணம் விடுதலை பெற்றுள்ளனர்.

### 4. திருமணத்தில் முறிவு, குடும்பத்தில் பிரிவு

பில்லி சூனியம் குடும்பத்தை சிதைக்கும் காரியங்களுள் முதன்மையானது. அந்த சக்தி ஒரு குடும்பத்தில் செயல்பட ஆரம்பிக்கும் பொழுது, அது இறுதியில் அந்தக் குடும்பத்தைச் சிதைத்து விடும்.

### 5. பொருளாதார, பணரீதியிலான முடக்கம்

சிலமக்கள் பணப்பற்றாக்குறையை தங்கள் வாழ்வில் சில வேளைகளில் அனுபவிக்கின்றனர். அது குறுகிய காலத்திற்குரியது. அது ஒரு சாபமல்ல. ஆனால் பற்றாக்குறை தொடர்ந்து நிலவுமானால், அது

தொல்லை உண்டாக்கி அடிமைப்படுத்தும்பொழுது, அதை நீக்க நீ எடுத்துக் கொள்ளும் சிறந்த முயற்சி வீணாகுமென்றால் ஒரு சாபம் உன்னில் செயலாற்றுகின்றது என்று நீ நிச்சயம் நம்பலாம்.

### 6. விபத்திற்கு எளிதில் இலக்காகுதல்

விபத்திற்கு "எளிதாக இலக்காகும்" மக்களை நான் பார்க்கும் பொழுது வேறு எதுவும் சிந்திப்பது இல்லை. அது காரணம் அளிக்கக்கூடிய பிரச்சனையே. காப்பீட்டு நிறுவனம் நீ விபத்திற்கு இலக்காகும் நபர் எனக் கண்டால் அதற்கேற்ற கட்டணம் செலுத்தும்படி உன்னைக் கேட்கின்றனர்! "இது எனக்கு ஏன் அடிக்கடி ஏற்படுகிறது?" என்று கேட்பதிலிருந்து இதனைப் புரிந்து கொள்ளலாம்.

### 7. அசாதாரண மரணமும் தற்கொலைச் சரித்திரமும்

இந்த சாபம் வெளிப்படையாகச் செயலாற்றிய ஒரு குடும்பம் அமெரிக்காவிலுள்ள கென்னடியின் குடும்பமாகும்.

## சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து செல்வது எவ்வாறு

இயேசுவின் சிலுவையின் மரணத்தின் மூலம் இதற்கான எல்லாக் கிரயமும் செலுத்தப்பட்டாயிற்று என்று முதலில் நாம் அறியவேண்டும். சாபத்திலிருந்து விடுதலை பெறுவது முதல் எல்லா மனித தேவைகளும் சந்திக்கப்படுவதற்குத் தேவன் அந்த வழியைத் தான் ஏற்படுத்தியுள்ளார்.

> 13 மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.
>
> 14 ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று. (கலாத்தியர் 3:13 - 14)

பரிமாற்றத்தைக் கவனி—இயேசுவின் சிலுவை மரணம், இரட்சிப்பு மூலம் நம்பேரில் வரவேண்டிய தீமையனைத்தும் கிறிஸ்துவின் மேல் வந்தது. அதைப்போலவே அவருக்குச் சேரவேண்டிய நன்மை அனைத்தும் நாம் சுதந்தரிக்கும் படியானது. நாம் சுகத்தைப் பெற்றுக் கொள்ளும்படி அவர் காயப்படுத்தப்பட்டார். நாம் வாழ்வடைவதற்காக அவர் மரணத்தை

ஏற்றுக் கொண்டார். நாம் நீதியுள்ளவர்களாகும்படியாக அவர் பாவமாக்கப்பட்டார். நாம் ஏற்றுக் கொள்ளப்படும்படி அவர் கைவிடப்பட்டார். நாம் ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிக்கும்படி அவர் சாபமாக்கப்பட்டார். இந்தச் சிறுநூலில் நாம் காண இருக்கும் பிரச்சனை தேவன் நம் சார்பில் செய்த முன்னேற்பாட்டைப் பற்றியதாகும்.

13ம் வசனத்தில் "சாபம்" என்னும் வார்த்தை மூன்று முறைகள் வருகின்றன. "மரத்தில் தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து சாபமாகி நம்மை சாபத்திலிருந்து விடுதலை செய்தார். நமக்காகச் சிலுவையில் கிறிஸ்து சாபமாக்கப்பட்டார் என்பதை வாசிக்கும் பொழுது அதிலிருந்து சாபம் எவ்வளவு உண்மையானது என்பதை அறியலாம். சாபத்திலிருந்து விடுதலை தேவையற்றதானால், நமது விடுதலைக்காக தேவன் இம்மாபெரும் முன்னேற்பாட்டைச் செய்திருக்கத் தேவையில்லை. இயேசு நமது இடத்தில் நின்று தியாக பலியானதினால் நமக்கு சாபத்திலிருந்து விடுதலை கிடைக்க வழி பிறந்திருக்கிறது.

இதுவே நம் விடுதலைக்கான அடிப்படை. கிறிஸ்து சிலுவையில் நமக்காகச் செய்த தியாகத்தின் பேரில் விசுவாசம் வைப்பதைவிட வேறு வழி இதற்கு இல்லை. அவர் பாவமாக்கப்பட்டதினாலே நாம் நீதிமான்கள் ஆகிறது போல, அவர் சாபமாக்கப்பட்டதாலே, நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடும். உபாகமம் 21:23ல் மரத்திலே தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன் என்று வேதம் கூறுகிறது. மோசேயின் நீதிச்சட்டத்தை அறிந்த ஒவ்வொரு யூதனும் இயேசு சிலுவையில் தொங்குவதைக் காணும் பொழுது அவர் சாபமாக்கப்பட்டார் என்பதை அறிவான். நாம் சாபத்திலிருந்து விடுபடும்படியாக அவர் சாபமாக்கப்பட்டார்.

இருந்தாலும் இந்த நிபந்தனைகளைக் கைக்கொண்டு விடுதலையைப் பெறும் நாம் விடுதலை பெற்றபின்பும் தொடர்ந்து தேவனுக்குச் செவி கொடுத்து அவர் கூறுவதற்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதை மனதிற் கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டிலே யோவான் 10:27ல் இயேசு,

> **27 என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. எனக் கூறியுள்ளார்.**

இதுவே ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கான விதியமைப்பு. ஆசீர்வாதத்தை அனுபவிக்க முற்படுமுன் நீங்கள் சாபத்திலிருந்து முதலாவது விடுபடவேண்டும். இயேசுவின் மரணத்தின் மூலம் விடுதலை

நமக்கு ஏற்கெனவே சட்டரீதியில் சொந்தமாக ஏற்பாடாயிற்று. அதை நமக்கு அவர் சம்பாதித்துத் தந்துள்ளார். நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் சட்டரீதியிலிருந்து அனுபவ ரீதிக்குள் வரவேண்டும்; அது நமது வாழ்வில் செயற்பட இடமளிக்க வேண்டும். இது சட்ட பூர்வமாக நமக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலும் தேவனால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. தேவன் நமக்கு முன்னேற்பாடாகச் செய்துள்ளதை நாம் சுதந்தரித்துக் கொள்ளவேண்டும். நீங்கள் பின்பற்ற வேண்டிய சில எளிய படிகள் உள்ளன.

அநேகம் தடவைகளில் இந்த சாபங்களுக்கான காரணத்தை அல்லது அது எங்கிருந்து புறப்படுகின்றது என்பதை அறியவேண்டும். இதனை ஒவ்வொரு தடவை செய்யாவிடினும் அடிக்கடி செய்யவேண்டும். ஆகவேதான் இதற்கு அதிக நேரம் எடுத்து இதன் சாத்தியக் கூறுகளை விளக்குகின்றேன். இதை நீங்கள் வாசிக்கும் பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்களுடன் பேசுவார் என நான் நம்புகிறேன். உங்கள் வாழ்வு முழுவதிலும் போராட்டத்தில் கடந்து வந்ததின் காரணத்தை உடனே புரிய ஆரம்பிப்பீர்கள். அநேகம் தடவைகளில் அது இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடாக உங்களுக்கு வரும். உங்களுக்கு இப்படிப்பட்ட வெளிப்பாடு எப்பொழுதும் தேவை என்று நான் சொல்லவில்லை. அநேகம் தடவைகளில் நாம் எதிலிருந்து விடுவிக்கப்பட்டோம் என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அது எவ்வாறு நம்மேல் வந்தது என்றும் தெரிவிக்கிறார். தேவன் ஒன்றை உனக்குக் காட்டுவாரானால் அவர் உனக்குக் காட்டுவதை நீ செயற்படுத்து.

## விடுதலை பெறுவதற்கான வழிமுறை

இதற்கான அடிப்படை மாதிரி நான்கு வார்த்தைகளில் கூறப்படுகிறது.

**உன் பிரச்சனையையும் அதற்கான காரணத்தையும் இனம் கண்டு கொள்.**

**அதற்கு உன்னை இலக்காக்கின காரணத்திற்காக மனந்திரும்பு.**

**சாபத்தை உதறித்தள். உன்னை சாபத்திற்குக் கீழாக்கும் எல்லா முயற்சிக்கும் எதிர்த்து நில்.**

## குறிப்பிட்ட படிகள்

1. அதற்கேற்ற வசனத்தைக் கண்டுகொள்

[13]***மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று***

***எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.***

***[14] ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும் ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று." கலாத்தியர் 3:13,14.***

மற்ற வசனங்களும் உண்டு: எபேசியர் 1:7; கொலோசெயர் 1:13,14; 1 யோவான் 3:8b; லூக்கா 10:19.

2. நாம் அறிக்கைபண்ணுகிற பிரதான ஆசாரியராக இயேசு இருப்பதால், கிறிஸ்துவில் உள்ள உன் விசுவாசத்தை அறிக்கை செய். (எபிரெயர் 3:1)

3. உன்னைக் கீழ்ப்படிதலுக்கு ஒப்புக்கொடு, ஏனென்றால் தொடர்ந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இதுவே நிபந்தனை.

4. உன் வாழ்விலும் உன் முன்னோரின் வாழ்விலும் அறிக்கை பண்ணப்படவேண்டிய தெரிந்த பாவங்களை அறிக்கை செய். சொந்த ரீதியில் நீ அவர்கள் செய்த பாவத்தின் தண்டனைக்குப் பாத்திரவானாக இல்லாதிருக்கலாம். ஆனால் அதன் விளைவுகள் உன்னைப் பாதிக்கக்கூடும். உதாரணமாக "என் அத்தை ஒரு குறிசொல்பவள்" அல்லது "என் பாட்டி கிறிஸ்தவ விஞ்ஞானப் பிரிவைச் சார்ந்தவள்" அல்லது "என் தகப்பனார் ஒரு ஃபிரிமேஷன்." போன்றவற்றை நீ அறிக்கையிடவேண்டும். உன் குடும்பத்தின்மேல் சாபத்தைக் கொண்டு வந்த பாவத்தை யோசித்துக் கண்டுகொள்ளவேண்டும். உன் குடும்பத்தின் சார்பில் அதை அறிக்கையிடு.

5. மற்ற எல்லா மக்களையும் மன்னியுங்கள். சிறப்பாக சாபத்திற்குக் காரணமான மனிதனை மன்னித்துவிடு. நீ மன்னிக்காவிட்டால், அந்த மன்னியாத தன்மை நீ உன் ஜெபத்திற்கான பதிலைப் பெற்றுக் கொள்வதற்குத் தடையாக அமையலாம். இயேசு "நீங்கள் நின்று ஜெபம்பண்ணும் போது ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால் அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்". இதற்கு விதிவிலக்கானவர்கள் யாருமில்லை. மன்னித்தல் ஓர் உணர்ச்சியல்ல; அது ஒரு தீர்மானம். நான் உனக்குக் கடனாளி என்பதை அது விளக்குகிறது.

6. இரகசிய குழுக்களுடனும் மந்திரவாதத்துடனும் உனக்குள்ள எல்லாத் தொடர்பையும் நீக்கிவிடு. உருவங்களோ, தாயத்துக்களோ, புத்தர் சிலையோ, மற்றும் மந்திரவாதத்துடன் சம்பந்தப்பட்ட எந்தப் பொருட்களாயினும் உன் வீட்டிலிருந்து அவற்றை நீக்கிவிடு. இவை உன்னை ஒரு வகையான

கட்டுகளுக்குட்படுத்தும். மோசே இஸ்ரவேலர்களுக்கு உபாகமம் 7:26ல் "நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டுபோகாயாக; அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய், அது சாபத்திற்குள்ளானது" என்று எச்சரித்துள்ளார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு பெண் நியாயாதிபதி நான் ஜெபித்த பொழுது அற்புதமாக சுகத்தைப் பெற்றாள். வயிற்றுப் பிரச்சனையினால் இரவும் பகலும் பத்தாண்டுகள் வலியினால் அவதிப்பட்டாள். அவளுடைய குடலில் தையல் போடப்பட்டு பிளாஸ்டிக் கிளிப்புகள் மாட்டப்பட்டிருந்தன. தேவன் அவளைக் குணப்படுத்திய பொழுது அந்த அறுவை சிகிச்சையைக் குணப்படுத்தி வலியை நீக்கியதுமன்றி அந்த கிளிப்புகளும் மறையும்படி செய்திருந்தார். இதற்கிடையில் அவள் ஒரு பந்தயத்தில் வெற்றி பெற்றதால் மெச்சிகோவிற்கு விடுமுறைக்குச் செல்வதற்கான சந்தர்ப்பமும் எதிர்பாராதவிதமாக அவளுக்குக் கிடைத்தது. அவளும் அவளுடைய சிநேகிதியும் அங்கு சென்று திரும்பினர்.

அடுத்த நாளில் அவர்கள் எனக்கும் லீதியாளுக்கும் தொலைபேசியின் மூலம் அவள் மிகுந்த பிரச்சனையில் இருப்பதைத் தெரிவித்தனர். அவள் குளிக்கும் பொழுது தன்னை மூழ்கடிக்கச் செய்யும்படியான தற்கொலை முயற்சி செய்ததாகச் செய்தி வந்தது. ஆகவே நானும் லீதியாளும் அங்கு சென்றோம். அவர்கள் கூறினார்கள் என்ன நடந்ததோ தெரியாது ஆனால் இப்பொழுது எல்லாம் சரியாக உள்ளது என்றனர். – "நான் இரட்சிக்கப்பட்டேன். நான் சுகமானேன்" என்று அவள் கூறினாள். அந்த ஊரின் ஞாபகார்த்தமாக எதையாவது வாங்கி வந்தீர்களா? என்ற கேள்வியை நான் கேட்டபொழுது, அவர்கள் சற்று சிந்தித்துவிட்டு ஒரு சூரியக்கடவுளின் சித்திரத்தைக் வாங்கி வந்ததாகக் கூறினார்கள். உடனே அதை எடுத்துப்போடும்படி நான் கூறினேன். அந்தப் பெண் நியாயாதிபதி எழுந்து கீழேசென்று அடுத்த ஐந்து நிமிடத்தில் அந்தப்படத்தை நொறுக்கிப்போட்டு விட்டு வந்தாள். அதை அவள் செய்ததற்குப் பின்பு எந்தப் பிரச்சனையும் தொடரவில்லை. தன் வீட்டில் சாபத்திற்குரிய ஒன்றைக் கொண்டு வந்ததினாலே இப்பிரச்சனை உருவானது.

7. இயேசுவின் நாமத்தில் உன்னை விடுவித்துக் கொள்.

"பூலோகத்திலே நீங்கள் எவைகளைக்கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீங்கள் எவைகளை கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று வேதம் கூறுகிறது. (மத்தேயு 18:18) கிறிஸ்துவின் பேரில் உனக்குள்ள விசுவாசத்தை நீ அறிக்கையிடவில்லையானால் நீ இயேசுவை உன் சொந்த இரட்சகராக அறியமாட்டாய். இதைச் செய்யும் பொழுது

மட்டுமே அவரைச் சொந்த இரட்சகராக அறிவாய். ஒருவரை இரட்சிக்க தேவனுக்கு அரை வினாடி நேரம் கூடத் தேவையில்லை. நான் உனக்கு ஒரு மாதிரி ஜெபத்தை விடுதலைக்காகக் கற்றுத்தருகிறேன். பாவங்களை அறிக்கையிடுகிற பகுதி வரும் பொழுது உனக்குத் தெரிந்த குறிப்பிட்ட பாவங்களை அறிக்கையிடத் தவறக்கூடாது.

மீண்டும் மற்றவர்களை மன்னிக்க முற்படும் பொழுது அந்தத் தனிப்பட்ட நபரின் பெயரையோ நபர்களின் பெயர்களையோ நீ கூற வேண்டும். பெரும்பாலும் அவர்கள் நமக்கு நெருக்கமானவர்களாய் இருப்பார்கள். இவையனைத்தையும் நீ செய்து முடிக்கும் பொழுது உன்மேலும் உன் குடும்பத்தின் மேலுமுள்ள சாபத்திலிருந்து உனக்கு விடுதலை கிடைக்கும். இந்த நிபந்தனைகளை நீ சந்திக்கவில்லையாயின் சாபங்கள் முறிக்கப்பட வாய்ப்பில்லை.

சிலதடவைகளில் இந்த ஜெபத்தைச் சொல்லும்போது ஒரு மாற்றத்தையும் உணராமல் நீ இருக்கலாம். அதே நேரத்தில் சில வேளைகளில் இதன் பயன் வியக்கத்தகும் முறையிலும் இருக்கக் கூடும். என்ன நடந்தாலும் வெளிப்படையாக நடைபெறும் காரியங்களின்பேரில் அக்கறை கொள்ளாதபடி உன் ஜெபத்தில் கிறிஸ்துவின் செயல்பாட்டில் கவனம் செலுத்து. சில காரியங்கள் வெளிப்படையாகத் தென்பட்டால் அதைக் கண்டு பயப்படாதே. நீ விடுதலை அடைவதற்காக தேவனுக்கு நன்றி செலுத்து.

## ஜெபம்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் தேவனுடைய குமாரன் என்பதை விசுவாசிக்கிறேன். நான் தேவனிடம் செல்வதற்கு ஒரே வழி நீரே. என் பாவங்களுக்காக நீர் சிலுவையில் மரித்து மீண்டும் உயிருடன் எழுந்தீர். என் பாவங்கள் எல்லாவற்றையும் விட்டு நான் உம்மிடம் வருகிறேன். கர்த்தராகிய இயேசுவே கிருபையாக என்னை மன்னித்தருளும். நீர் என்னை மன்னித்தீர் என்று விசுவாசிக்கிறேன். இப்பொழுதிலிருந்து நான் உமக்காக வாழ விரும்புகிறேன். நான் உம்முடைய குரலைக் கேட்டு நீர் சொல்வதைச் செய்ய விரும்புகிறேன்.

உம்முடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படியும் என் வாழ்விலுள்ள சாபத்திலிருந்து விடுபடும்படியும் நான் செய்த பாவங்களை அறிக்கையிடுகிறேன். என்னைச் சார்ந்தவர்களும், என் முன்னோர்களும் செய்த பாவங்களை நான் அறிக்கை செய்கிறேன். (ஏற்ற பாவ அறிக்கையை இங்கு விளக்கமாகச் செய்யவும்)

கர்த்தாவே! நான் அறிக்கையிட்ட ஒவ்வொன்றையும் நீர் மன்னித்தீர் என்று விசுவாசித்து உமக்கு நான் நன்றி செலுத்த

விரும்புகிறேன். எனக்கு விரோதமாகத் தீங்கிழைத்தவர்களையும் என்னை இழிவு படுத்தியவர்களையும் இப்பொழுது நான் மன்னிக்கிறேன். சிறப்பாக- - - - (ஏற்ற பெயர்களைக் கூறி அறிக்கையைத் தொடரவும்)

மேலும் கர்த்தாவே! நானோ அல்லது என்னுடன் தொடர்பு கொண்ட மற்றவர்களோ சாத்தானுடனும் மந்திர சக்திகளுடனும் எந்த விதத்திலாவது தொடர்பு கொண்டிருந்தால் அதை விட்டு விடுவதாக அறிக்கை செய்கிறேன். இரகசிய சங்கங்களின் தொடர்பையும் முறித்துக் கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவை இழிவுபடுத்தி சாத்தானை கனப்படுத்தக்கூடிய மாந்திரீகப் பொருட்கள் ஏதாவது இருக்குமாயின் அதை என் வீட்டிலிருந்து எடுத்துப்போட என்னை ஒப்புக் கொடுக்கிறேன். உம்முடைய உதவி கொண்டு அவை அனைத்தையும் எடுத்துப் போடுகிறேன். இப்பொழுது கர்த்தராகிய இயேசுவே நான் ஆசீர்வாதத்தைப் பெறும்படி நீர் சிலுவையிலே சாபமாக்கப்பட்டதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். நீர் சிலுவையில் செய்த காரியங்களினிமித்தம், நான் என்னை எல்லா சாபங்களிலிருந்தும், எல்லாத் தீய சக்திகளின் ஆதிக்கத்திலிருந்தும், எல்லா இருளின் நிழலிலிருந்தும் என்னையும் என் குடும்பத்தையும் நான் விடுவிக்கிறேன். இயேசுவின் நாமத்தினால் நான் என்னை இப்பொழுதே விடுவிக்கிறேன். ஆமென்.

# தேவனைத் துதிப்பதின் மூலம் இதனை முடிவிற்குக் கொண்டு வா

இவ்விதமான ஜெபத்தைச் செய்ததற்குப் பின்பு தேவனுக்கு உன்னுடைய நன்றியைச் செலுத்த ஆரம்பி. கீழ்க்கண்ட முறையில் நீ தேவனுக்கு நன்றி செலுத்தக் கூடும்.

"என் ஜெபத்தை நீர் கேட்டதற்காக உமக்கு நான் நன்றி செலுத்துகிறேன். என் வாழ்வில் உள்ள சாபம் எல்லாம் ரத்து செய்து நீக்கப்பட்டது. இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப் பட்டதற்காக கர்த்தாவே நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். உம்முடைய அன்பின் அரசிற்குள் என்னை வரச் செய்தீர்.

சாத்தானுக்கு என்மேல் எந்த அதிகாரமும் இல்லை. என் குடும்பத்தின் மேலும் நீர் எனக்குக் கொடுத்துள்ளவைகளின் பேரிலும் அவனுக்கு எந்த அதிகாரமுமில்லை.

கர்த்தாவே, இப்பொழுதிலிருந்து நான் கீழ்ப்படிதலுள்ளவனாக நடக்கும்பொழுது உமது ஆசீர்வாதம் என்மேல் வந்து என்னை நிரப்பப்போவதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்." எனக்கூறு.

# உங்களில் உள்ள தூய ஆவியானவர்

## அத்தியாயம் ஒன்று

# பெந்தெகொஸ்தேக்கு முன்பு

வேதத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் அறிவினை வேறு எந்த வழியிலும் பெற்றுக் கொள்ள முடியாது. வேதத்தின் முக்கியமான முக்கியமான வெளிப்பாடு தேவனுடைய பண்பைப் பற்றியதாகும். வேதம் நமக்கு வெளிப்படுத்தக் கூடிய இரகசியத்தை அதைத் தவிர வேறு எந்த வழியிலும் பெற்றுக் கொள்ள முடியாது. அந்த இரகசியம் என்னவென்றால் தேவன் ஒருவராக இருக்கிறார், அதே நேரத்தில் எல்லாருக்கும் மேலானவராகவும் இருக்கிறார். மூன்று நபர்கள் எனினும் ஒரே தேவன் தான். வேதம் வெளிப்படுத்தும் நபர்கள் மூன்று நபர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆவர். அதில் இந்த நூல் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி விளக்க உள்ளது.

வேதம் வெளிப்படுத்துகின்ற தனித்தன்மை வாய்ந்த ஆழமான சத்தியம் என்னவெனில் அது பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும், அவருடைய கிரியைகள் பற்றியுமாகும். நாம் புரிந்து கொள்ள வேண்டிய முதன்மையான காரியம் என்னவெனில் பிதாவையும், குமாரனையும் போன்று பரிசுத்த ஆவியானவரும் ஒரு நபரே. மனித அறிவின்படி பார்க்கும் போது பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய தேவனையும் ஒரு நபராக உணர்வது எளிதாய் உள்ளது. ஆனால் பரிசுத்த ஆவியானவரை ஒரு நபராகக் கருதுவது அவ்வளவு எளிதன்று.

பரிசுத்த ஆவியானவரின் மூலம் தேவன் அனைத்தையும் அறிந்தவராய் இருக்கிறார், அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை; பரிசுத்த ஆவியின் மூலம் ஒரே நேரத்தில் தேவன் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறார். இந்த இரண்டு பண்புகளும் இறையியலிலே சர்வ ஞானம் உள்ளவர் என்றும், சர்வ வியாபகர் என்றும் முறையே அறியப்படுகின்றது. இது பல வசனங்களிலே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக எரேமியா 23:23–24ல்

**23நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன்,**

அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

24 யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவன் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறார். தேவன் இல்லாத இடம் என்று ஒன்றுமில்லை. தேவனுக்கு அறியாதபடி ஒரு செயல் நடக்கக் கூடிய இடம் என்பது கிடையாது. இது மிகவும் அழகாக சங்கீதம் 139ன் ஆரம்ப வசனங்களில் வருகிறது.

1 கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அரிந்திருக்கிறீர்.

2 என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அரிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அரிகிறீர்.

3 நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்.

4 என் நாவில் சொல் பிரவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அரிந்திருக்கிறீர்.

5 முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்.

6 இந்த அரிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது.

7 உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?

8 நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.

9 நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,

10 அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.

11 இருள் என்னை மூடிக் கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்.

12 உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்

**போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.**

என்ன அழகான வாக்கியங்கள்! தேவனுடைய எல்லையற்ற ஞானத்தின் அற்புதம் தெளிவாய் கூறப்பட்டுள்ளது. தேவபிரசன்னம் இப்பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளது. தேவனுக்கு மறைவாக செல்லக்கூடிய இடம் என்று ஒன்று உனக்கு கிடையாது. எந்த தூரமும் உன்னையும், அவரையும் பிரிக்க முடியாது. எந்த இருளும் உன்னையும், அவரையும் மறைக்க முடியாது. தேவன் எல்லா இடங்களிலும், இப்பிரபஞ்சம் முழுவதிலும் வியாபித்திருக்கிறார். எல்லா இடத்தில் நடைபெறும் அனைத்துக் காரியங்களும் அவருக்குத் தெரியும்.

இந்த இரகசியத்தின் திறவுகோல் ஏழாம் வசனத்தில் "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்?" என்று வருகிறது. இது எபிரெய கவிதை நடை. இதில் ஒரு வசனத்தின் இரு பகுதிகள் ஒரே சத்தியத்தை சொல்வதாக வரும். பரிசுத்த ஆவியாகிய தேவன் எங்கும் வியாபித்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் மூலம் எந்த வேளையிலும் இப்பிரபஞ்சத்தில் நடக்கும் எந்த செயலையும் தேவன் அறிவார்.

படைப்பின் நாட்கள் முதல் பரிசுத்த ஆவியானவர் இப்பிரபஞ்சத்தில் செயலாற்றி வருகிறார். படைப்பின் முறையை விளக்கும் போது சங்கீதக்காரன் இவ்விதமாய் கூறுகிறார்:

> 6 ***கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.***
> ***(சங்கீதம் 33:6)***

ஆங்கிலத்தின் சொல் "சுவாசம்" என்று குறிப்பது எபிரெயத்தில் "ஆவி" என்ற அர்த்தத்தில் வருகிறது. அப்படியானால் இந்த சங்கீதத்தின் வசனம் கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய ஆவியினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது என்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் இப்பிரபஞ்சத்தின் படைப்பின் காரணர் கர்த்தருடைய ஆவியானவரும் அல்லது பரிசுத்த ஆவியானவரும் கர்த்தருடைய வார்த்தையும் ஆகும். வேதாகமத்தின் ஆரம்ப வசனங்களைப் பார்க்கும் போது இது விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆதியாகமம் 1:2-3

> 2 ***பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.***
>
> 3 ***தேவன் வெளிச்சம் உண்டாக்கக்கடவது என்றார்,***

*வெளிச்சம் உண்டாயிற்று.*

வெறுமையான இருளிலே, ஒன்றுமில்லாத வெற்றிடத்திலே தேவ ஆவியானவரின் பிரசன்னம் இருந்தது. "அசைவாடினார்" என்ற சொல் ஒரு பறவையுடன் இணைத்துக் கூறப்படும் சொல். வேதத்தில் அநேக இடங்களில் பரிசுத்த ஆவியானவர் பரலோகத்தின் புறாவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளார். இங்கே பரலோகத்தின் புறாவாகிய பரிசுத்த ஆவியானவர் ஒழுங்கற்ற, வெறுமையான இருளில் அசைவாடிக் கொண்டிருக்கிறார். மூன்றாம் வசனம் "தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று" என்று சொல்லுகிறது. இங்கேயும் படைப்பின் இரு காரணர்களாகிய தேவ ஆவியானவரும், தேவ வசனமும் கூறப்பட்டுள்ளது. அவைகள் இரண்டும் இணையும் போது படைப்பு உண்டாகிறது. தேவ ஆவியானவரும், தேவ வார்த்தையும் உள்ள இடத்தில் ஒரு புதிய காரியம் தோன்றுகிறது. இவ்விடத்தில்—ஒளி—உண்டாகிறது. ஒளியானது ஆவியானவராலும், வார்த்தையினாலும் உருவாக்கப்படுகிறது. இங்கு பரிசுத்த ஆவியானவர் இப்பிரபஞ்சத்தின் படைப்பின் காலத்திலிருந்து செயலாற்றுவதை நீ காணலாம். மேலும், இவர் பிரபஞ்சம் முழுவதிலும் இருக்கின்றார். ஓர் அர்த்தத்தில் பரிசுத்த ஆவியானவர் சுறுசுறுப்பாக தேவதுவத்தின் திறமையான செயல்பாட்டை நிறைவேற்றுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மனிதர்கள் அனைவரையும் உயிர்ப்பூட்டி வல்லமை அளித்தார். இப்பட்டியலில் அடங்கும் எல்லாருடைய பெயரையும் கொடுப்பது முடியாததாகையால் சில உதாரணங்களைக் காண்போம்.

இவர்களுள் முதன்மையானவர் பெசலெயேல். இவர் உடன்படிக்கைப் பெட்டியையும் மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகளையும், திட்டமிட்டு உருவாக்கியவர். கர்த்தர் யாத்திராகமம் 31:2–3ல்

> 2 ***நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து,***
>
> 3 ***விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும், . . . எனத் தொடர்கிறது.***

இந்த படைப்பின் தொழிலை திறம்படச் செய்ய திறமை அளித்தவர் பெசலியேலை நிரப்பிய தேவ ஆவியானவர். என்னை வியக்கச் செய்யும் காரியம் என்னவென்றால் இவர் தான் தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்ட முதல் மனிதர் என்று வேதம் கூறுகிறது. தொழில்

நுட்பத்துடன் இவர் அனைத்தையும் செய்தார். கைவன்மைக்கு இங்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

உபாகமம் 34:9ல் நாம் யோசுவாவைப் பற்றி இப்படி வாசிக்கிறோம்:

***[9]மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்; இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.***

யோசுவா வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை சுதந்தரித்த ஒரு பெரிய இராணுவத்தலைவர். அவர் ஆவியானவரராலே நிரப்பப்பட்டிருந்ததாலே இதைச் செய்ய முடிந்தது.

நியாயாதிபதிகள் 6:34ல் கிதியோனைப் பற்றிப் படிக்கிறோம்:

***[34]அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார்; அவன் எக்காளம் ஊதி, அபியேஸ்ரியரைக் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்து. . .***

கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் வந்ததினாலே அவர் வல்லமையின் தலைவரானார். அதற்கு முன்பு அவர் ஒரு சாதுவான வாலிபர். திராட்சை ஆலையில் திறமையாக எதையும் செய்ய முடியாத சாதாரண பணியில் ஈடுபட்டவர். ஆனால் தேவனுடைய ஆவி அவர்மேல் வந்தபோது அவர் மாற்றப்பட்டார்.

2 சாமுவேல் 23:1–2ல் பேரரசனும் சங்கீதக்காரனுமாகிய தாவீதைக் குறித்துப் படிக்கிறோம். தாவீது அதில் சொல்லுவதாவது :

***[1]தாவீதுடைய கடைசி வார்த்தைகள்: மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன் சொல்லுகிறது என்னவென்றால்;***

***[2]கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது.***

இந்த அழகான சங்கீதங்களை தாவீது நமக்கு கொடுக்க முடிந்ததின் காரணம் "கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது" என்பதாகும். மீண்டும் தேவ ஆவியானவரும், தேவ வசனமும் வருகிறதைக் கவனியுங்கள் 1 பேதுரு 1:21ல் பேதுரு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் ஊழியத்தைப்

பற்றி இவ்வாறு தொகுத்துச் சொல்லுகிறார்:

**[21]உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்.**

தேவனிடத்திலிருந்து மெய்யான செய்தியைக் கொண்டு வந்த ஒவ்வொரு தீர்க்கதரிசியும் தாங்கள் சுயமாய் பேசாமல், தங்கள் சொந்த எண்ணங்களையும், கருத்துகளையும் சொல்ல முற்படாமல், ஆவியினாலே ஏவப்பட்டு, (உந்தப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்டு) பேசினார்கள். ஆகவே அச்செய்தி மனிதனிடத்திலிருந்து வந்த செய்தியாக இல்லாமல் தேவனிடத்திலிருந்து வந்த செய்தியாக இருந்தது. இந்த உதாரணங்களையும் மற்ற உதாரணங்களையும் நோக்கும் போது பழைய ஏற்பாட்டு பக்தர்கள் தேவ ஊழியத்தை பரிசுத்த ஆவியின் ஏவுதலினால், தூண்டுதலினால் திறம்படச் செய்தார்கள். உண்மையாகவே இதில் நமக்கு ஒரு பாடம் உள்ளது. அவர்களால் ஆவியானவர் இல்லாமல் திறம்பட செயலாற்ற முடியவில்லையாயின் நமக்கும் அப்படியே உள்ளது.

# அத்தியாயம் இரண்டு

# இயேசுவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர்

இயேசுவின் ஊழியத்திலும், போதனையிலும் இருந்த பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இப்பொழுது நாம் காண்போம். முதலாவதாக இயேசுவை அறிமுகப்படுத்தி அவருடைய ஊழியத்திற்கு வழியை செவ்வைப் படுத்த வந்த யோவான் ஸ்நானகன் அவரை "பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுகிறவர்" என்னும் சிறப்பு பட்டத்தைக் கூறி அறிமுகப்படுத்துகிறார்.

> [11] ***மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.***
>
> **(மத்தேயு 3:11)**

இயேசுவிற்கும், அவர் காலத்திற்கு முன்பு வந்த மனிதர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள். "அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்." பரிசுத்த ஆவியானவரில் திருமுழுக்குக் கொடுக்கும் இயேசுவின் ஊழியத்திற்கு நான்கு அருட்செய்தி நூல்களும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. வேதம் இதற்கு சிறப்பு கவனம் செலுத்துகிறது.

இயேசுவின் முழு ஊழியத்திற்கும் தேவையான வல்லமையின் காரணராக பரிசுத்த ஆவியானவர் இருப்பதை நாம் காண்கிறோம். யோர்தான் நதியில் இயேசு, யோவானால் ஞானஸ்நானம் பெறும் வரை அவர் பிரசங்கிக்கவும் இல்லை, ஓர் அற்புதத்தைச் செய்யவும் இல்லை. பரிசுத்த ஆவியானவர் தன் மேல் வருவதற்காக காத்திருந்தார். அப்போஸ்தலர் 10:38ல் கொர்நேலியுவின் வீட்டில் கூடியிருந்த மக்களுக்கு

பேதுரு பேசும் பொழுது இயேசுவின் ஊழியத்தைப் பற்றி இப்படி விளக்குகின்றார்:

> **[38]நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.**

பூவுலகில் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் வல்லமையும், ஆதாரமும் பரிசுத்த ஆவியானவரே. தேவன் திரித்துவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளதை ஏற்கெனவே காட்டியுள்ளோம். – ஒரே தேவனில் மூன்று நபர்கள்—பிதா, குமாரன், ஆவியானவர். இந்த ஒரு வசனத்தில் மூவரும் குறிக்கப்பட்டுள்ளனர். பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசுவை பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கிறார். தேவன் செயல்படுவதால் மனிதர்களுக்கு சுகம் கிடைக்கின்றது. அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட அனைவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றி திரிந்தார். இதுவே இயேசுவின் ஊழியத்தின் இரகசியமும் மூலாதாரமுமாகும்.

உயிர்த்தெழுதலுக்குப் பின்பும், இயேசு பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருந்தார். இது ஒரு ஒப்பற்ற உண்மை. அப்போஸ்தலர் 1:1–2ல் இந்த வசனங்களுடன் ஆரம்பிக்கிறார்.

> **[1]தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்தஆவியினாலே கட்டளையிட்ட பின்பு,**
>
> **[2]அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை (லூக்கா சுவிசேஷத்தை) உண்டுபண்ணினேன்.**

லூக்கா இயேசு உயிர்த்தெழுதலுக்கும் பரமேறுதலுக்கும் இடைப்பட்ட நாற்பது நாட்களின் ஊழியத்தைப்பற்றி இங்கு பேசுகிறார். தமது அப்போஸ்தலர்களுக்கு அறிவுரையை பரிசுத்த ஆவியின் மூலம் அருளினார் என்று அது சொல்கிறது. முற்றிலும் நாம் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டியதின் நமது மாதிரி இயேசுவே. தமது வல்லமைக்கும் தமது போதனைகளுக்கும் அவர் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருந்தார்; பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் அவர் ஒன்றும் செய்யவில்லை. இயேசுவைப் போன்று நாமும் தூய ஆவியானவரைச் சார்ந்தவர்களாய் செயலாற்ற வேண்டுமென்பது நமக்கு முன்புள்ள அறைகூவல்.

தமது ஊழியம் முழுவதிலும் இயேசு பரிசுத்த ஆவியானவரின்

வல்லமையால் செயல்பட்டதுமன்றி, அவரை வல்லமை உடையவராக்கி உற்சாகப்படுத்திய அதே பரிசுத்த ஆவியானவரை அவருடைய சீஷர்களும் பெறுவர் என வாக்களித்தார்.

யோவான் 7:37–39 வரை நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

***37*பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.**

***38*வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.**

***39*தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.**

இங்கு நாம் ஒரு முக்கிய உண்மையைக் காண்கிறோம். "ஒருவன் தாகமாயிருந்தால்" என ஒரு தாகமுள்ள மனிதனைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அதே தாகமுள்ள, திறமையற்ற மனிதன் பரிசுத்த ஆவியானவர் உள்ளே வந்து வசித்தால் "ஜீவ நதிகள் புறப்படும்" ஊற்றாக மாறுகிறான். தேவையிலிருந்த அம்மனிதன் பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவையைச் சந்திப்பவனாக மாறுகிறான். ஒவ்வொரு விசுவாசிக்கும் தூய ஆவியானவர் எல்லையற்ற ஆதாரமாக இருக்கிறார்.

இந்த வாக்குத்தத்தம் இயேசுவின் பூவுலக ஊழியத்தில் கொடுக்கப்பட்டபோதிலும் இயேசு மகிமையடைவதற்கு முன்பு இது நிறைவேறாது என்று அந்த சுவிஷேசத்தின் எழுத்தாளர் தெளிவுபடுத்துகிறார். அவர் சொல்கிறார்: "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை."

யோவான் 14:15–18ல் இயேசு தமது சீஷர்களுக்குக் கூறுகிறார்:

***15*நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.**

***16*நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

***17*உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும்**

**இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.**

**[18]நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.**

இங்கு நாம் கவனிக்க வேண்டிய சில முக்கிய குறிப்புகள் உண்டு. முதலாவதாக இயேசு சொல்கிறார் "பிதா உங்களுக்கு வேறொரு தேற்றரவாளனைத் தருவார்." இங்கு கூறப்பட்டுள்ள "வேறொரு" என்பதின் அர்த்தம் என்ன? அதற்கு அர்த்தம் என்னவென்றால் இயேசு ஒரு நபராக அவர்களுடன் மூன்றரை ஆண்டுகள் இருந்தார். அவர் சொன்னதின் அர்த்தம் "இப்பொழுது நான் ஒரு நபராக உங்களை விட்டு கடந்து செல்ல இருக்கிறேன். ஆனால் நான் போன பின்பு பரிசுத்த ஆவி என்னும் அடுத்த நபர் நான் இருந்த இடத்தில் இருக்கும்படி வருவார்" என்பதாகும்.

இரண்டாவதாக பரிசுத்த ஆவியானவரை விளக்குவதற்குத் "தேற்றரவாளன்" என்னும் குறிப்பிட்ட வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இதன் கிரேக்கப்பதம் "பராகிளீட்டாஸ்" என்பதாகும். கத்தோலிக்க மொழிபெயர்ப்பு "பராகிளீட்" என்று கூறுகிறது. "நம்முடன் இருந்து உதவி செய்யும்படி அழைக்கப்பட்டவர்" என்பதே "பராகிளீட்" என்ற சொல்லின் அர்த்தமாகும். மற்ற மொழி பெயர்ப்புகள் இதை "ஆலோசகர்", "உதவியாளர்" என மொழிபெயர்த்துள்ளது. இங்கு நாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள தேற்றரவாளன், ஆலோசகர், உதவியாளர் என்றும் மூன்று பதங்களைக் காண்கிறோம்.

மூன்றாவதாக பரிசுத்த ஆவியானவர் சீஷர்களுடன் நிரந்தரமாய் இருப்பார் என இயேசு கூறுகிறார். மீண்டும் இவருக்கும் சீஷர்களுக்கும் உள்ள உறவில் ஒரு வித்தியாசம் உண்டு. அவர் அடிப்படையாகச் சொல்வது "நான் உங்களுடன் குறுகிய காலமாகிய மூன்றரை ஆண்டுகள் இருந்தேன். நான் உங்களை விட்டுச் செல்ல இருப்பதால் இருதயத்தில் நீங்கள் கலங்கியிருக்கிறீர்கள். ஆதரவற்றவர்களாக விடப்பட்டு போவதாக உணருகிறீர்கள்; ஆனால் பரிசுத்த ஆவியானவர் என்னும் வேறொரு உதவியாளரை அனுப்ப இருக்கிறேன். அவர் வரும்பொழுது உங்களை விட்டு நீங்கிப் போகமாட்டார். நிரந்தரமாய் உங்களுடன் இருப்பார்." மீண்டும் அவர் "உங்களை திக்கற்றவர்களாக விடேன். நான் உங்களிடம் வருவேன்" என்கிறார். பரிசுத்த ஆவியானவர் இல்லாவிடில் அவர்கள் கவனிப்பாரற்ற, உதவி செய்வாரற்ற, வழிகாட்ட ஒருவரும் இல்லாத அனாதைகளாக விடப்படுவார்கள் என்று அர்த்தம். ஆகவே பரிசுத்த ஆவியானவர் மூலம் அவர்களின் முழு தேவைகளும் சந்திக்கப்பட இருக்கிறது.

இதே அருளுரையில் இயேசு மீண்டும் சற்று நேரத்திற்குப் பின்பு இதையே கூறுகிறார்.

> ***[7]நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். (யோவான் 16:7)***

இயேசு போகிறார் என்றாலும் வேறொருவர் அவர் இருந்த இடத்தில் வருகிறார். யோவான் 16:12–15 முதல் உள்ள வசனங்களில் இயேசு மீண்டும் இந்த முக்கிய காரியத்தைக் குறித்துப் பேசுகிறார்:

> ***[12]இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.***
>
> ***[13]சத்தியஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.***
>
> ***[14]அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.***
>
> ***[15]பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.***

அந்த வாக்குத்தத்தம் நிறைவேறியதால், பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது தனிப்பட்ட நிலையில் தெய்வத்துவத்தின் பூலோகப்பிரதிநிதியாக நம்மில் வசிக்கிறவர். அவர் விளக்கமளிப்பவர், வெளிப்படுத்தபவர், பிதாவிற்கும் குமாரனுக்கும் காரியங்களை நிருவகிப்பவர். இயேசு "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்கிறார். ஆனால் அவர் கூறுவது என்னிடத்தில் உள்ளது என்பதாகும். ஏனென்றால் பிதாவுக்குரியதெல்லாம் அவருக்குச் சொந்தமாயிருக்கிறது. ஆகவே பரிசுத்த ஆவியானவர் விளக்கமளிப்பவர்; வெளிப்படுத்துபவர்; பிதா, குமாரன் இவர்களுக்குள்ளதை பரிபாலிப்பவர்—எல்லாம் வெளிப்படுத்தப்பட்டு, விளக்கப்பட்டு தூய ஆவியானவரால் பராமரிக்கப்படுகிறது.

## அத்தியாயம் மூன்று

# பெந்தெகொஸ்தேயில் நடந்தது என்ன

யோவான் திருமுழுக்குநர் இயேசுவை பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானப்படுத்துகிறவர் என்று அறிமுகம் செய்துள்ளதை ஞாபகத்திற்குக் கொண்டுவாருங்கள். இரண்டாவதாக தூய ஆவியானவர் இயேசுவின் ஊழியத்திற்கும் போதனைக்கும் வல்லமை வழங்கியவர்; இயேசு தூய ஆவியானவரில் முற்றும் சார்ந்திருந்தார். மூன்றாவதாக இயேசு அவர் தாம் பரலோகத்திற்குச் சென்ற பின்பு தாம் வசித்த இடத்தில் தூய ஆவியானவராகிய பராகிளீட்டை சொந்தப்பிரதிநிதியாக அனுப்புவதாக வாக்களித்துள்ளார் பராகிளீட் ஆலோசகர், தேற்றரவாளன், உதவியாளர் நம்முடன் இருந்து உதவி செய்யும்படி அழைக்கப்பட்டவர்.

இப்பொழுது நாம் இயேசு அளித்த வாக்குத்தத்தின் நிறைவேறுதலைக் காண்போம்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கியபொழுது நடந்த புதிய அற்புதமான காரியத்தை நாம் இங்கு ஆராய்வோம். வேதாகமத்தில் பல வாக்குத்தத்தங்களைப் போல பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய இந்த வாக்குத்தத்தமும் ஒரே செயலின் மூலம் முழுவதுமாக உணரப்படுவதில்லை. அது பல கட்டத்தில் நிறைவேறியது. இதன் முதற்பகுதி இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த ஈஸ்டர் ஞாயிறு அன்று நடைபெற்றது. யோவான் 20:19–22ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> 19 ***வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.***
>
> 20 ***அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும்***

***அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள்.***

***21 இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,***

***22 அவர்கள் மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்;. . . என்று தொடர்கிறது.***

இருபத்திரண்டாம் வசனம் ஒரு முக்கிய காரியத்தைச் சொல்கிறது. கிரேக்கச் சொல்லான "நியூமா" என்பது சுவாசம், காற்று என்ற அர்த்தங்கள் உடையதாக இருக்கிறது. அவர்கள் மேல் ஊதியது இயேசு பேசிய "அவர்கள் மேல் ஊதி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்னும் வாசகத்துடன் சம்பந்தப்பட்டது. (பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய ஆவி.)

மீட்பில் உள்ள தேவனுடைய நோக்கத்தின் முக்கிய தீர்மானமான பகுதியாக இச்சம்பவம் உள்ளது. இந்த முக்கிய கட்டத்தில் நடந்ததென்ன? முதலாவதாக அவ்வேளையில் அந்த முதல் சீடர்கள் புதிய ஏற்பாட்டு இரட்சிப்பிற்குள் வந்தனர் என்று நான் கூறுவேன். ரோமர் 10:9ல் பவுல் இரட்சிப்படைவதற்கு தேவையான அடிப்படைக் காரியங்களைக் கூறுகிறார்.

***9. . .கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.***

யோவான் 20:19–22ல் தான் சீஷர்கள் இயேசு தேவனால் உயிருடன் எழுப்பப்பட்டார் என்பதை விசுவாசித்தார்கள். புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி அதுவரை அவர்கள் இரட்சிப்பிற்குள் பிரவேசிக்க முடியவில்லை. அவ்வேளை அவர்கள் இயேசுவைத் தங்கள் கர்த்தர் என்று அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிருடன் எழச்செய்தார் என விசுவாசித்த பொழுது அவர்கள் புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பைப் பெற்றனர்.

இரண்டாவதாக சீஷர்களுக்கு நடந்த காரியம் அவர்கள் புத்துயிர் பெற்றனர் அல்லது மறுபடியும் பிறந்தனர். அவர்கள் புதிய படைப்புகளானார்கள். தேவனுடைய ஊதப்பட்ட சுவாசத்தால் பழைய படைப்பாயிருந்த அவர்கள் புதிய படைப்பாயினர். இதைப் புரிந்து கொள்வதற்கு நாம் ஆதியாகமம் 2:7ல் ஆரம்ப காலத்தின் படைப்பைப் பற்றிய விளக்கத்தைக் காண வேண்டும்.

***[7]தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.***

மனிதனுடைய முதற்படைப்பு தேவன் ஜீவ ஆவியை (ஜீவசுவாசத்தை அல்லது தூய ஆவியானவரை) தரையிலே இருந்த களிமண் உருவத்தில் ஊதியபொழுது உண்டாயிற்று. தூய ஆவியாகிய இந்த தேவனுடைய சுவாசம் களிமண் உருவத்தை ஜீவ ஆத்துமாவாக மாற்றியது. யோவானில் உள்ள இப்பகுதியைத்தான் 2 கொரிந்தியர் 5:17ல் பவுல் "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதிய சிருஷ்டியாக இருக்கிறான்" என்று கூறுகிறார். முதற்படைப்பிற்கும் இந்தப் புதிய படைப்பிற்கும் ஒரு நேரிடையான இணைப்பு உள்ளது.

புதிய படைப்பிலே உயிர்த்தெழுந்த கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு பாவம், மரணம், நரகம், சாத்தான் ஆகியவர்களை வெற்றி சிறக்கின்றார். இதைச் செய்த பின்பு அவர் சீஷர்களுக்குத் தோற்றமளித்து உயிர்த்தெழுதலின் ஜீவனை அவர்களில் ஊதுகின்றார். இது ஒரு புதிய வாழ்வு. தீமை, மரணம், பாவம் என்னும் சக்திகளின் மேல் இந்த ஜீவன் வெற்றி சிறந்தது. இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்ட உயிர்த்தெழுதலின் ஜீவ ஆவியின் மூலம் சீஷர்கள் பழைய நிலையிலிருந்து மாறுபட்டு புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பிற்குள் வந்தனர்.

இந்த ஈஸ்டர் ஞாயிறு அனுபவத்திற்குப் பின்பும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி கூறப்பட்ட முழு வாக்குத்தத்தமும் நிறைவேறவில்லை என்பதை நீங்கள் முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டும். உயிர்த்தெழுதலுக்குப் பின்பு இயேசு லூக்கா 24:49ல் சீஷர்களுடன் கூறியதாவது:

***[49] என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.***

உயிர்த்தெழுந்த ஞாயிறுக்கு நாற்பது நாட்களுக்குப் பின்பு பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு சற்று முன்பாக இயேசு அவர்களிடம் கூறியதாவது:

***[4]அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். (அப். 1:4)***

இதிலிருந்து உயிர்த்தெழுந்த ஞாயிறு இந்த வாக்குத்தத்ததின் முழுமையான நிறைவேறுதல் இல்லை என்பதை நாம் காண்கிறோம். எல்லா வேத விளக்க உரையாளர்களும் இறையியல் நிபுணர்களும் இந்த வாக்குத்தத்தத்தின் முழு நிறைவேறுதல் அப்போஸ்தலர் 2:1–4ல் கூறப்பட்டுள்ள பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது என ஒப்புக்கொள்கின்றனர்.

> [1]பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.
>
> [2]அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.
>
> [3]அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.
>
> [4]அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

பெந்தெகொஸ்தே அந்த வாக்குத்தத்தத்தின் வெளிப்பாடும் நிறைவேறுதலுமாய் இருக்கிறது. பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் தாமே வல்லமையான காற்றாக இறங்கி, ஒவ்வொருவரையும் நிரப்பி அவர்கள் கற்றிராத புதிய இயற்கைக்கு அப்பாற்பட்ட நவமான மொழியைப் பேசும்படி செய்தார்.

அப்போஸ்தலர் நடபடிகளின் இரண்டாம் அதிகாரத்தின் இறுதியில் என்ன நடந்தது என்பதற்கான இறையியல் விளக்கத்தைப் பேதுரு வழங்குகிறார்.

> [32]இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.
>
> [33]அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.
> (அப்போஸ்தலர்2:32–33)

மீண்டும் இவ்வசனத்தில் தெய்வீகத்தின் மூன்று பேரைக் காண்கிறோம். குமாரனாகிய இயேசு பரிசுத்த ஆவியைப் பிதாவிடமிருந்து பெறுகிறார்.

அதை எருசலேமில் காத்துக் கொண்டிருந்த சீஷர்கள் மேல் பொழிகிறார். அந்தவேளையில் பரிசுத்த ஆவியானவரின் வருகையின் வாக்குத்தத்தத்தின் கடைசிக்கட்டம் நிறைவேறியது. பிதாவாலும் குமாரனாலும், பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் தாமே வெளிப்படுத்தப்படுகிறார். எருசலேமில் காத்துக் கொண்டிருந்த சீஷர்கள் மேல் அவர் இறங்குகிறார்.

இந்த கட்டத்தில் இயேசு உயிர்த்தெழுந்தவராக மட்டுமல்ல உயர்த்தப்பட்டு மகிமைப்பட்டவராக இருக்கிறார். யோவான் 7:39ல் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் இயேசு மகிமைப்படும் வரை நிறைவேற்றப்படவில்லை என்று அந்த சுவிசேஷத்தின் எழுத்தாளர் எழுதியுள்ளதை மனதில் கொள்ளுங்கள்.

நாம் இரு அற்புதமான ஞாயிறுகளைச் சந்திக்கின்றோம். முதலாவது ஈஸ்டர் ஞாயிறு அங்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவையும் ஊதப்பட்ட ஆவியையும் காண்கிறோம். இரண்டாவது பெந்தெகொஸ்தே ஞாயிறு அன்று மகிமை அடைந்த கிறிஸ்துவையும் ஊற்றப்பட்ட ஆவியையும் காண்கிறோம். இன்றும் இவைகள் எல்லா விசுவாசிகளுக்கும் மாதிரியாக உள்ளது.

| | | |
|---|---|---|
| உயிர்த்தெழுந்த ஞாயிறு | உயிர்த்தெழுந்த **கிறிஸ்து** | ஊதப்பட்ட ஆவியானவர் |
| பெந்தெகொஸ்தே ஞாயிறு | மகிமையடைந்த **கிறிஸ்து** | ஊற்றப்பட்ட ஆவியானவர் |

நாம் இதுவரை கண்ட அனுபவத்தின் நிரந்தர முக்கியத்துவத்தை நாம் வரிசைப்படுத்திக் காண்போம். பெந்தெகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியானவர் பூவுலகிற்கு ஒரு நபராக வந்தார். அவர் தற்சமயம் தங்கியிருக்கும் தெய்வத்துவத்தின் சொந்தப் பிரதிநிதி. அது ஒரு சட்டம் போல் உள்ளது. (இதை என்னால் விளக்க முடியாது). தெய்வத்துவத்தின் ஒரு நபர்தான் பூவுலகில் ஒரு குறிப்பிட்ட வேளையில் இருக்க முடியும். சில ஆண்டுகளுக்கு அது குமாரனாகிய இயேசு. ஆனால் இயேசு பரலோகத்திற்கு திரும்பும் வேளை, அவர் இருந்த இடத்தில் வேறொரு நபர் வந்து சில ஆண்டுகளுக்கு அல்ல நிரந்தரமாய் அவர்களுடன் தங்குவார் என வாக்களித்தார். அந்த வாக்குத்தத்தம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது. நபரான குமாரானாகிய இயேசு பரலோகத்திலுள்ள பிதாவிடம் சென்றார். பின்பு பிதாவிடமும் குமாரனிடமும் இருந்து பரிசுத்த ஆவியானவர் வந்து இயேசு இருந்த இடத்தை எடுத்தார்.

இப்பொழுது எங்கே பரிசுத்த ஆவியானவர் வாழ்கின்றார். இதற்கு இரண்டு பதில்கள் உண்டு. கிறிஸ்துவின் மொத்த சரீரமாகிய சபையில்

அவர் வசிக்கின்றார். கொரிந்து பட்டணத்திலுள்ள விசுவாசிகளை பவுல் பார்த்து கூறுவதாவது:

> ***16 நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர் களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?*** ***1 கொரிந்தியர் 3:16***

இங்கு பவுல் பரிசுத்த ஆவியானவரின் முழு ஆலயத்தையும் பற்றி பேசுகிறார்.

இரண்டாவதாக 1 கொரிந்தியர் 6:19ல் பவுல் இதைவிட முக்கியமான காரியம் ஒன்றைச் சொல்கிறார். அவர் கிறிஸ்துவின் முழு சரீரம் மாத்திரம் பரிசுத்த ஆவியானவரின் வசிக்கும் இடமாக மட்டும் இராமல் தேவனுடைய சித்தத்தின்படி ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியானவரின் தங்குமிடமாக இருக்கிறார்.

> ***19 உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?***

இது வேதத்தில் நம்மை வியக்கச் செய்யும் ஆழமான உண்மை! இயேசு கிறிஸ்துவில் விசுவாசிகளாய் நாம் இருந்தால், நமது சரீரம் தெய்வத்துவமான பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயமாக இருக்கிறது.

# அத்தியாயம் நான்கு

# நமக்குள்ளே வசித்து உதவுபவர்

பரிசுத்த ஆவியானவர் நமது பராகிளீட்டாக வந்துள்ளார் என்பதின் உண்மையான அர்த்தம் என்ன? மீண்டும் யோவான் 14:16-18ல் உள்ள பகுதியில் இயேசு நமக்குத் திட்டமாகக் கொடுத்த வாக்குத்தத்தங்களைக் கவனிப்போம்.

> [16]நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.
>
> [17]உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.
>
> [18]நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.

கிரேக்க மூல வார்த்தையைக் கொண்ட "பராகிளிட்" என்பது ஆங்கிலத்தில் ஒலிவடிவமாக அப்படியே எழுதப்பட்டுள்ளது. "பராகிளீட்" என்பவர் உன்னால் உனக்குச் செய்யமுடியாத ஒன்றை உனக்குச் செய்யும்படி உதவக் கூடியவர். இதே கிரேக்க வார்த்தை 1 யோவான் 2:1ல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

> [1]என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.

இவ்வசனத்தில் வரும் "பரிந்து பேசுபவர்" என்பதே பராகிளீட் என்பதின் மூலபதம். அட்வகேட் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும்

பதத்தில் "அட்" "வகேட்" என்ற சொற்கள் "அழைக்கப்பட்ட ஒருவர்" என்னும் இலத்தீன் பதங்களின் தொகுப்பு ஆகும். இலத்தீன் மொழியிலிருந்து உருவாக்கப்பட்ட "அட்வகேட்" என்ற பதம் ஒரு வழக்கறிஞரைக் குறிக்கும். நமது சார்பில் பரிந்து வாதாடுபவர் என்று இதற்குப் பொருள். நமது கலாச்சாரத்தில் நாமனைவரும் ஒரு வழக்கறிஞர், அட்டார்னி போன்ற பதத்திற்குரியவரின் பணியை நன்கு அறிவோம். வேதம் நமக்காகப் பரிந்து பேசும் இருவர் உண்டு என்னும் சத்தியத்தை அழகாக விளக்குகிறது. இவ்வுலகில் பரிசுத்த ஆவியானவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார். நமக்குச் சரியாகச் சொல்லத் தெரியாதவற்றை அவர் நமக்காகச் சொல்கிறார். நமக்குப் புரியாததை அவர் விளக்கித் தருகிறார். பரலோகத்திலே பிதாவிடம் இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார். நமது வழக்குகளை அவர் பேசுகிறார். சர்வலோகத்தில் தலைசிறந்த இரண்டு பரிந்து பேசுபவர்கள் நமக்கு உண்டு. பிதாவின் வலது பக்கத்தில் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் பூலோகத்தில் பரிசுத்த ஆவியானவரும் நமக்காகப் பரிந்து பேசுகின்றனர். இவ்விரு அட்டார்னிகளை அல்லது வழக்கறிஞர்களைக் கொண்ட நாம் எப்படி நமது வழக்கில் தோற்றுப் போவோம்.

இந்த வழக்கறிஞரைக் குறித்து இயேசு கூறியதை நான் விளக்க முற்படுகிறேன். இவர் நமது பராகிளீட், நமது அட்டார்னி, தேற்றரவாளர், ஆலோசகர், உதவியாளர். யோவான் 14:16–18ல் இயேசு முன் கூறியவைகளை நான் விளக்கமாகக் கூறுகிறேன்.

***"பிதா உங்களுக்கு வேறொரு தேற்றரவாளனை தந்தருளுவார்."*** வேறொரு என்னும் வார்த்தையின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அது ஒரு ஆளைக் குறிக்கிறது. "நான் ஒரு நபர். நான் போகிறேன். நான் போன பின்பு வேறொருவர் உங்களுக்கு உதவியாளராக வருவார். இங்கு இருந்த நாட்களில் நான் உங்கள் உதவியாளராக இருந்தேன். ஆனால் இப்பொழுது கடந்து போகிறேன். ஆனால் உதவியற்றவர்களாக நீங்கள் விடப்படுவதில்லை. வேறொரு உதவியாளர் உங்களுக்கு வருவார்."

***"அவர் என்றென்றைக்கும் உங்களுடன் கூட இருப்பார்."*** இயேசு "நான் உங்களுடன் மூன்றரை ஆண்டுகள் இருந்தேன், நான் போகிறேன். மனந்தளர வேண்டாம், ஏனென்றால் நான் இருந்த இடத்திலே வேறொருவர் வருகிறார். அவர் உங்களைவிட்டுப் போவது இல்லை. அவர் உங்களுடன் நிரந்தரமாய் இருப்பார்."

***"அவர் உங்களுடன் வாசம் பண்ணி உங்களுக்குள்ளேயிருப்பார்."*** உங்களுக்குள்ளே என்ற பதம் மிகவும் முக்கியமான பதம். அந்த

வழுக்கிறஞர் அல்லது தேற்றரவாளன் நம்மிலே வாழப்போகிறார். நாமே அவர் தங்கும் இடத்தின் முகவரி.

***"உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்."*** அவர் அவர்களுக்கு செய்ய வேண்டியவற்றை செய்யாமற்போனால், சீஷர்கள் தங்களைக் கவனிப்பார் யாரும் இல்லாது, உதவுவார் யாரும் இல்லாது, விளக்கம் அளிப்பவர் யாரும் இல்லாது அனாதைகளாக விடப்பட்டிருப்பார்கள்.

***"நான் உங்களிடத்திற்கு வருவேன்."*** இது மிகவும் முக்கியமானதாகும். கிறிஸ்து பரிசுத்த ஆவியானவர் மூலமாக சீஷர்களிடத்திற்கு வருகிறார். சரீரப்பிரகாரமாக பூலோகத்தில் இருந்த பொழுது இயேசு ஒரு நேரத்தில் ஓரிடத்தில்தான் இருக்க முடிந்தது. அவர் பேதுரு, யோவான், மகதலேனாள் மரியாள் போன்றவர்களிடம் ஒரு நேரத்தில் ஒருவரிடம் தான் பேசமுடிந்தது. ஆனால் அவர்கள் மூவருடன் ஒரே நேரத்தில் பல பொருள்களைக் குறித்து பேச முடியவில்லை. அவர் காலம், இடம் இவற்றால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார். இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் மூலமாக தம்முடைய மக்களிடம் வரும்பொழுது அவர் காலம், இடம், என்னும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவராக இருக்கிறார். அவர் ஆஸ்திரேலியாவிலுள்ள தேவையுள்ள ஒரு தேவபிள்ளையுடன் பேசக்கூடும்; அமெரிக்க ஐக்கிய நாட்டிலே ஒரு பிரசங்கியாரை அபிஷேகம் செய்யக்கூடும், அவர் அதே நேரத்தில் பாலைவனத்திலோ அன்றி ஆப்பிரிக்கக்காட்டிலோ ஒரு மிஷனெரியை பெலப்படுத்தி சுகப்படுத்திக் கொண்டிருக்க முடியும். அவர் கட்டுப்பாட்டைக் கடந்தவர். அவர் மீண்டும் வந்துள்ளார், ஆனால் காலம் இடம் என்னும் கட்டுப்பாட்டைக் கடந்தவராக வந்துள்ளார். நபர்கள் மாறிக் கொள்ளும் காரியம்– அதாவது ஒருவர் சென்று மற்றவர் வருவதைக் குறித்துக் கொஞ்சம் விவரிக்க விரும்புகிறேன். யோவான் 16:5–7 இயேசு கூறுவதாவது:

> 5 ***இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை.***
>
> 6 ***ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.***
>
> 7 ***நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.***

இது மிகவும் தெளிவாக இருக்கிறது. இயேசு சொன்னார் "நான்

உங்களுடன் பூமியில் ஒரு நபராக இருக்கும் நாள்வரை பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக பரலோகத்தில் இருக்க வேண்டும். ஆனால் ஒரு நபராக உள்ள நான் சென்றால் அப்பொழுது என்னுடைய இடத்திலே பரிசுத்த ஆவி என்னும் வேறொருவரை அனுப்புவேன்." அது தெய்வீக நபர்களின் பரிமாற்றம். கொஞ்சக்காலம் குமாரனாகிய நபர் பூவுலகில் இருந்தார். பின்பு தன் ஊழியத்தை முடித்து பரலோகத்திற்குச் சென்றார். அவர் இருந்த இடத்தில் (அடுத்த தெய்வீக நபர்) பரிசுத்த ஆவியானவர் வந்து இயேசு ஆரம்பித்த ஊழியத்தைத் தொடர்ந்தார்.

நம்முடைய நன்மைக்காவே இயேசு போவதாகக் கூறினார். கிங் ஜேம்ஸ் மொழி பெயர்ப்பிலே நான் போவது உங்களுக்கு நலமாயிருக்கும் என்று வருகிறது. இது ஒரு அற்புதமான வாக்கியம். இயேசு பூவுலகிலும் பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலும் இருப்பதைவிட இயேசு பரலோகத்திலும் பரிசுத்த ஆவியானவர் பூவுலகிலும் இருப்பது நமக்கு மிகவும் சிறந்தது. கிறிஸ்துவர்கள் எப்பொழுதும் "நான் மட்டும் இயேசு வாழ்ந்த நாட்களில் உயிருடன் இருந்தால்" எனப்பேசுவது உண்டு. ஆனால் இயேசு நீங்கள் இப்பொழுது தான் சிறப்பாய் உள்ளீர்கள். நான் பரலோகத்திலும் பரிசுத்த ஆவியானவர் பூவுலகிலும் இருக்கும் பொழுது முன்பை விட இப்பொழுது சிலாக்கியம் பெற்றவர்களாய் இருக்கிறீர்கள்' என்பார்.

இதை நான் ஆரம்ப கால சீஷர்களின் அனுபவத்திலிருந்து விளக்குகிறேன். பரிசுத்த ஆவி வந்தபொழுது என்ன நடந்தது என்று கவனியுங்கள். இதனால் மூன்று நற்பலன்களைக் காண்கிறோம். முதலாவதாக அவர்கள் தேவனுடைய திட்டத்தையும் இயேசுவின் ஊழியத்தையும் இயேசு உலகத்தில் இருந்த நாட்களில் இருந்ததைவிட பின்பு நன்கு புரிந்து கொண்டனர். அவர்கள் மெதுவாகவும் தாங்கள் புரிந்து கொண்டதிலே மந்தமாகவும் காணப்பட்டனர். பரிசுத்த ஆவி வந்த நிமிடத்திலே இயேசுவின் ஊழியத்தையும் செய்தியையும் பற்றி புதிய முறையில் அறிந்து கொண்டனர்.

இரண்டாவதாக அவர்கள் மிகுந்த தைரியம் கொண்டனர். உயிர்த்தெழுதலுக்குப் பின்பும் யூதர்களுக்குப் பயந்தவர்களாய் அடைத்த வீட்டுக்குள் ஒழிந்து கொண்டிருந்தனர். அவர்கள் பிரசங்கம் பண்ணவும் சத்தியத்தை அறிவிக்கவும் ஆயத்தமற்றவர்களாய் இருந்தார்கள். பரிசுத்த ஆவியானவர் வந்ததும் அவர்கள் முற்றிலும் மாற்றப்பட்டார்கள். பேதுரு தைரியத்துடன் நேரிடையாக எருசலேமில் உள்ள யூத மக்களைப் பார்த்து இயேசுவின் முழு வாழ்க்கை வரலாற்றையும் கூறி அவர் சிலுவையில் அறையப்பட்டதின் குற்றத்தை அவர்கள் மேல் சுமத்திப் பேசினார்.

மூன்றாவதாக தெய்வீக உறுதிப்பாடு அவர்களுக்கு உண்டானது. பரிசுத்த ஆவியானவர் வந்தவுடன் அற்புதங்கள் நடைபெற ஆரம்பித்தன. இயேசுவே மீண்டும் அவர்களுடன் ஒரு நபராக வந்ததுபோல உணர்ந்தனர். ஏனென்றால் இயேசு அவர்களிடம் "பரிசுத்த ஆவி வரும் பொழுது நான் அவரில் உங்களிடம் வருவேன். நான் உங்களுடன் இருப்பேன். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்" என்றார்.

# அத்தியாயம் ஐந்து

# தேவனுடைய வசனத்தின் வெளிப்பாடு

பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார், ஆறுதல் அளிக்கிறார், நமது எல்லாத் தேவைகளையும் திட்டமாய்ச் சந்திக்கிறார். இதில் முதலாவது நாம் கவனிக்க வேண்டியது தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாடு ஆகும். தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்தி விளக்கம் தருபவர் பரிசுத்த ஆவியானவர். யோவான் **14:25-26**ல் இயேசு தமது சீஷர்களிடம் கூறுகிறார்.

> ***25 நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.***
>
> ***26 என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.***

26ம் வசனத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆவியானவரின் இருசெயல்பாடுகள் முக்கியமானவை. அவர் நினைவுபடுத்துபவர்; அவர் போதிக்கிறவர். இயேசு அவர்களுக்கு ஏற்கனவே சொல்லிக் கொடுத்ததை அவர் சீஷர்களுக்கு நினைவுபடுத்துகிறவர். இதில் நான் விளக்க விரும்பும் அர்த்தம் என்னவென்றால் புதிய ஏற்பாட்டில் உள்ள அப்போஸ்தலர்களின் விளக்கம் மனித ஞாபகசக்தியின் பெலவீனத்தால் பாதிக்கப்படவில்லை; ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. சில காரியங்களை சரியாக நினைவிற்குக் கொண்டு வர முடியாமலிருந்திருக்கலாம். ஆனால் அவற்றை ஆவியானவர் தாமே அவர்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டு வந்தார்.

எனினும் கடந்த காலத்தைப் பற்றி மட்டுமல்லாமல் வருங்காலத்தைப் பற்றியும் அவர் கவனம் கொண்டார். அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது அனைத்தையும் அவர் அவர்களுக்குக் கற்றுத் தந்தார். நம்மை

பொறுத்தமட்டில் இது இன்னும் உண்மையாக இருக்கிறது. இப்பூவுலகில் அவர் நமது தற்கால ஆசிரியர். இயேசு உலகில் இருந்தபொழுது பெரிய போதகராக இருந்தார். தமது சொந்த பிரதிநிதியாகிய பரிசுத்த ஆவியானவரிடம் அவர் தற்சமயம் இந்தப் பொறுப்பைக் கொடுத்துள்ளார். தேவனுடைய வசனத்தைப் பற்றி நாம் அறிய வேண்டியவைகள் எவைகளோ, அவைகளை நமக்குப் போதிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் நமக்கு இருக்கிறார்.

இது சீஷர்களை பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்குச் சமமாக ஆக்கியுள்ளது. தீர்க்கதரிசிகளைக் குறித்து 2 பேதுரு 1:21ல் எழுதப்பட்டுள்ளதைப் பார்ப்போம்:

> ***[21] தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.***

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் துல்லியமாகவும் அதிகாரத்துடனும் காரியங்களைக் கூறியதற்குக் காரணம் பரிசுத்த ஆவியானவரே. பரிசுத்த ஆவியானவரே அவர்கள் அவரிடம் காத்திருந்த பொழுது கூறியவைகளுக்குப் பொறுப்பாளியாக இருக்கிறார். அவர்களை ஏவி அவர் நடத்தி வந்தார். ஆனால் இது புதிய ஏற்பாட்டின் எழுத்துக்களைப் பொறுத்த மட்டிலும் கூட உண்மையுள்ளதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து திடமாக பரிசுத்த ஆவியானவர் சீஷர்களுக்கு அவர் சொன்னதை நினைவுபடுத்துவார் என்று சொன்னது மட்டுமன்றி அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவைகளையும் அவர்களுக்குக் கற்றுத் தருவார் என்றார். பழைய, புதிய ஏற்பாடுகளின் எழுத்தாளராக பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். இதைப் பவுல் மிகத் தெளிவாக 2 தீமோ. 3:16ல் கூறுகிறார்.

> ***[16] வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,...***

வேறொரு மொழி பெயர்ப்பு "ஏவப்பட்டு" என்று கூறுகிறது. எனினும் ஏவப்பட்டது என்றாலும் "தேவனால் ஊதப்பட்டது" என்றாலும் அது ஆவியானவரின் செயல்பாட்டையே குறிக்கிறது. எல்லா வேதவசனங்களையும் பரிசுத்த கருவிகள் மூலம் ஊதி கொடுத்தவர் ஆவியானவரே.

தேவனுடைய பரிபூரணப் பராமரிப்பு என் உள்ளத்தைப் பரவசப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவர் வேதத்தின் ஆக்கியோனாக இருக்கிறார்; வேதத்தை நமக்குப் போதிப்பவரும் அவரே. ஆகவே

ஆக்கியோனே அதை நமக்கு விளக்கித் தருபவராகிறார். ஒரு நூலை எழுதியவரை விட அதைச் சிறந்த முறையில் விளக்கக் கூடியவர் யார்? நான் சுமார் இருபது புத்தகங்களை எழுதியிருக்கிறேன். மற்றவர்கள் என் புத்தகத்தில் உள்ளவற்றிற்கு விளக்கமளிப்பதை நான் கேட்டிருக்கிறேன். அநேகமாக அவர்கள் அதை திறம்படவே விளக்குகிறார்கள். எனினும் "நீங்கள் அதைக் கவனிக்கத் தவறிவிட்டீர்கள்." "அதைச் சரியாகக் கூறவில்லை" என்று நான் நினைப்பது உண்டு. இந்தச் சூழ்நிலையில் வேதத்தின் ஆக்கியோனாகிய பரிசுத்த ஆவியானவர் அதற்கு விளக்கமளிப்பவராகவும் இருக்கிறார். அவர் எதையும் விட்டு விடுவதில்லை. அவர் எல்லாவற்றையும் சரியாகச் சொல்கிறார். அவர் சொல்வதைக் கேட்டு அவரிடமிருந்து நாம் பெற்றுக் கொள்வோமானால், வேதம் நமக்கு என்ன சொல்ல இருக்கிறது என்பதை அறிந்து கொள்வோம்.

பெந்தெகொஸ்தே நாளிலே வேத்தின் வெளிப்பாடு முதற்பலனாக அவர்களுக்குக் கிடைத்தது. பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டபொழுது அவிசுவாசியான கூட்டத்தார் "மதுவெறி கொண்டவர்கள்" என அவர்களைப் பற்றி நினைத்தனர். ஆனால் பேதுரு எழுந்திருந்து:

> ***15 நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே.***
>
> ***16 தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. (அப்போஸ்தலர் 2:15–16) என்றார்.***

அந்த வேளைவரை பேதுருவிற்கு யோவேலின் தீர்க்கதரிசனம் புரியவில்லை. சொல்லப்போனால் இயேசுவின் போதனைகளையே அவர் ஓரளவிற்குத் தான் புரிந்து கொண்டிருந்தார். ஆனால் பரிசுத்த ஆவி வந்த பொழுது, வேதாகமம் புதிய அர்த்தத்தில் விளங்க ஆரம்பித்தது. ஏனென்றால் அதன் எழுத்தாளர் அதனை விளக்க அங்கு இருந்தார்.

அப்போஸ்தலனாகிய பவுலைப் பொறுத்தமட்டிலும் கூட இது உண்மையாக உள்ளது. அவர் சபையைத் துன்பப்படுத்தி இயேசுவின் கூற்றுக்களை நம்பாதவராக இருந்தார்.

> ***17 அப்போஸ்தலர் 9:17ல் "அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான்."***

உடனேதானே பவுல் இயேசுவை தேவனுடைய குமாரனாக தேவாலயங்களில் பிரசங்கிக்க ஆரம்பித்தார்; எதை மறுத்து வந்தாரோ

அதையே பிரசங்கிக்க ஆரம்பித்தார். பரிசுத்த ஆவி அவருக்குள் வந்ததும் அவர் காரியங்களை புதிய முறையில் அறியலானார். இருளிலிருந்து ஒளிக்குள் வருவது போன்றதொரு மாற்றம் அவருக்கு ஏற்பட்டது.

வேதத்தின் ஆக்கியோனும் விளக்க உரையாளருமான பரிசுத்த ஆவியானவர் பவுலிடம் இருந்ததால் ஒரு பெரிய மாற்றம் மெதுவாக அல்ல திடீரென உண்டாயிற்று.

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையாகிய வேதத்தை விளக்குபவராகவும் வெளிப்படுத்துபவராகவும் அவரைச் சொல்லும்பொழுது வேதம் மாத்திரம் தேவனுடைய வார்த்தையல்ல இயேசுவே தேவனுடைய வார்த்தையாக இருக்கிறார் என்பதை மனதிற்கொள்ள வேண்டும். யோவான் 1:1ல் நாம் இயேசுவைப் பற்றி:

***[1]"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று பார்க்கிறோம்.***

இந்த வசனத்தில் மூன்று முறை இயேசு வார்த்தையாக அழைக்கப்பட்டிருக்கிறார். யோவான் 1:14 கூறுகிறது:

***[14]அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.***

வேதாகமமாகிய திருவசனம் எழுதப்பட்ட தேவவார்த்தை; இயேசு வெளிப்பட்ட சொந்தமான தேவவார்த்தை. இவ்விரண்டு வாக்கியங்களும் முரண்பாடற்றதாக உள்ளது.

பரிசுத்த ஆவியானவர் எழுதப்பட்ட தேவனுடைய வார்தகையை வெளிப்படுத்தி விளக்குவது மட்டுமன்று ஆனால் இயேசுவாகிய வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தையையும் அவர் விளக்கமளித்து வெளிப்படுத்துகிறார். இயேசு பரிசுத்த ஆவியைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

***[12]இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.***

***[13]சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல்,***

***தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.***

***14 அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.***

***15 பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். (யோவான் 16:12–15)***

இயேசு எல்லாவற்றையும் சொல்லிவிடவில்லை என்று பன்னிரண்டாம் வசனம் கூறுகிறது. ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் வருகிறார் என்பது அவருக்குத் தெரியும். அவரில் நம்பிக்கை வைத்திருந்தார். பரிசுத்த ஆவி வரும் பொழுது என்ன செய்வார் என்பதை அவர் விளக்கிக் கூறினார்.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவுக்குச் சொந்தமானதை எடுத்து நமக்குத் தெரிவிக்கிறார். இயேசுவை நம்மில் மகிமைப்படுத்துகிறார். இயேசுவை தமது மகிமையின் முழுமையில் அவர் வெளிப்படுத்தக் கூடியவர். இயேசுவினுடைய சுபாவம், பண்பு, ஊழியம் இவைகளின் முழுமையை பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தெரியப்படுத்துகிறார்.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மேலும், சீஷர்கள் மேலும் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் இறங்கிய பொழுது அவர்களுக்கு இயேசு எங்கேயிருக்கிறார் என்ற சந்தேகம் ஏற்படவில்லை. அவர் பிதாவின் வலதுபக்கத்தில் மகிமையுடன் இருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்தார்கள்.

சீஷர்களின் வாழ்வில் இயேசுவை பரிசுத்த ஆவியானவர் மகிமைப்படச்செய்தார். வேதத்திலுள்ள கிறிஸ்துவின் காரியங்களை எடுத்து–அவர்களுடைய ஞாபகத்திலிருந்தும் அவர்கள் இயேசுவிடம் கொண்ட தொடர்பிலிருந்தும் எடுத்து அவருடைய சீஷர்களுக்கு அவர் வெளிப்படுத்தினார்.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவை வெளிப்படுத்தி மகிமைப்படுத்துகிறார். அவர் பிதாவின் செல்வங்களையும் குமாரனின் செல்வங்களையும் பராமரிப்பவர்; ஏனென்றால் பிதாவுக்குச் சொந்தமானதெல்லாம் குமாரனுக்குச் சொந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குமாரனுக்குச் சொந்தமானதை பரிசுத்த ஆவியானவர் பராமரிக்கிறார். மற்ற வார்த்தைகளில் சொன்னால் தெய்வத்துவத்தின் சம்பத்துக்களெல்லாம் பரிசுத்த ஆவியானவராலே பராமரிக்கப்படுகிறது. அவர் நம்மைப் பராமரிப்பதால் நாம் அனாதைகளாக இருக்கத் தேவையில்லை. அவரே நமது மேலாளர்; தேவனுக்குரியவை அனைத்தும் அவர் பொறுப்பில் உள்ளது.

# அத்தியாயம் ஆறு

# இயற்கைக்கு அப்பாற்பட்ட தளத்திற்கு உயர்த்தப்படுதல்

பரிசுத்த ஆவியானவர் வருவதால் ஏற்படக்கூடிய அடுத்த பிரதான விளைவு என்னவென்றால் நாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட தளத்திற்கு உயர்த்தப்படுவோம். எபிரெயர் நிருபத்தில் வரும் இரண்டு முக்கிய வசனங்கள் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களின் சிறப்பு நிலையை விளக்குகிறது. (எபிரெயர் 6:4-5)

> [4]ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்,
>
> [5]தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்,

இங்கு புதிய ஏற்பாட்டு விசுவாசிகளைக் குறித்து ஐந்து காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

முதலாவது விசுவாசிகள் "பிரகாசிப்பிக்கப் பட்டார்கள்."

இரண்டாவதாக "பரம ஈவை ருசிபார்த்தார்கள்" இது இயேசுவில் கிடைக்கும் நித்திய ஜீவனின் ஈவைக் குறிக்கிறது என விசுவாசிக்கிறேன்.

மூன்றாவதாக "பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்" அல்லது பரிசுத்த ஆவியின் வல்லமையில் பங்கேற்றார்கள்.

நான்காவதாக "தேவனுடைய நல்வார்த்தையை" உடையவராயிருந்தார்கள்—அதாவது தேவனுடைய வார்த்தை ஜீவனும், உண்மையும் உள்ளதாய் அவர்களுக்கு இருந்தது.

ஐந்தாவதாக "இனி வரும் உலகத்தின் பலன்களை ருசிபார்த்தனர்."

இனி வரும் உலகத்தில் கிறிஸ்தவர்கள் முற்றிலும் மாறுபட்ட நிலையில் செயல்படுவார்கள் என விசுவாசிக்கின்றனர். நம்முடைய மாம்சீக சரீரத்தின் கட்டுபாடுகளுக்கு உட்படாதவர்களாய், புதிய சரீரத்துடன் முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை வாழ்வோம். ஆனால் அநேக கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவர் மூலமாய் வரவிருக்கும் நவமான வாழ்வை இவ்வுலகிலேயே ருசிபார்க்கக் கூடும் என்பதை உணரவில்லை "நாம் இனிவரும் உலகத்தின் பலன்களை ருசிபார்க்கக் கூடும்." அவைகள் ருசிபார்க்க முடியுமே தவிர அவைகளை முற்றிலும் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது; வரும் உலகத்தைப் பற்றி எப்படி இருக்கும் என்பதை இவ்வுலக நாட்களிலே நாம் சிறிது அறிந்து கொள்ள முடியும்.

பவுல் இதைக் குறித்து ஒரு முக்கிய காரியத்தைச் சொல்லுகிறார். எபேசியர் 1:13–14ல் அவர் விசுவாசிகளுக்கு இவ்வாறு எழுதுகிறார்:

> 13 ***நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.***
>
> 14 ***அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.***

இங்கு "அச்சாரம்" என்னும் வார்த்தை பரவசமூட்டும் வார்த்தை. பரிசுத்த ஆவியானவர் தற்காலத்திற்கும், வருங்காலத்திற்கும் தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட வைப்பு நிதி. இந்த வார்த்தையைக் குறித்து நான் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். கிரேக்கத்தில் இந்த வார்த்தை "அரபான்" என்று வருகிறது. இது ஒரு எபிரெய சொல். பல ஆண்டுகளுக்கு முன்பாக 1946ம் ஆண்டு என்று எண்ணுகிறேன். அப்பொழுது நான் எருசலேமில் வாழ்ந்தேன். அந்நாட்களில் எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவம் அரபான் அல்லது வைப்பு என்பதை அழகாக விளக்குகிறது. நானும் என் மனைவியும் எருசலேமின் பழைய பகுதிக்கு (Curtains) தொங்குதிரைகள் வாங்கச் சென்றோம். எனக்குப் பிடித்தமான திரையைத் தெரிந்தெடுத்து அதன் விலை என்னவென்று கேட்டோம். (அது ஒரு முழம் ஒரு டாலர் என்று வைத்துக் கொள்வோம்) எங்களுக்கு 50 முழம் தேவை என்று அந்த மனிதரிடம் சொன்னேன். அவன் அதற்கு இதன் விலை 50 டாலர்கள் என்று சொன்னான். நல்லது, இப்பொழுது என்னிடம் 50 டாலர்கள் இல்லை. இந்த 10 டாலர்களை வைப்பாக வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது இந்த துணி எனக்கு சொந்தமாய் உள்ளது இதை எடுத்துத் தனியாக வையுங்கள். இதை விற்க உங்களுக்கு உரிமை இல்லை. நான் மீண்டும் வந்து பாக்கி பணத்தை செலுத்தி விட்டு இத்திரையை எடுத்துக் கொண்டு போகிறேன் என்றேன்.

இது தான் அரபான் என்னும் வார்த்தையின் அர்த்தம்.

பரிசுத்த ஆவியானவர் கர்த்தர் நம்பேரில் செலுத்திய அச்சாரமாகும். பரிசுத்த ஆவியானவரை நமக்கு கொடுத்ததின் மூலம் தேவன் நம்முடைய வரவிருக்கும் வாழ்க்கைக்கு முன்பணம் செலுத்தியுள்ளார். முன்பணம் செலுத்தப்பட்ட நாம் அவர் வந்து வாங்கவிருக்கும் திரைச்சீலையைப் போல் உள்ளோம். ஒருவருக்கும் விற்றுப் போடப்படாதபடி பிரத்தியேகப்படுத்தப் பட்டிருக்கிறோம். அவர் மீண்டும் வந்து மீதிக் கிரயத்தைச் செலுத்தி நம்மை சொந்தம் பாராட்டுவார் என்ற உறுதி உண்டாகிறது. இதைத்தான் பவுல் "தேவனுக்கு சொந்தமானவர்கள் மீட்கப்படுவார்கள்" என்று சொல்லுகிறார். நாம் ஏற்கெனவே அவருக்குச் சொந்தமானவர்கள். ஆனால் முன்பணம் மட்டும் இப்பொழுது செலுத்தப்பட்டுள்ளது. பூரண கிரயம் செலுத்தப்பட்டு மீட்கப்படுவோம்.

வருங்கால வாழ்விற்கு தேவன் செலுத்திய முன் கிரயமே பரிசுத்த ஆவியானவர். இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்வு நமது எல்லா அனுபவத்திலும் தொடர்கிறது.

"பெந்தெகொஸ்தேயின் நோக்கங்கள்" என்னும் என்னுடைய புத்தகத்திலிருந்த ஒரு பகுதியை மேற்கோளாக காட்ட விரும்புகிறேன். அதில் நான் இவ்வாறு எழுதியுள்ளேன்:

> "திறந்த மனதுடன் புதிய ஏற்பாட்டினை படித்தால் ஆரம்ப கால கிறிஸ்தவர்களின் வாழ்வும், அனுபவமும் எல்லா விதத்திலும் இயற்கைக்கு அப்பாற்பட்டதாகவே இருந்திருக்கிறது என்பதை நாம் நிச்சயம் ஒத்துக் கொள்வோம். இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த அனுபவம் கூடக் கொடுக்கப்பட்டதோ அல்லது தற்செயலாய் ஏற்பட்டதோ அன்று; அவர்களுடைய முழு வாழ்க்கையிலும் இது பிரிக்க முடியாமல் காணப்பட்டது. அவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டதாய் பிரசங்கித்தார்கள், இயற்கைக்கு அப்பாற் பட்டதாய் ஜெபித்தார்கள், இயற்கைக்கு அப்பாற்பட்டதாய் வழிநடத்தப்பட்டார்கள், இயற்கைக்கு அப்பாற்பட்டதாய் வல்லமையை பெற்றார்கள், இயற்கைக்கு அப்பாற்பட்டதாய் ஓரிடத்திலிருந்து மறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அசாதாரண பாதுகாப்பைப் பெற்றார்கள்.

அப்போஸ்தல நடபடிகளிலிருந்து, இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவத்தை எடுப்போமானால் அது அர்த்தமற்றதாய் அல்லது சரியான இணைப்பற்றதாய் காணப்படும். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் பொழியப்படுகின்றார்.

அதற்குப் பின்பு ஒவ்வொரு அதிகாரத்திலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

பவுலினுடைய எபேசு பட்டண ஊழியத்தில் அப்போஸ்தலர் 19:11ல் சிந்தனையைக் கிளரக்கூடிய, கவனத்தை ஈர்க்கும் ஒரு வசனம் வருகிறது.

> [11]***பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.***

"விசேஷித்த அற்புதங்கள்" என்ற பதத்தின் அர்த்தத்தைக் காண்போம். நாடோறும் சாதாரணமாய் நடைபெறாத சிறப்பு அற்புதம் என்ற கிரேக்க பதத்தில் வருகிறது. அற்புதங்கள் என்பவை ஆரம்பத் திருச்சபையில் ஒவ்வொரு நாளும் ஏற்பட்ட அனுபவங்களாகும். ஆகவே அவர்கள் அதைக் குறித்து விமரிசிக்கவுமில்லை அல்லது ஆச்சரியப்படவுமில்லை. பவுலின் ஊழியத்தினால் எபேசுவில் செய்யப்பட்ட அற்புதங்கள் ஆரம்பத்திருச்சபையில் பல அற்புதங்களைக் கண்ட மக்களும் குறித்து வைக்கும்படி சிறப்புடையதாயிருந்தது.

நமது காலத்தில் "இது என்றுமே நடைபெறாத அற்புதம்" என்னும் பதத்தை பயன்படுத்தும் சந்தர்ப்பம் நமக்கு வருகிறதா? எத்தனை திருச்சபைகளில் அற்புதங்கள் ஒவ்வொரு நாளும் நடைபெறா விட்டாலும் என்றாவது நடைபெறுகிறது என்று சொல்லத்தக்கதாய் உள்ளதா?"

இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவம் ஆரம்ப கால கிறிஸ்தவர்கள் வாழ்க்கையிலே சிறப்பாக அவர்கள் பெற்றுக் கொண்ட வழி நடத்துதலிலே இருந்தது. அப்போஸ்தலர் 16ம் அதிகாரத்தில் பவுலையும், அவனுடைய உடன் ஊழியக்காரர்களையும் இரண்டாம் மிஷனெரி பிரயாணத்தில் காண்கிறோம். அவர்கள் சின்ன ஆசியாவில் இருக்கிறார்கள், அவர்களைப் பற்றி வேதம் இவ்வாறு சொல்லுகிறது: அப்போஸ்தலர் 16:6–7

> [6]***அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு,***
>
> [7]***மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டா திருந்தார்.***

அவர்கள் மேற்கு பகுதிக்கு செல்ல முற்பட்டார்கள். பரிசுத்த

ஆவியானவர் அவர்களை அனுமதிக்கவில்லை. பின்பு வடகிழக்கு திசைக்குச் செல்ல ஆரம்பித்த பொழுது அதற்கும் பரிசுத்த ஆவியானவர் "வேண்டாம்" எனக் கூறிவிட்டார். அப்போஸ்தலர் 16:8–10ல் கூறப்படுவதாவது:

**8 அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள்.**

**9 அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது.**

**10 அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம் பண்ணி,**

இது ஒரு மிக முக்கியமான சம்பவம். பரிசுத்த ஆவியானவர் ஈடுபட்டு எப்படி இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் வழிநடத்துகிறார் என்பதற்கு ஓர் உதாரணம். பூகோளத்தின் அடிப்படையில் அவர்கள் மேற்கு பகுதியான ஆசியாவிற்கோ அல்லது தென்கிழக்கு பகுதியான பித்தினியாவிற்கோ சென்றிருக்க வேண்டும். ஆனால் இவ்விரு பகுதிக்கும் செல்லாமல் வடமேற்கு திசையை நோக்கி ஐரோப்பா கண்டத்திற்கு செல்ல வழி நடத்தப்படுகின்றனர்.

திருச்சபையின் வருங்கால சரித்திரத்தை நோக்கிப் பார்க்கும்பொழுது ஐரோப்பா கண்டம் ஒரு ஒப்பற்ற பணியைச் செய்கிறது—முதலாவதாக நீண்ட காலத்தில் சுவிசேஷத்தை பாதுகாக்கிறது. இரண்டாவதாக அநேக ஆண்டுகளுக்கு தேவனுடைய வார்த்தையைப் பல நாடுகளுக்கும் அனுப்பும் ஒரு நாடாகிறது. தேவன் அநேக நூற்றாண்டுகளை மனதிற்கொண்டு தமது தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றுகிறார். இயற்கையின் சிந்தனையின் படி பவுலும், அவனுடைய உடன் ஊழியர்களும் இதைக் கண்டு கொண்டிருக்க முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கப்பாற்பட்ட வழிநடத்துதலினால் தேவனுடைய முழு நோக்கத்திற்குள்ளே பூரணமாய் அவர்கள் கடந்து செல்லுகின்றனர். இப்படிப்பட்ட இயற்கைக்கப்பாற்பட்ட வழிநடத்துதல் அவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்டதினால் சரித்திரம் முழுவதுமே பாதிக்கப்படுகிறது. ஆரம்ப கால கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கப்பாற்பட்ட செயற்பாடு இருந்தது என்பதற்கு இது ஒரு சிறிய உதாரணமே.

# அத்தியாயம் ஏழு

# ஜெபத்தில் உதவி

மூன்றாவதாக பரிசுத்த ஆவியானவர் நமது ஜெபத்தில் முக்கியமான வழியில் உதவி செய்கிறார். ரோமர் 8:14ல் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு எப்படி வழி நடத்துகிறார் என்பதைப் பவுல் கூறுகிறார்:

**14 மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.**

ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவதற்கு அவன் தேவனுடைய ஆவியினால் பிறக்க வேண்டும். ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து மறுபடியும் பிறந்ததற்கு பின்பு முதிர்ச்சி அடைய வேண்டுமாயின் தொடர்ந்து நீங்கள் பரிசுத்த ஆவியானவராலே வழிநடத்தப்பட வேண்டும். "எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" என்று தற்காலத்திலிருந்து நிகழ்காலம் வரைக்கும் தொடரக்கூடிய ஒரு வினைச்சொல்லைப் பவுல் பயன்படுத்துகிறார். அப்படிப்பட்டவர்ககள் குழந்தைகள் அல்ல. வளர்ச்சி அடைந்த குமாரரும், குமாரத்திகளுமாயிருக்கின்றனர். மேலும் ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் பவுல் பரிசுத்த ஆவியானவர் சிறப்பாக நம்மை ஜெப வாழ்க்கையில் நடத்தும் முறையை விளக்குகின்றார். சரியானபடி ஜெபிக்கும்படி ஆவியானவராலே வழிநடத்தப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தைத் தெரிவிக்கின்றார் (ரோமர் 8:26–27).

**26 அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.**

**27 ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.**

இங்கு பவுல் ஒரு பெலவீனத்தைக் குறித்துப் பேசுகின்றார். அது சரீர பெலவீனமன்று, ஆனால் அது மனதிலும் புரிந்து கொள்ளுதலிலும் உள்ள பெலவீனம். எதற்காக ஜெபிக்க வேண்டும் என்றும், எப்படி ஜெபிக்க வேண்டுமென்றும் நாம் அறியாதிருக்கிறோம்.

பல சபையின் மக்களைப் பார்த்து எப்பொழுதும் உங்களுக்கு எதற்காக ஜெபிக்க வேண்டும் என்றும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் தெரிந்தவர்கள் கரங்களை உயர்த்துங்கள் என்று சவால் விட்டிருக்கின்றேன். இந்த சவாலை ஏற்றுக் கொண்டு இதுவரை ஒருவரும் தம் கரத்தை உயர்த்தியதில்லை. நாம் ஜெபிக்க விரும்பும் போது எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளும் அறிவற்றவர்களாய் இருக்கிறோம் என்பதை நாம் உண்மையாய் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நான் நினைக்கிறேன். சில வேளைகளில் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று தெரிந்திருந்தாலும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதை தெரியாதிருக்கிறோம். இதையே பவுல் "நமது பெலவீனம்" என்று அழைக்கிறார். ஆனால் அந்த பெலவீனத்தில் பரிசுத்த ஆவியானவரை அனுப்பி எதற்காக ஜெபிக்க வேண்டும் என்றும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் அவர் கற்றுத் தருகிறார் எனக் கூறுகிறார். ஒரு அர்த்தத்தில் பார்க்கும் பொழுது பவுலின் மொழியில் பரிசுத்த ஆவியானவர் அசைவாடி நம்மூலம் ஜெபிக்கிறார் எனலாம்.

பயனுள்ள ஜெபத்தை ஜெபிக்க கற்றுக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவருடன் நாம் உறவு கொண்டவர்களாயும், அவருக்கு கீழ்ப்படிகிறவர்களாயும் இருக்க வேண்டும். அப்பொழுது அவர் நம்மை வழிகாட்டி பெலப்படுத்தி ஏவி, அநேகம் தடவைகளில் நம்மூலமாக ஜெபிக்கவும் செய்வார்.

புதிய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவக்கூடிய பல வழிகளை வெளிப்படுத்துகிறது. அவற்றுள் சிலவற்றை கீழே கூற விரும்புகிறேன்.

முதலாவது வழி ரோமர்8:26–27ல் கூறப்பட்டுள்ளது. பவுல் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" என்று கூறுகிறார். இது கிறிஸ்தவ வாழ்க்கையின் உயர்ந்த கட்டமாகிய பரிந்து மன்றாடுதல் என்று அழைப்பேன். அதற்கு பின்பு "வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு" என்கிறார். ஜெபிக்க வேண்டியவைகளை சரியாக ஜெபிப்பதற்கு நமது குறுகிய மனதிற்கு போதுமான வார்த்தைகள் தெரியாது. ஆகவே பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்யும் பொழுது வார்த்தைகளுக்கு அடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

இது ஆவிக்குரிய பிறப்பைத் தோற்றுவிக்கும். பரிசுத்தமான ஆவிக்குரிய போராட்டம், ஏசாயா 66:8ல் இப்படி கூறப்பட்டுள்ளது.

***8....சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது.***

போராடி ஜெபிக்கவில்லையென்றால் உண்மையான ஆவிக்குரிய மறுபிறப்பிற்கு வழியில்லை. சீயோன் வேதனைப்பட்ட பொழுது அவள் தன் குமாரரை பெற்றெடுக்கிறாள். பவுல் இதை கலாத்தியர் 4:19ல் உறுதிப்படுத்துகிறார்.

***19என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்;***

பவுல் அம்மக்களுக்கு பிரசங்கித்ததினாலே அவர்கள் மனந்திரும்பினார்கள். அவர்கள் மாற்றப்படவேண்டிய விதத்தை அடைவதற்கு பிரசங்கத்திற்கு மேலாக பரிந்து மன்றாடுதலின் ஜெப தேவை என்று பவுல் உணர்ந்து எழுதுகிறார். அந்த பரிந்து மன்றாடுதலின் ஜெபத்தை விளக்கும் பொழுது தான் "கர்ப்ப வேதனை" படுவதாக அல்லது வாக்குக்கடங்காத "பெருமூச்சு" விடுவதாக குறிப்பிடுகின்றார்.

இரண்டாவதாக பரிசுத்த ஆவியானவர் ஜெபத்தில் உதவி செய்து நமது மனதை பிரகாசிப்பிக்கின்றார். இவ்வேளையில் அவர் நம்மூலமாக ஜெபிப்பதில்லை ஆனால் எதற்கு ஜெபிக்க வேண்டும் என்றும் எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் நமது மனதிற்கு காட்டுகின்றார். நிருபங்களின் இரண்டு பகுதிகளில் நமது மனங்களில் ஆவியானவர் எப்படி செயல்படுகிறார் என்று குறிக்கப்பட்டுள்ளது. ரோமர் 12:2ல் இப்படி வாசிக்கிறோம்.

**2நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**

ஜெபத்தில் கூட புதுப்பிக்கப்பட்ட மனது மட்டுமே தேவனுடை சித்தத்தை அறியக்கூடும்.

***23எபேசியர் 4:23 "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி,"***

பரிசுத்த ஆவியானவராலே நமது மனது புதுப்பிக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் செயலாற்றி நமது மனதை புதுப்பிக்கும் பொழுது நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்கிறோம். தேவனுடைய சித்தத்தின்

படி ஜெபிப்பது எவ்வாறு என்பதையும் புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறோம். அவ்வாறாக பரிசுத்த ஆவியானவரால் நமது மனங்கள் புதுப்பிக்கப்படுவதால் அவை பிரகாசமடைந்து எப்படி ஜெபிப்பது என்பதை புரிந்து கொள்கிறது.

மூன்றாவதாக அடிக்கடி எதிர்பாராத நிலையில் பரிசுத்த ஆவியானவர் நமது வாயில் சரியான வார்த்தைகளைத் தந்து நமக்கு உதவி செய்கிறார். இதை எழுதும்பொழுது என் முன்னாள் மனைவியின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. அக்டோபர் மாதக் கடைசியிலே அவளுடைய சொந்த நாடாகிய டென்மார்க்கில் நாங்கள் இருந்தோம். அடுத்த நாளிலே நவம்பர் மாதம் முழுவதையும் பிரிட்டனில் செலவிட புறப்பட ஆயத்தமானோம். நான் ஐரோப்பிய நாட்டைச் சார்ந்தவன், ஆகவே அவ்வேளை பிரிட்டனில் மூட்டமும், குளிர்ச்சியும், பனியும் நிறைந்த மாதமாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். அந்த நாளிலே பிரிட்டனுக்குச் செல்வதற்கு முன்பு லிடியா, "நாங்கள் பிரிட்டனில் இருக்கும் நாட்களில் நல்ல வானிலையைக் கட்டளையிடும்" என்று ஜெபித்தாள். கட்டிலில் உட்கார்ந்து ஜெபித்துக் கொண்டிருந்த நான் கொஞ்சம் குறைய கீழே விழுந்து விட்டதைப் போல உணர்ந்தேன். இதற்குப் பின்பு நீ எதற்காக ஜெபித்தாய் என்பது தெரியுமா? என்று கேட்டேன். லிடியா, அதற்கு பதிலாக "இல்லை, எனக்கு ஞாபகம் இல்லை" என்றாள். இதன் மூலம் பரிசுத்த ஆவியின் மூலமாய் ஜெபித்தாள் என்பதை நான் தெளிவாகப் புரிந்து கொண்டேன்.

நான் "நல்லது நாம் பிரிட்டனில் இருக்கும் நாட்களில் நல்ல வானிலை இருக்க வேண்டும் என்று நீ தேவனிடம் கேட்டுக் கொண்டாய். ஆனால் நவம்பர் மாதத்தில் பிரிட்டன் எப்படி இருக்கும் என்று உனக்குத் தெரியுமா?" அவள் தோள்பட்டையை அசைத்து தெரியாது என்று உணர்த்தினாள். நவம்பர் மாதம் முழுவதையும் நாங்கள் பிரிட்டனில் செலவிட்டோம். குளிர்ச்சியோ, மழையோ, மோசமான காலநிலையோ இல்லை. அது இளவேனிற்காலம் போல் இருந்தது. நவம்பர் முடிவிலே அந்த இடத்தை விட்டு நாங்கள் புறப்படும் பொழுது எங்களை வழியனுப்ப வந்திருந்த மக்களைப் பார்த்து, "கவனித்துக் கொள்ளுங்கள். நாங்கள் போனபின்பு வானிலையில் மாற்றமிருக்கும்!" என்றேன். அது அப்படியே ஆயிற்று. லிடியாள் செய்த ஜெபம் பரிசுத்த ஆவியானவர் கொடுத்த ஜெபம். அவ்வேளையில் கர்த்தரிடத்தில் ஜெபிக்க வேண்டிய வார்த்தைகளை அவள் புரிந்து ஜெபித்தாள்.

புதிய ஏற்பாட்டில் அநேகம் தடவைகள் குறிக்கப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவர் ஜெபத்தில் நமக்கு உதவும் நான்காவது முறையாவது, நமக்கு ஒரு புதிய நவமான மொழியைத் தருகின்றார். அதை இயற்கையின் மனதினால் புரிந்து கொள்ள முடியாது. இதை அநேகர் ஜெபமொழி

என்று அழைக்கின்றனர். 1 கொரிந்தியர் 14:2ல் பவுல்:

> ***[2]ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.***

அதே அதிகாரம் 4ம் வசனத்தில்

> ***[4]அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.***

இந்த ஜெபத்தில் மூன்று முக்கிய காரியங்கள் வலியுறுத்தப்படுகின்றன. முதலாவதாக நவமான பாஷையில் நாம் பேசும் போது நாம் மனிதனிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறோம் என்னைப் பொறுத்தமட்டில் அது மிகப்பெரிய சிலாக்கியம்.

இரண்டாவதாக நமது மனங்களால் புரிந்து கொள்ள முடியாததைப் பேசுகிறோம். தேவ இரகசியங்களையும், மர்மங்களையும் பேசுகிறோம். மூன்றாவதாக பக்தி விருத்தி உண்டாகும்படி நம்மை நாமே கட்டியெழுப்புகிறோம். 1 கொரி. 14:14ல் பவுல் “நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும்” என்றார். இந்த இடத்திலே நமது மனதை பரிசுத்த ஆவியானவர் பிரகாசிப்பதில்லை. ஆனால் நமக்கு ஒரு புதிய மொழியைக் கொடுத்து அந்த மொழியைக் கொண்டு நம் மூலமாய் ஜெபிக்கிறார். இதில் ஒருவகை ஜெபத்தை மட்டும் செய்து விட்டு மற்ற வகை ஜெபத்தை செய்யாது விட்டு விடக்கூடாது. இதைத் தான் பவுல் தெளிவாக “நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்” (V 15) என்கிறார். இரண்டு வகையான ஜெபமும் நம்மால் செய்யக்கூடும். பரிசுத்த ஆவியானவரை அனுமதித்து அவருக்கு நம்மை ஒப்புக் கொடுத்து வேதத்தில் கூறியுள்ளது போல் அவர் நம்மில் செயல்பட அனுமதிப்போம். நம்முடைய ஜெப வாழ்க்கையில் ஒரு புதுமையும் வெற்றியும் உண்டாயிருக்கும். இதைத் தான் தேவன் நம் ஒவ்வொருவரிலும் எதிர்பார்க்கிறார்.

## அத்தியாயம் எட்டு

# நம்முடைய சரீரங்களுக்கு ஜீவனும் ஆரோக்கியமும்

பாராகிளீட் ஆன பரிசுத்த ஆவியானவரின் நான்காவது செயல்பாடு இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கையையும், ஆரோக்கியத்தையும் நமது சரீரங்களுக்குக் கொடுப்பதாகும். யோவான் 10:10ல் இயேசு நமக்கு ஜீவன் கொடுக்க வந்ததாக அறிவிக்கிறார்.

*10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

இங்கு நமக்கு முன்பு இருவர் கூறப்பட்டுள்ளனர். அவர்கள் மத்தியில் உள்ள வித்தியாசங்களை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் : ஜீவன் அளிக்கும் இயேசுவும், ஜீவனை எடுக்கும் சாத்தானும். ஜீவனை எடுப்பதற்காகவே பிசாசு நம் வாழ்க்கையில் வருகிறான். தேவன் நமக்கு அருளியுள்ள ஆசீர்வாதங்களைத் திருடுவதற்கே அவன் வருகின்றான். சரீர பிரகாரமாக நம்மைக் கொன்று நித்தியமாய் நம்மை அழிக்கவே வருகின்றான். நமது வாழ்வில் பிசாசுக்கு கொஞ்சம் இடம் கொடுப்போமென்றால் அவன் இதைத் தான் செய்வான் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நாம் அனுமதிக்கும் அளவிற்கு அவன் திருடி, கொன்று, அழிக்க முற்படுவான். ஆனால் இயேசுவோ இதற்கு எதிர்மறையான காரியத்தைச் செய்ய வந்தார். நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அந்த ஜீவன் பரிபூரணப்படவுமே வந்தார். இயேசு நமக்கு வழங்க இருக்கும் இந்த ஜீவன் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படுகிறது என்பதை நாம் முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டும்.

எந்த அளவிற்கு அவரை நம் வாழ்வில் செயல்பட அனுமதிக்கின்றோமோ அந்த அளவிற்குத் தான் அவர் இந்த பரிபூரண வாழ்வை நமக்கு அருள முடியும். இதற்கு எதிர்த்து நின்று ஆவியானவரின் செயல்பாட்டிற்கு மறுப்புத் தெரிவித்தால், இயேசு நமக்குக் கொடுக்க வந்த

பரிபூரண தெய்வீக வாழ்க்கையை முற்றிலும் அனுபவிக்க முடியாது. கல்லறையிலிருந்து இயேசு கிறிஸ்துவின் மரித்த சரீரத்தை உயிருடன் எழச் செய்தது இந்த பரிசுத்த ஆவியானவரே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இயேசுவைப் பற்றி பவுல் ரோமர் 1:5ல் இப்படி சொல்கிறார்:

**[5]மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந் ததினாலே பலமாய் ருசிக்கப்பட்ட தேவகுமாரனு மாயிருக்கிறார்.**

பரிசுத்த ஆவியானவர் என்று எபிரெயத்தில் சொல்லப்படுவது கிரேக்கத்திலே பரிசுத்தமுள்ள ஆவி என்று அழைக்கப்படுகிறார். பவுல் இங்கு எபிரெயத்தில் சிந்தித்து கிரேக்கத்தில் எழுதுகிறார். பவுல் "பரிசுத்தமுள்ள ஆவி" என்று சொல்வது பரிசுத்த ஆவியின் மூலம் என்று சொல்லுவதற்குச் சமானமாகும். அவரை மரித்தோரிலிருந்து எழுப்பிய சக்தியினாலே அவர் தேவகுமாரனாக வெளிப்படுத்தப்பட்டார் (அது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாகும்).

இதற்கு முன்பு தேவனுடைய மீட்பின் செயல்பாட்டில் இதுவே உயர்ந்த கட்டம் என்று தெரிவித்திருக்கிறேன். அதாவது தேவன் தாமே பரிசுத்த ஆவி என்னும் நபர் மூலம் நம்மில் வசித்து அவர் தங்கும் இடமாக சரீரத்தை ஏற்றுக் கொள்கிறார். ரோமர் 8:10–11 பவுல் கூறுவதாவது:

**[10]மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்.**

**[11]அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.**

பத்தாவது வசனத்தின் அர்த்தம் என்னவென்றால் கிறிஸ்து உள்ளே வரும்பொழுது நாம் மனந்திரும்பி, மறுஜென்மம் அடையும் போது ஒரு பழைய வாழ்க்கை முடிவுற்று, மற்றொரு புதிய வாழ்க்கை ஆரம்பமாகிறது. பழைய மாம்ச வாழ்க்கை முடிந்து நமது ஆவி தேவனுடைய ஜீவனால் உயிர்ப்பிக்கப்படுகிறது. இதனால் நமது சரீரம் அடையக்கூடிய பலனை பவுல் 11ம் வசனத்தில் சொல்லுகிறார். அதே நபர், அதே வல்லமை, அதாவது இயேசுவின் சரீரத்தை கல்லறையிலிருந்து உயிருடன் எழுப்பிய அதே நபர் ஒப்புக் கொடுத்த ஒரு விசுவாசியின் சரீரத்தில் இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு வழங்கிய ஜீவனை நமக்கு வழங்குகிறது என்று தெளிவுபடுத்துகின்றார். இயேசுவை நித்திய சரீரத்துடன் உயிருடன் எழச்

செய்த அதே வல்லமை நம்மிலும் செயல்படுகிறது. நம்முடைய சரீரத்திற்கு தெய்வீக ஜீவனை வழங்குவது மரித்தோரின் பொதுவான உயிர்த்தெழுதலின் காலத்தில் தான் முழுமைப்படும். நமக்கு தற்சமயம் உயிர்த்தெழுதலின் சரீரம் கிடையாது. ஆனால் அழிவுக்கேதுவான சரீரத்தில் உயிர்தெழுதலின் வல்லமை உண்டாகிறது. பவுல் பல இடங்களில் சாவுக்கேதுவான சரீரத்தில் கொடுக்கப்படும் நம்முடைய ஆவி, சரீரத்திலிருந்து பிரிக்கப்பட்டு நமது பரம வீட்டிற்குச் செல்லும் வரை இந்த உயிர்தெழுதலின் ஜீவன் நமது சரீரத்தின் தேவைகளைச் சந்திக்கிறது என்று சொல்லுகிறார்.

முதலாவதாக நமது சரீரம் எப்படி உருவாக்கப்பட்டது என்பதைப் புரிந்து கொள்வதின் மூலம் இச்சத்தியம் நமக்குத் தெளிவாகும். ஆதி. 2:7 கூறுகிறது:

*[7]தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.*

மனிதனுடைய சரீரம் உண்டானது எவ்வாறு? களிமண் உருவத்தில் தேவன் ஊதி அவனை ஜீவ ஆத்துமாவாக மாற்றி அவன் சரீரத்தை பல விந்தையான அற்புதங்களுடன் உருவாக்கினார். பரிசுத்த ஆவியானவரே மனித சரீரத்தை ஆரம்பத்தில் உருவாக்கியவர். ஆகையால் அவரால் தான் அதைப் பாதுகாக்க முடியும். இந்த விளக்கத்தை கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தெய்வீக சுகமும், தெய்வீக ஆரோக்கியமும் வேதத்தின்படி நமக்கு வாக்களிக்கப்பட்டவை.

உன்னுடைய கடிகாரம் ஓடாமல் நின்றால் அதை நீ செருப்புக் கடைக்கு எடுத்துச் செல்ல மாட்டாய். நின்று போன கடிகாரத்தை கடிகாரம் சரி செய்பவரிடம் எடுத்துச் செல்வோம். இதே ரீதியில் தொடர்ந்து சிந்திக்கும் பொழுது, நமது சரீரம் பழுது பட்டால் நாம் அதை எங்கு எடுத்துச் செல்ல வேண்டும்? என்னுடைய கணிப்பின் படி இந்த சரீரத்தை உருவாக்கிய ஆவியானவரிடமே எடுத்தச் செல்ல வேண்டும். இங்கு அமெரிக்க ஐக்கிய நாட்டில் அநேக கார்களில் இதன் வெளி அமைப்பு "ஃபிசர்" (Fisher) நிறுவனத்தாரால் செய்யப்பட்டது என்றும் சிறிய போர்டு ஒன்று பொருத்தப்பட்டிருப்பதைக் காணலாம். அதைப் போலவே ஒரு உடன் கிறிஸ்தவரைக் காணும் பொழுது, "பரிசுத்த ஆவியானவரால் உருவாக்கப்பட்ட சரீரம்" என்று சொல்வதுண்டு. அவரே சரீரத்தைக் கொடுத்து, பராமரித்து வல்லமை அளித்து வருகிறார். பவுல் நல்லதொரு சாட்சியை 2 கொரி. 11:23–25ல் கூறுகின்றார்.

*[23]அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்;*

*புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.*

*24 யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்;*

*25 மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.*

இவைகள் அனைத்தையும் அனுபவித்தும், உற்சாகத்துட ஆரோக்கியமாய் தைரியத்துடன் பவுல் ஊழியம் செய்தார். இவைக எல்லாவற்றிலும் பவுலைத் தாங்கியது எது? அது பரிசுத் ஆவியானவருடைய வல்லமையே. லீஸ்திராவில் பவுல் கல்லெறியப்பட் அனுபவத்தை கீழே காண்போம். (அப்போஸ்தலர் 14:19–20)

*19 பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப் போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள்.*

*20 சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப் போனான்.*

விந்தையான மனிதன்! அநேகர் பவுல் ஊனமுற்றவரா பெரும்பாலும் நோயாளியாய் சுற்றித்திரிந்திருக்க வேண்டும் என் கருதுகின்றனர். "ஊனமுற்ற பவுல் இவ்வளவு வல்லமையாக இருந்தா இதைப்போன்ற அநேக ஊனமுற்றவர்களை தேவன் நமக்குத் தருவாரா என்று நான் கூறுவேன். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு சரீரப்பிரகாரமா அசாதாரண சக்தி இருந்தது என்பதை சுருக்கமாகப் பார்த்தோம். இ இரகசியத்தைத் தொடர்ந்து காண்போம். இதைக் குறித்து அவர் என் சொல்லுகிறார்? 2 கொரிந்தியர் 4:7–12ல் பவுல் கூறுவதாவது:

*7 இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.*

*8 நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;*

*9 துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.*

**[10]கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.**

**[11] எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்.**

**[12]இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன்செய்கிறது.**

7ம் 8ம் வசனங்களில் நாம் மாறுபட்ட மனிதர்கள் அல்ல. மாறுபட்ட வல்லமை உள்ளவர்கள் என்று காண்கிறோம். நமக்குள் உள்ள ஒரு சக்தி வல்லமையாக இருப்பதால் மற்றவர்களை சீர்குலையச் செய்யும் காரியம் நம்மை சீர்குலையத் செய்யத் தேவையில்லை. 10ம் வசனத்தில் இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம் எனக் என்கிறார். இதை நாம் செய்யும்பொழுது அவருடைய ஜீவன் நம் சரீரத்தில் வெளிப்படுகிறது. அது வருங்காலத்தில் அல்ல. இந்தக் காலத்திலேயே உயிர்த்தெழுந்த இயேசுவின் ஜீவன் பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில் வாழ்ந்து நமது சரீரங்கள் மூலம் ஆற்றலை வெளிப்படுத்துகிறார்.

11ம் வசனத்தின் கடைசி சில வார்த்தைகளில் சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவன் விளங்கும்படிக்கு என்னும் முக்கிய வார்த்தைகள் வருகின்றன. அவர் நமக்குள்ளே வசிப்பதை யாரும் காணமுடியாது என்பது ஒரு இரகசியம் அல்ல. அது நம் சரீரத்தில் வெளிப்படுவதால் அனைவரும் அதைக் காணக்கூடும். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஜீவன் நம்முடைய மாம்ச சரீரத்தில் வெளிப்படுகிறது.

12ம் வசனத்தில் மரணமானது நம்மில் செயல்படும்போது நமது சரீர பெலன் திறமைகளின் கடைசிக் கட்டத்திற்கு வரும் போது ஒரு புதிய வாழ்க்கை நம் மூலம் பிறருக்கு வெளிப்படுகிறது.

**[16]2 கொரிந்தியர் 4:16 "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது."**

புறம்பான மனிதன் அழிந்தாலும், உள்ளான மனிதன் நாள்தோறும் புதுப்பிக்கப்படுகிறான். தேவனுடைய இயற்கைக்கப்பாற்பட்ட அற்புத ஜீவன் நம் ஒவ்வொருவருடைய புறம்பான மனிதனின் தேவைகளை முற்றிலும் சந்திக்கிறது.

## அத்தியாயம் ஒன்பது

# தெய்வீக அன்பின் வெளிப்பாடு

பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழங்கும் ஆசீர்வாதங்களுள் தலை சிறந்ததும், அற்புதமுமான ஆசீர்வாதம் தேவனுடைய தெய்வீக அன்பு நமது உள்ளங்களில் ஊற்றப்படுவதாகும். ரோமர் 5:1-5

***1 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.***

***2 அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்.***

***3 அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து,***

***4 உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்.***

***5 மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.***

இதன் உச்சகட்டம் 5ம் வசனத்தில் வருகிறது "மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" பவுல் இந்த வசனங்களில் ஆவிக்குரிய வளர்ச்சியின் பல படிகளை விளக்குகிறார். அவைகளை சுருக்கமாய் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவது நாம் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். இரண்டாவதாக கிருபையில் விசுவாசத்தினால் பிரவேசிக்கிறோம். மூன்றாவதாக தேவனுடைய நம்பிக்கையிலே மகிழ்ச்சி கொண்டு மேன்மை

...டுகிறோம். இது வருங்காலத்துக்குரியது. நான்காவதாக துயரத்தில் ...ச்சி அடைகிறோம். (துயரத்தை சரியாக ஏற்றுக் கொள்ளும் போது ...லன் உண்டாகிறது) உபத்திரவத்தை ஏற்றுக் கொண்டு மகிழும் போது ...ன்று பலன்கள் உண்டாகின்றன. முதலாவது பொறுமை, இரண்டாவது ...ண்டுகளின் நிரூபணம், மூன்றாவது நம்பிக்கை.

இதனுடைய உச்சக்கட்டம் தேவனுடைய அன்பு பரிசுத்த ஆவியினால் ...து உள்ளங்களில் ஊற்றப்படுவதாகும். இங்கு அன்பு என்பதற்கு புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க பதம் "அகாப்பே" என்பதாகும். இது தேவனுடைய அன்பைக் குறிப்பதற்காகவே பயன்படும் சொல். பரிசுத்த ஆவி இல்லாமல் "அகாப்பே" அன்பை மனிதர்கள் பெற முடியாது. ...ந்தகர் இவ்வன்பை சராசரி மனிதனில் காணமுடியாது.

ஐந்தாம் அத்தியாயத்தில் "அகாப்பே" அன்பைப் பற்றி பவுல் ...ரையறுக்கிறார். அது கிறிஸ்துவிலும், தேவனிலும் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை விளக்குகிறார். ரோமர் 5:6–8

*[6] அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.*

*[7] நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்.*

*[8] நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.*

கிறிஸ்து நமக்காக மரித்த பொழுது மூன்று வார்த்தைகள் நம்மை ...க்குவதாக உள்ளது. "பெலனற்றவர்கள்", "பாவிகள்", "தேவனற்றவர்கள்" அகாப்பே அன்பு தன்னைத் தானே எந்த ...ந்தனையுமின்றி வழங்குகிற அந்த அன்பு இதைச் செய்ய ...ண்டுமென்றோ, அதைச் செய்ய வேண்டுமென்றோ நல்லவனாய் இருக்க ...ண்டுமென்றோ சொல்லுவதில்லை. அது தகுதியற்றவர்களுக்கும், ...தியற்றவர்களுக்கும், இலவசமாய் வழங்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் அகாப்பே அன்பு வரும் இடங்களை சற்று ...ர்க்கவோம். முதலாவதாக அது புதிய பிறப்பின் வெளிப்பாடு. இதை ...பேதுரு 1:22–23 சொல்லுகிறது:

*[22] ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே*

***ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்;***

***23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.***

அகாப்பே அன்பினால் நேசிப்பது புதிய பிறப்பில் ஆரம்பமாகிறது. நித்திய அழிவற்ற வித்தாகிய தேவனுடைய வார்த்தை நம்மில் இந்த நித்திய புது வாழ்வைத் தருகிறது. அகாப்பே அன்பே புதிய வாழ்வில் பிரதான பண்பு. 1 யோவான் 4:7–8 சொல்கிறது:

***7 பிரியமானவர்களே, ஒரிவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.***

***8 அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்.***

இந்த விதமான அன்பு புதிய பிறப்பின் அடையாளமாக உள்ளது. புதிய பிறப்பை அடைந்தவன் இதை உடையவனாய் இருக்கிறான். புதிய பிறப்பை அடையாதவனுக்கு இது கிடையாது. இந்த புதிய தெய்வீக அன்பு நமக்கு கொடுக்கப்படுவதின் அடுத்த பகுதியை பவுல் நமக்கு விளக்குகிறார்: ரோமர் 5:5

***5 மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.***

இந்தப் புதிய பிறப்பிற்கு பிறகு, இந்த புதிய பிறப்பினால் உண்டாகும் புதிய பண்பில் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய அன்பின் முழுமையை நம்முடைய உள்ளங்களில் ஊற்றுகிறார். நாம் அன்பினால் நிரப்பப்படுகிறோம். தேவனுடைய முழு அன்பும் பரிசுத்த ஆவியானவரால் நமது உள்ளங்களில் ஊற்றப்படுவதால் நமக்கு எல்லா பொருட்களும் தாராளமாய்க் கிடைக்கின்றன. இது தெய்வீகமானது, இயற்கைக்கப்பாற்பட்டது. முடிவடையாதது பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே இதைச் செய்யக்கூடும். யோவான் 7:37–39 வரையுள்ள வசனங்களில் இயேசு கூறியதை ஒப்பிடுவோம்.

***37 பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்.***

**[38] வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.**

**[39] தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.**

இதில் நீங்கள் ஒரு வித்தியாசத்தைக் காணலாம். தனக்குப் போதுமானது இல்லாத தாகமுள்ள மனிதனை முதலாவது காண்கிறோம். ஆனால் அவனில் பரிசுத்த ஆவியானவர் வரும் பொழுது அந்த தாகமுள்ள மனிதன் ஜீவ நதிகள் ஊறும் ஊற்றாகிறான். அதுவே நம்முடைய உள்ளத்தில் ஊற்றப்பட்ட தேவனுடைய அன்பாகும், இது மனித அன்பல்ல, அது தேவனுடைய அன்பின் ஒரு பகுதி அல்ல. அது தேவனுடைய அன்பின் முழுமை நாம் அதில் முற்றிலும் முழுகிப்போகிறோம். தேவனுடைய எல்லையற்ற முழுமையான அன்பு பரிசுத்த ஆவியானவர் மூலம் நமது வாழ்வின் வழியாக வெளிப்படுகிறது தாகமுள்ள ஒரு மனிதன் ஜீவ ஊற்றின் இருப்பிடமாகிறான்.

இப்பொழுது 1 கொரிந்தியரில் பவுல் அன்பைப் பற்றி எழுதியுள்ள சிறப்பான அதிகாரத்தைக் காண்போம். 12ம் அதிகாரத்தின் கடைசியில் இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன் என்கிறார். மேன்மையான வழியாவது 13ம் அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. (1 கொரிந்தியர் 13:1–3)

**[1] நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.**

**[2] நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.**

**[3] எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.**

பரிசுத்த ஆவியானவரின் எல்லா ஈவுகளும், வெளிப்பாடுகளும் தெய்வீக அன்பின் கருவிகளாக உள்ளன என்பதை மறந்து போகக் கூடாது. இந்த ஈவுகளை தேவனுடைய அன்பைக் கொண்டு இயக்கவில்லை என்றால்

தேவனுடைய நோக்கங்களை நாம் வீணாக்குகிறவர்களாவோம். நமக்கு எல்லா ஈவுகளும் இருக்கலாம். ஆனால் அன்பில்லையானால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்போம். ஒன்றுமில்லாத நாம் இந்த அன்பில்லையென்றால் ஒன்றுமற்றவர்களாய் இருப்போம்.

முதலாம் வசனத்தில் பவுல் "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போவும் இருப்பேன்." (1 கொரி. 13:1) என்கிறார். பரிசுத்த ஆவியானவர் வரும்போது விசுவாசத்தினால் சுத்திகரிக்கப்பட்டு தேவனிடம் மனம் திரும்பிய இருதயத்திற்குள்ளேயே வருகிறார். இதற்குப் பின்பு தேவனுடைய நோக்கத்தை இழந்து அவர் கொடுத்த அன்பை பயன்படுத்தாதபடி தொய்ந்து போக வாய்ப்பு உண்டு. அந்நிலை ஏற்படும் பொழுது பவுல் சொல்லுகிறபடி "நாம் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்போம்." சுருக்கமாகச் சொன்னால், "மேற்கூறியபடி அந்த அன்பைப் பெற்றுக் கொண்டபொழுது நான் இல்லை. தேவநோக்கத்தை நிர்மூலமாக்கிய பொழுது இந்நிலைக்குத் தள்ளப்பட்டேன்" என்கிறார். 1 தீமோத்தேயு 1:5–6ல் பவுல் கூறியதை ஒப்பிட்டுப் பாருங்கள்.

> ***5 கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச் சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே.***
>
> ***6 இவைகளைச் சிலர் நோக்காமல் வீண் பேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப்போனார்கள்.***

கிறிஸ்தவ வாழ்வின் குறிக்கோள் அன்பாகும். ஒரு கிறிஸ்தவனுக்கு தேவனுடைய நோக்கம் இந்த தெய்வீக அன்பை வெளிப்படுத்துவதாகும். தேவன் நமக்கு இந்த அன்பைக் கொடுப்பதில் உள்ள மூன்று படிகளைத் தொகுத்துக் கூறுகிறேன். இதன் முதற்படி மறுபடியும் பிறத்தல். நாம் மறுபடியும் பிறக்கும் பொழுது இந்த அன்புக்கு பாத்திரவான்களாய் மாறுகிறோம். இரண்டாவதாக நமக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவர் மூலம் இந்த தேவ அன்பின் முழுமை நம் உள்ளங்களில் ஊற்றப்படுகிறது. இதன் மூலம் தேவனுடைய செல்வங்களுக்கு சொந்தக்காரர்- களாகிறோம். மூன்றாவதாக அந்த அன்பு தின வாழ்வின் கட்டுப்பாட்டிலும், பண்பின் பயிற்சியிலும் வெளிப்படுகிறது. இந்த அன்பு தேவனிடத்திலிருந்து வரும்போது இது நம்மூலம் மற்றவர்களுக்கும் உரியதாகிறது. முதல் தடவையாக நான் நயாகரா நீர் வீழ்ச்சியைக் கண்டபொழுது அந்த தண்ணீரின் பெருக்கத்தைக் கண்டு ஊற்றப்பட்ட தேவ அன்பிற்கு அதை ஒப்பிட்டேன். நான் "உண்மையான நோக்கம்

ஊற்றப்பட்டதிலே நிறைவேறுவதில்லை. அந்த தண்ணீர் ஒளி, வெப்பம், சக்தி போன்ற ஆற்றல்களாக மாற்றப்பட்டு வட அமெரிக்காவில் வசிக்கும் அநேக மக்களுக்கு பயன்படும் பொழுது அதன் நோக்கம் நிறைவேறுகிறது."

நம்மைப் பொறுத்தமட்டிலும் இது உண்மையே. நாம் மறுபடியும் பிறந்தபொழுது தேவ அன்பைப் பெற்றுக் கொள்கிறோம்: இது ஆவியானவரால் நம்மேல் ஊற்றப்படுகிறது. ஆனால் இது கட்டுப்பாட்டின் மூலமும், பயிற்சியின் மூலமும் பிறருக்கு வெளிப்படும் பொழுது இதன் நோக்கம் நிறைவேறுகிறது.

## அத்தியாயம் பத்து

# பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது எவ்வாறு

நாம் பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை விட்டுக் கொடுத்து, அவருடைய முழுமையைப் பெற்று அதன் மூலம் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெறுவது எப்படி? பரிசுத்த ஆவியானவரின் முழுமையைப் பெற்றுக் கொள்ள நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளை பல வேத வசனங்கள் மூலமாகக் காண்போம். தேவன் நாம் சில முக்கியமான காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுங்கள். அப்போஸ்தலர் 2:37,38ல் பேதுருவின் பெந்தெகொஸ்தே நாளின் செய்தியின் கடைசிப் பகுதி வருகிறது. அது மக்கள் அவருடைய செய்தியை ஏற்றுக் கொண்ட விதத்தைப் பற்றிக் கூறுகிறது.

> **37 இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்.**
>
> **38 பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.**

அங்கு பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள் என்னும் வாக்குத்தத்தம் கிடைக்கிறது. அங்கு நீங்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்னும் இரு நிபந்தனைகள் வருகின்றன. மனந்திரும்புதல் என்றால் உண்மையாகவே நமது பாவமுள்ள முரட்டாட்டமான வழிகளை விட்டுத் திரும்பி, எந்த நிபந்தனையுமின்றி நம்மை தேவனுக்கும் அவருடைய எதிர்பார்த்தலுக்கு ஒப்புக்

கொடுத்தலாகும். ஞானஸ்நானம் பெறுவது என்றால் ஒரு நிபந்தனையை அனுசரிப்பது அல்லது கட்டளைக்குக் கீழ்ப்படிவதாகும். இதன் மூலம் நாம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் நம்மை இணைத்துக் கொள்கிறோம். ஆகவே ஆவியானவரின் வரத்தைப் பெற்றுக் கொள்ள நாம் மனந்திரும்ப வேண்டும்; நாம் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.

## தேவனிடம் கேளுங்கள்

லூக்கா **11:9-13**ல் இயேசு இவ்வாறு கூறுகிறார்:

**9 மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.**

**10 ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.**

**11 உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?**

**12 அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?**

**13 பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.**

இது ஓர் எளிய கட்டளை என்றாலும் முக்கியமான கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு இயேசு தமது பிள்ளைகள் கேட்டுக் கொள்ளும் போது பிதாவானவர் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைத் தருவார் என்று இயேசு கூறுகிறார். "நான் பரிசுத்த ஆவியானவர் வேண்டும்" என்று கேட்கத் தேவையில்லை என கிறிஸ்தவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அது வேதத்திற்கு முரண்பாடானது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இயேசு தமது சீஷர்களுடன் உரையாடியபொழுது அவர் சொன்னார் "நீங்கள் ஆவியானவரைக் கேட்டுக் கொண்டால் பிதாவானவர் அவரைத் தருவார்" என்றார். வேறொரு இடத்தில் இயேசு தாம் பிதாவிடம் சென்று தமது சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்வதாகக் கூறுகிறார்.

நான் கருதுவது என்னவென்றால் இயேசு பிதாவைக் கேட்க வேண்டுமானால் நாம் கேட்பதினால் எந்தத் தீங்கும் விளையாது என்பதேயாகும். ஆகவே மூன்றாவது நிபந்தனை: கேட்கவேண்டும்.

## தாகமுள்ளவனாயிரு

யோவான் 7:37-39 வரையில் உள்ள வசனங்களில் இன்னும் மூன்று எளிதான கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

> ***37*** ***பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்.***
>
> ***38*** ***வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.***
>
> ***39*** ***தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.***

இப்பகுதியில் இயேசு விசுவாசிகள் பெற்றுக் கொள்ளப்போகிற பரிசுத்த ஆவியானவரைப் பற்றி குறிப்பிடுகிறார் என்பதை இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளர் தெளிவுபடுத்துகிறார். அதை மனதிற்கொண்டு இயேசு சொன்னதைக் கவனிப்போம் "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்." இது எளிதான ஆனால் முக்கியமாய்க் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று நிபந்தனைகள்.

முதலாவதாக நாம் தாகமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். தங்களுக்குத் தேவையில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கும் மக்கள் பேரில் தேவன் தமது ஆசீர்வாதங்களைத் திணிக்கப் போவது இல்லை. அநேகர் ஆவியானவரின் முழுமையைப் பெற்றுக் கொள்ளாததின் காரணம் அவர்கள் தாகமற்றவர்களாய் இருப்பதே. ஏற்கெனவே உங்களுக்குத் தேவையானது அனைத்தும் இருப்பதாக நீங்கள் நினைக்கும் பொழுது இன்னும் அதிகம் கொடுத்து தேவன் ஏன் உங்களைத் துயரப்படுத்த வேண்டும். ஒருவேளை உங்களுக்கு ஏற்கெனவே உள்ளதை நீங்கள் நல்ல முறையில் பயன் படுத்தாமலிருக்கலாம். இப்படியிருக்கும் பொழுது தேவன் மேலும் கொடுத்தால், அதைப் பயன்படுத்தாத குற்றத்திற்குள்ளாவீர்கள். தாகமாயிருப்பது மிக முக்கியமான நிபந்தனையாகும். தாகமாயிருத்தல் என்றால் உங்களுக்கு ஒன்று அத்தியாவசியமானது அது உங்களிடம் தற்சமயம் இல்லை என்பதை ஆழ்ந்து உணர்வதாகும். சொல்லப்போனால்

தாகம் என்பது சரீரத்தின் மிகுந்த வலிமைவாய்ந்த ஆசையாகும். ஒருவன் மிகுந்த தாகமாயிருக்கும் பொழுது சாப்பிடுவதைக் குறித்தோ அன்றி வேறு எந்தக்காரியம் செய்வதைக் குறித்தோ கவலைகொள்ளமாட்டான். அவ்வேளை அவனுக்குத் தேவையானதெல்லாம் ஒரு பானமே. நான் மூன்று ஆண்டுகளை வட ஆப்பிரிக்காவின் காடுகளிலே செலவிட்டிருக்கிறேன். ஆகவே தாகமாயிருப்பது என்றால் என்ன என்று எனக்கு நன்கு தெரியும். ஒருவன் தாகமாயிருக்கும் பொழுது பேசமாட்டான், வியாக்கியானம் செய்யமாட்டான், பேரம்பேச மாட்டான்; தண்ணீர் இருக்கும் இடத்திற்கு விரைந்து செல்வான். இதைத்தான் இயேசு நீ தாகமுடையவனாய் இருக்கவேண்டும் என்றார்.

## இயேசுவிடம் வாருங்கள்

நீ தாகமுடையவனாய் இருப்பாயென்றால், என்னிடம் வா என்று அவர் சொன்னார். ஆகவே இரண்டாவது நிபந்தனை இயேசுவிடம் வர வேண்டும். இயேசுவே பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானப்படுத்துகிறவர். உனக்கு ஞானஸ்நானம் வேண்டுமென்றால் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானப்படுத்துகிறவரிடத்தில் வரவேண்டும். இயேசுவைத் தவிர வேறு எந்த மனிதனும் பரிசுத்த ஆவியானவரில் உங்களை ஞானஸ்நானப்படுத்த முடியாது.

## பானம் பண்ணு

பின்பு அவர் நீ 'பானம்பண்ண' வேண்டும் என்றார். இது மிகவும் எளியதாகையால் அநேகர் இதைவிட்டு விடுகின்றனர். பருகுவது என்பது உனக்குள்ளே தீர்மானத்தின் அடிப்படையில் சரீரப்பிரகாரமாக ஏற்றுக் கொள்வதாகும். இதுவும் தூய ஆவியானவரைப் பெற்றுக் கொள்வதின் ஒரு பகுதியாக இருக்கிறது. தாகமாயிருத்தல், இயேசுவிடம் வருதல், பருகுதல் ஆகியவை முக்கியமானவை. "சரி தேவன் செய்ய விரும்பினால் செய்யட்டும்" என்பது முற்றிலும் ஆர்வமற்ற காரியம். அது பருகுவதல்ல. பருகுவது என்றால் உனக்குள்ளே ஏற்றுக் கொள்வது என்று அர்த்தமாகும்.

## ஒப்புக்கொடு

முன்பே கூறிய காரியங்களில் சரீர சம்பந்தப்பட்ட இரண்டு முக்கியமான காரியங்களைக் கூற விரும்புகிறேன். முதலாவது நமது சரீரங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கும்படி தேவனால் உண்டாக்கப்பட்டவை. 1 கொரி. 6:19 சொல்கிறது:

*19 உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய*

***ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?***

இரண்டாவதாக நாம் நமது சரீரத்தின் அவயவங்களை அவருடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். இது நமது பொறுப்பு. ரோமர் 6:13 சொல்கிறது.

***[13]நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர் களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.***

வேதத்திலிருந்த நமது சரீரத்தின் உறுப்புகளை தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும், தத்தம் செய்ய வேண்டும், விட்டுக் கொடுக்க வேண்டுமென்று பல வசனங்கள் வருகின்றன. ஓர் அவயவம் சிறப்பாக தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டும்: அது நமது நாவு. யாக்கோபு இதை சிறப்பாக தமது நிருபத்தில் கூறுகிறார்.

***[8]யாக்கோபு 3:8 "நாவை அடக்க (கட்டுப்படுத்த) ஒரு மனுஷனாலும் கூடாது;. . ." என்கிறார்.***

நமது உடலுறுப்புகளைக் கட்டுப்படுத்த நமக்கு தேவனிடமிருந்து உதவி தேவை. நமது நாவைப் பொறுத்தமட்டில் சிறப்பு உதவி தேவை. பரிசுத்த ஆவியானவர் தமது முழுமையுடன் வரும்பொழுது அவரால் பாதிப்பைப் பெறும், கட்டுப்படுத்தப்படும், தேவமகிமைக்குப் பயன்படுத்தப்படும் முதல் உறுப்பு நாவு. நீ ஆராய்ந்து பார்த்தால் புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு தடவை மக்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும் பொழுது, ஆவியின் முழுமையைப் பெறும்பொழுது முதலாவது பலன் நாவினின்று வெளிப்படும் வார்த்தைகளாகும். அவர்கள் பேசினார்கள், அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள், அவர்கள் துதித்தார்கள், அவர்கள் பாடினார்கள், அவர்கள் நவமான மொழியில் பேசினார்கள்—எங்கும் வாய் செயல்பாட்டில் இருப்பதைக் காண்கிறோம். நீ இயேசுவிடம் வரும்பொழுது பருகும்பொழுது நிரம்பி வழிவது உன் வாயின் மூலம் வரும் வார்த்தைகள். இந்தக்குறிப்பு இயேசுவால் மிகத் தெளிவாக, மத்தேயு 12:34ல் "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்று கூறப்பட்டுள்ளது.

உன் இருதயம் நிரம்பி வழிய ஆரம்பிக்கும்பொழுது வழிகின்ற இடம் பேசும் உன் வாயாகும். போதுமானதை மட்டுமல்ல நிரம்பி வழிவதை தேவன் விரும்புகிறார். "உனக்குள்ளிருந்து ஜீவநதிகள் புறப்பட்டு ஓடும்"

என்று இயேசு கூறியதை மறந்து போகாதே. இதுவே தேவனுடைய இறுதி நோக்கம்.

## தேவனின் எதிர்பார்ப்பு

பரிசுத்த ஆவியின் முழுமையைப் பெற்றுக் கொள்வதற்கு நான் வேதத்தில் கண்ட ஏழு நிபந்தனைகளைக் கீழே தருகிறேன்.

1. மனந்திரும்பு.
2. ஞானஸ்நானம் பெற்றுக் கொள்.
3. தேவனிடம் கேள்.
4. தாகமுள்ளவனாயிரு.
5. ஞானஸ்நானப்படுத்துபவராகிய இயேசுவிடம் வா.
6. உன்னில் பெற்றுக் கொள்ள பானம்பண்ணு.
7. உன் சரீரத்தை ஆவியானவரின் ஆலயமாக ஒப்புக்கொடு. உன் உடலுறுப்புகளை நீதியின் அவயவமாக ஒப்புக்கொடு.

ஒரு வேளை இவையனைத்தையும் எப்படிச் செய்வது என நீ அதிசயப்படலாம். நான் உனக்கு விளக்கியவற்றைக் கேட்கக் கூடிய மாதிரி ஜெபம் ஒன்றை உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அதை மறுபடியும் மறுபடியும் செய். அது உன் ஜெபமாயிருக்குமாயின் கர்த்தரிடம் அந்த ஜெபத்தை சத்தமாய் ஏறெடு.

***கர்த்தராகிய இயேசுவே, நான் உம்முடைய பரிசுத்த ஆவியானவருக்குத் தாகமாயிருக்கிறேன். நான் என் சரீரத்தை உமது ஆலயமாக ஒப்புக்கொடுக்கிறேன். என் உடல் உறுப்புகளை சிறப்பாக, என்னால் கட்டுப்படுத்த முடியாத என் நாவை நீதியின் அவயவமாகவும் ஒப்புக்கொடுக்கிறேன். என்னை நிரப்பும் நான் ஜெபிக்கிறேன். உம்முடைய பரிசுத்த ஆவியானவர் என் உதடுகள் மூலமாய் துதியாகவும் வழிபாடாகவும் வெளிப்படட்டும். ஆமென்.***

இந்த ஜெபத்தை உண்மையாக நீ செய்திருந்தால் அது கேட்கப்பட்டிருக்கும். அதன் பலன் வந்து கொண்டிருக்கிறது. நீ பெற்றுக் கொள்ளப் போகும் ஆவியின் நிறைவு உன்னை வியப்பில் ஆழ்த்தும்.

# தேவனின் மருந்து புட்டி

# தேவனின் மருந்து புட்டி

தேவனுடைய அற்புதமான மருந்து புட்டியை நான் எவ்வாறு கண்டுபிடித்தேன் என்று என் சொந்த அனுபவத்திலிருந்து சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.

இது இரண்டாம் உலக் யுத்தத்தின் ஆரம்ப ஆண்டுகளில் நடந்தது. நான் பிரிட்டன் நாட்டைச் சேர்ந்தவன். இரண்டாவது மகா யுத்தத்தில் போது ஐந்தரை ஆண்டுகள் நான் பிரிட்டிஷ் இராணுவத்தில் ஓர் ஆர்டலியாக (அமெரிக்க வழக்காற்றில் இது ஒரு மருத்துவ உதவியாளர் எனப்படும்) பணியாற்றிய காலங்களில் இதைக் கண்டு பிடித்தேன். இதில் மூன்று ஆண்டு காலத்தை நான் வட ஆப்பிரிக்காவின் பாலைவனங்களிலும், முதலாவதாக எகிப்திலும், லிபியாவிலும் பின்பு சூடான் பகுதிகளிலும் செலவிட்டேன்.

மற்ற எல்லாவற்றையும் விட இந்தப் பாலைவனங்களில் மணலையும், சூரியனையும், அதிகமாய் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியதாயிருந்தது. ஏறக்குறைய ஒரு முழு ஆண்டையும் நான் பாலைவனத்திலேயே ஓர் சாலையைக் கூட காணாமல் கழித்தேன். நாங்கள் மணலில் பயணம் செய்தோம். மணலிலேயே உறங்கினோம். யாவையும் பாலைவன மணலிலேயே செய்ததினால் அடிக்கடி மணலையே தின்பதைப் போன்ற உணர்ச்சி ஏற்படுவதுண்டு. மணல் சூரிய வெப்பத்தினால் மிகவும் சூடாவதினால் சிலருடைய சரீரம் இந்த வெப்பத்தை தாங்க முடியாமல் பாதிப்பிற்குள்ளானது. அவர்களில் நானும் ஒருவன். இவ்வித பாதிப்பு என் கைகளிலும், கால்களிலும் பிரதானமாக வெளிப்பட்டது. அங்குள்ள சருமத்தில் வெடிப்பு உண்டாயிற்று. இதனால் நான் திறம்பட வேலை செய்ய இயலாதவனானேன். என் துறைக்குப் பொறுப்பாய் இருந்த அதிகாரி என்னை மருத்துவ மனையில் சேர்ப்பதற்கு தயங்கினார். ஏனென்றால் என்னை மருத்துவ மனையில் சேர்த்தால் என்னை இழக்க நேரிடும் என்பது அவருக்குத் தெரியும். இவ்வாறாக பல மாதங்கள் நான் என் இராணுவப் பணியை மிகுந்த சிரமத்துடன் செய்ய வேண்டியதாயிருந்தது. இறுதியில் அவர் என்னை மருத்துவ மனையில் சேர்த்தார். நான் வெவ்வேறான மூன்று அல்லது நான்கு இராணுவ ஆஸ்பத்திரிகளுக்கு மாற்றப்பட்டேன். ஓர் ஆண்டு காலம் மருத்துவ மனையிலேயே இருந்தேன்.

இந்நாட்களில் நான் மத்திய கிழக்கு நாடுகளில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இருந்த பல இராணுவ வீரர்களைச் சந்தித்தேன். இவர்களும் பதினெட்டு மாதங்கள் இவ்விதமான நிலையிலேயே அவதிப்பட்டு மருத்துவ மனையில் இருந்தனர். என்னை முழுவதுமாகப் பரிசோதித்தவர்கள் என் வியாதிக்குப் பல நீண்ட பெயர்களைச் சூட்டினார்கள். ஒவ்வொரு பெயரும், மற்ற பெயரைவிட நீளமாய் இருந்தது. கடைசியில் இது தீராத எக்ஸிமா என்னும் சரும நோய் என கணிக்கப்பட்டது. நான் மிகச் சிறந்த சிகிச்சையைப் பெற்றும் சற்றும் குணமடைந்ததாகத் தெரியவில்லை. இங்கு நான் என்னைப் போன்று சிகிச்சையினால் பலன் பெறாத மற்ற இராணுவ வீரர்களையும் கண்டேன். வெப்பத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு, அவதிப்பட்ட கொடிய நிலையில் இருந்த அவர்கள் தென்ஆப்பிரிக்காவிற்கு அனுப்பப்பட்டனர். என் நிலை அவ்வளவு பரிதாபமானதாக இல்லை. இராணுவத்தில் நான் செய்த பணி அவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படாததினால் என்னை தென்னாப்பிரிக்காவிற்கு அனுப்பவில்லை. ஆகவே நான் படுக்கையில் படுத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் என் வருங்காலம் எப்படியிருக்குமோ? என்ற வியப்பில் நாட்களைக் கடத்தி வந்தேன். ஓர் ஆண்டு தொடர்ந்து மருத்துவ மனையில் செலவிட்டது ஒரு யுகத்தையே அங்கு கழித்தது போல இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் புதிதாக கர்த்தருடன் சொந்த உறவிற்குள் வந்தேன்: மறுபடியும் பிறந்தவனாக ஆவியானவரின் நிறைவைப் பெற்றேன். என்றாலும் வேதத்தின் அறிவு அதிகமில்லாத அறிவிலியாகவே இருந்தேன். என்னிடம் ஒரு வேதப்புத்தகம் இருந்தது. மெய்யாகவே உதவியை நாடிச் செல்ல தேவனிடமும், வேதத்தினிடமும் செல்வதை விட வேறு வழி புலப்படவில்லை. என்னுடைய சரீர நிலைமையைப் பற்றி வேதம் என்ன கூறுகிறது என்பதனை தீவிரமாய் ஆராய்ந்து அறிய முற்பட்டேன். எனக்கு சகய தேவைப்பட்டது எனத் தெரிந்ததே தவிர அதைப்பற்றி வேதம் என்ன சொல்கிறது என்று தெரியவில்லை. வேறு ஒன்றும் செய்ய இயலாத நிலையில் போதிய நேரமும், வேதமும் என்னிடம் இருந்ததால் அதைப் படிக்க ஆரம்பித்தேன். என் சரீர சுகத்திற்காக முற்றிலும் நான் தேவனை நம்பக்கூடுமா? நம்பக்கூடும் என்னும் பகுதி இருக்கிறதா என ஆராய முற்பட்டேன். ஒருநாள் நீதிமொழிகளின் புத்தகத்தில் சில வசனங்களைப் படித்தேன். அப்பகுதியை "தேவனுடைய மருந்து புட்டி" என அழைக்கலானேன். இந்தப் பகுதியை கிங் ஜேம்ஸ் மொழி பெயர்ப்பில் தெளிவாய் கூறப்பட்டிருப்பதைக் கண்டேன். நீதிமொழிகள் 4:20–22

**20 என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்.**

**21 அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை**

***உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்.***

***22 அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.***

"உடலுக்கெல்லாம் ஆரோக்கியமாம்" என்னும் வாசகம் என்னை ஈர்த்தது. உடலுக்கெல்லாம் என்றது என் சரீரம் முழுவதையும் குறிக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டேன் (அநேக நவீன மொழி பெயர்ப்புகள் இப்படித்தான் மொழி பெயர்க்கின்றன.) நான் சிந்திக்கலானேன், "ஆரோக்கியம்! சரீரம் முழுவதிலும் ஆரோக்கியம் உண்டானால், நோய்க்கு அங்கு இடமில்லை. இதைத்தான் தேவன் வாக்களிக்கின்றார்."

வேதத்தின் மார்ஜின் பகுதியில் ஆரோக்கியம் என்பதற்கு வேறு மொழி பெயர்ப்பு "மருந்து" என்று குறிக்கப்பட்டிருந்தது. என் உடல் நிலைக்கு இது மிகுந்த பொருத்தமுடையதாய் இருந்தது. என்னுடைய சரீரத்திற்கெல்லாம் ஆரோக்கியத்தினை தரக்கூடிய மருந்தினை தேவன் தருவதாக வாக்களித்திருப்பதைக் கண்டேன். இப்பொழுது எனக்குத் தேவையானது இதுவே என சிந்திக்கலானேன். ஆகவே அந்த வசனங்களை எடுத்து மீண்டும் மீண்டும் படித்தேன். இந்த ஈவு அவருடைய வார்த்தைகளினால் எனக்கு கிடைப்பதாய் இருந்தது.

இருபதாம் வசனம் "என் வார்த்தைகளைக் கவனி: என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்" என்று சொல்கிறது. பின்பு இருபத்திரெண்டாம் வசனத்தில் "அவைகளை" (தேவனுடைய வார்த்தைகளையும், வாசகங்களையும்) கண்டு பிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும் அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமாம் என்றுள்ளது. காரியம் எதுவாயிருந்தாலும் இவ்வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகள்.

பின்பு "இவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு" என்னும் பதத்தைப் பார்த்தேன். இது மேல்வாரியாய் வாசிப்பதை விட ஆழ்ந்த ஓர் அனுபவம். தேவன் வழங்குபவைகளை பெற்றுக் கொள்வது எவ்வாறு? என்னும் எதிர்பார்ப்புடன் நாம் வேதத்தைப் படிக்க வேண்டும்.

என்னுடைய நிலைக்கு மருத்துவ ரீதியில் பெற்றுக் கொள்ளக்கூடிய உதவி அனைத்தையும் பெற்றும் ஒரு பலனும் இல்லாமற் போயிற்று. ஆகவே நான் ஓர் தீர்மானம் எடுத்தேன்.

நான் தேவனுடைய வார்த்தையை எனக்குத் தேவையான மருந்தாக எடுத்துக் கொள்ளத் தீர்மானித்தேன். இத்தீர்மானம் வாழ்க்கையில் மிக முக்கியமானதோர் தீர்மானம். அந்த தீர்மானத்தைச் செய்த பொழுது கர்த்தரே என்னுடன் தெளிவாக பேசுவதாகத் தென்பட்டது. அவர்

சொல்வதை உரத்த குரலில் கேட்காவிட்டாலும் "ஒரு மருத்துவர் ஒரு நபருக்கு மருந்து கொடுக்கும் பொழுது அதனை எப்படி சாப்பிடுவது என்பதை அந்த புட்டியிலே எழுதியிருக்கும்" என்றார். அதற்குப் பின்பு "இது என்னுடைய மருந்து புட்டி அதைச் சாப்பிடும் விதம் அதில் எழுதப்பட்டுள்ளது அவைகளை நீ கற்றுக் கொள்" என்றார்.

நான் சாப்பிடச் சொல்லும் ஒரு மருந்தினால் பலன் உண்டாயிருக்க வேண்டுமானால் அதைச் சாப்பிடச் சொன்ன விதத்தில் சாப்பிட வேண்டும். இல்லை என்றால் அதற்குரிய பலனை மருத்துவரால் உறுதியாகக் கூற முடியாது என்பதை தேவன் எனக்கு நினைவு படுத்தினார். மருத்துவ ஆர்லியாக இருந்த எனக்கு இது நன்கு புரிந்தது.

இதற்குப் பின்பு இந்த மருத்துப் புட்டியில் உள்ள மருந்தை எம்முறையில் சாப்பிடவேண்டுமென கற்றுக்கொள்ள முற்பட்டேன். சரீரத்திற்கு தேவனுடைய வார்த்தையை மருந்தாக எடுத்துக் கொள்வதில் நான்கு குறிப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன. கீழ்க்கூரியவைகள் அந்த நான்கு முறைகள்:

1. என் வார்த்தைகளுக்கு செவி சாய்,
2. என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்,
3. அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக,
4. அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக் கொள்.

இந்த மருந்தின் முழுப் பலனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் இந்த நான்கு குறிப்புகளையும் பின்பற்ற வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன். இதை தொடர்ந்த காரியங்களை என்னால் விளக்க முடியாது. எனினும் என் தலையை தினமும் சாப்பாட்டிற்கு பின்பு மூன்று தடவை தாழ்த்தி வேதத்தைப் படிக்கலானேன். பொதுவாக மக்கள் சாப்பாட்டிற்கு பின்னர் தான் மருந்து சாப்பிடுவார்கள். நான் "தேவனே இந்த உம்முடைய வார்த்தைகள் என் உடலுக்கு மருந்து என்றீர். இப்பொழுது இயேசுவின் நாமத்தில் நான் அதை மருந்தாகக் கருதி எடுக்கிறேன்." சில மாதங்களுக்குள் இந்த தேவனுடைய மருந்து தேவன் வாக்களித்த பலனைத் தர ஆரம்பித்தது. என் சரீரத்தில் எல்லா பகுதியிலும் ஆரோக்கியம் அடைய ஆரம்பித்தேன்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பாக இந்த என் அனுபவத்தை ஒரு ஒலிநாடாவில் பதிவு செய்தேன். சமீபத்தில் இங்கிலாந்து நாட்டில் பாகிஸ்தானைச் சார்ந்த ஒரு வாலிபனை இலண்டனில் சந்தித்தேன். அவர் தாம் இருபது ஆண்டுகளாக எக்ஸிமாவினால் அவதிப்பட்டவர் என்றும், இச்சமயம் கிறிஸ்தவராக மாறியுள்ளார் என்றும் சொன்னார். ஒரு நாளில் என் ஒலிநாடாவைக் கேட்ட பொழுது நான் செய்த மாதிரி செய்யத்

தீர்மானித்தாராம். அவரைப் பொருத்தமட்டில் அவருக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களில் பூரண சுகம் கிடைத்து விட்டதாம். ஆகவே இந்த மருந்து தான் அளிப்பதாகக் கூறும் சுகத்தை அளிக்கிறது என்பதே இதன் சாட்சி.

இப்பொழுது தேவனுடைய மருந்து புட்டியை பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளை நான் கற்றுக் கொண்ட படியே உங்களுக்கு கற்றுத் தர விரும்புகிறேன்.

## என் வார்த்தைகளுக்கு செவி சாய்

இந்த நான்கு வழிகளில், முதலாவது "என் வார்த்தைகளுக்கு செவிசாய்" என்பதாகும். தேவன் நம்மிடத்தில் பேசும் பொழுது நாம் அவர் சொல்வதற்கு முழு கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். சர்வ வல்லமையுள்ள தேவனே நம்மிடம் பேச முற்படும்பொழுது அதற்கு நாம் மதிப்புடனே முழு கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தி சொல்வதற்கு அவசியமில்லை. ஆனால் இன்று அநேக மக்கள் இப்படி கருதுவதில்லை. தொடர்பு துறையில் வானொலி, தொலைக்காட்சி போன்ற பல சாதனங்கள் உள்ளன. நமது கலாச்சாரம் நம்மை இரண்டு காரியங்களை ஒரே நேரத்தில் செய்யும்படி பழக்குவித்திருக்கிறது. "குறைவுபட்ட கவனம்" என்று அழைக்கப்படும் நோயினால் நாம் அனைவரும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். நான் சில வீடுகளுக்குச் சென்ற பொழுது சில வாலிபர்கள் வீட்டுப்பாடத்தைச் செய்து கொண்டே தொலைக்காட்சியையும் காண்பதைக் கண்டிருக்கிறேன். இவர்கள் இவ்விரண்டிலுமே கவனம் செலுத்துவதில்லை.

இக்காலத்தில் அநேகம் இடங்களில் பின்னணி இசை ஒலித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். உரையாடலில் ஈடுபட்டு பேசிக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு காதினால் இந்தப் பின்னணி இசையையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தமட்டில் இந்தக் காரியம் என்னைச் சோர்வடையச் செய்கிறது. ஒரு காரியத்தை எடுத்தால் அதில் முழு கவனத்தையும் செலுத்தி அதில் ஈடுபாடு கொள்ளக் கூடியவன் நான். இது தேவன் எனக்குக் கற்றுத் தந்தது. இதை நான் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. நான் உரையாடலில் ஈடுபட்டிருந்தால் என்னுடன் பேசுபவருக்கு என் முழு கவனத்தையும் செலுத்த விரும்புகிறேன். இசையைக் கேட்டால் முழு கவனத்துடன் இசையைக் கேட்பவன் நான். நான் இசையை நேசிப்பவன். அதைக் கேட்கும் பொழுது என் முழு கவனத்தோடு கேட்கிறேன்.

வேதம் முழுவதிலும் தேவனுக்கு செவி கொடுப்பதே சுகத்தைப் பெற்றுக் கொள்ளும் திறவுகோல் என்பதைக் காணலாம். இதை நான்

ளிதாக சுகம் பெற்றுக் கொள்வதற்கான திறவு கோல் "கேட்பது" என்று சொல்ல விரும்புகிறேன். அது எதைக் கேட்கிறோம் என்பதையும், எப்படிக் கேட்கிறோம் என்பதையும் பொறுத்துள்ளது. எதைக் கேட்கிறோம் என்பதைக் குறித்து கவனமாயிருங்கள் என்று இயேசு தமது சீடர்களிடம் கூறியுள்ளார். எப்படி அதைக் கேட்கின்றோம் என்பதையும் அவர் கூறியுள்ளார். இவ்விரண்டையும் நாம் மனதிற்கொள்ள வேண்டும். எதைக் காதினால் கேட்கிறோம் என்பதையும், எப்படி அதைக் கேட்கிறோம் என்பதும் முக்கியமாயுள்ளது.

பழைய ஏற்பாட்டிலுள்ள சுகத்தைப் பெற்றுக் கொள்வதுடன் சம்பந்தப்பட்ட வேறொரு பகுதியும் இதையே வலியுறுத்திக் கூறுகிறது. யாத்திராகமம் 15:26ல் கர்த்தர் மோசேயின் மூலம் இஸ்ரவேலருக்கு இவ்வாறு கூறியுள்ளார்.

*26 நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்.*

இறுதி வாக்கியத்தைக் கவனியுங்கள். இது இந்த மருந்து புட்டியுடன் சம்பந்தப்பட்டுள்ளது: "மருந்து புட்டியைக் கொடுப்பவரும், உன்னுடைய மருத்துவரும் நானே" நவீன கால எபிரெயத்தின் படி நானே உன் கர்த்தராகிய குடும்ப வைத்தியர் என்று இதனை மொழி பெயர்க்கலாம். தேவன் தம்முடைய மக்களைப் பார்த்து "நான் உங்களுடைய மருத்துவராய் இருக்க விரும்புகிறேன். அதாவது சரீரத்திற்கு மருத்துவராக." ஆனால் அதற்கு நிபந்தனைகள் உண்டு. அந்த நிபந்தனைகளை அவர் விளக்குகிறார்.

முதலாவது நிபந்தனை "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்கவேண்டும்" இது பிரதான நிபந்தனை. இது நாம் செவி சாய்ப்பதைப் பொருத்த காரியம். எபிரெயத்தில் கவனமாய் கேட்பது என்பது செவிசாய்ப்பதை வலியுறுத்திக் கூறுவதாகும். எல்லா முக்கியத்துவமும் கேட்பதிலேயே உள்ளது. இதனை "நீ செவிசாய்க்கவே செவி சாய்" என்று மொழி பெயர்க்கலாம்.

என் சரீர சுகத்தை நான் நாடிய பொழுது இந்த வசனம் நீதிமொழிகள் 20-22ல் உள்ள வசனத்துடன் இணைத்தே எனக்கு கொடுக்கப்பட்டது. "செவி சாய்க்கவே சாய்த்தல்" என்பதின் அர்த்தம் என்ன? என்பதினை நான் என்னையே கேட்கலானேன். தேவனே இதற்கு பதிலளித்தது போல்

இருந்தது. அவர் "உனக்கு வலது காது, இடது காது என இரண்டு காதுகள் உள்ளன. செவிசாய்க்கவே சாய்த்தல் என்பதின் அர்த்தம் நீ உன் வலது, இடது காதுகளாகிய இரு காதுகளுடன் நான் சொல்வதை கேட்பதாகும் என்று பொருள். உன் வலது காதினால் நான் சொல்வதை கேட்டு இடது காதினை வேறு எதையாவது கேட்கத் திருப்புவாயானால் அதன் பலன் குழப்பமாகவே இருக்கும்."

பழுது படாத, கூர்மையான கவனத்தை தேவன் கூறுவதற்கு செலுத்த வேண்டும். இதுவே தேவனுடைய மருந்து புட்டியின் பிரதான அறிவுரை. நாம் எதைக் கேட்கிறோம் என்பதும், எப்படிக் கேட்கிறோம் என்பதும் முக்கியமாய் உள்ளது. இது சுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கான திறவுகோல் மட்டுமன்று. இது விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ள உதவும் திறவுகோலாகும். விசுவாசமும், சுகமும் இணைந்த காரியங்களே. மருந்து புட்டியின் பலனை, தேவன் அருளும் சுகத்தை விசுவாசத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்கிறோம்.

ஆஸ்பத்திரியில் இருந்த நீண்ட காலத்தில் எனக்கு மிகவும் பிடித்தமான இன்னொரு வசனம் ரோமர் 10:17 ஆகும்.

> [17] ***ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.***

அங்கு படுத்திருந்த நிலையில், "எனக்கு விசுவாசம் இருந்தால் தேவன் என்னை குணப்படுத்துவார்" என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அதைத் தொடர்ந்து உடனே "எனக்குத் தான் விசுவாசம் இல்லை" என்று சொன்னதும் ஜான் பனியனுடைய மோட்ச பிரயாணத்தில் வரும் சோர்வின் உழையான சேற்றில் இருப்பதைப் போல் உணர்ந்தேன்.

ஒரு நாள் வேதத்தை வாசித்த பொழுது என் கண்கள் ரோமர் 10:17ல் பதிந்தது. "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." இதில் இரண்டு வார்த்தைகள் மேலோங்கி நின்றன. விசுவாசம் வருகிறது என்பதாகும் வேறு வார்த்தைகளில் சொன்னால் நீங்கள் சோர்வடையத் தேவையில்லை. ஒருவேளை தற்பொழுது விசுவாசமில்லாமல் இருக்கலாம். ஆனால் விசுவாசம் வருகிறது. அது இல்லை என்றால் அதை நீ பெற்றுக் கொள்ள முடியும்.

விசுவாசம் எப்படி வருகிறது என்பதைக் காண முற்பட்டேன். அது சொல்கிறது. "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."

மீண்டும் நீதிமொழிகள் 4:20-22ன்படி என் கவனம் தேவனுடைய வசனத்தின் பேரிலே சென்றது. அந்த வசனத்தை ஆராய ஆரம்பித்தேன். அதுவே அதன் ஆரம்பம். தேவனுடைய வசனத்தைக் கவனமாய் கேட்க ஆரம்பிக்கும் பொழுது அந்தக் கேள்வியே தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் திறமையைத் தருகிறது. அப்படி செவி சாய்ப்பது நமது விசுவாசத்தை வளர்க்கிறது. தேவனுடைய வசனத்தை உற்று நோக்கும் பொழுது நாம் கேட்க ஆரம்பிக்கிறோம். அதைத் தொடர்ந்து கேட்கும் பொழுது விசுவாசம் உண்டாகிறது. எல்லாமே நாம் தேவனுடைய வார்த்தையை எப்படி அணுகுகிறோம் என்பதைப் பொறுத்தேயுள்ளது. குறைவற்ற கவனத்துடன் வசனத்தைக் கேட்கின்றோமா? இரு காதுகளைக் கொண்டு கேட்கின்றோமா? நம்முடைய நோக்கமெல்லாம் வசனத்தைச் சுற்றியே உள்ளதா? தேவன் சொல்வதைக் கேட்கக் கூடிய நிலையில் ஆவிக்குரிய பிரகாரமாகவும், மனோ ரீதியாகவும் நாம் பக்குவப்படுத்தப் பட்டிருக்கிறோமா?

அநேக மக்கள் வேதத்தைப் படிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தேவன் சொல்வதைக் கேட்பதில்லை. மற்ற காரியங்களில் அவர்கள் அக்கறைகொண்டுள்ளதால் தங்களுடைய எண்ணமெல்லாம் அரசியல் நிலைமையைப் பற்றியும், வானிலை எப்படியிருக்கப் போகின்றதோ என்பதைப் பற்றியும், வாடகையை எப்படிக் கட்டுவது என்பதைப் பற்றியும் கவலை கொள்வதாய் உள்ளது. அவர்களின் மனங்களில் பல வித சக்திகள் செயல்படுகின்றன. ஆகவே தேவனைக் கேட்கும், ஆற்றல் அற்றவர்களாய் இருக்கின்றனர். கேட்கும் சக்தியை வளர்த்துக் கொள்ளும் பொழுது கேட்பதினால் விசுவாசமும் வளர ஆரம்பிக்கும். தேவனுடைய வார்த்தையை எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து எடுத்துக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்து நாம் அவருக்கு செவி சாய்ப்பது உள்ளது. இப்படி செவி சாய்ப்பதின் மூலம் விசுவாசம் வருகிறது. தொடர்ந்து தேவனுடைய வாக்கியத்தை நோக்கியே செல்லுகின்றவர்களாக நாம் அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆகவே தேவனுடைய மருந்து புட்டியில் முதலாவது கவனிக்க வேண்டியது என் வார்த்தைகளுக்கு கவனம் செலுத்து என்பதாகும்.

## என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்

"உன் செவியைசாய்" என்று வரும் இரண்டாம் முக்கிய அறிவுரையை நான் விளக்கப்போகிறேன்.

செவியைச் சாய்த்தல் என்ன என்பதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். சாய்த்தல் என்றால் கீழே குனிவது என்று பொருள். சரிவான மலையைப் பற்றி பேசும் பொழுது கூட இச்சொல் பயன்படுவது

உண்டு. செவிசாய்த்தல் என்றால் நமது செவியைக் கீழே தாழ்த்துவதாகும். தலையைச் சாய்க்காமல் செவியைச் சாய்க்க முடியாது என்பது சரீரத்தைப் பொறுத்த ஓர் உண்மை. காதைச் சாய்க்கும் போது நாம் தலையையும் சாய்க்க வேண்டியதாகிறது. இதற்கு அர்த்தம் என்ன? இது தாழ்மையைக் குறிக்கிறது. கற்றுக் கொள்ள ஆர்வமுள்ள மனதைக் குறிக்கிறது. இதை நான் அனுபவத்திலிருந்து விளக்குகிறேன்.

ஆஸ்பத்திரியிலே என் பிரச்சனைக்குப் பதிலைத் தேடி வேதத்தைப் படித்த நாட்களில் நான் சுகத்தைப் பற்றியும், ஆசீர்வாதத்தைப் பற்றியும், பொருளாதார ஆசீர்வாதத்தைப் பற்றியும் குறிக்கப்பட்டுள்ள பல வாக்குத்தத்தங்களைக் கண்டேன். நம்மில் அநேகரைப் போல இதைப் புரிந்து கொள்வதற்கு தடையாக என் பின்னணி இருந்தது.

நான் சார்ந்திருந்த கிறிஸ்தவத்தின் பிரிவு மகிழ்ச்சியுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கவில்லை. அதற்கு மாறான கருத்துடையதாயிருந்தது. நான் ஒரு கிறிஸ்தவனாக மாற எண்ணங்கொண்டால் துன்பத்தைச் சகிக்கத் தயாராயிருக்க வேண்டும் எனப் போதிக்கப்பட்டிருந்தேன். நான் துயரத்தைச் சந்திக்க ஆயத்தமற்றவனாய் இருந்ததினாலே நான் ஒருபோதும் கிறிஸ்தவனாக மாறப் போவதில்லை எனத் தீர்மானித்திருந்தேன். ஆனால் தெய்வாதீனமாக அவர் என் வாழ்வில் பிரவேசித்து என்னை மாற்றினார். எனினும் பழைய கொள்கைகள் அனைத்தும் முற்றிலும் மாறவில்லை.

ஆகவே சுகம், ஆரோக்கியம், பெலன், நீண்ட வாழ்வு, பரிபூரண செழுமை போன்றவற்றைப் பற்றிய வாக்குத்தத்தங்களைக் கேட்டபொழுது என் தலையை அசைக்க ஆரம்பித்தேன். என் தலையை அசைத்துக் கொண்டு "இது எங்கே உண்மையாய் இருக்கப்போகிறது. இது உண்மையாய் இருக்காது. மதம் என்றால் இப்படியா இருக்கும்!" என்று கூறலானேன். இப்படி நான் சொல்லிக் கொண்டிருந்த பொழுது 103ம் சங்கீதத்தில் உள்ள

> [3]அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,
>
> [4]உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,
>
> [5]நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது. (3-5) என்னும் வசனத்தைப் படித்தேன்.

இதை வாசித்த பொழுது "இப்படியிருக்கவே முடியாது. தேவன் இப்படியா செய்வார். கிறிஸ்தவர்கள் என்றால் துயரத்தைத் தானே எதிர்பார்க்க வேண்டும்" என்று எண்ணினேன்.

நான் தேவனுடைய குரலைக் கேட்கவில்லையாயினும் அவர் மிகவும் தெளிவாக என்னுடன் பேசினார். அவர் என்னிடம் "யார் மாணவன், யார் ஆசிரியர்? என்று சொல் என்று கேட்டார். இதை நான் கொஞ்சம் யோசித்ததற்கு பின்பு "கர்த்தாவே நீர் ஆசிரியர் நான் மாணவன்" என்றேன். அதற்கு அவர் பதிலாக நல்லது அப்படியானால் நான் உனக்கு கற்றுத் தர என்னை அனுமதிப்பாயா? என்றார். அப்பொழுது நான் தேவன் கற்பிப்பதை ஏற்றுக் கொள்ளாதவனாக இருந்ததை நான் உணர்ந்தேன். என் மனதிலே சில எண்ணங்கள் பதிந்திருந்ததினால் அவைகளுக்கு விரோதமான அவருடைய வார்த்தை எனக்குச் சொல்லும் போது அதை என்னால் கேட்க முடியாதபடி என் மனது தடையாய் இருந்ததை உணர்ந்தேன். தேவன் என்னிடம் "உன் செவியைச் சாய் உன் முரட்டாட்டமான கழுத்தைத் திருப்பு. நான் எவ்வளவு நல்லவன் என்பதையும், நான் உனக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்கள் எவ்வளவு அற்புதமானவை எனவும் நீ புரிந்து கொள்ள வேண்டும். நான் தேவனாய் இருப்பதினாலே என்னை மனித அளவிடினால் அளக்காதே. நான் கிருபையும், சர்வ வல்லமையும் உள்ள தேவன். இரக்கமும் உண்மையும் உள்ள ஆண்டவர்." என்றார்.

இது தேவனுடைய வார்த்தையின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. நாம் எந்த அளவிற்கு தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்கிறோமோ அந்த அளவிற்கு தான் அது நம்மில் செயல்படக் கூடும். நாம் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அது நமக்கு நல்லதொன்றும் செய்ய முடியாது. யாக்கோபு 1:18-21 என்பது ஒரு ஆற்றல் நிறைந்த பகுதி. தேவனைப் பற்றி கூறும் பொழுது அது:

*18 அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்.*

*19 ஆகையால் என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்;*

*20 மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே.*

*21 ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.* என்கிறது.

தேவனுடைய வார்த்தை உன்னை இரட்சிக்கும், சுகப்படுத்தும், எல்லாவிதங்களிலும் அது உன்னை ஆசீர்வதிக்கும். ஆனால் நீ அதைத் தாழ்மையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு நாம் பிடிவாதத்தை

ஒதுக்கி வைக்க வேண்டும். பிடிவாதம் என்பது குழந்தைகளுடன் சம்பந்தப்பட்டது. குறும்பான பிள்ளை என்றால் யார்? "குறும்பான பிள்ளை போதிக்கும் பொழுது அல்லது கண்டிக்கும் பொழுது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஒரு பிள்ளையாகும். நான் ஒன்றைச் சொல்லும் பொழுது என்னுடன் எதிர்த்து வாதாடாதே. அதற்கு இப்படி அர்த்தம் இருக்காது. அது கூடாதது. அது உண்மையானதாக இருக்காது என்று என்னைப் பார்த்துச் சொல்லாதே. நான் உனக்குப் போதிக்கட்டும். இதுவே கேட்கும் செவியின் பண்பாகும்." நாம் தேவனிடத்தில் வந்து "தேவனே நீர் என் ஆசிரியர். நான் உம் மாணவன் நீர் எனக்குப் போதிக்க நான் அனுமதிக்கிறேன். நான் என் செவியைச் சாய்த்து நீர் சொல்வதை கேட்கிறேன்" என்று நாம் சொல்ல வேண்டும். நமது செவியைச் சாய்க்கும் காரியத்தில் நமக்கு வேதத்தை வாசிக்கும் பொழுது அதற்கு விரோதமாக மனதில் பல தடைகள் வருகின்றன என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். அநேகருடைய வாழ்வில் அவர்களின் பின்னணியே அதற்கு காரணமாய் உள்ளது. நம்மில் அநேகர் கடந்த காலத்தில் ஏதாவது ஒரு சபைப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம். இப்பொழுது கூட ஒரு குறிப்பிட்ட சபையில் நாம் சிறந்த பங்கேற்கலாம். சபைபிரிவுகளுக்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு சபையிலும் சில சிறந்த காரியங்களும், சில பெலவீனமான காரியங்களும் இருக்கும். சத்தியத்திற்கு உண்மையான காரியங்களும், சத்தியத்திற்கு முரண்பாடான காரியங்களும் காணப்படலாம். நமது சபையின் பின்னணியில் தேவனை அளக்கும் பொழுது வேதத்தை சபையின் பிரிவு போதிக்கும் அளவிலேயே புரிந்து கொள்கிறோம். இதனால் தேவன் நமக்கு கற்றுத் தரவிருக்கும் ஆசீர்வாதங்களையும், உதவிகளையும் பெரும் அளவில் நாம் இழந்து விடுகிறோம்.

உதாரணமாக சில சபையின் பிரிவுகள் அற்புதத்தின் காலம் கடந்து போயிற்று என்று கருதுகின்றனர். வேதத்தில் இதற்கு நான் ஆதாரத்தை காண்கிறதில்லை. இதற்கு மாறுபாடான அநேக வசனங்களை நான் காண்கிறேன். அற்புதங்களின் காலம் கடந்து போயிற்று என்னும் எண்ணத்துடன் நீ தேவனைச் சந்திக்கும் பொழுது அவர் ஓர் அற்புதத்தை உனக்கு வாக்களிக்கும் போது அதை உன்னால் கேட்க முடியாமற் போகிறது.

சில கிறிஸ்தவக் குழுக்கள், "பரிசுத்தமாய் நீ இருக்க வேண்டுமானால் நீ ஏழையாய் இருக்க வேண்டும்" என்கின்றனர். ஏழையாய் இல்லையாயின் அது பாவம் என்று கூறுவாரும் உண்டு. தேவன் உன்னை செழுமையினால் ஆசீர்வதிக்க விரும்புவாரானால் அதைத் தன் வசனத்தின் மூலம் தெரிவிக்கின்றார். ஆனால் நீ ஏழையாய் இருக்க எண்ணங்கொண்டால் வசனத்தின் அடிப்படையில் அவர் உனக்கு வழங்கவிருக்கும் ஆசீர்வாதத்

பெற்றுக் கொள்ள முடியாது. 3 யோவான் 2ல் வரும் வசனத்தை நாம் இருதயத்தில் பதிக்க வேண்டும்.

*'பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.*

அந்த வசனத்தை நாம் படிக்க ஆரம்பித்தபொழுது அது என்னைக் கீழே விழுத்தட்டியது போல் உணர்ந்தேன். நான் ஏற்கெனவே உள்ளத்தில் பதித்து வைத்திருந்த எண்ணங்கள் மேலோங்கி வந்தன. இதனுடைய அர்த்தம் இதுவாய் இருக்க முடியாது. இது கூடாத காரியம் என்று நான் நினைத்தேன். ஆனால், தேவன் என்னை நோக்கி "உன் செவியைச் சாய், உன் வழக்குகளை என்னிடம் கொண்டு வராதே. உன் தவறான எண்ணங்கள் எனக்குத் தேவையில்லை. உன் முரட்டாட்டமான கழுத்தை வளைத்து உனக்கு நான் கற்றுத் தர அனுமதி கொடு" என்றார்.

தேவனுடைய வசனத்தின் மூலம் சுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இது முக்கியமான ஒரு நிபந்தனையாகும். நமது தவறான எண்ணங்களையும், கொள்கைகளையும் தள்ளி வைத்து விட்டு நமது முரட்டாட்டமான கழுத்தை வளைத்து தேவன் சொல்வதைக் கவனத்துடன் கேட்க வேண்டும். நாம் மனதில் பதித்து வைத்திருந்த கொள்கைகளுடன் அவை ஒத்துப் போகாததினால் அவைகளை ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது. தேவன் எல்லா சபைப் பிரிவையும் விடப் பெரியவர். தேவன் நமது புரிந்து கொள்ளுதலையும் விடப் பெரியவர். நமது தவறான எண்ணங்களுக்கு மேற்பட்டவர். உனக்கு உதவி செய்ய முடியாத சிறியவராக தேவனை மாற்றாதே. உன் செவியைச் சாய்த்து அவர் எந்த அளவிற்கு உதவி செய்ய ஆயத்தமாய் இருக்கிறார் என்பதை அவர் உனக்கு சொல்லக் கேள்.

## அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக

தேவனுடைய மருந்து புட்டியில் உள்ள முதல் இரண்டு நிபந்தனைகளை நாம் கண்டோம். என் வார்த்தைகளைக் கவனி, உன் செவியைச் சாய். இப்பொழுது மூன்றாவது நிபந்தனைக்கும் செல்வோம். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக. அவைகள் என்னும் சொல் தேவனுடைய வார்த்தைகளையும், வாசகங்களையும் குறிக்கிறது. அதனுடைய சாரம் "கவனி" என்ற வார்த்தையில் அமைவதாக கூறலாம். மனித கண்களைப் பற்றிய அதிசயமான காரியம் என்னவென்றால் மனிதன் தன் இரு கண்களையும் கொண்டு ஒரே உருவத்தைக் காணமுடியும். (நமது கண்கள் ஆரோக்கியம் உள்ளதாய் தேவன் படைத்தபடி செயல்படும் போது

இப்படியிருக்கும்). இயற்கையின் படி நல்ல பார்வை இருக்குமென்றால் தவறாக கவனிக்கும் பொழுது தெளிவான உருவம் கிடைக்காது. அநேகரைப் பொறுத்தமட்டில் ஆவிக்குரிய தளத்திலும் இதே பிரச்சனை உள்ளது என்று விசுவாசிக்கிறேன். அவர்கள் ஆவிக்குரிய கண்களை சரியாகப் பயன்படுத்தாததினால் அவர்களின் பார்வையும் தெளிவற்றதாய் உள்ளது.

அநேக மக்கள் ஆவிக்குரிய உலகம் என்பது தெளிவற்ற, சரியாக உருவாகாத பாதி உண்மையான உலகம் என எண்ணிக் கொள்கின்றனர். கர்த்தரை சொந்த ரீதியில் அறிந்து கொள்வதற்கு முன்பு மதத்தைப் பற்றி இப்படிப்பட்ட ஓர் கருத்தையே நான் கொண்டிருந்தேன். பழைய ஆலயக் கட்டிடங்களில் மேலிருந்த பனிமூட்டமான மதத்தை நான் கண்டேன். அது நலமாய் இருக்கும் என்றால் அது என் தலையில் படியும் என்று நினைத்தேன். ஆனால் அது படியவில்லை ஆகவே கொஞ்சக் காலத்திற்குப் பின்பு அதில் அக்கறையற்றவனாய் தத்துவ ஞானத்தைப் பின்தொடர்ந்து செல்லலானேன். ஆனால் உண்மை என்னவென்றால் நமது ஆவிக்குரிய கண்கள் ஒரு நோக்குடையதாய் இல்லையாயின் ஆவிக்குரிய தரிசனம் தெளிவற்றதாகவே இருக்கும். ஆவிக்குரிய தரிசனத்தைக் குறித்து இயேசு கூறிய வார்த்தைகளைக் கவனி.

> **லூக்கா 11:34 [34]கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்; உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.**

இங்கே இயேசு நம் சரீரம் முழுவதையும் பாதிக்கக் கூடியதைச் சொல்லுகிறார். இது நீதிமொழிகள் நான்காம் அதிகாரத்தில் தேவனுடைய வசனத்தின் மூலம் முழு சரீரத்திற்கும் வரும் சுகத்தை இவ்வசனம் நினைவு படுத்துவதாக உள்ளது. இங்கு இயேசு நமது கண்களை பயன்படுத்தக்கூடிய விதத்தைக் குறித்துப் பேசுகிறார். "உன் கண் தெளிவாய் இருந்தால்" என்பதின் மூலம் இயேசு சொல்ல இருப்பது நம்மில் உருவாகக்கூடிய ஒரே உருவத்தை குறிப்பதாய் உள்ளது. நமது இரண்டு கண்களையும் கொண்டு நாம் வித்தியாசமான திசைகளில் நோக்குவதில்லை. அவைகளில் நாம் ஒரே உருவத்தையே காண்கிறோம். இதனுடைய பலன் நம் சரீரம் முழுவதிலும் வெளிப்படுகிறது. "உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்."

ஒளி நிறைந்த சரீரத்தில் நோய்க்கு இடமில்லை. ஒளி இருந்தால் இருளிருக்காது. இருள் இருந்தால் ஒளியிருக்காது. நோய், இருளிலிருந்தும் ஆரோக்கியம் ஒளியிலிருந்தும் வருகிறது. மல்கியா 4:2 சொல்கிறது:

> **[2]ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின்**

***சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.***

இயற்கையின்படி சூரியனிலிருந்தே எல்லா ஒளியும் வருகின்றது. சூரியன் உதிக்கும் பொழுது ஒளியினால் உண்டாகும் இரண்டு காரியங்கள் - நீதியும், ஆரோக்கியமுமாகும். அவைகள் ஒளியின் கிரியைகள். நீதிக்கு எதிர்மறையானது பாவம். ஆரோக்கியத்திற்கு எதிர்மறையானது சுகவீனம். இவைகள் இருளின் செயல்கள். ஆனால் நீதியும், சுகமும் ஒளியின் கிரியைகள். இயேசு "உன் கண் தெளிவாய் இருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாய் இருக்கும். அதாவது நீதியினாலும், ஆரோக்கியத்தினாலும் நிறைந்திருக்கும்." இது ஒரே நோக்குடைய கண்ணைப் பொறுத்ததாகும். ஒரே என்பதை குறிக்கும் கிரேக்க வார்த்தைக்குப் பல அர்த்தங்கள் உண்டு (இந்த செய்தியை ஆயத்தப்படுத்துவதற்கு முன்பு இரண்டு கிரேக்க அகராதிகளை எடுத்து இதைப்பற்றி பார்த்தேன்) பிரதானமான அதன் அர்த்தம் எளிய அல்லது உண்மையான என்ற சொல்லாகும். இது எந்த குறிப்பை தெளிவுப்படுத்துகிறது? உன் கண் எளியதாகவும் உண்மையுள்ளதாகவும் இருந்தால் எழுதியிருக்கிற வண்ணமாகவே நீ காண முற்படும் பொழுது நீ உன்னை ஞானி என்றோ தத்துவ சாஸ்திரி என்றோ காணமாட்டாய்? வசனத்தை விளக்கும் பல முறைகளை அறிந்த இறையியல் வல்லுனராய் உன்னைக் கருதமாட்டாய் - அது கூறும் ஒரே அர்த்தத்தில் இதைப் புரிந்து கொள்வாய்.

இரண்டாவது நிபந்தனை உன் செவியைச் சாய் என்று கூறினேன் - முரட்டாட்டமான உன் கழுத்தைச் சாய்த்து கேட்க ஆயத்தப்படு. இவைகளுக்குத் தடையாய் இருப்பது தப்பு எண்ணமும், அறியும் முன் மனதிலுள்ள கருத்துகளும் ஆகும். நாம் ஏற்கெனவே இப்படித் தான் தேவன் சொல்லியிருப்பார் என்று நினைப்பதால் நாம் அவர் சொல்வதைக் கேட்க ஆயத்தமற்றவர்களாய் ஆகிறோம்.

மூன்றாவது நிபந்தனை எளிமையும், உண்மையும் ஆகும். எளிமைக்கும், உண்மைக்கும் தடையாயிருப்பது பகுத்தறிவும், வேதப்புரட்டும் ஆகும். பிரசங்கம் செய்பவர்கள் பெரிய வல்லுநர்களின் பெயரை மேற்கோளாய் கூறும் பொழுது வேதத்தின் உண்மையை இவர்கள் நிரூபிக்க நினைக்கிறார்கள் என்று நான் நினைப்பதுண்டு. உலக நிபுணர்களின் உதவி வேதத்தை நிரூபிக்கத் தேவையில்லை. இறுதியில் அது மக்களின் விசுவாசத்தைக் கட்டி எழுப்பாது. இப்பொழுதோ, பின்போ நான் முன்பு சொன்னது போல விசுவாசமானது தேவனுடைய வசனத்தைக் கேட்பதினால் வருகிறது. நமது கவனத்தை வசனத்திலிருந்து வெகு நேரம் ஒரு காரியம் இழுக்கும் என்றால் அது நமது விசுவாசத்தைக் கட்டாது. ஆகவே நாம்

ஒரே கண்ணோட்டத்துடன் தேவன் சொல்வதை எளிதாக உண்மையுள்ளதாக எடுத்துக் கொள்ள வேண்டும். தேவன் சொல்வது இதுவே. "அது எழுதப்பட்ட வண்ணமே நான் அதை விசுவாசிக்கிறேன் அதன் அர்த்தம் இது தான்" என்ற நிலையில் வசனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆஸ்பத்திரியில் ஏற்பட்ட எனது சொந்த அனுபவத்தை நினைத்துப் பார்க்கிறேன். அங்கு நான் கிரேக்கம், லத்தீன் மொழிகளைப் பற்றிய ஞானம் உடையவனாக தத்துவப் பேராசிரியனாக நீண்ட பெரிய புத்தகங்களிலிருந்து மேற்கோள் காட்டும் நபராக இருந்தேன். நான் சுகவீனமான பொழுது தேவனுடைய வசனத்தின் மூலம் எளிய முறையில் தேவனுடைய மருந்துபுட்டியான அவருடைய வசனத்திலிருந்து சுகத்தைப் பெற்றுக் கொள்வது எவ்வாறு என்பதை அறிந்தேன். ஒரு தத்துவ ஞானியின் மனதிற்கு இது முட்டாள்தனமாய்ப் படலாம், கேலியாக இருக்கலாம். ஆகவே அவர் அதை இழந்து போகக் கூடும். ஆனால் நான் சுகவீனமாய் இருந்த பொழுது தத்துவ ஞானம் என்னை சுகப்படுத்தவில்லை. எனக்கு முன்னிருந்தவை இரண்டு. ஞானமுள்ளவனாய் நோயாளியாய் தொடர்வது ஒன்று, அல்லது எளியவனாய் சுகத்தைப் பெறுவது மற்றொன்று. அந்நாளிலிருந்து ஒரு காரியத்தைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். சுகத்தைப் பெற்றுக் கொள்ளும் அளவிற்கு நான் எளியவனாய் இருந்தேன். அது இந்தக் குறிப்பை வலியுறுத்துகிறது. நீ ஒரு நோக்குடையனாய் இருந்தால், நீ உண்மையாயிருந்தால், உனக்கு அநேக ஆழமான விவாதங்கள் தெரியாமல் இருந்தால் அநேக இறையியற் நிபுணர்களின் வாசகங்களை மேற்கோள் காட்ட முடியாவிட்டால் ஒரு வேளை தேவனை அடைவதற்கான வாய்ப்பு உனக்கு அதிகமாய் உள்ளது. இதைச் சொல்வதற்கு நான் வருந்துகிறேன். ஆனால் அநேக ஆண்டுகளின் அனுபவம் இதை எனக்கு உறுதிப்படுத்தியுள்ளது. பொதுவாக இறையியல் மக்களின் அறிவு விசுவாசத்திற்கு உதவுவதில்லை. இதை முடிக்கும் முன் பவுலின் இரண்டு வேதப்பகுதிகளை நினைவுப்படுத்த விரும்புகிறேன். இந்த எளிமை, உலகக் கண்ணோட்டத்தில் பைத்தியக்காரத்தனமாய் உள்ளது. 1 கொரி. 1:25ல்

**25 இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது. என்றுள்ளது.**

இங்கு அவர் சிலுவையைப் பற்றி பிரதானமாய்ப் பேசுகிறார். சிலுவையானது அவர் வாழ்ந்த் கலாச்சாரத்தின்படி அறிவற்ற மெலிவானதோர் காரியம். சிலுவையின் பெலவீனத்திலிருந்து தேவனின் சர்வ வல்லமை வெளிப்படுகிறது. சிலுவையின் பைத்தியக்காரத்தனத்திலிருந்து தேவனின் அளவற்ற ஞானம்

வெளிப்படுகிறது. ஆகவே தேவனுடைய பெலத்தையும், ஞானத்தையும் பெற்றுக் கொள்ள பெலவீனமான பைத்தியக்காரத்தன்மையான காரியங்களுக்குச் செல்ல வேண்டியதாய் உள்ளது.

இப்பகுதிக்கு சற்று கீழே 1 கொரிந்தியர் 3:18ல் பவுல் பரவசமூட்டும் ஒரு காரியத்தைச் சொல்கிறார். (அவர் இங்கு என்னைப் போன்று தத்துவ ஞானத்தில் கற்றறிந்த மக்களுக்குப் பேசுவதால் இதை என்னால் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது.)

**"ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன்.**

தேவனுடைய ஞானத்திற்கும், நம்முடைய ஞானத்திற்குமிடையே ஒரு பெரும் பள்ளத்தாக்கு உள்ளது. அது தாழ்மையாகும். நாம் உலக ஞானத்தை ஒதுக்கி வைக்க வேண்டும். உலகத்தின் கண்களுக்கு முன்பதாக பைத்தியக்காரர்களாக மாறும் பொழுது தேவ ஞானத்திற்குள் நாம் பிரவேசிக்கிறோம்.

இந்த வேளையில் உலக ஞானத்தில் தேர்ந்தவனாய் நான் தொடர்ந்து நோயாளியாக இருக்கலாம் அல்லது உலகத்தின் பார்வையில் முட்டாள் தனத்தைச் செய்து சுகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சொல்லப்போனால் நான் பைத்தியக்காரனாய் இருப்பதற்குரிய ஞானத்தைப் பெற்று சுகமடைந்தேன். நான் ஞானவானாயிருந்து சுகவீனனாய் இருக்கவில்லை இது எப்படி என நினைக்கலாம் ஆனால் பவுல் இதைத்தான் சொல்லுகிறார். பவுல், இவ்வுலகத்தில் நீ ஞானமுள்ளவனாய் இருந்தால் நீ தேவனுடைய பார்வையில் ஞானமுள்ளவனாகும்படி பைத்தியக்காரனாக மாற வேண்டும். மனித ஞானம் தேவனுடைய பைத்தியக்காரத்தனமாயிருக்கிறது என்று கூறுகிறார். இதன் அர்த்தம் என்னவென்றால் "அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக" என்பதாகும். ஒரே நோக்குடையவனாய் இரு. வேதத்தை எழுதப்பட்டவண்ணமாய் வாசி. அதில் சொல்லப்பட்ட அர்த்தத்தையே புரிந்து கொள்.

## அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்

முதல் மூன்று நிபந்தனைகளைப் பார்த்தோம். இப்பொழுது நான்காவது நிபந்தனைக்கு வந்துள்ளோம். இதன் மூலம் தேவனுடைய வார்த்தைகளை, வாசகங்களை நாம் ஏற்றுக் கொள்ள முடியும். அவைகளை உன் இருதயத்திலே காத்துக் கொள்.

இது என்னைப் பொறுத்தமட்டில் உண்மையாக உள்ளது. முதலாவதாக என் சொந்த அனுபவத்தின்படி இந்த வசனத்தைப் படித்து நான் சுகமானேன். இரண்டாவதாக ஐந்தாண்டுகள் கிழக்கு ஆப்பிரிக்காவிலே ஆசிரிய பயிற்சி பாடசாலையில் நான் ஒரு முதல்வராக இருந்தேன். ஆகவே போதனா முறைகளைக் குறித்து நான் படிக்க வேண்டியதாயிற்று. எங்கள் மாணவர்களுக்கு நாங்கள் சொல்ல முற்பட்ட ஒரு காரியம் என்னவென்றால் செவிவாயில், கண்வாயில் இவைகளை பயன்படுத்தக் கற்றுக் கொள்வதாகும். ஒரு குழந்தையின் ஆள்த்துவத்தை அடைய வேண்டுமானால் பல வாயிலின் வழியாகச் செல்ல வேண்டும். அந்த குழந்தை கேட்டால் மட்டும் போதாது. அந்த குழந்தை கண்ணாலும் காண வேண்டும். உண்மையாக நாங்கள் அந்தக் குழந்தைக்கு சொல்லிக் கொடுத்தது என்னவென்றால் அது கேட்பது மட்டுமன்று, அது பார்க்கவும் வேண்டும்; அது அதில் ஈடுபடவும் வேண்டும். கேட்கவேண்டும், பார்க்கவேண்டும், செய்யவேண்டும். இந்த நீதிமொழியின் வேதப் பகுதியிலே நவீன கால மனோதத்துவ போதனா முறையை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தேவன் பயன்படுத்தியுள்ளார். அவர், "உன் செவியை சாய், அது உன் கண்களைவிட்டு நீங்காதிருப்பதாக அப்பொழுது இது உன் இருதயத்திற்குள் செல்லும்" என்றார். காது வாயிலின் வழியாகவும், கண் வாயிலின் வழியாகவும் சத்தியமானது மனித ஆள்தத்துவத்தின் முக்கிய பகுதியாக வேதம் கருதும் இருதயத்திற்குள் செல்லுகிறது. அங்கு அது வாக்களித்ததைச் செய்யும். அது இருதயத்திற்குள் செல்லவில்லையாயின் அதற்குரிய பலன் கிட்டாது. நீ எடுக்கும் ஒரு மருந்து பயனுள்ளதாய் இருக்க வேண்டுமாயின் அது உன் இரத்தத்தில் கலக்கவேண்டும். நீ மருந்தை எடுக்கலாம் ஆனால் அது இரத்தத்தில் கலக்கவில்லையானால் அது எதை செய்யக்கூடுமோ அதைச் செய்யாது. அதைப் போலவே தேவனுடைய மருந்தும் இருதயத்திற்குள் செல்லும் போது தான் பலனளிக்கும். முதல் மூன்று நிபந்தனைகளும் மருந்தைப் பொறுத்தது. அது இருதயத்தில் செல்லும் போது தான் அது வாக்களித்ததை நிறைவேற்றும். அது செல்கிறது அவைகளை உன் இருதயத்திற்குள் காத்துக்கொள்.

நீதிமொழிகளில் அதற்கு அடுத்து வரும் வசனம் வேதத்தின் வசனங்களுள் மிக ஆழமான வசனம். நீதிமொழிகள் 4:23

***23 எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.***

அதினிடத்திலிருந்து (இருதயத்திலிருந்து) ஜீவ ஊற்று புறப்படும் என்பது ஆழமான வாசகம். என்னுடைய மனது மீண்டும் கிழக்கு ஆப்பிரிக்காவிற்குச் செல்லுகிறது. என்னுடைய மாணவியர்களில் ஒருத்தி தன்னுடைய சொந்த மொழியாகிய "லார்லாகோலி" என்னும் மொழியில் இந்த வசனத்தை எழுதி இருந்தாள். படுக்கும் அறையின் சுவரில் அவள்

எழுதிய வசனத்தை வாசிக்கும் அளவில் எனக்கு ஞானம் இருந்தது. அது உன் முழு பெலத்தோடும், உன் இருதயத்தைக் காத்துக்கொள். ஜீவனுக்கடுத்த காரியங்கள் அனைத்தும் அதிலிருந்து புறப்படுகின்றது" என்று எழுதியிருந்தாள். இது கிங் ஜேம்ஸ் மொழி பெயர்ப்பை விட மிக எளிதான வாக்கியம்.

வாழ்விற்கடுத்த அனைத்து காரியங்களும் இருதயத்திலிருந்தே புறப்படுகிறது. நீ வாழ்வில் அனுபவிப்பதெல்லாம் உன்னுடைய இருதயத்திலிருந்து புறப்படுபவையே ஆகும். உன் இருதயத்தில் சரியான காரியம் இருக்குமாயின் வாழ்வும் சரியானதாய் இருக்கும். உன் இருதயத்தில் தவறான காரியம் இருக்குமாயின் உன் வாழ்வும் தவறானதாயிருக்கும். உன் இருதயத்திலுள்ளதே உன் வாழ்க்கையின் பாதையை அமைக்கிறது. தேவன் "என்னுடைய மருந்தும், என்னுடைய வார்த்தைகளும், என்னுடைய வாசகங்களும் நான் வாக்களித்ததைச் செய்ய வேண்டுமாயின் அது உன் இருதயத்திற்குள் செல்ல வேண்டும். அதை நீ உன் இருதயத்தில் காத்துக் கொள்ள வேண்டும்" என்கிறார். அதை உன் இருதயத்தின் மையத்தில் வைக்க வேண்டும். மையத்தில் வைக்கவேண்டுமேயன்றி விளிம்பில் வைக்கக் கூடாது. உன் முழு வாழ்வின் நடுவில் ஆள்தத்துவத்தின் மையத்தில் அதை வை. நீ வாழும் முறை அனைத்தையும் அது பாதிக்கக்கூடியதாய் இருக்கிறது.

தேவனுடைய வார்த்தை மருந்தாய் இருக்கிறது என்னும் இப்போதனையை முடிப்பதற்கு முன்பு இதற்கு இணையான புதிய ஏற்பாட்டு பகுதி ஒன்றினை தர விரும்புகிறேன். எபிரெயர் 4:12 தேவனுடைய வார்த்தையின் பண்பைப் பற்றியும், அது நம்மில் எப்படி செயல்படுகிறது என்பதைப் பற்றியும் பேசுகிறது. அதை நன்றாக புரிந்து கொள்ளும்படி இரண்டு மொழி பெயர்ப்புகளிலே கொடுக்கிறேன்.

> [12] தேவனுடைய **வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.**

அமெரிக்க மொழி பெயர்ப்பில் "தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளதாயும், செயல்படுவதாயும், இரண்டு பக்கமும் கருக்குள்ளதாய் ஆவியையும், ஆத்துமாவையும் ஆழமாய் சென்று ஊடுருவி கணுக்களையும், ஊனையும் நினைவுகளையும், யோசனைகளையும் ஆழமாய் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" என்று வருகிறது .

இவ்விரண்டு மொழி பெயர்ப்பிலும் வரும் முக்கிய வார்த்தை 'ஊடுருவிச்' செல்வதாகும். தேவனுடைய வார்த்தை ஊடுருவிச் செல்கிறது எதுவும் செல்ல முடியாத இடத்திலும் அது நுழைந்து செல்லக்கூடும். மனித திசுக்களினூடே செல்லும் ஒரு மருத்துவருடைய கூர்மையான அறுவை சிகிச்சையின் கத்தியைப் பற்றி நமக்குத் தெரியும். தேவனுடைய வார்த்தை வேறுதளத்தில் ஊடுருவிச் செல்கிறது. நமது ஆள்தத்துவத்தின் அடித்தளத்திலுள்ள ஆவியையும், ஆத்துமாவையும் பிரிக்கிறது. நம்மை பற்றியே நாம் புரிந்து கொள்ள முடியாத நமக்குள்ளே உள்ள காரியங்களை தேவவார்த்தை வெளிப்படுத்துகிறது. அது கணுக்களையும், ஊனையும் பிரிக்கிறது. அது ஆவிக்குரிய பகுதியையும், சரீரப் பகுதியையும் தொடுகிறது அதன் தொடுதலுக்கு அப்பாற்பட்ட பகுதியில்லை.

கணுக்களிலோ, ஊனிலோ ஒரு நோய் இருக்குமேயானால் அங்கு வேத வசனமானது மனித மருந்து அல்லது கத்தி செல்லக்கூடாத அவ்விடத்திற்கு செல்கிறது. மனோ தத்துவ நிபுணரால் தீர்க்க முடியாத உள்ளான மனிதனில் பிரச்சனை இருக்குமானால் தேவனுடைய வசனம் அங்கும் செல்லக்கூடும். இந்த வசனத்தை தேவன் எப்படி நாம் எடுத்துக் கொள்ள வேண்டுமென விரும்புகிறாரோ நாமும் அப்படியே எடுத்துக் கொள்ளவேண்டும். இதை எளிதில் கற்றுக் கொள்ளக் கூடிய மனப்பான்மையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். தப்பான எண்ணங்களையும், ஏற்கெனவே மனதில் பதித்துவைத்துள்ள தவறான எண்ணங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, ஒரே மனதுடன், முழு இருதயத்துடன் இதைக் காணவேண்டும். இதைக் குறித்து இதற்கு மேற்பட்ட விளக்கம் தேவையில்லை என எண்ணுகிறேன். இது எதை சொல்கிறதோ அதை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும் பகுத்தறிவையும் வாதப்புரட்டையும் விட்டு வசனம் தான் செய்ய வேண்டிய செயலைச் செய்ய நாம் அதை அனுமதிக்க வேண்டும். இப்போதனையை முடிப்பதற்கு முன்னர் நான் உனக்காக ஜெபிக்கட்டுமா?

***பிதாவே! இந்தப் புத்தகத்தை வாசிப்பவர்களுக்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். அவர்களுக்குள்ள சரீரப் பிரகாரமான, ஆவிக்குரியத் தேவைகளை உம்முடைய வசனத்தால் மட்டுமே தீர்க்க முடியும். இந்த வசனம் அவர்களுக்குள் சென்று தேவையானதைச் செய்யட்டும்; விசுவாசத்தை உருவாக்கட்டும். ஆரோக்கியத்தை அளிக்கட்டும்; விடுதலையை உண்டாக்கட்டும். சமாதானம், மகிழ்ச்சி இணக்கம் இவைகளை ஏற்படுத்தட்டும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.***

***ஆமென்.***

# ஆவிக்குரிய போராட்டம்

## பகுதி 1

# யுத்தத்தின் தன்மை

## அத்தியாயம் 1

# இரண்டு எதிரிடையான ராஜ்யங்கள்

புதிய ஏற்பாட்டில் தேவனுடைய பிள்ளைகளின் பல்வேறுவிதமான தன்மைகளைக் காணலாம். உதாரணமாக எபேசியரில் தேவனுடைய தேவனுடைய பிள்ளைகளின் பல்வேறு தன்மைகள் இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது: ஒரு சட்டமன்றம், ஒரு குடும்பம், ஓர் ஆலயம், கிறிஸ்துவின் மணவாட்டி. ஆனாலும் தேவனுடைய பிள்ளைகளை எபேசியர் நிருபத்தில் இறுதியாக ஓர் இராணுவமாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

நாம் வசிக்கும் இவ்வுலகத்தின் ஒவ்வொரு பகுதியையும் உள்ளடக்கி, அதில் பாதிப்புகளை ஏற்படுத்தும் உலகளாவிய ஒரு யுத்தத்தில் இந்த இராணுவம் ஈடுபட வேண்டிய நிலையில் உள்ளது. இந்த யுத்தத்தின் தன்மையை நாம் ஆராயும்போது "உலகளாவிய" என்று கூறுவது பொருத்தமாக இராது. அது இந்த பூமியை மட்டுமல்லாது வானமண்டலங்கள் பரியந்தமும் கிரியை நடப்பிக்கிறது. எனவே இதனை "உலகளாவிய" என்று கூறுவதை விட 'சகல இடத்தையும் தழுவிய' என்று கூறுவதே சரியாகும். இது படைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய இப்பிரபஞ்சத்திற்குரிய யுத்தமாகும்.

இந்தப் போராட்டத்தைக் குறித்து எபேசியர் 6:10–12இல் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நான் முதலில் புதிய சர்வதேச மொழி பெயர்ப்பினையும் அதனைத் தொடர்ந்து மற்ற மொழி பெயர்ப்புகளையும் இவைகள் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்புகளையும் கூற விரும்புகிறேன்.

> 10 ***கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.***
>
> 11 ***நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.***

நம்முடைய எதிரி பிசாசு என்றும் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு

யுத்தத்தில் ஈடுபடுவதால் எதிர்த்துப் போர் புரிய உரிய ஆயுதங்கள் தேவை என்பதாகவும் பவுல் கூறுகிறார். 12ஆம் வசனத்தில் இப்போரின் தன்மை குறித்துக் கூறுகிறார்:

**[12]ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.**

புதிய அமெரிக்கத் திருப்புதலில் இந்த வசனம் இவ்வாறு உள்ளது.

**[12]ஏனெனில் நமது போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல ஆட்சி செய்பவர்களுக்கெதிராகவும் அதிகாரங்களுக்கெதிராகவும் இந்த இருளின் உலகத்தின் சக்திகளுக்கெதிராகவும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளுக்கெதிராகவும் உள்ளது.**

Living Bible என்ற திருப்புதலில் இவ்வசனம் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:

**[12]மாம்சமும் இரத்தமுமுள்ள மக்களோடு நமது போராட்டம் இல்லாமல் உடலற்ற மக்களோடும் காணக்கூடாத உலகத்தினை ஆட்சி செய்யும் பொல்லாத மக்களோடும் வல்லமைபொருந்திய சாத்தானுடைய ஆட்களோடும், இவ்வுலகத்தை ஆட்சிசெய்யும் இருளின் பெரிய பொல்லாத இளவரசர்களோடும், ஆவிகளின் உலகத்திலுள்ள எண்ணிலடங்காத பொல்லாத ஆவிகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.**

நீங்கள் எந்தத் திருப்புதலைப் பின்பற்றினாலும் சரி கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு பெரிய போராட்டத்தில் ஈடுபடவேண்டியுள்ளது என்பது மட்டும் திண்ணம்.

கிரேக்க மொழியிலிருந்து நான் எபேசியர் 6:12யை தியானித்து சொந்த முறையில் மொழி பெயர்த்துள்ளேன். இதனை நீங்கள் "பிரின்ஸின் திருப்புதல்" என்று அழைக்கலாம்.

**[12]நமது மல்யுத்தம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, சரீரத்தோடு உள்ள மக்களோடும் அல்ல. ஆனால் பல இடங்களில் ஆட்சி செய்பவர்களோடும், இறங்கிவரும் அதிகாரங்களோடும், உலகத்தில் ஆதிக்கம் செலுத்தும் இக்காலத்து அந்தகாரத்தோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளோடும் நமக்கு மல்யுத்தம் உண்டு.**

நான் ஏன் சில வார்த்தைகளை தேர்ந்தெடுத்தேன் என்பதை விளக்கவுள்ளேன். "பல இடங்களில் ஆட்சி செய்பவர்களோடும், இறங்கி வரும் அதிகாரங்களோடும்" என்று கூறினேன். ஏனெனில் மிக உயர்ந்த பரிமாணம் கொண்ட நல்ல முறையில் செயலாற்றும் அரசில் இறங்கி வரும் அதிகாரத்தோடு பலவிதமான ஆட்சியாளர்களும் துணை ஆட்சியாளர்களும் இதன் பல பகுதிகளையும் ஆளும் பொறுப்பை உடையவர்களாகவும் சித்திரிக்கப் பட்டுள்ளது. "ஆதிக்கம் செலுத்துபவர்கள்" என்ற வார்த்தையை "உலகத்தில் ஆதிக்கம் செலுத்தும் இக்கால அந்தகாரத்தோடும்" என்ற பதத்தில் உபயோகித்துள்ளேன். ஏனெனில் "ஆதிக்கம்" என்ற பதமானது மனித இனத்தை சாத்தான் நடத்தும் விதத்தை இது நன்கு விளக்கமாகச் சித்திரிக்கிறது.

Living Bible மொழி பெயர்ப்பைத் தவிர அனைத்துத் திருப்புதல்களிலும் நன் முறையில் செயலாற்றும் அரசின் தலைமையிடம் வான மண்டலங்களிலுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எபேசியர் 6:12இலிருந்து சில குறிப்புகளை நாம் காணலாம். முதலாவதாக எல்லா கிறிஸ்தவர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். சிறப்பாக ஊழியக்காரர், போதகர்கள், மிஷனெரிமார் மட்டுமல்ல, நாம் அனைவருமே இதில் பங்கேற்கிறோம். அநேக கிறிஸ்தவர்கள் இதனை இவ்வாறு நோக்குவதில்லை.

ஜேம்ஸ் அரசர் மொழி பெயர்ப்பில் 12ஆம் வசனம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "மாம்சத்தோடும் இரத்தத்தோடும் நமக்குப் போராட்டம் இல்லை." அநேக கிறிஸ்தவர்கள் இதனைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். "நமக்குப் போராட்டம் இல்லை" என எண்ணுகின்றனர். வேறு விதமாகக் கூறினால் நாம் ஆலயத்தில் உட்கார்ந்து கொண்டு பாடல் பாடினால் போதும் என்பதாய் நினைக்கின்றனர். ஆனால் பவுல் கூறுகிறார் நாம் ஒரு மல்யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம்—ஆனால் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல. "மல்யுத்தம்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். இரண்டு பேருக்குள் நடைபெறும் போராட்டத்தில் மிகவும் கடுமையானது மல்யுத்தமாகும். வெற்றி பெற இதற்கு உடலின் ஒவ்வொரு பகுதியும், கற்ற எல்லா கலையையும், எல்லாத் திறமையையும் பயன்படுத்த வேண்டும். இது ஒரு முழுமையான போராட்டம்.

சாத்தானுக்கு நன்கு நிர்மாணிக்கப்பட்ட ஒரு அரசு உண்டு. இதில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு அதிகாரங்கள் உள்ளன. இதன் தலைமையகம் வானமண்டலங்களிலுள்ளது. இதுதான் உண்மை.

நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு அரசிற்கு சாத்தான் தலைமை

ஏற்றிருக்கிறான் என்பது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். ஆனால் வேதத்தில் இதற்கு அநேக ஆதாரங்களுண்டு. இயேசுவின் ஊழியத்தில் நடந்த ஒரு சம்பவம் மத்தேயு 12:22–28இல் கூறப்பட்டுள்ளது. பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒரு மனிதனிலிருந்து இயேசு பிசாசை துரத்தி அவனுக்குச் சுகமளிக்கிறார்.

> *23 ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: "தாவீதின் குமாரன் இவர்தானோ?" என்றார்கள்.*
>
> *24 பரிசேயர் அதைக்கேட்டு: "இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள்."*

பெயெல்செபூல் என்றால் "ஈக்களின் தலைவன்" என்று பொருள். பிசாசுகளை ஆள்வதால் சாத்தானுக்கு இப்பெயர் வந்தது. ஏனெனில் பிசாசுகளின் கூட்டம் ஈக்களின் அரசிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. இயேசு 25ஆம் வசனத்தில் பரிசேயருக்குப் பதிலளிக்கிறார்:

> *25 இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: "தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது.*
>
> *26 சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?"*

முதலாவதாக இதன் மூலம் சாத்தானுக்கு ஓர் அரசு உண்டு என்பது தெளிவாகிறது. இரண்டாவதாக அது பிரிந்திருக்காமல் நன்கு கட்டுக்கோப்பாக உள்ளது. மூன்றாவதாக அது நிலைத்திருக்கிறது. அது இன்னும் கவிழ்க்கப்படவில்லை. இயேசு தொடர்ந்து கூறுகிறார்:

> *27 "நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்."*
>
> *28 "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே."*

இங்கு இயேசு மறுபடியும் ஓர் அரசைப் பற்றிக் கூறுகிறார். தேவனுடைய அரசும் குறிப்பாக இந்த இரண்டு அரசுகளுக்குள் வெளிப்படையாக ஏற்படும் போராட்டத்தைக் குறித்து விரிவாக

எடுத்துரைக்கிறார். "தேவனுடைய ஆவியினாலே நான் பிசாசுகளைத் துரத்தும் போது, தேவனுடைய அரசும் வந்திருக்கிறது." இதன் முக்கியத்துவம் என்னவெனில் பிசாசுகளைத் துரத்தும் ஊழியமானது சாத்தானின் அரசை வெளிக் கொண்டுவருகிறது. மற்றும் தேவனுடைய அரசின் மேன்மையை விளக்குகிறது. ஏனெனில் தேவனுடைய அரசின் அதிகாரத்தின் பேரிலேயே பிசாசுகள் துரத்தப்படுகின்றன. கடைசியாக நாம் அறிந்து கொள்வது: ஒன்றுக்கொன்று எதிரான இரு அரசுகள் உள்ளன. ஒன்று, தேவனுடைய அரசு; மற்றொன்று பிசாசின் அரசு.

மீண்டும் கொலோசெயர் **1:12-14**இல் பவுல் இவ்வாறு கூறுகிறார்:

12 ***ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர் களாக்கினவரும்,***

13 ***இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்.***

14 ***(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.***

இரண்டு அரசாட்சிகள் அல்லது ராஜ்யங்கள் இருப்பதாகக் கூறுவதை மீண்டும் கவனியுங்கள். ஒளியின் அரசு ஒன்று உண்டு. இதில் தான் நமது சுதந்திரம் உள்ளது. ஆனால் அதே சமயம் இருளின் அரசும் உள்ளது. "ஆதிக்கம்" செலுத்துதல் (Dominion) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு கிரேக்க மூலபதம் ***எக்ஸீசியா*** ஆகும். அதற்கு "அதிகாரம்" என்று பொருள். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சாத்தானுக்கு அதிகாரம் உள்ளது. சாத்தான் ஆட்சி செய்யும் அரசை வேதம் அங்கீகரிக்கிறது. இந்த இரு அரசுகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. கடைசிக் காலமாகிய இந்த நாட்களில் இந்தப் போராட்டம் உச்சகட்டத்தை அடையும்.

## அத்தியாயம் 2

# சாத்தானின் தலைமையிடம்

கிறிஸ்தவர்களாகிய நமக்கு அதிகத் திறமையான முறையில் நிர்வகிக்கப்படும் தீய மற்றும் போராடும் ஆவிகளோடு ஜீவ மரண போராட்டம் உண்டு என்றும் இவற்றின் தலைமையிடம் வான மண்டலங்களிலுள்ளதாகவும் எபேசியர் 6:12இல் பவுல் தெளிவாக கூறுகிறார்.

"வான மண்டலங்கள்" என்ற சொற்றொடரானது கிறிஸ்தவர்கள் மனதில் ஒருவிதமான சிந்தனையை ஏற்படுத்தும். வெகு காலத்துக்கு முன்பே சாத்தான் மோட்சத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டான். அப்படியானால் எப்படி அவன் வான மண்டலங்களில் குடியிருக்க முடியும்?

ஆரம்பத்தில் சாத்தான் ஆண்டவருக்கு விரோதமாக கீழ்ப்படியாமையின் சுபாவத்தில் ஈடுபட்டுத் துரத்தப்பட்டபோது நடந்த காரியங்களைக் குறித்த சில பகுதிகளை விளக்குவதன் மூலம் இந்தக் கேள்விக்கு பதிலளிக்க விரும்புகிறேன். இன்னும் கூட சாத்தானுக்கு தேவனுடைய சமூகத்தோடு தொடர்பு உண்டு என இந்தப் பகுதிகள் விளக்குகின்றன. யோபு 1:6-7.

**6 ஒருநாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான்.**

**7 கர்த்தர் சாத்தானைப் பார்த்து: "நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார்?" சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: "பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான்."**

இதே போல யோபு 2:1-2லும் இதையொத்த சம்பவத்தை வாசிக்கிறோம்.

**1 பின்னொருநாளிலே தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றான்.**

**2 கர்த்தர் சாத்தானைப் பார்த்து: "நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார்,"**

*சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: "பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான்."*

யோபின் நாட்களில் தேவனுடைய சமுகத்தில் பிசாசுக்கு நேரடித் தொடர்பு இருந்தது. தேவ தூதர்கள் தேவ சமுகத்தில் வந்து நிற்கும்போது சாத்தானும் அவர்களோடு வந்து நிற்பான். மற்ற தூதர்கள் சாத்தானை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. இதற்குக் காரணம் 2 கொரிந்தியர் 11:14ல் சாத்தானை "ஒளியின் தூதன்" என்று கூறுவதனாலேயே என்று நான் அறிந்து கொண்டேன். எனவே சாத்தானை அடையாளம் கண்டுகொள்ளும் ஒரே ஒருவர் தேவன் தான் என்று நான் தெரிந்து கொண்டேன். மற்ற தூதர்களோடு கலந்து அவனும் தேவ சமுகத்தில் நிற்கிறான் என்றும் அவன் இருப்பது தவிர்க்கப்படுவதில்லை என்பதும் தெளிவாகிறது.

"சாத்தானே நீ எங்கேயிருந்து வருகிறாய்?" என்று தேவன் கேட்கிறார். வேறு விதமாகச் சொன்னால் "நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" சாத்தானை தேவன் உடனடியாக வெளியேற்றாமல் அவனோடு உரையாடுகிறார். எனவே யோபுவின் நாட்களில் மோட்சத்தில் தேவனோடு சாத்தானுக்கு செல்லும் சிலாக்கியம் இருந்தது என்பதை நாம் அறியலாம்.

*10 "அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: "இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப் போனான்."* (வெளி. 12:10)

சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் சாத்தானாகும். இரவும் பகலும் தேவனுக்கு முன்பாக தேவனுடைய பிள்ளைகளை தொடர்ந்து சாத்தான் குற்றஞ்சுமத்திக் கொண்டிருக்கிறான்.

தொடர்ந்து வெளி.12:11–12இல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

*11 "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை (சாத்தானை) ஜெயித்தார்கள்.*

*12 ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால்,*

**உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்."**

இந்தப் பகுதியிலிருந்து சாத்தான் தேவனுடைய சமூகத்திற்கு வரக்கூடியவனென்றும் இதனைப் பயன்படுத்தி தேவனுடைய பிள்ளைகளை தேவசமூகத்தில் குற்றப்படுத்தவும் செய்கிறான் என்பதும் தெளிவாகிறது. நான் குறிப்பிட்ட வேத வசனங்கள் அனைத்தும் சாத்தான் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்ததற்குப் பின்பு நடந்தவை என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே இதிலிருந்து என்ன புலனாகிறது? ஒன்றுக்கு மேற்பட்ட வானங்கள் உண்டு. வேதவாக்கியங்கள் இதனை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக ஆதியாகமம் 1:1இல் "ஆதியிலே தேவன் வானத்தையும் (வானங்களையும்) பூமியையும் சிருஷ்டித்தார்." வானங்கள் என்பதற்கான எபிரெயு பதம் **ஷமாயிம்** என்பதாகும். "இம்" என்று முடியும் வார்த்தை பன்மையைக் குறிக்கும். முதல் முறையாக வானத்தைக் குறிப்பிடும்போது பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவாலயப் பிரதிஷ்டையின் போது சாலொமோன் தேவனை நோக்கி ஜெபித்த ஜெபத்தில் இதைக் குறித்து கூறுவதை 2 நாளாகமம் 2:6ல் நாம் வாசிக்கலாம். "வானங்களும் வானாதிவானங்களும் அவரைக் கொள்ளக்கூடாதிருக்க அவருக்கு ஓர் ஆலயத்தைக் கட்ட வல்லவன் யார்?

மொழி பெயர்ப்பின் போது "உயர்ந்த வானங்கள்" எபிரெயு மொழியில் "வானாதி வானங்கள்" என்ற அர்த்தமுள்ளதாக கூறப்பட்டுள்ளது. எனவே ஒரு வானத்திற்கு மேல் உள்ளதாக அறியலாம். "வானாதி வானங்கள்" என்பதில் உள்ள "வானம்" என்பது பூமிக்கு எப்படி வானம் உள்ளதோ அதுபோல வானங்களுக்கெல்லாம் வானம் என்று கொள்ளலாம்.

2 கொரிந்தியர் 12:2–4இல் பவுல் இன்னமும் தெளிவாகக் கூறுகிறது வருமாறு:

> **2 கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.**
>
> **3 அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்.**
>
> **4 அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.**

நான் ஊழியத்திற்கு வரும் முன்பதாக நான் ஒரு தர்க்கவாதியாக

இருந்தேன். சில சமயங்களில் தர்க்கம் செய்வதிலிருந்து விலகியிருக்க முடியவில்லை. இதன் மூலம் நான் அறிவது என்னவெனில் மூன்றாம் வானம் இருக்குமென்றால் முதலாவதும் இரண்டாவதுமான வானங்கள் உண்டு. குறைந்த பட்சம் மூன்று வானங்கள் உண்டு. மூன்றாம் வானம் பரதீசு ஆகும். அங்கே தேவனுடைய பிள்ளைகளின் ஆவிகள் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கின்றன. அங்கேதான் தேவனும் வாசம் செய்கிறார்.

எபேசியர் 4:10ல் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது:

**"இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.**

'எல்லா வானங்களும்" என்ற சொற்றொடரை கவனியுங்கள். "எல்லா" என்ற வார்த்தை இங்கு மூன்றைக் குறிக்கும். கென்யா நாட்டில் நான் ஆப்பிரிக்க மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்தபோது ஒரு மாணவன் என்னைப்பார்த்து "**எல்லா** பெற்றோரும் என்னைப் பார்க்க வந்திருந்தனர்" என்று கூறினார். "அதற்கு நான் '**எல்லா** பெற்றோரும்' என்று சொல்லாதே. ஒருவருக்கு இரண்டு பெற்றோருக்கு மேல் இருக்க முடியாது. உனக்கு இரண்டு பெற்றோர் (தாய், தகப்பன்) மட்டுமே இருப்பார்களென்றால் நீ 'எல்லா' என்று கூற முடியாது என்று கூறினேன்." "எல்லா வானங்களும்" என்ற வார்த்தையையும் அவ்வாறே எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே குறைந்த பட்சம் மூன்று இருக்க வேண்டும். வேத வாக்கியங்களில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. சாத்தானின் அரசு எப்படி வானமண்டலங்களிலுள்ளது என்ற கேள்விக்கு இதன் மூலம் நாம் விடை காணலாம்.

பேச்சு வழக்கில் "ஏழாவது வானம்" என்பதை நல்ல சந்தோஷமான சூழ்நிலையைக் குறிக்க நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் இது வேதத்திற்கு முரண்பட்டதாகும். உண்மையில் இந்த வார்த்தை இஸ்லாமியர்களின் தூய குரானிலிருந்து எடுக்கப்பட்டதாகும். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் இதனை உபயோகிப்பது தவறாகும். ஆனால் சந்தோஷமான சூழ்நிலையைக் குறிக்க "உயர்ந்த மேக மண்டல சூழ்நிலை" (Cloud nine) என்று கூறுவது சிறந்தது என நான் கூற விரும்புகிறேன். ஆகாயத்தில் அதிகமான மேகங்கள் உள்ளதால் இவ்வாறு கூறுவது வேத வாக்கியங்களுக்கு ஒத்ததாகும். இயேசுவானவர் மேகத்தின் மீது வருவார்.

என் எண்ணத்தின்படி மூன்று வானங்கள் உண்டு. ஆனால் இது நிரூபிக்கப்பட்ட ஒன்றல்ல. அனுபவத்தின் வாயிலாகவும் வேதத்தினடிப்படையிலும் இது சரி என்று நான் நம்புகிறேன். மூன்று

வானங்கள் என்பன யாவை? நம் கண்ணால் காணும் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் உள்ள வானம் முதலாவதாகும்.

மூன்றாம் வானம் என்பது 2 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் நாம் காணும் தேவனுடைய வாசஸ்தலமாகும். ஆவிகள் ஓய்வு எடுக்கும் பரதீசு ஆகும். மனிதரால் பேசப்படாத தேவனுடைய வார்த்தைகளை அந்த மனிதன் கேட்ட இடமாகும்.

எனவே இரண்டாம் வானம் தான் விடப்பட்டுள்ளது. நிச்சயமாக இது முதல் மற்றும் மூன்றாம் வானத்திற்கு இடையில் உள்ளதாகும். தேவனுடைய வாசஸ்தலத்திற்கும் நாம் காணும் வானத்திற்கும் இடையில் உள்ளது என்று நான் உணருகிறேன். எனவே இந்த இடைப்பட்ட வானம் தான் சாத்தானுடைய தலைமைச் செயலகம் உள்ள இடம் என்று நான் நம்புகிறேன். எனவே தான் நாம் ஜெபிக்கும்போது போராட்டத்தை உணர முடிகிறது.

சில சமயங்களில் தேவனோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது எவ்வளவு கடினம் என்பதை நம்மால் உணர முடிவதில்லை. சில சமயங்களில் தேவனுடைய சித்தப்படி நாம் ஜெபிக்கிறோம், தேவன் இதனைக் கேட்கிறார் என்று நம்புகிறோம். ஆனாலும் பதில் தாமதிக்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமான காரணம் யாதெனில் தேவனுடைய இருப்பிடத்திற்கும் நாம் காணும் வானத்திற்கும் இடையில் சாத்தானுடைய தலைமைச் செயலகம் அமைந்திருப்பதும் அவனோடு விசுவாசிகளுக்கு போராட்டம் இருப்பதுவுமேயாகும்.

## அத்தியாயம் 3

# தேவதூதர்களின் யுத்தம்

சாத்தானுடைய தலைமைச் செயலகத்தைக் குறித்து இன்னும் தெளிவாக அறிந்து கொள்ள உதவும் நூல் தானியேலின் தீர்க்கதரிசனமாகும். 10ஆம் அதிகாரத்தில் தேவதூதர்களின் யுத்தத்தைக் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேல் மக்களின் எதிர்காலத்தைக் குறித்து தேவனிடத்திலிருந்து வெளிப்படுத்தலை உணர்ந்து கொள்ள தானியேல் ஜெபிக்கிறதை நாம் காண்கிறோம். மூன்று வாரங்கள் தொடர்ந்து ஊக்கமாக ஜெபித்து அவர் தேவனுடைய பாதத்தில் காத்திருக்கிறார். மூன்று வார முடிவில் தேவதூதன் ஒருவன் தானியேலின் ஜெபத்திற்கு உரிய பதிலோடு அவரை சந்திக்கிறான். தேவ தூதனின் மகிமையும் வல்லமையும் அவ்வளவு அதிகமாயிருந்ததால் தானியேலோடு கூட இருந்தவர்கள் அனைவரும் சிதறிப் போகின்றனர். தானியேல் மாத்திரமே அந்த வெளிப்பாட்டை அறிந்து கொள்ளுகிறார். தானியேல் 10:2-6இல் இவ்வாறு வாசிக்கிறோம்.

*2 அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வாரமுழுவதும் துக்கித்துக்கொண்டிருந்தேன்.*

*3 அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை, நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை.*

*4 முதலாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே நான் இதெக்கேல் என்னும் பெரிய ஆற்றங்கரையில் இருந்து,*
*5 என் கண்களை ஏறெடுக்கையில், சணல் வஸ்திரந்தரித்து, தமது அரையில் ஊப்பாசின் தங்கக்கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன்.*

*6 அவருடைய சரீரம் படிகப்பச்சையைப்போலவும், அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப்போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப்போலவும், அவருடைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போலவும்,*

*அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப் போலவும் இருந்தது.*

நான் ஏற்கெனவே கூறியபடி தானியேலின் நண்பர்கள் அனைவரும் இந்த மகிமையின் காட்சியைக் காணக்கூடாதவர்களாய்த் தங்களை மறைத்துக் கொண்டனர். அவ்விடத்தை விட்டகன்று போனார்கள். இப்போது தேவதூதன் தானியேலோடு பேசுகிறான். வசனம் 12–13இல் இப்படி வாசிக்கிறோம்:

*12 அப்பொழுது அவன் என்னை நோக்கி: "தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்."*

முதல் நாள் தானியேல் ஜெபிக்க ஆரம்பித்த போது அவனுடைய ஜெபம் கேட்கப்பட்டு ஒரு பதிலோடு ஒரு தூதன் அனுப்பப்படுகிறான் என்பதை நாம் கவனிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். ஆனாலும் "மூன்று வாரங்களாக" (அல்லது 21 நாட்கள்) அவனால் பூமியிலுள்ள தானியேலிடத்தில் வந்து சேரமுடியவில்லை. மூன்று வாரங்கள் அந்தத் தூதன் பயணப்பட்டு வரவேண்டிய காரணம் என்ன? அவன் சாத்தானுடைய தூதர்களால் தாக்கப்படுகிறான். தேவனுடைய வாசஸ்தலத்திலிருந்து பூமிக்குப் பயணப்பட்டு வருகையில் வானமண்டலத்திலுள்ள சாத்தானின் அரசின் வழியாக வரவேண்டியிருந்தது. ஆகவே தான் அங்கே சாத்தானின் தூதர்கள், தானியேலுக்கு இந்த தூதன் செய்தியைக் கொண்டு செல்ல முடியாதபடி தடுத்து நிறுத்தப் போராடுகின்றனர். 13ம் வசனம் இவ்வாறு கூறுகிறது:

*13 "பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள்மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான்; ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான்; ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன்."*

இவைகள் அனைத்தும் வானமண்டலங்களில் நடைபெற்றன. சாத்தானின் தூதர்களின் தலைவனுக்கு "பெர்சிய தேசத்து அதிபதி" என்று பெயர். அவனைச் சார்ந்த அநேக "அரசர்கள்" அல்லது தூதர்கள் உள்ளனர். தேவனுடைய சார்பில் இத்தூதனுக்கு உதவியது பிரதான தூதன் "மிகாவேல்" ஆவான்.

தானியேல் 12:1இல் மிகாவேல் குறித்து நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

***"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்....."***

"அதிபதி" என்பதைப் "பிரதான தூதன்" என்று கூறலாம். குறிப்பிட்ட இந்த பிரதான தூதனாகிய மிகாவேல் இஸ்ரவேல் மக்களைக் காக்கிறான்.

இஸ்ரவேல் மக்களை விசேஷித்த வகையில் பாதுகாக்க மிகாவேல் தேவனால் கட்டளையிடப்படுகிறான். இஸ்ரவேல் மக்களின் எதிர்காலத்தைக் குறித்த வெளிப்பாடு கொடுக்க வேண்டியதிருந்தபடியால் அவன் எப்படியாவது கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது. முதல் தூதன் தடுத்து நிறுத்தப்பட்டபோது, பிரதான தூதன் மிகாவேல் அவனுக்குத் துணை நின்று சாத்தானின் தூதர்களோடு 21 நாட்கள் யுத்தம் செய்து அவனுக்கு உதவ வேண்டியதாயிற்று.

சாத்தானின் தூதர்கள் பெர்சிய ராஜ்யத்தின் அதிபதிக்கு (உயர்ந்த ஆட்சியாளர்) ஒப்பிடப்படுகின்றனர். இந்த அதிபதிக்குக் கீழே பல சிறிய நாடுகளை ஆண்ட ராஜாக்களும் சிறிய பிரபுக்களும் இருந்தனர். உதாரணமாக ஒரு ராஜா பெர்சிய ராஜ்யத்திலுள்ள ஒரு பெரிய பட்டணத்தையும் மற்றொருவர் ஒரு குறிப்பிட்ட இனத்தையும் மற்றொருவர் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களையும் ஆண்டனர். எனவே கட்டுப்பாடுடன் நல்ல முறையில் இது நிர்வகிக்கப்படுகிற ஓர் அரசையும் அதிலுள்ள பல்வேறு பகுதிகளையும் அறிகிறோம். அவற்றிற்கு உரிய அதிகாரம் தலைமையிடம் ஆகியவை வான மண்டலங்களில் உள்ளன. இவைகள் யாவும் வீழ்ந்துபோன, மீறுதலான ஆவிகளின் கூட்டம் என்பது இதிலிருந்தும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

தானியேல் 10:20இல் மீண்டும் அந்த தூதன் அந்த போராட்டம் குறித்து கூறுகிறான்:

***"20 . . நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம்பண்ணத் திரும்பிப் போகிறேன்; . . ."***

வேறுவகையாகக் கூறினால் பாரசீக அரசில் வலுவோடு இருந்த பொல்லாத சாத்தானின் தூதனோடு நடைபெறும் யுத்தம் இன்னும் முடியவில்லை. தொடர்ந்து இன்னும் யுத்தம் உண்டு. அந்த தூதன் தொடர்ந்து கூறுகிறான்:

***"20 . . நான் போனபின்பு, கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான்."***

இன்னொரு வகையாகக் கூறினால் பாரசீக அரசை ஆண்ட பொல்லாத

சாத்தானின் தூதனை வெற்றி கொண்ட பின்பு அடுத்து எழும்பும் அரசு கிரேக்க நாட்டின் அரசாகும். கிரேக்க நாட்டிற்கும் அதற்கான பொல்லாத தூதன் உண்டு. அவன் தான் கிரேக்க நாட்டை ஆளும் இளவரசனாகும்.

21ஆம் வசனத்தில் தானியேலைப் பார்த்து அந்தத் தூதன் இவ்வாறு கூறுகிறான்:

> 21 "... உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர என்னோடேகூட அவர்களுக்கு விரோதமாய்ப் பலங்கொள்ளுகிற வேறொருவரும் இல்லை."

தேவனுடைய பிள்ளைகளாகிய இஸ்ரவேல் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பில் பிரதான தூதன் மிகாவேல் முக்கியப் பங்காற்றுவதை நாம் காணமுடிகிறது. இஸ்ரவேலைக் குறித்த தேவனின் நோக்கத்தை எதிர்க்கும் சாத்தானின் அரசை ஆளும் சாத்தானின் தூதர்களை மேற்கொள்ளுவதில் இந்த முதல் தூதன் மற்றும் மிகாவேலுடைய மொத்த சக்தியும் ஒட்டுமொத்தமாகப் பயன்படுத்தப்படுவதையும் நாம் காணலாம்.

பாரசீகம் மற்றும் கிரேக்க நாடுகளைக் குறித்து இங்கே குறிப்பிடப்படுவதைக் குறித்து நமக்கு ஆச்சரியம் ஏற்படலாம். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு இஸ்ரவேல் அரசையும் எருசலேமையும் தொடர்ந்து மேற்கொண்ட புறஜாதிகளின் நான்கு அரசுகளைக் குறித்து நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவைகள் பாபிலோன், பாரசீகம், கிரேக்கம் மற்றும் ரோமாபுரியாகும். பாரசீகமும் கிரேக்கமும் குறிப்பிடத்தக்கவைகளாகும். ஏனெனில் அந்த சமயத்தில் இவை இரண்டும் செல்வாக்குள்ளவைகளாகத் திகழ்ந்தன.

தேவனுடைய பிள்ளைகளையும் தேவனின் நோக்கங்களையும் மையமாக வைத்தே இந்த யுத்தங்கள் நடைபெறுவதை தானியேல் புத்தகத்தில் இந்த பகுதிகளின் மூலம் நாம் அறியலாம். இது இன்றும் உண்மை என்று நான் நம்புகிறேன். எங்கெல்லாம் தேவனுடைய பிள்ளைகள் இருக்கிறார்களோ எங்கெல்லாம் தேவனுடைய் நோக்கங்கள் நிறைவேற்றப்படுகிறதோ அங்கெல்லாம் ஆவிக்குரிய போராட்டம் மிகவும் கடுமையாக இருக்கும். நாம் வாழும் இந்த நாட்களில் இப்போராட்டத்தின் மையம் இஸ்ரவேல் நாட்டையும் எருசலேமையும் சுற்றியுமே இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

தானியேலின் பிரார்த்தனை இலாபகரமான விளைவை ஏற்படுத்தியது. தானியேல் உலகத்தில் ஜெபிக்க ஆரம்பித்தபோது பரலோகம் அசைவு கண்டது. மேலும் தேவனுடைய தூதர்களையும்

சாத்தானின் தூதர்களையும் இயங்கவைத்தது. ஜெபம் எப்படி சூழ்நிலையை சாதகமாக மாற்றுகிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

தேவனுடைய தூதர்கள் தங்களுடைய பணியை நிறைவேற்ற தானியேலுடைய ஜெபம் தேவைப்பட்டது என்பது என்னை மிகவும் கவர்ந்தது. மீண்டும் ஜெபத்தின் மிக உன்னதமான பலனை இது விளக்குவதாக உள்ளது.

# அத்தியாயம் 4

# ஆயுதங்களும் போர்க்களமும்

ஆவிக்குரிய யுத்தத்தின் இரு விதமான காரியங்களைக் குறித்து நாம் இப்போது பார்க்கலாம்: முதலாவது நாம் உபயோகிக்கும் ஆயுதம்; இரண்டாவது யுத்தம் நடக்கும் போர்க்களம். இவ்விரண்டினைக் குறித்தும் 2 கொரிந்தியர் 10:3-5இல் நாம் காணலாம். அமெரிக்க மொழி பெயர்ப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது:

3 ***நாங்கள் மாம்சத்தின்படி நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.***

4 ***எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல்...***

இங்கே பவுல் சொல்வதைக் கவனியுங்கள்: நாம் மாம்சத்தின்படி நடக்கிறவர்களாயிருந்தும் மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல. எனவே நாம் உபயோகிக்கும் ஆயுதங்கள் போரின் தன்மைக்கேற்றவாறு அமைந்திருக்க வேண்டும். மாம்சத்திற்கேதுவான அல்லது உடல்ரீதியான யுத்தமாக இருந்தால் மாம்சத்திற்கேற்ற ஆயுதங்களாகிய டாங்கிகள், வெடி குண்டுகள் அல்லது துப்பாக்கிக் குண்டுகள் இவற்றை உபயோகிக்க வேண்டும். ஆனால் இந்த யுத்தம் ஆவிக்குரிய யுத்தமாக இருப்பதால் ஆவிக்குரிய ஆயுதங்களை நாம் உபயோகிக்க வேண்டும்.

4 ***. . .அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது.***

5 ***அவைகளால் நாங்கள் சிந்தனைகளையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா உயர்வான எண்ணங்களையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.***

யுத்தத்திற்கேற்றவாறு நமது ஆயுதங்களும் அமைந்துள்ளதைக் கவனியுங்கள். நாம் கோட்டைகளையும் நிர்மூலமாக்க வேண்டும்.

பழைய ஜேம்ஸ் அரசர் மொழிபெயர்ப்பில் இது இவ்வாறு உள்ளது:

**[3]நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.**

**[4]எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், (உடல் சம்பந்தமாகவோ அல்லது கண்களால் காணக்கூடியதாகவோ) அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாய் இருக்கிறது.**

**[5]அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.**

புதிய அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் மொழிபெயர்ப்பில் "கோட்டைகள்" எனக் குறிக்கப்பட்டுள்ள வார்த்தை கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் "அரண்கள்" என குறிக்கப்பட்டுள்ளது.

நமது யுத்தம் ஆவிக்குரிய யுத்தம் எனவே அவை ஆவிக்குரிய போராயுதங்களாயும் ஆவிக்குரிய போருக்கு உகந்ததாயும் இருக்க வேண்டும். "நமது தற்காப்பு ஆயுதங்கள்" மற்றும் "தாக்கும் ஆயுதங்கள்" ஆகிய தலைப்பின் கீழ் வரும் இரு பகுதிகளிலும் இந்த ஆயுதங்களைப் பற்றி நான் விரிவாகக் கூறியுள்ளேன்.

இந்த யுத்தம் எங்கு நடைபெறுகிறது என்பதை நாம் அறிந்து கொள்வது மிகவும் அவசியம். இந்தப் போர்க்களத்தைப் பற்றியும் நமது நோக்கங்கள் குறித்தும் பவுல் கூறும் போது பல வார்த்தைகளை உபயோகிக்கிறார். அவைகள் வருமாறு: எண்ணங்கள், விவேகம், சிந்தனைகள், தர்க்கங்கள், அறிவு, யோசனைகள். இந்த வார்த்தைகளை கவனியுங்கள். இவைகளனைத்தும் மனம் சம்பந்தமாகக் கூறப்படும் வார்த்தைகளாகும். எனவே **இந்த யுத்தகளம் நமது மனமே என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.** மனித இனத்தின் மனங்களை அடிமை கொள்ள சாத்தான் பெரிய யுத்தத்தை நடத்துகிறான். சாத்தான் மனிதர்களின் மனதில் பலத்த கோட்டைகளையும் அரண்களையும் ஏற்படுத்துகிறான். தேவனுடைய பிரதிநிதிகளாகிய நாம் நமது ஆவிக்குரிய போராயுதங்களை உபயோகித்து இந்த அரண்களை நிர்மூலமாக்கி ஆண்களையும் பெண்களையும் விடுவித்து கிறிஸ்துவிற்கு கீழ்ப்படியும் நிலைக்கு கொண்டு வருவது நமது கடமையாகும். இது ஒரு உத்திரவாதமான பொறுப்பாகும்.

சாத்தான் நோக்கத்தோடும் முறையாகவும் மக்கள் மனதில் பலத்த தவறான கொள்கையின் கோட்டைகளைக் கட்டி நிறுத்துகிறான். இந்த பலத்த துருகங்களும் அரண்களும் சுவிசேஷமும் தேவனுடைய வார்த்தையும் கிரியை செய்ய முடியாதபடி தடைசெய்கின்றன.

இப்படிப்பட்ட அரண்கள் பற்றி வேதம் என்ன கூறுகிறது? இருவிதமான அரண்கள் மக்களின் மனதில் கிரியை செய்கிறதைக் குறித்து நான் கூற விரும்புகிறேன். "தப்பெண்ணங்களும்" "முன்கூட்டியே அபிப்ராயங்களை ஏற்படுத்துதலும்" இவ்வரண்கள் ஆகும்.

நீங்கள் இந்த விளக்கத்தைக் கேள்விப்பட்டிருப் பீர்கள். "நீங்கள் எதைக் குறித்து மேலும் பேச விரும்பவில்லையோ அதன் அடித்தளத்தில் தப்பெண்ணம் குடிகொண்டிருக்கும்" என்ற விளக்கத்தை கேட்டிருப்பீர்கள். வேறு வகையாகக் கூறினால் ஒரு பொருள் பற்றி உங்களுக்கு எதுவுமே தெரியாத நிலையில் அதை மனதிற் பதித்திருப்பதில் தவறு உண்டு. நீங்கள் அதைக் குறித்து மேலும் தெரிந்துகொள்ள முயற்சிக்காவிடில் அது ஆபத்தானதாகும். இது எல்லாரையும் விட மத சம்பந்தப்பட்ட மக்களின் வாழ்வில் அதிக உண்மையாய் உள்ளது. மார்க்க சம்பந்தமான மக்கள் எதைப்பற்றிக் கேள்விப்படவில்லையோ அதைக் குறித்து சந்தேகத்தோடும் பயத்தோடும் நோக்குகின்றனர்.

தப்பெண்ணம் குறித்து வேறு ஒரு கூற்றும் உண்டு. "என் மனதில் திடமாய்த் தீர்மானித்து வைத்த காரியத்திற்கு முரணாய்க் கூறி என்னைக் குழப்பாதே" என்பர். இது தான் தப்பெண்ணம். ஒரு மனிதனின் மனது ஏற்கெனவே தீர்மானமாய் அமைந்த பொழுது வேறு எந்த வகையான செய்திகளோ, காரியங்களோ, நிகழ்ச்சிகளோ, உண்மைகளோ அதை மாற்றுவது அரிது. இத்தகைய அரண்களை ஆவிக்குரிய ஆயுதங்கள் மட்டுமே மாற்ற முடியும். மக்கள் தப்பெண்ணங்களாலும் ஏற்கெனவே நிறைவு பெற்ற எண்ணங்களாலும் ஆட்கொள்ளப்படுகின்றனர் இது அவர்களை அழிவுக்கு நேராக வழிநடத்திச் செல்கின்றன. நான் ஒரு ஆங்கிலேயனாக இருப்பதால் ஒரு நிகழ்ச்சி என்னை மிகவும் கவர்ந்தது.

அமெரிக்க புரட்சிப் போரின்போது அமெரிக்க புரட்சியாளர்களை எதிர்த்து போர்வீரர்கள் சண்டையிட்டனர். ஆங்கிலேயர்களின் போர் முறைப்படி போர் வீரர்கள் இராணுவ உடையணிந்து டிரம்கள் முழங்க போருக்குச் செல்வர். ஆனால் அமெரிக்கப் புரட்சியாளர்கள் சதுப்பு நிலம், மரங்கள் இவற்றின் பின்னே ஒளிந்திருந்து இவர்களுக்குத் தெரியாத வண்ணம் வீரர்களைச் சுட்டு வீழ்த்தினர். இன்றைய கணிப்புப்படி இது இராணுவ தற்கொலையாகும். ஆனால் அந்த நாட்களில் போர் என்றால் இதைத் தவிர வேறு எதனையும் அவர்கள் அறிந்திலர். தப்பெண்ணங்களும் தாங்கள் கொண்டுள்ள சிந்தனைகளுமே ஆயிரக்கணக்கான ஆங்கிலேய போர்வீரர்கள் மடியக் காரணமாயிற்று. மனதின் தப்பெண்ணம் எவ்வாறு மக்களை அழிவுக்கு நேராக வழி நடத்திச் செல்கின்றது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்.

இது தவிர மக்களின் மனதை இறுகப் பற்றியிருக்கும் தப்பெண்ணங்கள்: மார்க்க வழி முறைகள், அரசியல் நெறிமுறைகள், இனப்பாகுபாடுகள் ஆகியன ஆகும். இத்தகைய காரியங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் அடிக்கடி காணலாம்.

சில நாட்களுக்கு முன் நான் தென் ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்து கொண்டிருந்தேன். அதிகாரங்கள் மற்றும் ஆவிக்குரிய யுத்தம் குறித்து பேச அழைக்கப்பட்டேன். அதைக் குறித்துத் தியானிக்கையில் தென் ஆப்பிரிக்காவில் பிரபலமான ஒரு மனிதனைக் குறித்து தேவன் வெளிப்படுத்தினார் அவர் தனது எண்ணங்களில் பிடிவாதக்காரர். "பைகாட்" (bigot) என்ற ஆங்கில வார்த்தைக்கு அகராதியில் அர்த்தம் பார்த்தேன். அதில் இவ்வாறு இருந்தது: "தனது எண்ணங்களைக் குறித்து சரியாக அறிந்து கொள்ளாமல் அதற்குத் தகுதியற்ற முக்கியத்துவம் கொடுத்தல்." இது தான் "பைகாட்" இதுவும் ஒரு அரண். இதனையும் மக்கள் மனதில் பதித்து விடுகிறான் சாத்தான்.

நான் எனது செய்தியை முடித்த போது தென் ஆப்பிரிக்காவில் பிறந்தவரும் அந்த நாட்டைப் பற்றி நன்கு அறிந்தவருமான ஓர் ஊழியக்காரன் என்னைப் பார்த்து நீங்கள் தென்ஆப்பிரிக்காவின் பிரச்சினைகள் குறித்து அதிகமாகப் பேசியிருக்கக் கூடாது. "தென்னாப்பிரிக்காவில் மக்கள் மத்தியில் தங்கள் சிந்தனைகள் குறித்து பிடிவாதம் அதிகம். மார்க்க சம்பந்தமாகவும் இன. பிரிவு சம்பந்தமாகவும் இது அதிகம். இந்த நாட்டின் முக்கியப் பிரச்சனையே இந்தப் பிடிவாத குணம் தான்." தனிப்பட்ட முறையில் தென்ஆப்பிரிக்கர்கள் நற்குணம் படைத்தவர்கள். ஆனால் அவர்கள் மனங்கள் பிடிவாத குணத்தால் நிறைந்துள்ளது. தென் ஆப்பிரிக்க மக்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவர்கள் என்று நான் கூறவில்லை. ஆனால் அவர்களுக்கென்று தனியாக ஒரு அரணை அமைத்துக் கொண்டுள்ளனர். 2 கொரிந்தியர் 4:4 இவ்வாறு கூறுகிறது.

> *'தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.*

அரண் என்பது மனிதர்களின் மனத்தை குருடாக்கி அருட்செய்தியின் ஒளி பிரகாசிக்க முடியாமல் செய்கிறது. ஒரு மனிதன் இவ்வித நிலையில் இருந்தால் அவருடன் நாம் வாதாட முடியாது. நாம் வாதாட வாதாட அவர்கள் தங்களுடைய தவறுகளிலேயே மிகவும் உறுதியாக நிற்பர். அப்படிப்பட்ட மக்களை விடுவிக்க ஒரே வழி நம்முடைய ஆவிக்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி அவர்களுடைய மனதிலுள்ள அரண்களை நிர்மூலமாக்குவதேயாகும்.

# அத்தியாயம் 5

# நமது வெற்றியின் அடிப்படை

நமது ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றிபெற நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு காரியத்தைக் குறித்து நான் இப்போது இப்போது விளக்கப்போகிறேன். நமக்குப் பதிலாக சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலமாய் விசுவாசிகளாகிய நமக்கு தேவன் நிறைவேற்றின காரியத்தை கொலோசெயர் **2:13-15**ல் பவுல் விவரித்துக் கூறுகிறார்:

> *13 உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து;*
>
> *14 நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;*
>
> *15 துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.*

இந்தக் காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டுமென்று சாத்தான் விரும்புகிறான் என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன். எல்லா கிறிஸ்தவர்களும் இதை அறியாதிருக்க வேண்டுமென சாத்தான் விரும்புகிறான். ஏனெனில் இது தான் அவனது தோல்விக்கு முக்கிய காரணம் ஆகும். மிகவும் முக்கியமான காரியம் இது தான்: ***இயேசுவானவர் ஏற்கெனவே சாத்தானையும் அவனுடைய பொல்லாத வல்லமையையும் அதிகாரத்தையும் முற்றிலுமாக மேற்கொண்டு ஜெயித்தார்.***

நீங்கள் எதை ஞாபகம் வைக்கிறீர்களோ இல்லையோ இதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ***இயேசு சாத்தானையும் அவனது பொல்லாத வல்லமையையும் அதிகாரங்களையும் முற்றிலுமாக தோல்வியடையச் செய்தார்.*** இதனைத் தனது கல்வாரிச் சிலுவை மரணத்தின் மூலமாயும் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாயும் அவர்

ஜெயமான உயிர்த்தெழுதல் மூலமாகவும் நிறைவேற்றினார்.

இதனை எப்படி நிறைவேற்றினார் என்பதை அறிய, நமக்கு விரோதமாக சாத்தான் பயன்படுத்தும் பிரதான ஆயுதம் பற்றி காண்போம். அந்த ஆயுதம் குற்ற உணர்வு என்பதாகும். வெளி. 12:10 இவ்வாறு கூறுகிறது:

**[10]அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: "இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப் போனான்."**

சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? அது சாத்தான் என்று நாம் அறிவோம். சாத்தான் தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்கிறான் என்றும் அவனுடைய முக்கிய வேலை இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவதாகும் என்று நான் ஏற்கெனவே கூறியுள்ளேன்.

சாத்தான் ஏன் நம்மேல் குற்றஞ்சுமத்துகிறான்? அவனுடைய நோக்கம் என்ன? ஒரே வார்த்தையில் கூறினால், நம்மை குற்ற உணர்வு அடையச் செய்ய வேண்டுமென்பதேயாகும். நாம் குற்ற உணர்வு உடையவர்களாயிருக்கும் வரை நாம் அவனைத் தோற்கடிக்க முடியாது. குற்ற உணர்வு நமது தோல்விக்கு முக்கிய காரணம். நீதி நமது வெற்றிக்கு மூல காரணமாகும்.

கடந்த காலம் மற்றும் வருங்காலத்தில் நமது குற்ற உணர்வின் பிரச்சனையை சிலுவையின் மூலம் தேவன் தீர்த்துள்ளார். இரண்டுக்குமே தேவன் முழுவதுமாக தீர்வு ஏற்படுத்தியுள்ளார். முற்காலத்தை தேவன் எப்படிக் கையாளுகிறார்? கொலோசெயர் 2:13ல் "அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து;" என்று கூறப்பட்டுள்ளது.

நமது குற்ற உணர்வை சுமந்து கொண்டும் பாவத்திற்கான தண்டனையை ஏற்றுக் கொண்டும் நமக்காக இயேசு கிறிஸ்து மரித்ததன் மூலம் தேவன் நமது அனைத்து பாவச் செயல்களையும் மன்னிக்கிறார். இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாய் தேவனுடைய நீதி விளங்குவதால் நமது அனைத்துப் பாவங்களையும் அவர் மன்னிக்கிறார். நமது அனைத்து கடந்த காலப் பாவங்களையும் அவைகள் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் எவ்வளவு மோசமானதாக இருந்தாலும் நமது விசுவாசத்தை இயேசுவின் மேல் வைக்கும்போது அவைகள் மன்னிக்கப்படுகின்றன.

எதிர்காலத்துக்கான காரியங்களையும் தேவன் நமக்கு ஏற்படுத்தியுள்ளார். இது கொலோசெயர் 2:14ல் கூறப்பட்டுள்ளது:

**14 நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;**

"கையெழுத்து" என்பது மோசேயின் நியாயப்பிரமாணம். தேவனிடமிருந்து நீதியைப் பெறுவதற்காக இயேசு சிலுவையில் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குலைத்துப் போட்டார். மோசேயின் நியாயப்பிரமாணம் தான் அளவுகோலாக வைக்கப்பட்டிருந்தவரை ஒவ்வொருமுறையும் அதில் ஒரு சிறு காரியத்தில் தவறும்போதும் நாம் தேவனுக்கு முன்பாக குற்றவாளிகளாக மாறுகிறோம். ஆனால் நீதியைப் பெற நியாயப்பிரமாணம் தான் தேவை என்ற நிலை மாற்றப்பட்ட போது நீதியைப் பெற **விசுவாசமே** தேவை என்பதினால் குற்றமற்ற வாழ்வு வாழும் தகுதியைப் பெறுகிறோம்.

ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரு வேத பகுதிகள் உள்ளன. ஒன்று ரோமர் 10:4இல் உள்ளது:

**4 விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.**

முக்கியமான கூற்று ஒன்று உண்டு. யூதனோ, புறஜாதியோ, கத்தோலிக்கரோ, புரோட்டஸ்டேன்ட்டோ இதில் எந்தப் பாகுபாடும் இல்லை. தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியாகவோ, இஸ்ரவேல் நாட்டின் சரித்திரத்தின் ஒரு பகுதியாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ அவர் நியாயப்பிரமாணத்தின் முடிவாக மாறவில்லை. தேவனுடைய நீதியைப் பெறவே அவர் நியாயப்பிரமாணத்தின் முடிவானார். நாம் நீதிமான்களாவதற்கு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தேவையில்லை.

இரண்டாம் வேத பகுதி 2 கொரிந்தியர் 5:21:

**21 நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.**

இது ஒரு தெய்வீக பரிமாற்றம். தேவனுடைய நீதியோடு நாமும் நீதிமான்களாக்கப்பட இயேசு நமக்காகப் பாவமாக்கப்பட்டார். கிறிஸ்துவின் நீதியோடு நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் உணரும்போது குற்ற உணர்வுடையவர்களாக மாற்ற பிசாசினால் கூடாது. சாத்தானுடைய முக்கிய ஆயுதம் அவனிடமிருந்து

பறிக்கப்படுகிறது. சிலுவை மரணத்தின் மூலமாக இயேசு அதிகாரங்களையும் வல்லமையையும் குலைத்துப் போடுகிறார். நமக்கு விரோதமான ஆயுதத்தை அவைகளிடமிருந்து அவர் பறித்துக் கொண்டார்.

இயேசுவின் வெற்றி நம் மூலமாகச் செயல்படுவதைக் குறித்து உங்களுக்கு விளக்க உள்ளேன். கொலோசெயர் 2:15இல் இயேசுவின் வெற்றி குறித்து நாம் பார்த்தோம்:

***15 துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.***

வெற்றி சிறப்பது என்பது வெற்றியை ஜெயித்துப் பெறுவதல்ல. ஏற்கெனவே பெற்ற வெற்றியை கொண்டாடித் தெரிவிப்பதாகும். இயேசு, தனது சிலுவை மரணத்தின் மூலம் சாத்தானின் அரசின் மேல் பெற்ற முழு வெற்றியை உலகத்திற்கு விளங்கப்பண்ணினார். இருப்பினும் இயேசு அந்த வெற்றியைத் தமக்காக ஜெயித்துப் பெறவில்லை, அவருக்கு அது தேவையுமில்லை. அதை நமக்காக வென்றார். அந்த வெற்றி நம்மூலம் கிரியை செய்து வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே தேவனின் நோக்கமாகும். 2 கொரிந்தியர் 2:14ல் பவுல் இவ்வாறு கூறுகிறார். (இது எனக்குப் பிடித்தமான வசனங்களில் ஒன்று.)

***14 கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.***

பவுல் "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று கூறுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்த வசனத்தின் செய்தியை அறிந்து கொள்வோமென்றால் கர்த்தரை ஸ்தோத்தரிப்பது மட்டும் போதாது. சாத்தானின் அரசின் மேல் கிறிஸ்துவின் வெற்றியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். இதில் இரண்டு வினை உரிச்சொல்கள் உண்டு. அவைகள்: "எப்பொழுதும்" மற்றும் "எல்லா இடங்களிலேயும்" எனவே, சாத்தானின் அரசின் மேல் கிறிஸ்து பெற்ற வெற்றியை பகிர்ந்து கொள்ள நேரமோ இடமோ கிடையாது.

மத்தேயு 28:18-20இல் இயேசு கூறுகிறார்:

***18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.***
***19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும்***

***சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,***

***[20]நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.***

அவருடைய சிலுவை மரணத்தின் மூலம் சாத்தானிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துக் கொண்டார். மேலும் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் தேவன் அவருக்குக் கொடுத்தார் என்று இயேசு கூறுகிறார். "ஆகையால், புறப்பட்டுப்போய். . . சீஷராக்குங்கள்." என்கிறார். இங்கே "ஆகையால்" என்பதன் முக்கியத்துவம் என்ன? "நான் அதிகாரத்தை வென்று பெற்றேன் எனவே நீங்கள் போய் அதைப் பயன்படுத்துங்கள். எனது கட்டளையை நிறைவேற்றுவதன் மூலம் இந்த உலகம் முழுவதிலும் இதனை செயல்படுத்திக் காட்டுங்கள்" என்று இயேசு கூறுகிறார்.

இயேசுவின் வெற்றி குறித்து மூன்று முக்கியக் காரியங்களைக் கூற விரும்புகிறேன். முதலாவது வனாந்தரத்தில் சோதனையின்போது தானாக சாத்தானை ஜெயித்தார். சாத்தானை சந்தித்தார். அவனுடைய சோதனையை மேற்கொண்டார். கடைசியாக அவனைத் தோற்கடித்தார். இரண்டாவதாக சிலுவையின்மேல் தனக்காக அல்ல நமது சார்பாக நமக்காக சாத்தானைத் தோற்கடித்தார். அவருக்கு வெற்றி தேவைப்படவில்லை. ஏனெனில் அதனை ஏற்கெனவே பெற்றுவிட்டார். எனவே நமக்காக வெற்றிவாகை சூடினார். நமது எதிரியை வென்று ஜெயித்தார். அவனை நிராயுத பாணியாக்கி உரிந்துகொண்டு, அவனை நமக்கு முன்பாகக் காட்சிப் பொருளாக்கினார். மூன்றாவதாக இயேசுவின் வெற்றியை நாம் உபயோகப்படுத்துவது நமது கடமையாகும்.

***[14]கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.***

***2 கொரிந்தியர் 2:14.***

"எப்பொழுதும்", "எல்லா இடங்களிலேயும்" கிறிஸ்து நமக்காக வெற்றியை ஏற்படுத்திக் கொடுக்கிறார் என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

பகுதி 2

# நமது பாதுகாப்புக் கவசம்

## அத்தியாயம் 6

# தேவனுடைய சர்வாயுத வர்க்கம்

இவ்வுலகத்தில் தேவனுடைய அரசின் பிரதிநிதிகளாகிய நாம் கட்டுக்கோப்பான அரசிற்கு விரோதமான போரில் ஈடுபட்டுள்ளோம் என்பது குறித்து நான் ஏற்கெனவே விவரித்துள்ளேன். இது பொல்லாத ஆவிகளின் அரசு (உடலற்ற ஆட்கள்). இதனுடைய செயலகம் வானமண்டலங்களிலுள்ளது.

இந்த யுத்தம் நடக்கும் போர்க்களம், மனிதர்களின் மனங்களாகும். சுவிசேஷத்தின் உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாதபடி தப்பெண்ணத்தினாலும் அவிசுவாசத்தாலும் மனுக்குலத்தின் மனங்களிலே சாத்தான் அரண்களைக் எழுப்பியுள்ளான். இத்தகைய மனதின் அரண்களை நிர்மூலமாக்கி சாத்தானின் தந்திரங்களுக்கு ஆண்களையும் பெண்களையும் விடுவித்து அவர்களை கிறிஸ்துவுக்குள்ளாக கீழ்ப்படியவும் ஒப்புக் கொடுக்கவும் உதவுவதே தேவன் நமக்குக் கொடுத்த பொறுப்பாகும்.

தேவனால் நமக்களிக்கப்பட்ட இந்தப் பொறுப்பை நிறைவேற்ற நமக்குத் தேவையான பலம் இரண்டு முக்கியமான காரியங்களைச் சார்ந்துள்ளது. முதலாவது, நாம் வேதத்தில் வாசிக்கிறபடி நமது சார்பாக இயேசு சாத்தானை சிலுவையில் முற்றிலுமாகத் தோற்கடித்தார். இயேசு நமக்காக ஏற்கெனவே பெற்ற வெற்றியை செயல்படுத்திக் காண்பிப்பது நமது கடமையாகும். இரண்டாவது, தேவன் நமக்களித்த ஆவிக்குரிய போராயுதங்களைச் சரியானபடி உபயோகிக்க வேண்டும். இந்த ஆவிக்குரிய போராயுதங்கள் இருவகைப்படும். அவைகள் பாதுகாப்பு ஆயுதங்கள் மற்றும் எதிர்க்கும் ஆயுதங்கள். இந்தப் பகுதியில் முதல் வகை ஆயுதங்களைக் குறித்து நாம் காணலாம்.

இதற்கு அடிப்படையாக எபேசியர் 6:10–17ஐ எடுத்துக் கொள்வோம்.

**10 கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.**

**11 நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத்**

திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும்
தரித்துக்கொள்ளுங்கள்.

12 ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல,
துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின்
அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள
பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.
13 ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும்,
சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும்
திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய
சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.
14 சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில்
கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்;
15 சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும்
பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்;
16 பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம்
அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக
விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும்
நில்லுங்கள்.
17 இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய
ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

இந்த வசனங்களின் ஆரம்பத்தில் "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்ளுங்கள்" என்று பவுல் கூறுகிறார். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக் கொள்வது குறித்து நாம் கவனிப்போம். "ஆகையால்" என்று வேதத்தில் கூறப்படும் பொழுதெல்லாம் ஏன் அப்படிக் கூறப்பட்டுள்ளது என்பதை கவனிக்க வேண்டும் என்று நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். இங்கே பவுல் "ஏனெனில்" என்று ஏன் கூறுகிறார் என்றால் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல. துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. சாத்தானின் சாம்ராஜ்யத்திலுள்ள பொல்லாத ஆவிகளோடு நமக்கு ஜீவ மரணப் போராட்டம் உண்டு என்பதால் நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்வது அவசியம். இது மிகவும் முக்கியம் என்பதால் இருமுறை "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார் (வசனம் 11, 13). தேவனுடைய முழு சர்வாயுத வர்க்கத்தால் நாம் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று வேத வசனம் நம்மை எச்சரிக்கிறது.

13ம் வசனத்தில் மேலும் ஒரு காரணத்தை பவுல் கூறுகிறார். "தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு.." என்கிறார்.

"தீங்குநாள்" என்ற இந்த சொற்றொடரைக் கவனியுங்கள். இது இந்த உலகத்தில் நடக்கப்போகிற பெரிய வாதையையோ அல்லது ஒரு தீர்க்கதரிசன அழிவையோ குறிப்பதாக நான் கருதவில்லை. (உண்மையில் அப்படிப்பட்ட அழிவுகள் உண்டு என்று நம்புபவன் நான்). ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "தீங்குநாள்" என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனும் எதிர்கொள்ள வேண்டியதொன்றாகும். இப்படிப்பட்ட காலத்தில் அவன் பொல்லாத சக்திகளை எதிர்கொள்ள வேண்டியதாகும். அப்போது அவனுக்கெதிராக எல்லாவிதமான எதிர்ப்புகளும் பிரச்சனைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டு அவனுடைய விசுவாசத்திற்கு சவால் விடப்படும்.

நாம் இப்படிப்பட்ட தீங்குநாளை சந்திக்க வேண்டுமா என்பது குறித்து பவுல் கேள்விக்குறியை எழுப்பவில்லை. இது அவரவர் விருப்பமல்ல ஆனால் இது கட்டாயமாய் எதிர்கொள்ள வேண்டியது. நான் எப்போதும் இயேசு சொன்ன உவமையாகிய வீடு கட்டிய இருவரைக் குறித்து யோசிப்பதுண்டு. புத்தியில்லாத மனிதன் மணலின்மேலும் புத்தியுள்ள மனிதன் கற்பாறையின் மேலும் வீட்டைக் கட்டினர். புத்தியில்லாத மனிதனின் வீடு அழிந்தது ஆனால் புத்தியுள்ளவன் கட்டிய வீடோ நிலைத்திருந்தது. இந்த இரண்டு வீடுகளுக்கும் உள்ள வித்தியாசம் அவைகள் இரண்டிற்கும் நேர்ந்த சோதனையன்று. ஏனெனில் அவைகள் இரண்டிற்கும் ஒரே சோதனைதான் வந்தது. "காற்று, மழை மற்றும் வெள்ளம்" ஆனால் எந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டது என்பது தான் வித்தியாசம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இத்தகைய சோதனைகளினின்று தப்பித்துக் கொள்வது குறித்து வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. "தீங்கு நாளுக்கு" நாம் தப்பிக் கொள்ள முடியாது. அதனை எதிர்கொள்ள ஆயத்தமாயிருக்க வேண்டும். இதைக் குறித்துக் கூறும்போது தான் 'தேவனுடைய முழு சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்ளுங்கள்' என்று பவுல் கூறுகிறார்.

ஒரு ரோமப் போர்ச்சேவகன் பவுலின் நாட்களில் எப்படி ஆடை அணிவானோ அந்த உருவகத்தை மனதில் கொண்டு ஆறு பொருட்களைப்பற்றி பவுல் கூறுகிறார். நான் அவைகளைக் கீழே பட்டியலிடுகிறேன்.

***முதலாவது சத்தியம் என்னும் கச்சை;***

*இரண்டாவது நீதியென்னும் மார்க்கவசம்;*
*மூன்றாவது சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய*
*ஆயத்தம் என்னும் பாதரட்சை;*
*நான்காவது விசுவாசம் என்னும் கேடயம்;*
*ஐந்தாவது இரட்சண்யம் என்னும் தலைச்சீரா;*
*ஆறாவது வேதவசனமாகிய ஆவியின் பட்டயம்.*

இதைக் குறித்து தியானிக்கையில் இந்த ஆறு பொருட்களையும் நீங்கள் அணிந்து கொள்ளும்போது உச்சந்தலை முதல் உள்ளங்கால் மட்டுமாக நீங்கள் முழுவதுமாக பாதுகாக்கப்படுவதை உணர்வீர்கள், ஆனால் ஒரு பகுதியைத் தவிர. அது உங்கள் முதுகுப்பகுதி. அதற்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. இந்தப் பகுதியின் கடைசியில் இது குறித்து விளக்குகிறேன்.

# அத்தியாயம் 7

# சத்தியம் என்னும் கச்சை

முதல் ஆயுதம் சத்தியம் என்னும் கச்சை ஆகும். ரோமப் போர் சேவகனுக்கு ஏன் கச்சை என்னும் ஆயுதம் தேவைப்பட்டது என்பது குறித்து நாம் அறிந்து கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில் ஆண்களின் உடை (பெண்களின் உடையும் கூட) குறைந்தபட்சம் முழங்கால்வரை உள்ள தாராளமாகத் தைக்கப்பட்ட ஆடையாக இருக்கும். ரோமப் போர் சேவகரின் உடை இதைப் போன்று நெடியதாக இருக்கும். ரோமப் போர் சேவகன் வேகமாக ஒரு செயலில் ஈடுபடும் போது அதாவது அவன் போரிடும் போது அல்லது தனது ஆயுதத்தைப் பயன்படுத்தும் போது தன்னுடைய உடையைப் பாதுகாப்பது அவசியம். இல்லாவிட்டால் அவனது ஆடையே அவனைத் தடுக்கிவிட்டு அவன் தன் செயலில் ஈடுபட முடியாமலும் தனது மற்ற ஆயுதங்களைச் சரியான முறையில் பயன்படுத்த முடியாமலும் செயலிழக்கச் செய்யும்.

முதலாவது அவன் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால் தனது இடுப்பில் கச்சையை இறுக்கமாகக் கட்டிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உடை இடைஞ்சல் ஏற்படுத்தாமல் அவனது பணியில் இடையூறு ஏற்படாமல் அவன் காக்கப்படுவான். இது மிகவும் அவசியம் மற்ற எல்லாக் காரியங்களுக்கும் அடிப்படையானதுமாகும். எனவே தான் மற்றதைப்பற்றிக் கூறுமுன்பதாக சத்தியம் என்னும் கச்சையைப்பற்றி பவுல் முதலாவது கூறுகிறார்.

வேதத்தில் அடிக்கடி "கச்சையை இறுக்கிக் கட்டிக் கொள்ளுதல்" பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் இதுதான்.

நமக்குக் கச்சை, சத்தியம் என்று பவுல் கூறுகிறார். அது ஏதோ குணாதிசயத்தைப் பற்றிக் கூறும் வேதத்திற்கடுத்த சத்தியமல்ல. ஆனால் இது தினசரி வாழ்க்கைக்குரிய சத்தியமாகும். அது நேர்மை, உண்மை வெளிப்படையான தன்மையைக் குறிப்பதாகும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் மாய்மாலக்காரர் களாயிருந்தும் நல்லவர்கள்

போல் நடிக்க சிரமப்படுகிறோம். நமது செயலும், சொல்லும் அநேக வைகளில் அர்த்தமற்றதாக உள்ளன. ஆனால் அவைகள் நல்லவைகளாக இருப்பதால் அதைச் செய்கிறோம். நாம் மதச் சடங்காச்சாரமான வார்த்தைகளைப் பேசுகிறோம். ஆனால் அதில் உண்மையில்லை. நாம் செய்யும் அநேகக் காரியங்கள் தேவனைப் பிரியப்படுத்துவதற்காக அல்ல மற்ற மக்களைப் பிரியப்படுத்தவே அவற்றைச் செய்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவ சபைப் பிரிவும் "இயேசு உங்களுக்கு செய்வார் சகோதரனே" என்பது போன்ற சில வார்த்தைகளை அவரவர் பிரிவுக்கு ஏற்பப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இயேசு உதவி செய்ய வேண்டியதில்லை. நீங்கள் தான் உங்கள் சகோதரனுக்கு உதவி செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட மதச் சடங்காச்சார வார்த்தைகள் விரிந்து தொங்கும் ஆடை போன்றது. தேவன் நம்மை செய்யும்படி கூறும் காரியங்களைச் செய்ய முடியாதபடி இவைகள் நம்மைத் தடை செய்கின்றன. நாம் சுறுசுறுப்பான, பலம் வாய்ந்த உபயோகமான கிறிஸ்தவர்களாக இருக்க முடியாதபடி இது தடை செய்கின்றது. மேலும் இது மற்ற ஆயுதங்களை உபயோகிக்க விடாமலும் தடுக்கின்றது.

முதலாவது நாம் சத்தியம் என்னும் கச்சையைக் கட்டிக் கொள்ள வேண்டும். அர்த்தமற்ற பேச்சுகள், மாய்மாலமான காரியங்கள் மதசம்பந்தமான பேச்சுகள் போன்றவற்றை விட்டுவிட வேண்டும்.

அடிக்கடி சத்தியம் என்பது கடைபிடிக்கச் சிரமமான காரியம். நீங்கள் உண்மையில் எப்படிப்பட்டவரோ அதை மற்றவர்களுக்குக் காட்ட வேண்டும். நீங்கள் உங்களை மறைத்துக் கொண்டு மதத்தின் போர்வையைப் போர்த்துக் கொண்டு இத்தனை நாட்கள் இருந்திருக்கலாம். இப்போது உண்மையான சத்தியத்தில் நின்று வெளிப்படையான தன்மையைத் தரித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர வேண்டும். மதச் சடங்காச்சாரங்கள், உண்மையற்ற தன்மை, இனி உங்களில் வேண்டாத தொங்கலாக தேவன் உங்களில் எதிர்பார்க்கிற காரியங்களைச் செய்ய முடியாதபடி அவைகள் தடைசெய்யாமலிருக்க நீங்கள் கச்சையை எடுத்து உங்கள் இடுப்பில் வரிந்து கட்டிக் கொள்ளுங்கள்.

# அத்தியாயம் 8

# நீதியென்னும் மார்க்கவசம்

மனிதனின் முக்கிய உறுப்பாகிய இதயத்தை காப்பது ரோமப் போர்ச் சேவகரின் மார்க்கவசமாகும். நமது வாழ்க்கையில் இருதயம் மிகவும் முக்கியப் பங்காற்றுகிறது என்று வேதத்தில் சாலொமோனின் நீதிமொழிகள் 4:23ல் வாசிக்கிறோம்:

**[23]எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.**

கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள கென்யாவில் ஐந்து ஆண்டுகள் நான் ஆசிரியராகப் பணியாற்றினேன். அங்குள்ள கல்வியறிவற்ற பல பழங்குடி இன மக்களோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டதால் அவர்களுடைய மொழிகளை ஓரளவு கற்றுக் கொண்டேன். ஒரு நாள் ஒரு மாணாக்கனின் அறை சுவற்றின் மீது நீதிமொழிகள் 4:23 மரகோலி மொழியில் எழுதப்பட்டிருப்பதைக் கவனித்தேன். அதை அப்படியே எனக்கு நானே மொழி பெயர்த்து அறிந்து கொண்டேன். அதை நான் எப்பொழுதும் நினைவு கூறுவேன். "உன் முழு பலத்தோடும் உனது இருதயத்தைக் காத்துக்கொள். ஏனெனில் வாழ்க்கையின் அனைத்துக் காரியங்களும் அதனின்று புறப்பட்டு வரும்" என்று அதில் எழுதியிருந்தது.

உங்கள் மனதில் என்ன இருக்கிறதோ அதுதான் உங்கள் வாழ்க்கைப் பாதையை தீர்மானிக்கும். அது நல்லதோ கெட்டதோ உங்கள் மனதிலுள்ளதைப் பொறுத்தது. எனவே எல்லா வகையான தீய காரியங்களுக்கும் நமது மனதை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். நீதியென்னும் மார்க்கவசம் நமது இருதயத்திற்கு பாதுகாப்பாக இருக்கிறது என்று பவுல் கூறுகிறார்.

நீதியென்றால் என்ன என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். ஆச்சரியவிதமாக பவுல் இந்த ஆவியின் பட்டயம் குறித்து வேறு ஒரு நிருபத்தில் கூறுகிறார். 1 தெசலோனிக்கேயர் 5:8ல் அவர் இவ்வாறு கூறுகிறார்:

***[8]பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்.***

இங்கே பவுல் வேறு ஒரு கோணத்தில் மார்க்கவசம் குறித்து விவரிக்கிறார். "விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசம்" என்று கூறுகிறார். இந்த இரு வாக்கியத்தையும் ஒன்றாக வைத்துப் பார்ப்போம். "நீதியென்னும் மார்க்கவசம்", "விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசம்." பவுலின் மனதிலுள்ள நீதியைப் பற்றி இது கூறுகிறது. இது கிரியைகளினாலோ மதச் சட்டங்களினாலோ உண்டாகும் நீதியல்ல. ஆனால் இது விசுவாசத்தின் மூலமாக உண்டாகும் நீதியாகும்.

பிலிப்பியர் 3:9இல் இந்த நீதியைக் குறித்து மீண்டும் கூறுகிறார்:

***[9]நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும். . . . எனத் தொடர்கிறது.***

இங்கு இருவிதமான நீதியைக் குறித்து ஒன்றன்பின் ஒன்றாகக் கூறுகிறார். முதலாவது நியாயப் பிரமாணத்தினால் வருகிற நீதியைக் குறித்துப் பேசுகிறார். இது போதாது என்றும் கூறுகிறார். இதற்குப் பதிலாக விசுவாசத்தின் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிற நீதியைக் குறித்துப் பேசுகிறார். இருதயத்தைக் காக்கிற நீதியென்னும் மார்க்கவசத்தைக் குறித்துப் பேசுகையில் பவுலின் மனதில் இந்த வகையான நீதியே மனதில் உள்ளது. நம்முடைய சுய நீதி என்னும் மார்க்கவசத்தை நாம் அணிந்திருக்கும் வரை அதில் அநேக பெலவீனமான காரியங்களைக் கண்டு தன்னுடைய தாக்குதல்கள் மூலம் ஊடுருவிச் சென்று சாத்தான் நமது இருதயத்தைக் கெடுத்துவிடுவான். நம்முடைய நீதியென்னும் மார்க்கவசத்தையல்ல கிறிஸ்துவின் நீதியென்னும் மார்க்கவசத்தையே நாம் அணிந்துகொள்ள வேண்டும். 2 கொரி. 5:21ல் இவ்வாறு வாசிக்கிறோம்:

***[21]நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.***

நாம் தேவனுடைய நீதியாக மாறியுள்ளோம் என்று வேத வசனத்தின் மூலமாயும் விசுவாசத்தின் மூலமாயும் ஒப்புக்கொள்ள வேண்டும். நமது இருதயத்தையும் நமது வாழ்வையும் பாதுகாக்கும் ஒரே மார்க்கவசம் அதுதான்.

பவுல் வலியுறுத்திக் கூறும் இந்த வகையான நீதி விசுவாசத்தின் மூலம் வருகிறது. எனவே இது விசுவாசம் மற்றும் அன்பின் மார்க்கமாகும். இவ்வகையான நீதியைப் பெற வேறு வழி கிடையாது.

பேதுரு தன்னை மறுதலிப்பான் என்று இயேசு எச்சரித்த இரவுக்கு முந்தின இரவில் இயேசு பேதுருவுக்காக செய்த ஜெபம் என்னைச் சிந்திக்கச் செய்தது. அந்த எச்சரிப்பினூடே "பேதுருவே நான் உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்று கூறுகிறார். பேதுரு தன்னை மறுதலிக்கக் கூடாது என்று அவர் ஜெபிக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பேதுருவுக்கு பல பக்கங்களிலும் இருந்து வந்த அழுத்தங்கள் மற்றும் அவனுடைய குணாதிசயப்படி அவனுடைய பெலவீனம் இவற்றினால் இயேசுவை இவன் மறுதலிப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டிருந்தது. ஆனால் இயேசு ஒரு வித்தியாசமான வேண்டுதலைச் செய்கிறார். இத்தகைய ஜெபம் மட்டுமே பேதுருவுக்கு உதவ முடியும். லூக்கா 22:31-32இல் இயேசு இவ்வாறு கூறுகிறார்:

> *[31]"பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான்.*
>
> *[32]நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன். . . என்றார்."*

"உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு" என்பதை கவனியுங்கள். அவன் ஆண்டவரை காட்டிக் கொடுத்து அதன் மூலம் அவனது பெலவீனத்தையும் தான் ஒரு கோழை என்பதையும் காட்டும் நிலை ஏற்பட்டாலும் அவன் விசுவாசம் மட்டும் ஒழிந்து போகாமல் இருக்குமென்றால் அவன் அனைத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும். இதுதான் விசுவாசம் மற்றும் அன்பின் மார்க்கமாகும். இந்த மார்க்கத்திற்கு விசுவாசமே இன்றியமையாத ஒன்றாகும்.

நாம் ஆராயும் இத்தகைய விசுவாசம் அன்பின் மூலமாகவே கிரியை செய்கிறது. கலாத்தியர் 5:6 இவ்வாறு கூறுகிறது:

> *[6]கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது; அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்.*

பவுல் என்ன கூறுகிறார் என்று நான் எண்ணுகிறேன் என்றால் "எந்த வகையான வெளிப்படையான சடங்காச்சாரங்களோ, மாம்ச நெறிமுறைகளோ போதாது. ஒரே அத்தியாவசியமானதும் கிரியை

வாழ்க்கையில் வெற்றிபெற இன்றியமையாததுமான ஒன்று விசுவாசமேயாகும். இத்தகைய விசுவாசம் அன்பின் மூலமாகக் கிரியை செய்கின்றது. இத்தகைய விசுவாசம் செயலற்றதாகவோ எழுத்தளவிலோ இருக்கக் கூடியதல்ல. இது உற்சாகமாய் செயலாற்றுகிறதாயும் அன்பின் மூலமாகவே கிரியை செய்கிறதாயுமிருக்கிறது."

நான் எவ்வளவுக்கதிகமாய் இதைத் தியானிக்கிறேனோ அவ்வளவுக்கதிகமாய் தடுக்க முடியாத அன்பின் வல்லமையால் ஈர்க்கப்படுகிறேன். உன்னதப்பாட்டு 8:6–7நான் மிகவும் விரும்பும் வசனங்களாகும்:

***[6]நீர் என்னை உமது இருதயத்தின் மேல் முத்திரையைப் போலவும், உமது புயத்தின்மேல் முத்திரையைப் போலவும் வைத்துக் கொள்ளும்; நேசம் மரணத்தைப்போல் வலிது;. . .***

***[7]திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது, வெள்ளங்களும் அதைத் தணிக்க மாட்டாது;...***

"நேசம் மரணத்தைப் போல் வலியது" என்ற வாக்கியத்தைப் பாருங்கள். நாம் அனைவரும் எதிர்கொள்ளவேண்டிய தவிர்க்க முடியாத ஒன்று மரணமாகும். நம்மில் ஒருவர் கூட அதைத் தடைசெய்ய முடியாது. அதனைத் தவிர்க்கவும் முடியாது. வேத வசனம் கூறுகிறது நேசம் மரணத்தைப் போல் வலியது என்று.

இதைப்பற்றி சிந்தியுங்கள் அன்பைத் தடை செய்ய இயலாது. அது எப்போதும் மேற்கொள்ளும். அதைத் தோற்கடிக்க முடியாது. நமது இருதயத்தை களங்கமடையச் செய்து நமது வாழ்க்கையை அழிக்கக் கூடிய எதிர்மறையான சக்திகளாகிய கோபம், மன்னிக்க முடியாத தன்மை, கசப்பு, ஊக்கமின்மை, நம்பிக்கையற்ற நிலை இவற்றினின்று அன்பானது நம்மைப் பாதுகாக்கிறது. வாழ்க்கையின் அனைத்துக் காரியங்களும் இருதயத்திலிருந்து புறப்படுகிறது என்பதை மனதிற்கொள்ளுங்கள்.

இத்தகைய அன்பைக் குறித்து 1 கொரிந்தியர் 13:4-8ல் பவுல் விவரிக்கிறார்.

***[4]அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது,***

***[5]அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,***

***[6]அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.***

*7 சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.*

*8 அன்பு ஒருக்காலும் ஒழியாது. . .*

இப்படிப்பட்ட ஒருக்காலும் ஒழியாத மார்க்கவசம் தான் நமக்கு தேவை. சாத்தான் துளைத்து உட்புகும் பெலவீனமான காரியங்கள் இந்த மார்க்கவசத்தில் இல்லை. பவுல் கூறும் அனைத்துக் காரியங்களிலும் இந்த மார்க்கவசத்தைக் குறிப்பதாக இருக்கிறது. அன்பு எப்போதும் பாதுகாக்கிறது, நம்புகிறது, விசுவாசிக்கிறது, சகிக்கிறது. அன்பின் மூலமாகக் கிரியை செய்கிற விசுவாசத்தின் மார்க்கவசம் உங்களை எப்போதும் பாதுகாக்கிறது. உங்கள் வாழ்க்கையின் முக்கியப் பகுதியாகிய இருதயத்தை ஊடுருவிச் செல்ல சாத்தான் தொடுக்கும் ஒவ்வொரு வகையான தாக்குதலுக்கும் இது உங்களைப் பாதுகாக்கும்.

## அத்தியாயம் 9

# சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை

ரோமப் போர்ச் சேவகர்கள் அணியும் பாதரட்சை பொதுவாக கனமானதாகவும், பலமுள்ளதாகவும் இருக்கும். அதைச் சரியாக பொருத்திக் கொள்ள அதற்கென தோலாலான வார்களும் இருக்கும். ரோமப் போர்ச் சேவகருக்கு பாதரட்சை மிகவும் முக்கியமான சாதனமாகும். ஏனெனில் அவர்கள் வெகுதூரம் வேகமாகச் செல்ல அவர்களுக்கு அவைகள் உதவி புரிகின்றன. அவர்கள் நடந்து செல்ல இவைகள் உதவுகின்றன. படைத்தலைவன் கூப்பிடும்போதும் யுத்த வேளையிலும் சரியான நேரத்திற்குச் செல்ல இவைகள் உதவுகின்றன. நமது படைத்தளபதியாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடக்கவும் அதற்குத் தயார் நிலையிலிருக்கவும் உதவும் பாதரட்சைகளை மனதில் எண்ணிப்பாருங்கள். என்னுடைய சொந்த வாழ்வில் இது உண்மை எனக் கண்டுகொண்டேன்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது வட ஆப்பிரிக்காவிலுள்ள பாலைவனத்திலிருந்த பிரிட்டிஷ் இராணுவத்தின் மருத்துவப் பிரிவில் நான் இரு ஆண்டுகள் பணிபுரிந்தேன். இராணுவ கவசப்பிரிவோடு இணைந்து பணிபுரிந்த போது சில சமயங்களில் இரவு நேரங்களில் எதிரிகளின் பகுதிக்கு வெகு அருகாமையில் இருப்போம். பாலைவனப் பகுதிகளில் எதிரிகளின் பிரிவுகளை இனம் கண்டு கொள்வது மிகவும் கடினம். ஏனெனில் சண்டையானது ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கும். அந்த மாதிரி சமயங்களில் இரவு நேரங்களில் எங்களுடைய காலணிகளைக் கழற்றக் கூடாது என்று எங்கள் படைத்தளபதி கூறுவார். எனவே நாங்கள் எங்கள் பாதரட்சைகளை அணிந்து கொண்டே தூங்குவோம். இதற்கான காரணம் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழும்பும்போது நாம் உடனடியாகச் சுய நினைவுக்கு வர முடியாது. எனவே உங்கள் கால்களில் பாதரட்சை இல்லாவிடில் உங்களைச் சுற்றியுள்ள குழப்பமான சூழ்நிலையில் இருட்டில் உங்கள் பாதரட்சைகளைத்

தேடுவதிலும் பின்பு அவற்றை அணிந்து காலணிச் சரட்டைக் கட்டுவதிலும் உங்களுடைய விலைமதிக்க முடியாத நேரத்தை வீணடிக்க வேண்டிவரும். ஆனால் உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களில் கழற்றப்படாமலேயே கட்டப்பட்டிருக்குமென்றால் நீங்கள் உடனடியாகத் தயாராக முடியும். இதில் முக்கியமான காரியம் என்னவென்றால் தயாராக இருப்பதும் செயற்பட ஆயத்தமாவதுமாகும்.

பவுல் கூறும் இந்த உபகரணம் ஆவிக்குரிய வாழ்விலும் உண்மையானதாகவே உள்ளது. பாதரட்சை அல்லது செருப்பானது "சுவிசேஷத்தின் ஆயத்தம்" என்பதாகும். வேறு வகையாகக் கூறினால் ஏதோ ஒன்றை வைத்துக் கொண்டு தயாராக இருத்தலாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் சுவிசேஷத்தை நன்கு புரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் இரட்சிப்படைந்ததாகவும் மறுபிறப்படைந்ததாகவும் கூறிக் கொள்கின்றனர். ஆனால் எப்படி அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்றோ மற்றவர்கள் எப்படி இரட்சிப்படைவது என்பது குறித்தோ ஞானமாகப் பதில் கூற முடிவதில்லை. "ஆயத்தம்" என்பதில் வேத வசனங்களைப் படிப்பது, மனப்பாடம் செய்வது, ஞானமாக சுவிசேஷ செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் திறமை பெற்றிருப்பது இவைகள் யாவும் அடங்கும். மேலும் பவுல் இதனை "சமாதானத்தின் சுவிசேஷம்" என்றழைப்பதைப் பாருங்கள். இதனை விசுவாசிப்பவர்களுக்கும் கீழ்ப்படிபவர்களுக்கும் இது சமாதானத்தை தருகிற நற்செய்தியாக இருக்கிறது.

சமாதானத்தைக் குறித்து ஒரு காரியம் நிச்சயம். நாம் சமாதானமுடையவர்களாக இருந்தால் தான் மற்றவர்களுக்கு நாம் சமாதானத்தைக் கொடுக்க முடியும். நாம் அனுபவிக்காத ஒன்றை மற்றவர்களுக்கு நாம் கொடுக்க முடியாது.

மத்தேயு 10:12–13 வசனங்களில் இயேசு முதலாவது சீஷர்களை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அனுப்பும் போது கொடுத்த அறிவுரைகளை நாம் காணலாம். அவைகள் வருமாறு:

***12ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும் போது அதை வாழ்த்துங்கள்.***

***13அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்திற்குத் திரும்பக்கடவது. என்றார்.***

மிகவும் விசேஷமான இந்த சொற்றொடரைக் கவனியுங்கள். அந்த வீடு பாத்திரமாயிருந்தால் "நீங்கள் கூறின சமாதானம் அவர்கள் மேல்

வரக்கடவது. . ." நீங்கள் உங்கள் சமாதானத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். நீங்கள் ஒரு வீட்டுக்குள் போகும்போது அவர்களுக்குக் கொடுக்க உங்களிடத்தில் சமாதானம் உண்டா? நீங்கள் அனுபவிக்காத ஒன்றை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாது.

இது எப்படி கிரியை செய்கிறது என்பது குறித்து நான் ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். நீங்கள் மளிகைக் கடைக்குச் சென்று மளிகை சாமான்கள் வாங்கச் செல்லும் ஒரு பெண்ணாக உங்களை நினைத்துக் கொள்ளுங்கள். வேறு ஒரு பெண் அங்கு நின்று கொண்டிருக்கிறாள். அவள் மிகவும் மனமுடைந்த நிலையில் இருக்கிறாள். அந்தப் பெண்ணுக்கு உதவும்படி தேவன் உங்களிடம் சொல்லுகிறார். நீங்கள் என்ன செய்வீர்கள்? "ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனைக்கு வாருங்கள் என்று கூறுவீர்களா?" அது அவளுடைய தேவையைப் பூர்த்தி செய்யாது. அது தான் உங்களுக்கு முடியுமென்றால் நீங்கள் இங்கு கூறப்பட்டுள்ள உங்கள் பாதரட்சையை அணியவில்லை என்று அர்த்தம்.

தேவன் உங்களைப் பார்த்துச் சொல்லும் காரியங்களுக்கெல்லாம் அவ்வப்பொழுது சரியான முறையில் காரியங்களைச் செய்ய ஆயத்தமாய் இருப்பது தான் பாதரட்சையை நீங்கள் அணிந்து கொண்டிருப்பதற்கான அர்த்தம். முதலாவது நீங்கள் சமாதானமுடையவர்களாயிருக்க வேண்டும். அவளிடமில்லாத ஒன்று, அவளுக்கு மிகவும் தேவையான சமாதானம் உங்களிடமுள்ளதாக அவள் உணர வேண்டும். ஒருவரிடத்தில் சமாதானம் குடிகொண்டிருப்பதை பிறரால் புரிந்து கொள்ள முடியும்.

சமாதானம் பெற அவள் உங்களை நாடும்போது எளிமையான மார்க்க சம்பந்தமில்லாத வார்த்தைகளால் சமாதானம் பெறுவது எப்படி என்று விளக்க வேண்டும். சுவிசேஷத்தை அவளுக்குச் சொல்ல நீங்கள் தயாராக இருக்க வேண்டும். "இதுதான் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையாகும்."

# அத்தியாயம் 10

# விசுவாசமென்னும் கேடயம்

கிரேக்க மொழியில் கேடயத்திற்கு வெவ்வேறு வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. அதில் ஒன்று சிறிய வட்டமான கூடையைப் போன்ற கேடயமாகும். மற்றொன்று கதவைப் போல செவ்வக வடிவமாக இருக்கும். இந்த கேடயத்தின் பெயர் கதவு என்ற வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். விசுவாசமென்னும் கேடயம் என்று பவுல் கூறும்போது இந்தக் கேடயத்தைப் பற்றிதான் அவர் குறிப்பிடுகிறார்.

நல்ல பயிற்சி பெற்ற ரோமப் போர்ச் சேவகன் இந்தக் கேடயத்தை உபயோகிக்கும் போது எதிரியின் எந்த வகையான தாக்குதலும் தனது உடலில் படாமல் காத்துக் கொள்ளுவான். அது அவனை முழுவதுமாகக் காக்கும். கேடயம் என்று பவுல் குறிப்பிடுகையில் இத்தகைய விசுவாசத்தைக் குறித்துதான் கூறுகிறார்.

சாத்தானுக்கு எதிராக நாம் புறப்படும்போது அவனுக்கு நாம் தொந்தரவு செய்ய முயற்சி செய்யும் போதும் அவன் எதிர்த்தாக்குதல் தொடுப்பான் என்று நிச்சயம் நாம் அறிந்து கொள்ள வேண்டும். முதலாவது நமது மனது இருதயம் உடல் நமது பொருளாதாரம் இவற்றின் மீது அவன் தாக்குதலைத் தொடுப்பான். எனவே நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நமக்கு கேடயம் அவசியம். அவன் நமது எந்தப் பகுதியை நெருங்க முடியுமோ அதனைத் தாக்குவான். நம்மைத் தாக்க முடியவில்லை என்றால் நமக்கு மிகவும் நெருங்கினவர்களைத் தாக்குவான். நீங்கள் திருமணம் செய்தவராயிருந்தால் முதலில் உங்கள் மனைவியைத் தாக்குவான். இது மிகவும் உண்மை. உங்களுக்கு விரோதமாகப் படையெடுப்பதில் இது ஒரு வகை. கர்த்தர், நீங்கள் பொறுப்பாக இருக்கவேண்டுமென்று உங்களுக்கு கொடுத்த குடும்பம், நீங்கள் மற்றும் அனைத்தையும் பாதுகாக்க மிகப்பெரிய கேடயம் அவசியம். இது குறித்து நான் ஒரு நல்ல பாடம் கற்றுக் கொண்டேன்.

நான் ஒரு முறை தற்கொலையின் ஆவியையுடைய ஒரு பெண்ணுக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் உண்மையில் அற்புதமான விடுதலை பெற்றாள். இதனை அவளும் நன்கு உணர்ந்து

இருந்தாள். நாங்கள் இருவரும் கர்த்தருக்கு நன்றி செலுத்தினோம். அடுத்த நாள் அந்த சகோதரி என்னைப் பார்க்க வந்தார்கள். தான் பெற்ற இந்த அற்புதமான விடுதலை குறித்து விவரித்தார்கள். தான் விடுதலை பெற்ற நேரத்தில் அவரது கணவன் திறந்த ஒரு டிரக்கை நெடுஞ்சாலையில் ஓட்டிச் சென்று கொண்டிருந்தார்கள். டிரக்கின் பின் புறத்தில் அவர்களுடைய ஜெர்மன் ஷெப்பர்டு நாய் நின்று கொண்டிருந்தது (அது அப்படி நின்று கொண்டு வர எப்போதும் பிரியப்படும்). எந்தக் காரணமுமில்லாமல் டிரக் வேகமாகச் சென்ற போது ஜெர்மன் ஷெப்பர்டு அந்த டிரக்கிலிருந்து குதித்து மாண்டுபோனது.

அந்த சகோதரி இதைக் கூறின மாத்திரத்தில் நான் உணர்ந்து கொண்டது என்னவென்றால் தற்கொலைப் பிசாசு இந்தப் பெண்ணை விட்டுப் புறப்பட்டு இந்த நாய்க்குள் புகுந்து கொண்டது. சாத்தான் எப்போதும் தனக்கு மிக அருகாமையிலுள்ள பொருட்களைத் தாக்குவான். நான் ஒரு படிப்பினையைக் கற்றுக் கொண்டேன். மறுபடியும் இதனைக் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை.

நான் எப்பொழுதெல்லாம் விடுதலையின் ஊழியத்தைச் செய்கிறேனோ அப்பொழுதெல்லாம் இயேசுவின் இரத்தத்தின் மூலம் அம்மக்களோடு தொடர்புடைய எல்லாவற்றின் மேலும் பாதுகாப்பை அளிக்கக் கேட்பேன். அதன் பிறகு இம்மாதிரி ஏதும் எனக்கு ஏற்படவில்லை. கர்த்தர் நமக்கு அளித்த எல்லாவற்றையும் பாதுகாக்கும் மிகப்பெரிய கேடயமாக இது பயன்படுகிறது என்ற பேருண்மையை இது எனக்குப் போதித்தது.

இந்த சர்வாயுத வர்க்கத்தில் விசுவாசம் இருமுறை கூறப்பட்டுள்ளது. விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசம் மற்றும் விசுவாசம் என்னும் கேடயம். இரண்டு இடத்திலும் உபயோகிக்கப்பட்டுள்ள "விசுவாசம்" என்னும் வார்த்தையிலுள்ள சிறிய வித்தியாசத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மார்க்கவசம் நமது சொந்த நீதிக்கான விசுவாசம். ஆனால் விசுவாசம் என்னும் கேடயம் நமது சொந்த பாதுகாப்பு மட்டுமல்ல கர்த்தர் நமக்குக் கொடுத்த அனைத்தின் மேலும் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ஆகும். இது எல்லாவற்றையும் மூடிப் பாதுகாக்கிறது.

என்னுடைய வானொலி நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டேன். இந்த ஊழியத்திற்குள் கடந்து வரும் போது நிகழ்ச்சி தயாரிப்பிலும் அலுவலகப் பணியிலும் எத்தனைக் காரியங்களில் தவறு நேர்ந்தது என்று ஆச்சரியப்பட்டேன். நன்றாக வேலை செய்யும் கருவிகள் திடீரென இயங்காமல் போகும். ஊழியர்கள் சுகவீனமடைவார்கள். செய்திகள் தவறாக பதிவு செய்யப்படும்.

எங்களுடைய நன்கு திட்டமிடப்பட்டு செயல்பட்டுவந்த இயக்கத்தில் குழப்பம் ஏற்பட்டது. அப்போது தான் விசுவாசம் என்னும் கேடயத்தை நான் பிடிக்க வேண்டுமென்று உணர்ந்து கொண்டேன். சாத்தான் எதிர்த்தாக்குதல் நடத்தினாலும் என்னை அவனால் அணுக முடியவில்லை. எனவே நான் சார்ந்துள்ள எனது ஊழியத்தைத் தாங்குபவர்களைத் தாக்கினான். ஆனாலும் விசுவாசக் கேடயத்தைப் பிடித்துக் கொண்டு குழப்பத்தின் வல்லமையைக் கடிந்து கொண்டேன். உடனே சமாதானமும் சீரான நிலையும் ஏற்பட்டது. மீண்டும் ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டேன். நமது முழுப்பாதுகாப்பிற்கு விசுவாசம் என்னும் கேடயத்தை நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டும்.

## அத்தியாயம் 11

# இரட்சணியமென்னும் தலைச்சீரா

ஐந்தாவது பாதுகாப்புக் கருவி இரட்சணியமென்னும் தலைச்சீராவாகும். என்னுடைய சொந்தப் போராட்டங்களின் மூலம் நான் கற்றுக் கொண்ட பயனுள்ள பாடங்கள் குறித்து நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய போராட்டங்களை நான் திரும்பிப்பார்க்கும் போது பவுல் ரோமர் 8:37ல் கூறிய வார்த்தைகள் எனது நினைவுக்கு வருகின்றது:

***37** இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.*

"முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்கள்" என்றால் என்ன? இதன் அர்த்தம் என்னவெனில் நாம் யுத்தத்தில் ஜெயம் பெறுவது மட்டுமல்ல. நாம் யுத்தத்திற்கு செல்லுமுன் நம்மிடம் இருந்ததைக் காட்டிலும் அதிகமானது நமக்குக் கிடைக்கும் என்பதாகும். எனது சொந்த அனுபவத்தில் இதனை நான் நிரூபித்துள்ளேன்.

மார்க்கவசத்தைப் பற்றிக் கூறும் போது மார்க்கவசம் இருதயத்தைப் பாதுகாக்கிறது என்பதைப் பார்த்தோம். இப்போது தலைச் சீராவைப் பற்றிப் பார்க்கும் போது இது தலையைப் பாதுகாக்கிறது என்றும் தலை என்பது மனதைக் குறிக்கிறது என்றும், நாம் அறிகிறோம். நமது மனதைப் பாதுகாக்கும் தலைச்சீராவைக் குறித்து நாம் கவனிப்போம்.

இந்த முழு ஆவிக்குரிய போராட்டங்களும் நடைபெறும் போர்க்களம் மனிதர்களின் மனங்களாகும் என்று நாம் ஏற்கனவே பார்த்தோம். நமது மனமே போர்க்களமாக இருப்பதனால் அதனைப் பாதுகாக்க நாம் மிகவும் கவனமாக இருப்பது மிகவும் அவசியமாகும்.

இரண்டாம் உலகப் போரின் போது நான் மருத்துவமனை ஊழியனாகப் பணிபுரிந்தபோது எனது அனுபவத்தின் மூலம் இதனை உணர்ந்திருந்தேன். பொதுவாக தலையில் அடிபட்ட ஒருவர் தனது மற்ற ஆயுதங்களைச் சரிவரப்

பயன்படுத்த இயலாது. அவர் மிகுந்த தைரியமுள்ள ஒரு போர் வீரனாயும் மிகச் சிறந்த ஆயுதங்களை உடையவராகவும் இருந்தாலும் தலையில் அவருக்கு காயம் ஏற்பட்டிருக்குமென்றால் அவர் தனது திறமையையும் தனது சிறந்த ஆயுதங்களையும் முழு வீச்சில் பயன்படுத்த முடியாது.

ஆவிக்குரிய பிரகாரமாகவும் அநேக கிறிஸ்தவ ஊழியக்காரர்களின் காரியத்தில் இது உண்மையாக உள்ளது. பல இடங்களிலுள்ள பல்வேறு ஊழியங்களில் ஈடுபட்டுள்ள ஆண்களும் பெண்களுமாகிய தேவ ஊழியக்காரர்களோடு எனக்கு தொடர்பு வைத்துக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. குறிப்பாக மிஷனெரிமார்கள் (நற்செய்திப் பணியாளர்கள்) ஆவிக்குரிய காரியங்களில் எப்போதும் அதிகமான நெருக்குதல்களுக்குள்ளாகின்றனர். என்னோடு பணிபுரிந்த அநேகர், முழு அர்ப்பணிப்புடைய திறமையுள்ள தேவ அழைப்பைப் பெற்ற ஆண்களும் பெண்களுமான தேவப் பிள்ளைகளாவர். இருந்தாலும் அநேக முறை அவர்கள் தங்களுடைய தலை காயப்பட கவலையீனமாக இருந்துள்ளனர். நான் என்ன கூற விரும்புகிறேன் என்றால், அவர்கள் மனத்தளர்ச்சிக்கும் மற்ற கிறிஸ்தவ ஊழியக்காரர்களை நம்பாத தன்மைக்கும் தங்களை இரையாக்கிக் கொண்டனர். அவர்கள் எப்படி சிறந்த நற்செய்திப் பணியாளர்களாக விளங்க வேண்டுமோ அவ்வாறு விளங்க முடியாத வண்ணம் இவர்கள் மனதில் உள்ள இந்தப் பிரச்சினை இவர்களைத் தடை செய்தது. தலையில் காயமடைந்த காரணத்தால் மற்ற ஆயுதங்களை இவர்களால் உபயோகிக்க முடிவதில்லை.

என்னுடைய சொந்த அனுபவத்தில் அநேக ஆண்டுகளாக மனத்தளர்ச்சியினால் ஏற்பட்ட பலத்த போராட்டத்தை உணர்ந்தேன். கருத்த மேகத்தைப் போன்ற அல்லது பனியைப் போன்றதொன்று என்மேல் அமர்ந்து மற்றவர்களோடு தொடர்பு கொள்ள இயலாத அளவுக்கு என்னை வேதனைப்படுத்தும். ஆவிக்குரிய வரங்கள் நிறைந்த தகுதி வாய்ந்த ஓர் ஊழியக்காரனாக நான் இருந்தபோதும், அது என்னை நம்பிக்கையற்ற நிலைக்கு என்னைக் கொண்டு செல்லும். "மேலும் மற்றவர்களால் முடியும் உன்னால் முடியாது, நீ விட்டுவிடவேண்டியதுதான் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும்."

பல ஆண்டுகளாக இந்த மனத்தளர்ச்சியின் போராட்டத்தில் என்னால் முடிந்ததை எல்லாம் செய்தேன். நான் ஜெபித்தேன், உபவாசித்தேன், தேவனைத் தேடினேன், வேதத்தை வாசித்தேன், ஒரு நாள் கர்த்தர் எனக்கு ஒரு வெளிப்பாட்டைக் கொடுத்தார். அது என் பிரச்சினையைத் தீர்த்தது. நான் ஏசாயா 61:3ஐ வாசித்துக் கொண்டிருந்தேன்:

***3 சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச்***

***சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்;***

"ஒடுங்கின ஆவி" என்ற சொற்றொடரை நான் படித்த போது எனக்குள்ளாக ஒரு துள்ளல் ஏற்பட்டது. நான் சொன்னேன் "அதுதான் என் பிரச்சினை!" "அதிலிருந்து தான் எனக்கு விடுதலை தேவை" விடுதலையைக் குறித்த மற்ற வேத பகுதிகளைப் படித்தேன். விசுவாசத்தோடு ஜெபித்தேன். தேவன் அற்புதவிதமாக ஒடுங்கின ஆவியிலிருந்து விடுதலையைக் கொடுத்தார்.

அதன்பிறகு எனது மனதிற்கு தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்பட்டது. எபேசியர் ஆறாம் அதிகாரத்திலுள்ள பகுதியைக் கவனித்தேன். அது "இரட்சணியமென்னும் தலைச்சீரா" வாகும்.

பின்பு என்னை நானே கேட்டுக் கொண்டது: "நான் இரட்சிப்படைந்த படியால் எனக்குத் தலைச்சீரா கொடுக்கப்பட்டதா? அல்லது தானாகவே கிடைக்கப் பெற்றதா?" ஆனால் இது உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் கிறிஸ்தவர்களாக இருந்த மக்களுக்கு "இரட்சணியமென்னும் தலைச்சீராவை அணிந்து கொள்ளுங்கள்" என்று எழுதுகிறார். 1 தெசலோனிக்கேயர் 5:8ல் கூறப்பட்டுள்ள இதனையொத்த வேத பகுதியைக் காணுமாறு ஏவப்பட்டேன்:

***[8]பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்.***

"இரட்சிப்பின் நம்பிக்கை" என்ற சொற்றொடரை நான் வாசித்த பொழுது, பரிசுத்த ஆவியானவர் உடனடியாக ஒரு காரியத்தை எனக்கு வெளிப்படுத்தினார். மனதிற்குப் பாதுகாப்பு நம்பிக்கை; இருதயத்திற்குப் பாதுகாப்பு விசுவாசம். நாம் இவ்விரண்டையும் ஒன்றாக்கிவிடுகிறோம். வேதத்தின் மேலுள்ள விசுவாசம் இருதயத்திலுள்ளது. "நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும்". வேதத்தின் மேலுள்ள விசுவாசம் இருதயத்தைக் காக்கும் மார்க்கவசமாகும். ஆனால் மனதின் பாதுகாப்பு நம்பிக்கையாகும்.

நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்குமுள்ள தொடர்பைக் குறித்து எபிரெயர் 11:1ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது:

***[1]விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.***

நம்பிக்கை ஊன்றக் கட்டப்படுவதற்கு விசுவாசமானது அடித்தளமாக உள்ளது. நமக்குத் தேவையான அளவு விசுவாசமிருந்தால் தேவையான அளவு நம்பிக்கையும் இருக்கும். நமக்குத் தேவையான அளவு விசுவாசமில்லையென்றால் நமக்குத் தேவையான அளவு நம்பிக்கை இராது. நம்பிக்கையானது விரும்புவதைக் குறித்து எண்ணுவதாகும். நமக்கு உண்மையான விசுவாசத்தின் அடித்தளம் இருக்குமாயின் நமது மனதுக்குப் பாதுகாப்பாக உள்ள நம்பிக்கையைக் கட்டிக் கொள்ள முடியும்.

வேதவாக்கியங்களின்படி நம்பிக்கை என்ற வார்த்தைக்கான அர்த்தத்தை மிகவும் இலகுவாக விளக்க விரும்புகிறேன். தேவனுடைய வாக்குத்தத்த வசனங்களினடிப்படையில் அமைதியான முறையிலும் சீராகவும் நன்மையை எதிர்நோக்குவதே நம்பிக்கையாகும். குறிப்பாகச் சொல்லப்போனால் இது தொடர்ந்து நன்மையை எதிர்நோக்குவதாகும். இது தான் மனதின் பாதுகாப்பு. நம்பிக்கையானது எப்பொழுதும் நன்மையானவற்றையே எதிர்நோக்கியிருக்கும் தன்மையை உடையதாய் மிகச் சிறந்ததை தேர்ந்து கொள்ளுகிறது. இது மனச் சோர்வு, சந்தேகம், சுய இரக்கத்திற்கு இடமளிப்பதில்லை.

ரோமர் 8:28ல் நம்பிக்கையைக் குறித்த அடிப்படையான காரியத்தை நாம் காணலாம்:

> [28] ***அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்".***

நமது வாழ்க்கையில் நடைபெறுகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் தேவனால் நமக்கு நன்மைக்கேதுவாக நடைபெறுவதை நாம் உணருவோமென்றால், எதிர்மறையான எண்ணத்திற்கு இடமே இல்லை. ஒவ்வொரு சூழ்நிலையும் நன்மைக்கேதுவாக நடைபெறக் காரணமாக அமைகின்றது. நன்மைக்கேதுவான சிந்தனை தான் தலைச்சீராவாகும். இதனைத் தலையில் நாம் அணிந்து கொள்ளும் போது சாத்தானின் தந்திரமான நடவடிக்கைகளாகிய, சந்தேகம், சோர்வு, சுயபரிதாபம், அவநம்பிக்கை முதலானவற்றினின்று நமது மனம் பாதுகாக்கப்படுகிறது.

நமது மனதைப் பாதுகாக்கும் தலைச்சீரா நம்பிக்கை என்பதைப் பரிசுத்த ஆவியானவர் எனக்குச் சுட்டிக் காட்டிய போது எனக்கு ஒரு செய்தியையும் கற்றுத் தந்தார். நம்பிக்கையைக் குறித்துப் புதிய ஏற்பாட்டிலுள்ள அனைத்து வேத பகுதிகளையும் ஒவ்வொன்றாக சேகரித்தேன். அவற்றில் சிலவற்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன். ரோமர் 8:24ல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> [24] ***அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். . .***

இதற்கு என்ன பொருள்? நம்பிக்கை இல்லை என்றால் இரட்சிப்பு இல்லை. இரட்சிப்பின் அனுபவத்திற்கு நம்பிக்கை மிகவும் அவசியம். எபேசியர் 2:12ல் இரட்சிப்படையாத மக்களின் நிலை குறித்து நாம் காண்கிறோம்.

*12 அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்.*

கிறிஸ்து அற்ற, நம்பிக்கையற்ற, தேவனற்ற நிலையே இரட்சிப்புப் பெறாத மக்களின் நிலையாகும். ஆனால் இது ஒரு போதும் கிறிஸ்தவனுடைய நிலையல்ல. கிறிஸ்துவை உடையவர்களாக இருப்போமென்றால் நமக்கு நம்பிக்கை உண்டு நமக்கு தேவன் உண்டு. கொலோசெயர் 1:27 இவ்வாறு கூறுகிறது:

*27 புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.*

உண்மையான இரகசியம் மற்றும் சுவிசேஷத்தின் இரகசியம் யாதெனில் "கிறிஸ்து உங்களில்" என்பதேயாகும். கிறிஸ்து உங்களில் இருந்தால் உங்களுக்கு நம்பிக்கை உண்டு. உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால் கிறிஸ்து உங்களிடத்தில் இல்லை என்பது தெளிவு. நீங்கள் இழந்துபோனவர்களல்ல. ஆனால் நீங்கள் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்று வாழ்பவர்கள் இரட்சிப்பின் அனுபவத்தின் முக்கியப் பகுதியை உங்கள் மனதில் நிலை கொள்ளச் செய்யுங்கள். எபிரெயர் 6:17–20இல் நம்பிக்கையைப் பற்றி இரண்டு அழகான காரியங்கள் கூறப்பட்டுள்ளன.

*17 அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்.*

*18 நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.*

*19 அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப்*

***போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.***

***[20]நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.***

நம்பிக்கையைக் குறித்த முதல் வர்ணனை பலிபீடத்தைப் பற்றியதாகும். பழைய உடன்படிக்கையின்படி இரத்தப்பழிக்கு நீங்கலாக இருக்க நினைப்பவர்களுக்கு பலிபீடம் ஒரு பாதுகாப்பு இடமாக இருந்தது. நீங்கள் பலிபீடத்தினிடத்திற்கு ஓடி வந்து விடுவீர்களென்றால் உங்களுக்குப் பாதுகாப்பு உண்டு. உங்களுக்கு விரோதமாக அனைத்துக் காரியங்களும் எழும்பும்போது பலிபீடத்தினிடத்திற்கு ஓடிப்போய் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொள்வீர்களென்றால் உங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது. அந்த பலிபீடம் நம்பிக்கையே.

இரண்டாவதாக நம்பிக்கையானது நங்கூரம் போன்றது. நித்தியத்தில் தேவனுடைய பிரசன்னம்வரை நம்மை நடத்திச் செல்லும். இந்த உலகத்தில் நாம் கடலில் உள்ள படகைப் போன்றவர்கள். நம்மைச் சுற்றிலும் அனைத்தும் தற்காலிகமானது, நிலையற்றது, நம்பத் தகுதியற்றது மற்றும் மாறக் கூடியது. நமக்குப் பாதுகாப்பையும் உறுதியான தன்மையையும் கொடுப்பது எதுவுமில்லை. பாதுகாப்பும் நிலையுள்ள தன்மையும் நமக்குத் தேவையெனில் நித்தியத்திற்கு நம்மை நடத்திச் செல்லும் பிளவுண்ட மலையோடு நம்மை இணைக்கும் ஒரு நங்கூரம் நமக்குத் தேவை. நமக்கு நம்பிக்கை உண்டென்றால் நாம் பாதுகாக்கப்படுவோம்.

கடைசியாக எபிரெயர் 10:23ல் இவ்வாறு வாசிக்கிறோம்:

***[23]. . .நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்;. . .***

தொடர்ந்து நம்பிக்கையோடிருங்கள். நம்பிக்கையை விட்டுவிடாதீர்கள். நலமானவற்றை எதிர்நோக்குங்கள். நம்பிக்கையே உங்களுடைய மனதைப் பாதுகாக்கும் கருவி.

# அத்தியாயம் 12

# ஆவியின் பட்டயம்

நாம் ஏற்கெனவே பார்த்த ஐந்து ஆயுதங்களினின்றும் பட்டயத்தை வேறுபடுத்திக் காண்பிக்கிற ஒரு காரியம் உண்டு. பட்டயமானது முழுவதுமாக ஒரு பாதுகாப்பு ஆயுதமல்ல. இது இல்லாமல் நாம் பிசாசைத் துரத்த முடியாது. ஏனைய ஆயுதங்கள் அனைத்தையும் தரித்துக் கொண்டாலும் நம்மை பிசாசானவன் காயப்படுத்துவதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளலாம், ஆனால் நம்மைவிட்டு அவனைத் துரத்தமுடியாது. அவனைத் துரத்த ஒரே ஆயுதம் வேதவசனமாகிய பட்டயமாகும்.

தேவனுடைய வார்த்தையை வேதாகமம் பட்டயம் என்று கூறுகிறது. ஏனெனில் தேவனுடைய வார்த்தை உருவக் குத்துகிறதாயும் ஊடுருவிச் செல்லுகிறதாயும் இருக்கிறது. எபிரெயர் 4:12ல் இவ்வாறு வாசிக்கிறோம்:

**12 தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.**

தேவனுடைய வார்த்தை மனிதனின் ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதிக்குள்ளும் ஊடுருவிச் செல்லும். நிணத்தினுள்ளும் உடலின் ஒவ்வொரு பகுதிக்குள்ளும் ஊடுருவிச் செல்லும். ஆள் தத்துவத்தின் உட்பகுதியாகிய ஆவியையும் ஆத்துமாவையும் இது வெவ்வேறாகப் பிரிக்கிறது. இருபுறமும் கருக்கான எந்தப் பட்டயத்தை விடவும் இது கருக்கானதாயும் உள்ளது.

வெளிப்படுத்தின விசேஷம் 1:16ல் யோவான் ஒரு தரிசனத்தைக் காண்கிறார். இயேசு மகிமை பொருந்தினவராய் சபையின் கர்த்தராகவும் அவரது வாயினின்று ஒரு பட்டயம் புறப்பட்டு வந்ததாகவும் காண்கிறார்.

**16 தமது வலது கரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார், அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது;....**

இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்ட அந்த இருபுறமும் கருக்குள்ள பட்டயம் தேவனுடைய வார்த்தையாகும். இயேசு தாமே இந்தப் பட்டயமாகிய தேவனுடைய வார்த்தையை உபயோகிக்கிறதை வேதத்தில் வாசிக்கிறோம். இந்த உலக வாழ்க்கையில் எவ்வாறு அவர் தேவனுடைய வார்த்தையை உபயோகித்தார் என்பதை நாம் கற்றுக் கொள்வது நல்லது. இதில் மிகவும் சிறந்த ஒரு பகுதி மத்தேயு 4:1–11ல் இயேசு வனாந்தரத்தில் சாத்தானால் சோதிக்கப்படுகிறதை விளக்கும் நிகழ்ச்சியாகும். ஒவ்வொரு முறையும் அவர் சாத்தானை எதிர்கொள்ளும் போது அவர் உபயோகித்த ஒரே ஆயுதம் ஆவியின் பட்டயம் அல்லது தேவனுடைய வார்த்தையாகும்.

*1 அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.*

*2 அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.*

*3 அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்."*

*4 அவர் பிரதியுத்தரமாக: "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்."*

*5 அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி:*

*6 "நீர் தேவனுடைய குமாரனேயானால்" "தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; 'உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்.' "*

*7 அதற்கு இயேசு: "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்."*

*8 மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:*

*9 "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்."*

*10 அப்பொழுது இயேசு: "அப்பாலே போ சாத்தானே;'உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை*

*செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.'"*

*"அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான். உடனே தேவ தூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.*

**(மத்தேயு 4:1–11)**

இந்த வேத பகுதியின் சில சுவையான காரியங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். வேதவாக்கியங்களின் அதிகாரத்தைக் குறித்து இயேசுவோ சாத்தானோ கேள்வி கேட்கவில்லை. இது ஆச்சரியமாக இல்லையா? குறிப்பாக ஒவ்வொரு முறையும் இயேசு உபாகமம் நூலிலிருந்து மேற்கோள் காட்டினார். இந்த நூலைக்குறித்து வேத அறிஞர்களும் வேதத்தில் உள்ள காரியங்களைக் குறை கூறுபவர்களும் தாக்கிப் பேசுவார்கள். தனிப்பட்ட முறையில் நான் என்ன எண்ணுகிறேன் என்றால் சாத்தான் இக்காலத்து வேத அறிஞர்களைவிட ஞானமுள்ளவனாயிருந்தான் இயேசுவும் சாத்தானும் இந்த வசனங்களின் அதிகாரத்தை நன்கறிந்திருந்தனர்.

இரண்டாவதாக இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனை சந்தேகத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு முறையும் சாத்தான் "இருந்தால்", தேவனுடைய குமாரனேயானால் (if) என்று சந்தேகத்திற்குரியதாகவே ஆரம்பித்து பேசுகிறான்.

மூன்றாவதாக நான் ஏற்கெனவே கூறியபடி சாத்தானுடன் பேசும்போது தன்னுடைய பாணியை மாற்றாமல் தேவனுடைய வார்த்தையாகிய அந்த ஒரே ஆயுதத்தை பயன்படுத்தி "அது எழுதியிருக்கிறதே. . . என்று எழுதியிருக்கிறதே. . . என்று எழுதியிருக்கிறதே...." என்று கூறி சாத்தானை மேற்கொண்டார்.

பிசாசானவனும் வேத வசனங்களை ஆதாரமாகக் கூறுவான். ஆனால் அவன் அதனைத் தவறாகப் பயன்படுத்துவான். அவன் சங்கீதம் 91இலிருந்து எடுத்துக் கூறுகிறான். இயேசு உபாகமப் புத்தகத்திலிருந்து கூறுகிறார். தேவனுடைய குமாரனுக்கு விரோதமாக வேத வசனங்களை உபயோகிக்க சாத்தான் முயற்சிக்கிறான். அவன் இயேசுவுக்கு விரோதமாகவே அவன் இப்படிச் செய்யக் கூடுமானால் உங்களுக்கு விரோதமாக அல்லது எனக்கு விரோதமாக நிச்சயமாக அதைச் செய்வான். வேத வசனங்கள் நமக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். சாத்தானை மேற்கொள்ள இந்த வசனங்களை எப்படி உபயோகிக்க வேண்டுமென்று அறிந்திருக்க வேண்டும். வேத வசனங்களைத் தவறாகப்பயன்படுத்தி நம்மை தவறு செய்யத் தூண்டும் மக்களைக் குறித்து நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

மார்க்க சம்பந்தமான அல்லது வேத அறிவு சம்பந்தமான முறையில் பிசாசுக்கு இயேசு பதில் கூறவில்லை. அவர் எந்த யூத ஜெப ஆலயத்திற்குப்

போகிறார் என்றோ எந்த யூத ரபியிடம் கற்றார் என்றோ அவர் கூறவில்லை. நேரடியாக வேதவசனத்தை உபயோகித்தார். "என்று எழுதியிருக்கிறதே என்று எழுதியிருக்கிறதே... என்று எழுதியிருக்கிறதே..." என்று வசனங்களை உபயோகிக்கிறார். மூன்றாம் முறையாக இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உபயோகித்த வேளையில் சாத்தான் பின்வாங்கிப் போகிறான். நீங்களும் நானும் இந்த ஆயுதத்தை உபயோகிக்கும் சிலாக்கியத்தை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார்.

எபேசியர் 6:17ல் பவுல், ஆவியின் பட்டயமாகிய வேத வசனத்தை குறித்துக் கூறுகிறார். "வார்த்தை" என்பதற்கு கிரேக்கப் பதமாகிய ரேமா அதாவது "பேசப்பட்ட வார்த்தை" என்ற வார்த்தையை உபயோகிக்கிறார். ஆவியின் பட்டயம் என்பது அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் வேதாகமத்தைக் குறிப்பதல்ல. இது சாத்தானை பயமுறுத்தாது. ஆனால் வசனத்தை வாயில் உச்சரித்து நேரடியாகப் பயன்படுத்தும் போது தான் அது ஆவியின் பட்டயமாக மாறுகிறது.

"ஆவியின் பட்டயம்" என்ற சொற்றொடரின் முக்கியத்துவத்தை கவனியுங்கள். விசுவாசிக்கும் பரிசுத்த ஆவியானவருக்குமுள்ள கூட்டுறவை இது குறிப்பதாக உள்ளது. நாம் பட்டயத்தை எடுக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்காக இதனைச் செய்ய மாட்டார். ஆனால் விசுவாசத்தோடு பட்டயத்தை எடுக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அதனைப் பயன்படுத்தத் தேவையான ஞானத்தையும் வல்லமையையும் நமக்குத் தருவார்.

# அத்தியாயம் 13

# பாதுகாப்பற்ற பகுதி

நாம் ஆறுவகையான பாதுகாப்பு கவசம் குறித்து பார்த்தோம். அவைகள் சத்தியம் என்னும் கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசம் என்னும் கேடயம், இரட்சணியமென்னும் தலைச்சீரா மற்றும் தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயம். இவற்றை நாம் அணிந்து கொண்டு தேவன் தந்த அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்தும்போது ஒரு பகுதி தவிர தலை முதல் பாதம் வரை நமது உடலின் அனைத்துப் பகுதிகளும் பாதுகாக்கப்படுகின்றன.

பாதுகாக்கப்படாத அந்த ஒரு பகுதி நமது முதுகு ஆகும். இது மிகவும் முக்கியமானதும் இரு பகுதிகளைக் கொண்டதுமாகும் என்று நான் நம்புகிறேன். முதலாவது சாத்தானுக்கு முதுகைக் காட்டாதீர்கள். அப்படிக் காட்டுவீர்களென்றால் அதற்கு உங்களுடைய பாதுகாப்பற்ற ஒரு பகுதியில் காயப்படுத்த அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்துகிறீர்கள் என்று பொருள். வேறு வகையாகக் கூறினால் ஒரு போதும் அவனுக்கு விட்டுக் கொடுக்காதீர்கள். திரும்பி நின்று கொண்டு "போதும் அவ்வளவுதான்", என்னால் முடியாது" "இனிமேலும் என்னால் செய்ய முடியாது" என்று ஒரு போதும் கூறாதீர்கள். அப்படிச் செய்வது உங்கள் பாதுகாப்பற்ற முதுகைப் பிசாசுக்கு நேராகத் திருப்புவது ஆகும். அப்போது அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவன் உங்களைக் காயப்படுத்துவான்.

இரண்டாவதாக நமது சொந்த முதுகை நாம் எப்போதும் பாதுகாக்க முடியாது. ரோம இராணுவத்தில் காலாட் படையினர் நெருங்கி நின்று போர் புரிவர். இவ்வாறு நெருங்கி நின்று போர் புரிபவர்களுக்கு கிரேக்க மொழியில் ***ஃபாலான்க்ஸ்*** என்று பெயர். அவர்கள் ஒரு போதும் பின்னடையாது போர் புரிய பயிற்றுவிக்கப்பட்டிருப்பர். ஒவ்வொரு போர் வீரனும் தனது வலப்புறமும் இடப்புறமும் போர்புரியும் வீரர்களை நன்கு அறிவார்கள். இக்கட்டான நேரத்தில் தனது முதுகைப் பாதுகாக்க இயலாத போது மற்றொரு போர்வீரன் இவனது முதுகைப் பாதுகாப்பான்.

கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பொறுத்தமட்டிலும் இது உண்மை என்று நம்புகிறேன். நாம் தனித்தனியாகச் சென்று பிசாசின் அரசை எதிர்த்துப் போரிட முடியாது. தேவனுடைய சரீரத்தில் (கிறிஸ்துவின் சேனையில்) நமது இடம் எது என்று தெரிந்து கொண்டு நமது இடது பக்கமும் வலது பக்கமும் யார் நிற்கிறார்கள் என்றும் அறிந்து கொள்ள வேண்டும். நமது உடன் போர்வீரர்களை நம்பவேண்டும். இக்கட்டான சூழ்நிலையில் நமது பின்பக்கத்தைப் பாதுகாக்க முடியாத நேரத்தில் யார் நமக்கு உதவி செய்வார்கள் என்பதைக் குறித்து அறிந்திருக்க வேண்டும்.

நான் ஊழியத்தில் நாற்பது ஆண்டுகாலம் இருப்பதால் இது குறித்து நன்கு அறிவேன். கிறிஸ்தவ அனுபவத்தில் மிகவும் சோகமான காரியம் என்னவென்றால் நமது முதுகைப் பாதுகாக்க வேண்டியவர்களே அதை காயப்படுத்துவதாகும். எத்தனை முறை நமது உடன் கிறிஸ்தவர்கள் நமது முதுகைக் குத்தியிருப்பார்கள்! அப்படிப்பட்ட காரியங்கள் ஒரு போதும் நடக்கக் கூடாது. நாம் அனைவரும் ஒன்றாக நின்று மற்றவர்களுடைய முதுகைக் குத்தாமல் அதனைப் பாதுகாப்போம்.

பகுதி 3

# தாக்கும் ஆயுதங்கள்

## அத்தியாயம் 14

# தாக்கும் நிலையை மேற்கொள்ளுதல்

எபேசியர் 6:14-17 வசனங்களில் பவுல் கூறும் ஆறுவகையான பாதுகாப்பு ஆயுதங்களைப் பற்றிக் கவனித்தோம். சத்தியம் என்னும் கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசமென்னும் கேடகம், இரட்சணியமென்னும் தலைச்சீரா, மற்றும் ஆவியின் பட்டயம். பட்டயத்தைத் தவிர மற்ற ஆயுதங்களனைத்தும் பாதுகாப்பு ஆயுதங்கள் என்று நான் ஏற்கெனவே கூறியிருந்தேன். பட்டயமும் கூட அதை உபயோகிப்பவரின் கையின் நீளத்திற்குமேல் செல்லாது. 2 கொரிந்தியர் 10:4, 5ல் நாம் சாத்தானின் அரண்களை நிர்மூலமாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி பவுல் கூறுவதின்படி சாத்தானின் அரண்களை நிர்மூலமாக்க இங்கு பட்டியலிடப்பட்ட ஆயுதங்கள் ஒன்றுமே நமக்கு உதவாது.

நாம் இப்போது பாதுகாப்பு நிலையிலிருந்து தாக்கும் நிலைக்குச் செல்வோம். சாத்தானின் அரண்களை நிர்மூலமாக்க நமக்குத் தேவையான ஆயுதங்கள் பற்றி கவனிப்போம். நாம் தாக்கிப் போர் புரியும் நிலையை மேற்கொண்டு முன்னேறிச் சென்று சாத்தானின் அரசைத் தாக்குவது நமது கடமை என்பதை உணருவது மிகவும் அவசியம்.

பாதுகாப்பையே கருத்தில் கொள்ளும் இராணுவம் ஒரு - போதும் எந்தப் போரிலும் வெற்றி பெற்றதில்லை என்பது சரித்திரம் நமக்குக் கற்றுத்தரும் பாடம்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலே பிரசித்தி பெற்ற ஒரு பிரெஞ்சு போர்த் தளபதியைப் பார்த்து ஒருவர் இவ்வாறு கேட்டார்: "போரில் எந்தப் படை வெற்றி பெறும்?" அதற்கு அந்தத் தளபதி சொன்ன பதில்: "முன்னேறிச் செல்லும் இராணுவம் தான்."

பின்வாங்கிச் சென்றாலோ அல்லது நமது நிலையிலேயே இருந்தாலோ நாம் போரில் வெற்றி பெற இயலாது என்பது உண்மை. சபைப் பாதுகாப்பு வளையத்துக்குள்ளேயே இருக்கும்படி சாத்தான் கிரியை

செய்யும் வரை அவனுடைய அரசு ஒரு போதும் கவிழ்ந்து போகாது. எனவே நாம் பாதுகாப்பு நிலையைத் தாண்டி முன்னேறிச் சென்று தாக்கும் நிலையை மேற்கொள்வது நமது கடமையாகும்.

இயேசு சபையைக் குறித்த தனது திட்டத்தை வெளிப்படுத்தும் போது சாத்தானுடைய அரண்களை எதிர்க்கும் நோக்கத்துடனேயே பேசுகிறார். மத்தேயு 16:18ல் முதன் முறையாக "சபை" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. இயேசு பேதுருவைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார்:

*18 "மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை."*

வேறு ஒரு திருப்புதலில் "நரகத்தின் அனைத்து வாசல்களும் பலமுள்ளவைகளாயிராது" என்று கூறப்பட்டுள்ளது. கிரேக்க மொழியில் நரகத்திற்கு **ஹேடீஸ்** என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தைக்கு "காணக்கூடாத" அல்லது "கண்ணுக்கு தென்படாத" என்று பொருள். எனவே **ஹேடீஸ்** அல்லது நரகம் என்றால் காணக்கூடாத சாத்தானின் அரசு என்பது பொருள்.

தனது சபைக்கு இரண்டு பிரதான பணி இருப்பதாக இயேசு கூறுகிறார்: கட்டுதல் மற்றும் போர் புரிதல். இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படக் கூடியது. எழுப்பிக் கட்டாமல் போர் புரிதலில் பயனில்லை. மாறாக போர் புரியாமல் எழுப்பிக் கட்ட முடியாது. எனவே சபையைக் கட்ட வேண்டும், அதே சமயத்தில் சாத்தானின் சேனையை எதிர்த்துப் போர் புரிய வேண்டும். இதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அநேகர் இயேசுவின் இந்த வசனங்களைத் தவறாக அர்த்தம் செய்து கொள்கின்றனர். சபையானது சாத்தானின் சேனைகளால் முற்றுகையிடப்பட்டு இருப்பதாக இயேசு கூறுவதாக எண்ணுகின்றனர். இயேசு வந்து சபையை எடுத்துக் கொள்ளும்வரை சாத்தான் கோட்டை வாயிற்கதவை உடைத்து உட்புக முடியாது என்று இயேசு வாக்குத்தத்தம் செய்வதாக அவர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இது சபையின் பாதுகாப்புக் கொள்கை. ஆனால் இது முற்றிலும் தவறானது.

ஆனால், சபையானது எதிர்த்து நின்று சாத்தானின் வாயிற்கதவை தாக்க வேண்டும் என்பதாய் கூறுகிறார். சாத்தானின் வாயிற்கதவுகள் சபைக்கு எதிராக நிற்க முடியாது என்றும் சாத்தான் சபையை வெளியேற்ற

முடியாது என்றும் இயேசு வாக்குப் பண்ணுகிறார். சபையானது சாத்தானை புறம்பே வெளியேறச் செய்வது அல்ல, ஆனால் சாத்தான் சபையை வெளியேற்ற முடியாமல் தோல்வியடையச் செய்வதாகும். நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைப் படைத் தளபதியாக ஏற்று செயல்படும்போது நாம் வெளியே வந்து சாத்தானின் கோட்டையை அழித்துப் போட்டு அவனது வாயிற்கதவுகளை உடைத்து அடிமைப்பட்டிருக்கிறவர்களை விடுதலை செய்து அவனுடைய பொருட்களை நாம் அபகரிக்க முடியும். இது தான் சபையின் பணி. இது பாதுகாப்பான பணியல்ல ஆனால் எதிர்த்துப் போராடும் பணியாகும்.

வாயிற்"கதவு" (Gate) என்ற வார்த்தைக்கு வேதத்தில் அநேக அர்த்தங்கள் உண்டு. முதலாவதாக வாயிற்கதவு ஆலோசனை வழங்கும் இடமாகவும் ஆட்சி செய்யுமிடமாகவும் இருக்கிறது. நீதிமொழிகள் 31:23ல் குணசாலியான, உண்மையுள்ள மனைவியை உடைய கணவனைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

**[23] அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனாயிருக்கிறான்.**

நகரத்தின் வாயிற்கதவினிடத்தில் ஆலோசனை கூறும் மூப்பர்கள் உட்கார்ந்து நகரத்தை ஆட்சி செய்தனர். எனவே சாத்தானின் வாயிற்கதவுகள் சபையை மேற்கொள்ளாது என்று வேத வசனம் கூறுவதன் பொருள் என்னவெனில் சாத்தானின் யோசனைகள் சபையை மேற்கொள்ளாது. மாறாக அவைகள் அபத்தமாகவும் ஒன்றுக்கும் உதவாத பயனற்றுப் போகும் என்பதுமாகும்.

ஒரு நகரத்தைத் தாக்க முற்படும் போது அந்நகரத்தின் வாயிற்கதவை தாக்குவதுதான் முறையானது. ஏனெனில் கதவுகள் மதிற் சுவரைவிட பலம் குறைந்ததாக இருக்கும். ஏசாயா 28:6 இவ்வாறு கூறுகிறது:

**[6] . . யுத்தத்தை அதின் வாசல்மட்டும் திருப்புகிறவர்களின் பராக்கிரமமாகவும் இருப்பார்.**

சபையானது சாத்தானின் கோட்டைக் கதவுகளின் மேல் தாக்குதல் தொடுக்கிறதாக சித்தரிக்கப்படுகிறது. சாத்தானின் கதவுகள் சபையை வெளியேற்ற முடியாது. எனவே நாம் பாதுகாப்பைப் பற்றியே எண்ணாமல் தாக்குதல் தொடுப்பது குறித்து எண்ணவேண்டும்.

"அடுத்த தாக்குதலை சாத்தான் எங்கு தொடுப்பானோ என்று பயமாக உள்ளது" என்ற எண்ணம் அநேக கிறிஸ்தவர்களுக்கு உண்டு என்பது குறித்து எனது அனுபவத்தின் மூலம் அறிந்துள்ளேன். ஆனால் இது

பயம் இடம் மாறி அமைதல் வேண்டும். என்று நான் கூற விரும்புகிறேன். அதாவது சபையானது என்னை எங்கே தாக்குமோ என்று சாத்தான் அஞ்ச வேண்டும்.

சபை தாக்குதலைத் தொடுக்க வேண்டும் என்பது குறித்த இந்த சிந்தனைக்கு வேதத்தினடிப்படையில் சில பகுதிகளைக் கூறி விளக்க விரும்புகிறேன். கொலோசெயர் 2:15ல் இது குறித்து விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நமக்காக கிறிஸ்து சிலுவையில் மரணத்தை ருசிபார்த்ததின் மூலமாக தேவன் நிறைவேற்றின காரியத்தைக் குறித்து இதில் கூறப்பட்டுள்ளது:

> **15 துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு. . .**

எபேசியர் 6:12இல் கூறப்பட்டுள்ள அதே சாத்தானின் சக்திகளைக் குறித்துதான் இங்கும் துரைத்தனங்கள் என்றும் அதிகாரங்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. சிலுவையின் மூலமாய் தேவன் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார். சாத்தானுக்கு ஆயுதம் ஏதும் இல்லை என்பதை எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறீர்களா? அவன் நிராயுதபாணியாக்கப் பட்டுள்ளான். சிலுவையின் மூலமாய் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார். தொடர்ந்து இந்த வசனத்தில் இவ்வாறு காண்கிறோம்:

> ***15 வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.*** *(எபேசியர் 6:15)*

எனவே சிலுவையின் மூலமாய் சாத்தானுடைய அரசின் அதிகாரத்தை தேவன் உரிந்து கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்.

வெற்றிக்களிப்பு (Triumph) என்பது உண்மையாகவே வெற்றி பெறுவது என்று கூற முடியாது. ஏனெனில் இது ஏற்கெனவே பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதாகும். முழு வெற்றியை பொது மக்கள் மத்தியில் வெளிப்படுத்திக் கொண்டாடுவதாகும்.

சிலுவையில் இயேசு வெற்றியைத் தனக்காக வென்று பெறவில்லை. அவருக்கு எப்போதும் வெற்றி உண்டு. நமது சார்பாக, நமக்காக அவர் அந்த வெற்றியைப் பெற்றார். எனவே அவரது வெற்றி நமது வெற்றியாக மாறுகிறது. 2 கொரிந்தியர் 2:14 இவ்வாறு கூறுகிறது:

> ***14 கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற***

**அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

"எப்பொழுதும்", "எல்லா இடங்களிலேயும்" நாம் கிறிஸ்துவின் வெற்றியை விளங்கச் செய்ய வேண்டும். கிறிஸ்து நமக்காகப் பெற்ற வெற்றியை தேவன் வெளிப்படுத்த விரும்புகிறார். இதுவே சாத்தானுடைய துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் வல்லமைகளையும் கீழ்ப்படுத்துகிற வெற்றியாகும். இந்த வெற்றி நமது மூலமாய் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

மத்தேயு 28:18-19இல் இயேசு தமது சீஷருக்கு இதையே கடைசிக் கட்டளையாகக் கொடுக்கிறார்:

> 18 ***அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.***
>
> 19 ***ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,***

இயேசு கூறுகிறார்: சகல அதிகாரமும் ஏற்கெனவே எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "ஆகையால் நீங்கள் போங்கள். . ." "ஆகையால்" என்பதன் அர்த்தம் என்ன? நீங்கள் போய் எனது சார்பாக நான் ஏற்கெனவே பெற்ற வெற்றியை பிரயோகியுங்கள் என்பது தான் அதன் பொருள் என்று நான் எண்ணுகிறேன். நமக்காக இயேசு பெற்ற வெற்றியைப் பயன்படுத்துவது, வெற்றிக்களிப்பை வெளிப்படுத்துவது மற்றும் அதிகாரத்தைப் பிரயோகிப்பது தான் நமது கடமையாகும். அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது தான் அது பயனுள்ளதாக மாறும். தேவன் நமக்குக் கொடுத்த அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை என்றால் அது உபயோகமற்றதாகவே இருக்கும்.

கிறிஸ்துவின் வெற்றியை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும்போது தான் உலகம் அதைக் காண முடியும். கிறிஸ்து வெற்றியைப் பெற்றார், ஆனால் இயேசு ஏற்கெனவே சாத்தான் மேலும் அவனது அரசின் மேலும் பெற்ற வெற்றியை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுவது தான் நமது பணி. ஆனால் நாம் பாதுகாப்பு நிலையைக் கடந்து தாக்கும் நிலைக்கு வரும் போது தான் இதனை நாம் நிறைவேற்ற முடியும்.

## அத்தியாயம் 15

# ஜெபம் என்னும் ஆயுதம்

சாத்தானின் அரண்களை நிர்மூலமாக்க தேவன் நமக்குத் தேவையான ஆவிக்குரிய ஆயுதங்களைக் கொடுத்துள்ளார்: 2 கொரிந்தியர் 10:4 இவ்வாறு கூறுகிறது:

> [4]***எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவை களாயிராமல், (அவைகள் உலகத்திற்கேற்றவைகளாகவோ காண்பதற்கேதுவானதாகவோ அல்லது ஆயுதங்களாகவோ, வெடிகுண்டுகளாகவோ, துப்பாக்கிக் குண்டுகளாகவோ, டாங்கிகளாகவோ போர் விமானங்களாகவோ இல்லை.) அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலம் உள்ளவைகளாயிருக்கிறது.***

அரண்கள் என்பது உண்மையில் சாத்தானுடைய கோட்டைகளைக் குறிக்கின்றன. தேவன் நமக்கு ஆவிக்குரிய ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறார். நான் ஆழ்ந்து கற்றுக் கொண்டதன் மூலமும் எனது அனுபவத்தின் மூலமும் நாம் எதிர்த்துப் போராட நான்கு ஆவிக்குரிய ஆயுதங்களைப்பற்றி வேதம் வெளிப்படுத்துகிறது என்று நான் நம்புகிறேன். அவைகள் ஜெபம், துதி, பிரசங்கம் மற்றும் சாட்சி பகருதல். முதலாவது நாம் ஜெபமாகிய ஆயுதத்தைப் பற்றிக் காண்போம்.

ஜெபத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறினால் அது ஓர் ஆயுதத்தை விடவும் மேலானது எனலாம். ஜெபத்திற்குப் பல தன்மைகள் உண்டு. அவற்றில் ஒன்று தான் ஜெபம். இது ஆவிக்குரிய போரில் பயன்படும் ஒரு யுத்த ஆயுதமாகும். தேவன் நமக்குக் கொடுத்த எல்லா ஆயுதங்களிலும் மிகவும் வல்லமையானது இதுதான் என்று நான் நம்புகிறேன்.

எபேசியர் 6:18ல் பவுல் ஆறுவகையான பாதுகாப்பு ஆயுதங்களைப்பற்றி கூறிவிட்டு பின்பு இவ்வாறு கூறுகிறார்:

> [18]***எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி,....***

இந்த சமயத்தில் அவர் தற்காப்பு நிலையிலிருந்து தாக்கும் நிலைக்கு

முன்னேறிச் செல்லுகிறார். தற்காப்பு ஆயுதங்களைப் பற்றிக் கூறிய பின்பு ஏதோ தற்செயலாய் இதைப் பற்றிக் கூறவில்லை. எல்லா ஆயுதங்களிலும் சிறந்தது ஜெபம்தான் என்று கூறுகின்றார்.

ஜெபமானது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஒரு ஏவுகணையைப் போன்றது. சரியான வெளிப்பாடுடன் ஒரு கண்டத்தில் ஏவி மற்றொரு கண்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட இலக்கைத் தாக்கி ஜெபம் அழிக்க வல்லது. ஜெபத்திற்கு ஒரு குறிப்பிட்ட நேரமோ தூரமோ நியமித்து வரையறுக்க முடியாது. இதனைக் கொண்டு எங்குமுள்ள சாத்தானின் அரண்களை (வானமண்டலங் களிலுள்ளவைகளைக் கூட) நிர்மூலமாக்கலாம்.

அப்போஸ்தலர் 12:1–6இல் ஜெபத்தின் மூலம் ஏவப்பட்ட தாக்குதல் கணையைப் பற்றி நாம் காணலாம். ஏரோது அரசன் மூலமாக சபைக்கு உபத்திரவம் வந்தது. யாக்கோபை ஏற்கெனவே ஏரோது சிரச்சேதம் செய்திருந்தான். இப்பொழுது பேதுருவும் கைது செய்யப்பட்டு சீக்கிரத்தில் கொலை செய்யப்பட உள்ளான். இது தான் அந்த சூழ்நிலை.

*1 அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி;*

*2 யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான்.*

*3 அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான். அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது.*

*4 அவனைப் பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, பஸ்காபண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டுவரலாமென்று எண்ணி, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச் சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்.*

*5 அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்.*

*6 ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக் கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.*

மிகவும் பாதுகாப்பான சிறையில் பேதுரு அடைக்கப்பட்டிருந்தார்.

ஒருவரும் பேதுருவை விடுவிக்க முடியாதபடி நான்கு வகுப்புக்கு நான்கு சேவகராக இரவும் பகலும் அவரைக் காக்கும்படி ஏரோது ஏற்பாடு செய்திருந்தான். பேதுருவின் கையோ, காலோ ஒரு சேவகனோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. எனவே பேதுருவை விடுதலை செய்வது என்பது முடியாத ஒன்று. ஆனால் சபை மக்கள் பேதுருவுக்காக ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

எவ்வளவு ஊக்கமாக சபை மக்கள் பேதுருவுக்காக ஜெபம் செய்தனர் என்று எனக்குத் தெரியாது. ஆனால் திடீரென யாக்கோபு அவர்களிடமிருந்து பிரித்துச் செல்லப்படுகிறான். இப்போது அவர்களுடைய தலைவராகிய பேதுருவுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஊக்கமாக ஜெபம் செய்ய இது ஒரு தூண்டுதலாகும். அவர்கள் பகலில் மட்டும் ஜெபிக்கவில்லை, இரவிலும் ஜெபித்ததாக வேதம் கூறுகிறது. சில சமயங்களில் பகலில் மட்டும் ஜெபித்தால் போதாது என்பதை நாம் அறிய வேண்டும். தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் காரியத்தில் தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து நியாயம் செய்கிறார் என்று லூக்கா 18ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். தேவன் நமது ஜெபத்திற்கு பதில் தர சில சமயங்களில் ஊக்கமான ஜெபம் தேவை.

யோவான் 21:18–19இல் இயேசு பேதுருவுக்கு ஒரு வாக்குத்தத்தம் கொடுத்தார்:

> [18]**"நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்."**
>
> [19]**இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் "பின்பற்றிவா" என்றார்.**

ஒரு வேளை இந்த வாக்குத்தத்தத்தை பேதுரு சிறைச்சாலையில் தியானம் செய்து கொண்டிருந்திருப்பார் என நான் நினைக்கிறேன். "நீ முதிர்வயதுள்ளவனாகும் போது"... என்று இயேசு கூறுகிறார். அந்தச் சமயத்தில் பேதுரு முதிர்வயதானவனாக இருக்கவில்லை. இயேசு கூறிய வார்த்தை நிறைவேற ஏதாவது நிகழும் என்று பேதுரு நினைத்திருக்கக்

கூடும் என்று நான் எண்ணுகிறேன். ஆனால் சபை மக்களின் ஜெபமே இதனை நிறைவேற்றியது.

பேதுருவை விடுதலை செய்ய ஒரு தூதனை அனுப்பியதன் மூலம் தேவன் சபையாரின் ஜெபத்திற்கு பதிலளித்தார். அப். 12:8–11இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> *8 தூதன் அவனை நோக்கி: "உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்" என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: "உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா" என்றான்.*
>
> *9 அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தான்.*
>
> *10 அவர்கள் முதலாங் காவலையும் இரண்டாங் காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது; அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்து போனார்கள்; உடனே தூதன் அவனைவிட்டுப் போய்விட்டான்.*
>
> *11 பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது: "ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்."*

இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் ஒரு தூதனை அனுப்பி தேவன் சபை மக்களின் ஜெபத்திற்கு பதிலளித்தார். இருப்பினும் அவர்கள் ஜெபத்திற்குக் கிடைத்த பதிலின் முதல் பகுதிதான் இந்த விடுதலை. நாம் இதன் இரண்டாம் பகுதியையும் காண வேண்டும். அது தான் பேதுருவைத் துன்பப்படுத்திய ஏரோது அரசனுக்குத் தூதன் மூலமாகக் கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு. அப்போஸ்தலர் 12:19–23இல் இவ்வாறு நாம் வாசிக்கிறோம்:

> *19 ஏரோது அவனைத் தேடி காணாமற் போனபோது, காவற்காரரை விசாரணை செய்து, அவர்களைக் கொலை செய்யும்படி கட்டளையிட்டு, பின்பு யூதேயாதேசத்தை விட்டுச் செசரியா பட்டணத்துக்குப் போய் அங்கே வாசம் பண்ணினான்.*
>
> *20 அக்காலத்திலே ஏரோது தீரியர்பேரிலும் சீதோனியர்பேரிலும் மிகவுங் கோபமாயிருந்தான். தங்கள் தேசம் ராஜாவின் தேசத்தினால் போஷிக்கப்பட்ட படியினால், அவர்கள் ஒருமனப்பட்டு,*

***அவனிடத்தில் வந்து, ராஜாவின் வீட்டு விசாரணைக்காரனாகிய பிலாத்துவைத் தங்கள் வசமாக்கிச் சமாதானம் கேட்டுக் கொண்டார்கள்.***

***21 குறித்தநாளிலே: ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான்.***

***22 அப்பொழுது ஜனங்கள் "இது மனுஷ சத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள்."***

***23 அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாத படியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்.***

ஜெபமானது எப்படி ஒரு எதிர்த்துத் தாக்கும் ஆயுதமாகக் கிரியை செய்கிறது என்பதைக் குறித்து நாம் ஆராய்வோம். ஜெபம் வானமண்டலங்களைக் கடந்து தூதர்களை கிரியை செய்ய வைத்தது. தானியேல் 10ஆம் அதிகாரத்தில் தானியேல் ஜெபித்தபோது வானத்திலிருந்து தூதன் பதிலோடு வந்த சம்பவத்தோடு இதனை ஒப்பிடலாம்.

அப்போஸ்தலர் 12:24ல் இது குறித்து மேலும் இவ்வாறு வாசிக்கிறோம்:

***24 தேவவசனம் வளர்ந்து பெருகிற்று.***

தேவனுடைய வார்த்தை தடை செய்யப்படக் கூடாமல் வளர்ந்து பெருகுவதை இது காட்டுகிறது, முக்கியமாக பேதுரு வயது முதிர்ந்த பின்பே இறந்து போவான் என்று இயேசு பேதுருவுக்குச் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறுவதை இது வெளிப்படுத்துகிறது. ஆனால் தேவனுடைய வார்த்தை நிறைவேற ஜெபம் தேவையாயிருந்தது. நாம் அறிந்து கொள்ள வேண்டியது இதுதான்: தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் ஜெபத்திற்குக் கிடைக்கும் பலனாக நாம் நினைக்கக் கூடாது. மாறாக அவைகள் நமது ஜெபத்தைத் தூண்டுவதாயும் நமது ஆவியில் தேவனுடைய வாக்குத்தத்த வசனங்கள் நிறைவேற உதவுகிறது என்பதையும் அறிய வேண்டும். நமது வாழ்வில் தூதர்கள் நமக்கு உதவி செய்ய ஜெபம் உதவுகிறது.

தூதர்கள் நமக்குப் பணிவிடை செய்யும் ஆவிகளாக இருக்கின்றனர். ஆனால் நாம் ஜெபம் செய்யவில்லையானால் அவர்கள் நமது உதவிக்கு வரமாட்டார்கள் எனவும் வேத வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. நமது ஜெபத்தின் மூலமாய் தேவன் அளிக்கும் பதிலாக தூதர்கள் நமக்கு உதவ வருகின்றனர். ஜெபம் வானமண்டலங்களிலுள்ள சாத்தானின் அரசிற்குள் உட்புகுந்து தூதர்களின் தெய்வீக உதவி நமக்குக் கிடைக்கச் செய்கிறது என்பதை நாம் எப்போதும் மனதிற் கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் 16

# துதி என்னும் ஆயுதம்

ஜெபத்திற்கு அடுத்ததாகத் தாக்குதல் தொடுக்கப் பயன்படும் மிகப் பெரிய ஆயுதம் துதியாகும். ஒரு வகையில் துதியும் ஒரு வகை ஜெபமேயாகும். வேதத்தில் துதியானது தெய்வ பயத்தைச் சார்ந்ததாக கூறப்பட்டுள்ளது. துதியானது தேவனை நம்முடன் இடைபட வைக்கிறது. மேலும் தேவன் நம்மோடு கொண்டுள்ள உறவுக்கு ஜெபம் நாம் கூறும் மறு மொழியாகும். இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற பின்பும் பார்வோனுடைய சேனை சிவந்த சமுத்திரத்தில் அழிந்த பின்னும் மோசேயும் இஸ்ரவேல் மக்களும் பாடிய பாட்டை யாத்திராகமம் 15:10-11வசனங்களில் நாம் காண்கிறோம்.

> 10 ***"உம்முடைய காற்றை வீசப்பண்ணினீர், கடல் அவர்களை மூடிக் கொண்டது; திரளான தண்ணீர்களில் ஈயம்போல அமிழ்ந்து போனார்கள்."***
>
> 11 ***"கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?"***

'துதிகளில் பயப்படத்தக்கவர்' என்கிற இந்த சொற்றொடரைக் கவனியுங்கள். துதியானது தெய்வ பயத்தையும் சிறப்பாக தேவனுடைய பிள்ளைகளுக்கெதிராக செயல்படுபவர்களின் உள்ளத்தில் பயத்தை உண்டாக்குகிறதாயும் இருக்கிறது.

சங்கீதம் 22:23 இவ்வாறு கூறுகிறது:

> 23 ***கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்.***

தேவனுடைய பயங்கரத்திற்கும் அவருடைய பிள்ளைகளுக்காக அவர் செய்யும் யுத்தங்களையும் பழிவாங்குதல்களாகிய பயங்கர செயல்களுக்கும்

தேவப்பிள்ளைகள் செலுத்தும் பிரதியுபகாரம் துதியாகும்.

சங்கீதம் 8:2 இவ்வாறு கூறுகிறது:

***²பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.***

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அவர்களுடைய சத்துருக்களுக்கெதிராக பெலன் உண்டுபண்ணினார் என்று இங்கு நாம் காண்கிறோம். சத்துருக்களுக்கு இரண்டு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது "சத்துருக்கள்" என்று பன்மையில் கூறப்பட்டுள்ளது. இது சாத்தானின் அரசைக் குறிப்பதாக இருக்கிறது என்று நான் நம்புகிறேன். அவைகள் எபேசியர் 6:12ல் குறிப்பிடப்பட்டுள்ள துரைத்தனங்கள், அதிகாரங்கள், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள் ஆகும். இரண்டாவது வார்த்தை "பகைஞன்" என்று ஒருமையில் கூறப்பட்டுள்ளது. இது சாத்தானைக் குறிப்பதாகும்.

இந்த முழு அரசையும் எதிர்த்துப் போராட தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு பெலன் கொடுத்திருக்கிறார். தேவன் கொடுக்கும் பெலன் குறித்து மத்தேயு 21:15–16ல் கூறப்பட்டுள்ளது:

***15 அவர் செய்த அதிசயங்களையும், "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!" என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, கோபமடைந்து,***

***16 அவரை நோக்கி: "இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள்." அதற்கு இயேசு: "ஆம், கேட்கிறேன். 'குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்.' "***

சங்கீதம் 8:2 மேற்கோள் காட்டி இயேசு அவர்களுக்குப் பதில் கூறுகிறார். ஆனால் அதில் ஒரு சிறு மாற்றத்தைச் செய்து கூறுகிறார். அவர் தனது சொந்த விளக்கத்தையும் இதில் வெளிப்படுத்துகிறார். "குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்" என்பதற்கு இயேசு, "துதி உண்டாகும்படி செய்தீர்" என்று கூறுகிறார். எனவே தேவப்பிள்ளைகளின் பெலன் துதியாகும். நமது பெலனுக்கு ஆதாரம் துதியே.

இதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வேறு சில காரியங்களைக் குறித்தும் நாம் காணலாம். முதலாவது, இவ்விரு வசனங்களிலும் "வாயினால்" என்று கூறப்பட்டுள்ளது. சாத்தானின் அரசிற்கு எதிராய் ஆவிக்குரிய

ஆயுதங்கள் வெளிப்படும் பிரதான இடம் வாயாகும். இரண்டாவதாக "குழந்தைகள் பாலகர்" பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள், தங்கள் சுய பெலத்தைச் சாராமல் தேவ பெலத்தைச் சார்ந்திருப்பவர்களாகும்.

> [25] ***அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்." (மத்தேயு11:25)***

இங்கே தமது சொந்த சீஷர்களைக் குறித்துக் கூறுகிறார். "பாலகர்" என்பது சரீரப்பிரகாரமாகப் புதிதாய் பிறந்த குழந்தைகளைக் குறிக்காமல் தங்கள் சுய பெலத்தின் மேல் சார்ந்திருக்காமல் முழுவதுமாக தேவனுடைய பெலன் மேல் சார்ந்திருப்பவர்களைக் குறிக்கிறதாய் இது உள்ளது.

துதியின் ஆயுதத்தைப் பயன்படுத்த துதியின் நோக்கம் சாத்தானை செயலிழக்கச் செய்வதேயாகும். வெளி 12:10ல் இது விளக்கப்பட்டுள்ளது. இந்த தரிசனம் இன்னும் நிறைவேறவில்லை, ஆனால் அந்த சமயத்தில் சாத்தானுடைய நடவடிக்கை குறித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

> [10] ***அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப் போனான்.***

சாத்தானுடைய வேலையும் நமக்கெதிராக அவன் பயன்படுத்தும் ஆயுதமும் "குற்றஞ்சுமத்துவதாகும்" என்று நாம் காண்கிறோம். இரவும் பகலும் தொடர்ந்து தேவனிடத்தில் நம்மைக் குறித்து அவன் குற்றஞ் சாட்டிக் கொண்டிருக்கிறான். சாத்தான் இரவும் பகலும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பானேயானால் நாம் பகலில் மட்டும் கிரியை செய்கிறவர்களாயிருந்தால் போதாது. நாம் இரவும் பகலும் விழித்திருந்து அவனைச் சந்திக்க வேண்டும்.

நம்மை குற்ற உணர்வுடையவர்களாக்கவே சாத்தான் நம்மீது குற்றஞ்சுமத்துகிறான். இது தான் நமக்கு விரோதமாக அவன் உபயோகிக்கும் முக்கிய ஆயுதமாகும்.

"அப்படியானால் ஏன் தேவன் சாத்தானை அடக்கி வைக்கவில்லை?" என்று நாம் கேட்கலாம். ஏனெனில் சாத்தானை அடக்கி வைக்க தேவன் நமக்குத் தேவையான ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறார். எனவே நமக்காக

அவர் இதனைச் செய்யமாட்டார். இதனைச் செய்யும் ஆயுதம்; "குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் உண்டாகும் துதியாகும்." இந்தத் துதியானது வான மண்டலங்களுக்குள் புகுந்து தேவனுடைய சமுகத்தை எட்டி நமக்கு விரோதமாகச் சாத்தான் கூறும் குற்றச் சாட்டுகளை அடக்கிவிடும்.

வெளிப்படுத்தின விசேஷம் 16:13–14ல் ஒரு தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளது. ஆனால் அந்த தீர்க்கதரிசனம் எப்படி சரித்திர சம்பந்தமாக நிறைவேறப்போகிறது என்று நான் விளக்கப்போவதில்லை. ஆனால் யோவான் கூறும் மிகவும் முக்கியமான ஒரு காரியத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

> [13]அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன்.
>
> [14]அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது.

நான் கூறவிரும்பும் குறிப்பு என்னவென்றால்: அசுத்தமான சாத்தானுடைய ஆவிகள் வாயின் மூலமாக செயலாற்றுகின்றன. சாத்தானை அடக்கும் துதிகள் தேவனுடைய பிள்ளைகளின் வாயினின்று வருகின்றன. சாத்தானின் பக்கத்திலிருப்பவர்களின் வாயிலிருந்து சாத்தானின் சக்திகள் புறப்பட்டு வருகின்றன. மிருகத்தின் வாயிலும், சாத்தானின் வாயிலும் கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து அசுத்த ஆவிகள் புறப்பட்டு வந்தன. இதில் உள்ள முக்கியக் காரியம் என்னவெனில் தங்களுடைய வாய்களை மிகவும் பயனுள்ள முறையில் உபயோகிக்கும் கட்சியைச் சார்ந்தவர்களே இந்த ஆவிக்குரிய போரில் வெற்றிபெறுவர். நமது வாயை பயன்படுத்தத் தெரியவில்லையென்றால் நாம் போரில் வெல்லமுடியாது.

இந்த அசுத்த ஆவிகள் தவளைகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன. இந்தத் தவளைகள் இரவில் சத்தமிடுகின்றன. இவைகள் ஓயாது இரவு முழுவதும் சத்தமிடுகின்றன. இன்றைய நாகரீகத்தில் முக்கியமான ஒரு காரியமாகிய "பிரசாரம்" என்ற செயலுக்கு இதனை ஒப்பிடலாம். பிரசாரம் பொதுவாக தவறான கொள்கைகள், அரசியல் நோக்கங்கள், ஆட்சியாளர்கள் பயன்படுத்தும் சாத்தானின் ஆயுதமாகும். இதனை எதிர்த்துப் போரிடும் மிகப் பெரிய ஆயுதம், தேவனுடைய பிள்ளைகளின் வாயினின்று புறப்படும் துதியாகும்.

துதியின் வல்லமை குறித்து மற்றும் ஒரு உதாரணம் சங்கீதம் 149:6-9ல் காணலாம்:

> [6]ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும்,
>
> [7]அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும்,
>
> [8]அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்.
>
> [9]இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா.

துதியின் மூலம் அனைத்து கர்த்தருடைய பரிசுத்தவான்களும் செய்யக் கூடிய காரியத்தைக் குறித்து இந்த வசனங்கள் கூறுகின்றன. துதியைத் தொடர்ந்து தேவனுடைய வசனமாகிய இருபுறமும் கருக்குள்ள பட்டயம் வருகிறது. வேறுவகையாகக் கூறினால் தேவனுடைய வார்த்தையும் துதியும் ஒன்றோடொன்று இணைந்து செல்ல வேண்டும். தேவனுடைய வசனத்தோடு துதி இணைந்து ராஜாக்கள் மற்றும் நாடுகளின் மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும் ஒரு கருவியாக மாறுகிறது. ராஜாக்கள் மற்றும் மேன்மக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் சாத்தானின் தூதர்களாகும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவர்கள் மேல் நியாயத்தீர்ப்பை எழுத நமக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேவனுடைய நியாயத்தீர்ப்பை அவர்கள் மேல் செலுத்தும் சிலாக்கியம், தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*1 கொரிந்தியர் 6:2-3*இல் பவுல் கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறு எழுதுகிறார்:

> [2]பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?
>
> [3]தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா?. . .

தேவதூதர்கள், ராஜாக்கள், ஆட்சிசெய்பவர்கள், மக்கள் மற்றும் நாடுகள் மேல் தேவனுடைய வார்த்தையின் மூலமும் துதியின் மூலமும் தேவனுடைய நியாயத் தீர்ப்பை நிறைவேற்ற நமக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இது நமக்கு மிகப்பெரிய வல்லமையையும் அதிகாரத்தையும் அளித்துள்ளது.

# அத்தியாயம் 17

# பிரசங்கம் என்னும் ஆயுதம்

இந்த ஆயுதமானது தேவனுடைய வார்த்தைக்கு நேரடியாகவும் குறிப்பிட்ட முறையிலும் மிகவும் சம்பந்தமுடையது. இது தேவனுடைய வார்த்தையை மாத்திரம் பிரசங்கிப்பதாகும். இது மனிதனின் தத்துவ ஞானம், அரசியல் தத்துவங்கள், வேத வியாக்கியானங்கள் இவைகளைக் குறித்து பிரசங்கிப்பதை எந்த வகையிலும் குறிப்பதல்ல.

2 தீமோத்தேயு **4:1-4**ல் பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும் அறிவுரையை ஆதாரமாகக் கொண்டு இதனை தியானிப்போம்:

> [1]நான் ***தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது:***
>
> [2]***சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.***
>
> [3]***ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு,***
>
> [4]***சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோதுங்காலம் வரும்.***

நான் சில முக்கியமான காரியங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவது கொடுக்கப்படும் பொறுப்பின் தெய்வீகத் தன்மை. தேவன் மற்றும் இயேசுக்கிறிஸ்துவின் முன்னிலையில், உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்ப்பார் என்றும் அவரது அரசு நிருவப்படும் என்பதன் அடிப்படையிலும் இது கொடுக்கப்படுகிறது. இது தேவனுடைய ஊழியக்காரருக்குக் கொடுக்கப்படும் பரிசுத்தமான ஒரு பொறுப்பாகும்.

இரண்டாவது, வசனத்தைப் போதிப்பது நமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பாகும். போதிப்பவர் தான் போதிக்கும் காரியங்களுக்கு கணக்குக் கொடுக்க வேண்டும். இயேசு உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்ப்பார் என்று பிரசங்கியார் கூறும் போது அவரும் தான் கொடுத்த செய்திகளுக்கு தேவனிடம் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதும் உள்ளடக்கியதாகும்.

உண்மையை விரும்பாமல் தாங்கள் விரும்பும் காரியத்தையே பிரசங்கிக்க வேண்டுமென ஆசிக்கும் சுய விரும்பிகளின் ஆசைகளை நிறைவேற்றக்கூடாது என எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. எல்லோரும் உண்மையை விரும்பி ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் எச்சரிக்கப்படுகிறோம். எதிர்ப்புகள் மற்றும் குறை கூறுதல்களின் மத்தியில் வேத வசனம் போதிக்கப்பட வேண்டுமென்பது நமது பொறுப்பாகும்.

தேவனுடைய வார்த்தையின் மகத்துவம் குறித்து ஏசாயா 55:11ல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> 11 *". . .அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."*

மீண்டும் எரேமியா 23:29ல் தேவன் இவ்வாறு கூறுகிறார்:

> 29 *"என் வார்த்தை அக்கினியைப் போலும்," "கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ?" என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

எபிரெயர் 4:12ல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> 12 *தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வரையறுக்கிறதாயும் இருக்கிறது.*

பிரசங்கிக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கு மிகுந்த வல்லமை உண்டு. அதனுடைய பலனுக்கு உத்திரவாதம் உண்டு. அது ஒருபோதும் வெறுமையாய்த் திரும்பாது. தேவனுடைய மகிழ்ச்சியை இது நிறைவேற்றுகிறதாய் இருக்கிறது. தேவனுடைய திட்டங்களை எதிர்க்கிற ஒவ்வொரு பாறையையும் இது உடைத்து நொறுக்குகிறதாயிருக்கிறது.

மனிதனின் ஆள் தத்துவத்தின் உள்ளான பகுதிகளை ஊடுருவிச் சென்று மனிதர்களின் இருதயத்திலும் மனதிலுமுள்ள இரகசியங்களை வெளிக்கொணருகிறதாயுமிருக்கிறது.

எபேசுவிலே பவுல் ஊழியம் செய்த போது தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கையில் அந்த பிரசங்கிக்கப்பட்ட வார்த்தையின் வல்லமையைக் குறித்துஅப்போஸ்தலர் 19:8–10ல் கூறப்பட்டுள்ளது, இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

***8பின்பு பவுல் ஜெபஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக் கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்தி சொல்லிக்கொண்டு வந்தான்.***

***9சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அனுதினமும் சம்பாஷித்துக் கொண்டுவந்தான்.***

***10இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்.***

பவுலின் உபதேசத்தைக் குறித்து கூறும்போது மூன்று பெயர் உரிச்சொற்கள் (adjectives) உபயோகிக்கப்பட்டுள்ளன. ஆழமாக, தொடர்ந்து, விரிவாக என்பவையே அவைகள். இரண்டு ஆண்டுகள் பவுல் தொடர்ந்து தினமும் தேவனுடைய வார்த்தையைப் போதித்து வந்தார். "விரிவாக" என்று கூறப்பட்டுள்ளதால் பெரிய நிலப்பரப்பாகிய ஆசியாவின் அனைத்துப் பகுதிக்கும் வசனம் சென்றது. பவுல் எபேசுப் பட்டணத்தில் இரண்டு ஆண்டுகள் தங்கி, தினமும் தேவனுடைய வார்த்தையைப் போதித்து வந்தார் என்பதை நாம் அநேக முறை உணருவதில்லை.

இதன் விளைவுகளானது, ஒரு குளத்தின் நடுவில் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டதைப் போன்றது. அந்தக் கல் விழுந்த இடத்தைச் சுற்றிலும் அலைகள் எழும்பி விரிந்து, பரந்து சென்று அந்த குளத்தின் கரையை நோக்கித் தொடரும். இதன் முதல் விளைவு இயற்கைக்கு மாறானதாக இருந்தது. தேவன் வசனத்தை உறுதி செய்தார் என்று வேதம் கூறுகிறது. மனிதத் தத்துவங்களையோ கூற்றுகளையோ அல்லது சபை பாரம்பரியங்களையோ தேவன் உறுதி செய்வதில்லை. தன்னுடைய வசனத்தை அவர் உறுதி செய்கிறார். அதன்படியே பவுலுக்கும் அவர் செய்கிறார். அப்போஸ்தலர்19:11,12 இவ்வாறு கூறுகிறது.

*[11]பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.*

"விசேஷித்த (அசாதாரண) அற்புதங்கள்" என்ற வார்த்தை எனக்கு மிகவும் பிடித்தமானது. அது எதைக் குறிக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? சில அற்புதங்கள் சாதாரணமானவை. ஆனால் எபேசுவிலே நடந்த அற்புதங்கள் அசாதாரணமானவையாக இருந்தன.

அசாதாரண அற்புதங்கள் இல்லாவிட்டாலும் சாதாரண அற்புதங்களாவது இன்று நமது சபைகளில் நடக்கின்றதா? என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். அந்த அசாதாரண அற்புதங்கள் எப்படிப்பட்டவை என்று 12ஆம் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

*[12]அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன.*

இது போன்ற அற்புதங்களை நான் என் கண் கூடாகக் கண்டிருக்கிறேன் என்று எனது சொந்த அனுபவத்திலிருந்து நான் சாட்சியாகக் கூறமுடியும். இந்தப் பழக்கம் இன்னும் நடைமுறையிலுள்ளது. இதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதாகும்.

எபேசுவிலே பவுல் பிரசங்கித்ததன் மூலம் கிடைத்த முதல் பலன் என்னவென்றால் இயற்கைக்கு மாறான முறையில் அற்புதங்கள் நடந்ததால் அவர் அளித்த செய்தி அங்கீகாரம் பெற்றது. இரண்டாவது பலன்: பொல்லாத ஆவிகள் வெளியேற்றப்பட்டன. அப்போஸ்தலர் 19:13–16ல் இவ்வாறு வாசிக்கிறோம்:

*[13]அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள்."*

*[14]பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள்.*

*[15]பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி,"*

*[16]பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள் மேல் பாய்ந்து, பலாத்காரம் பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள்*

***நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள்.***

இந்த ஊழியத்தின் முக்கியமான ஒரு காரியம் என்னவென்றால் சாத்தானின் இரகசியமான தூதுவர்களை வெளியே கொண்டுவருவதாகும். பிசாசுகளும் பொல்லாத ஆவிகளும் சாத்தானின் இரகசிய தூதுவர்களாவர். இத்தகைய பொல்லாத ஆவிகள் வெளியே கொண்டுவரப்படுவது இவ்வகை ஊழியத்தில் காணப்படும் முன்னேற்றத்தைக் குறிக்கிறதாக அமைகிறது. அது தான் இங்கே நிகழ்ந்தது. "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன்," என்று பொல்லாத ஆவிகள் கூறிய வார்த்தைகள் என்னை மிகவும் கவர்ந்தன. ஒரு பிரசங்கியாரைக் குறித்து பிசாசின் தூதுவர் "நான் அவரை அறிவேன், அவர் ஏதாவது நிறைவேற்றுகிறார்" என்று கூறுவது அவரைக் குறித்த மறைமுகமான பாராட்டாக நான் கருதுகிறேன்.

பவுலுடைய பிரசங்கத்தின் மூலம் கிடைத்த மூன்றாவது பலன்: அப்போஸ்தலர் 19:17–19ல் விவரித்தப்படி மாந்திரீகக் காரியங்களின் ஆதிக்கத்தை நிர்மூலமாக்கியதாகும்.

> 17 ***இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்த போது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.***
>
> 18 ***விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்.***
>
> 19 ***மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்.***

அநேகர் விசுவாசிகளாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் பில்லிசூனியக் காரியங்களில் ஈடுபாடு உடையவர்களாயிருந்தனர். அதே நிலை இன்றைய திருச்சபையிலும் காணப்படுகிறது. அவர்களுடைய ஒரு கால் தேவனுடைய அரசிலும் மற்றொரு கால் பிசாசின் ஆதிக்கத்திலும் வைத்திருக்கின்றனர். சாத்தானின் வல்லமையின் நிலையைக் கண்டறிந்த இவர்கள், தேவனுக்குத் தங்களை முற்றிலுமாய் ஒப்புவித்து சாத்தானுக்கு முதுகைக் காட்டினார்கள். இதனை வெளிப்படுத்தும் வண்ணம் அவர்கள், மாந்திரீகக் காரியங்கள் குறித்துத் தங்களுடைய புத்தகங்களைக் கொண்டு வந்து எபேசுவிலே அனைவருக்கும் முன்பாக எரித்தனர்.

இப்புத்தகங்களின் கிரயம் ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசுகளாகும். ஒரு வெள்ளிக்காசு என்பது ஒரு பணியாளுடைய ஒரு நாள் கூலிக்குச்

சமம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சராசரியாக ஒரு மனிதனின் ஒரு நாள் கூலி 30 டாலர்களாகும். ஐம்பதாயிரம் வெள்ளிக் காசுகள் என்பது 15,00,000/- அமெரிக்க டாலர்களுக்குச் சமமாகும். இது ஒரு மிகப் பெரிய தொகை. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள பெரிய பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் இன்று இத்தகைய நிகழ்ச்சி நடைபெற வேண்டும்.

அப். 19:20இல் இது குறித்து வேத வசனம் விபரமாக இவ்வாறு கூறுகிறது:

> **[20]இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.**

இத்தகைய வல்லமையான செயலுக்குக் காரணம் தேவனுடைய வார்த்தையே ஆகும். தேவனுடைய வார்த்தையைக் கொண்டு பவுல் இரண்டு ஆண்டுகள் செய்த ஊழியத்தின் மூலமாக அற்புதமான, வல்லமையான விளைவு ஏற்பட்டது. சாத்தானுடைய அரசின் அடித்தளம் ஆட்டம் கண்டது. அவனுடைய கோட்டை தகர்ந்தது.

பவுல் எபேசுவிலே செய்த ஊழியத்தைக் குறித்து பவுல் தாமே இவ்வாறு அப். 20:20,26,27ல் கூறுகிறார்:

> **[20]பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி,**
>
> **[26]தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே,**
>
> **[27]எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்.**

தன்னுடைய ஊழியத்தில் எந்த விதமான பாகுபாடும் இல்லாதிருந்ததை பவுல் விளக்குகிறார். இப்படிப்பட்ட முறையில் தேவனுடைய வசனம் பிரசங்கிக்கப்படும் போது இவ்வகையான பலன்கள் கிடைக்கும். இப்படிப்பட்ட பிரசங்கம் செய்கின்ற ஊழியங்கள் இந்நாட்களில் நமக்குத் தேவை.

# அத்தியாயம் 18

# சாட்சியின் ஆயுதம்

பிரசங்கிப்பதற்கும் சாட்சி பகர்வதற்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் நாம் தெரிந்து கொள்வது அவசியம். தேவனுடைய வார்த்தையின் உண்மைகளை எடுத்துக் கூறுவது பிரசங்கம். ஆனால் சாட்சி கொடுப்பது என்பது "சாட்சியாக இருப்பது" சொந்த அனுபவத்திலிருந்து சில நிகழ்ச்சிகள் மூலமாக தேவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்துவது சாட்சி சொல்வதாகும். உதாரணமாக "சுகமளித்தல்" என்பது குறித்து ஒரு செய்தியை நாம் பிரசங்கிக்கும் போது தேவன் எப்படி சுகமளிக்கிறார் என்பது குறித்த காரியங்களையும் சுகமளித்தல் குறித்து தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் நாம் எடுத்துரைக்கிறோம். ஆனால் நாம் சுகமளித்தல் குறித்து சாட்சி கொடுக்கும்போது, நாம் தேவனிடமிருந்து சுகம் பெற்றது குறித்த நமது அனுபவத்தைக் கூறுகிறோம். எனவே சாட்சி பகருதல் மற்றும் பிரசங்கித்தல் இரண்டுமே தேவனுடைய வார்த்தை சம்பந்தப்பட்டதாயிருந்தாலும் இரண்டும் வெவ்வேறு கோணத்திலிருந்து தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்துகின்றன.

சுவிசேஷம் உலகமுழுவதும் சென்றடைய இயேசு ஏற்படுத்திய முறையின் அடித்தளம் சாட்சி கொடுத்தலாகும். ஒலிவ மலையில் சீஷருக்கு அவர் கடைசியாகக் கொடுத்த கட்டளையின்போது இதனை இயேசு வெளிப்படுத்துகிறார். இதனை அப்போஸ்தலர் 1:8ல் வாசிக்கிறோம்:

> ***8"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்."***

முதலாவது பயனுள்ள சாட்சிகளாக நாம் இருக்க வேண்டுமென்றால் நமக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை தேவை. நம்முடைய சாட்சிதான் உன்னதமானது. இதற்குப் பின்னால் உந்து சக்தியாக இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையாக செயல்படுவது பரிசுத்த ஆவியாகும். பெந்தெகொஸ்தே நாளின் போது பரிசுத்த ஆவியை அவருடைய சீஷர்கள் பெறும்வரைக்கும், இயேசு அவர்களை சாட்சி கொடுக்க அனுமதிக்கவில்லை.

இரண்டாவதாக இன்று மார்க்க சம்பந்தமான மக்கள் அநேகர் கூறுவது போல் "நீங்கள் சாட்சி கொடுப்பீர்கள்" என்று இயேசு கூறவில்லை. "நீங்கள் சாட்சிகளாக இருப்பீர்கள்" என்று கூறினார். வேறுவகையாகக் கூறினால் நாம் பேசும் வார்த்தைகளோ, நாம் கொடுக்கும் கைப்பிரதிகளோ மாத்திரமல்ல நமது முழு வாழ்க்கையும் இயேசுவுக்கும் அவரது சுவிசேஷத்திற்கும் சாட்சியாக இருப்பது.

மூன்றாவதாக இயேசு ஒரு பெரிய விரிந்து செல்லும் வட்டத்தை சுட்டிக் காட்டுகிறார். நீங்கள் வாழும் எருசலேமிலிருந்து ஆரம்பியுங்கள் என்று கூறுகிறார். வெளியே போய் மக்களுக்குக் கூறுங்கள். அவர்கள் அதை நம்பட்டும் பின்பு பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறட்டும். பிறகு அவர்கள் புறப்பட்டுப்போய் மற்ற மக்களுக்கு சொல்லட்டும். இதற்குப்பின் அந்த மக்கள் விசுவாசித்து பரிசுத்த ஆவியால் நிரம்பி மற்றவர்களுக்குப் போய் கூறவேண்டும். முதலில் எருசலேமில் ஆரம்பிக்க வேண்டும். பிறகு யூதேயாவுக்குள் செல்ல வேண்டும். பின்பு சமாரியாவுக்குள்ளும் உலகத்தின் கடைசி வரைக்கும் செல்லும் வரை இப்பணியில் ஓய்வின்றி தொடரவேண்டும்.

இயேசு உலகத்தில் கடைசியாகப் பேசிய வார்த்தைகள் இவைகளே. அவரது மனதும் இருதயமும் உலகத்தின் கடைசிவரை உள்ள பகுதியில் இருந்தது. உலகத்தின் கடைசிவரை சென்றடையும் வரை அவர் திருப்தியடையமாட்டார். இதற்கு தேவன் ஏற்படுத்திய முறை எல்லா கிறிஸ்தவர்களும் சாட்சிகளாக மாற வேண்டும். நாம் சாட்சி கொடுத்து மற்றவர்களை ஆதாயப் படுத்த வேண்டும். பின்பு ஆதாயம் செய்யப்பட்டவர்கள் சாட்சி கொடுத்து மற்ற மக்களை ஆதாயப்படுத்த வேண்டும். குளத்தின் நடுவே வீசப்பட்ட கல் அலைகளை ஏற்படுத்தி அந்த அலைகள் கடைசியாக கரையைத் தொடுவதுபோல உலகத்தின் கடைமுனைவரை இப்படியாக சாட்சி கொடுத்துக் கொண்டே சென்றடைய வேண்டும்.

சரித்திரத்தைத் திரும்பிப்பார்க்கையில் தேவனுடைய மக்கள் இந்த முறையைப் பயன்படுத்தியபோது வெற்றி கண்டனர். முன்னூறு வருடத்திற்குள்ளாக ரோம பேரரசை கிறிஸ்தவம் வென்றது. ரோமப் பேரரசை வீழ்ச்சியடையச் செய்த பெரிய ஆவிக்குரிய சக்தி எதுவென்றால் பலவிதமான நிலையிலிருந்த பலவித இன, சமுதாய, சூழ்நிலையிலிருந்த ஆயிரமாயிரமான கிறிஸ்தவ விசுவாசிகளின் சாட்சியேயாகும். அவர்கள் அனைவரும் சொன்ன சாட்சி "இயேசு என் வாழ்க்கையை மாற்றினார்" என்பதாகும். இதன் பலனாக வல்லமைபொருந்திய கொடூரமான, உறுதியான ரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

இதே ஆயுதமானது வானமண்டலங்களிலுள்ள சாத்தானின்

பேரரசையும் வீழ்ச்சியடையச் செய்யும் என்று வேதம் கூறுகிறது. இதனை வெளிப்படுத்தின விசேஷம் 12:7–11 வரை கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசன வசனங்களில் காணலாம். வானத்தையும் பூமியையும் மனிதர்களையும் தூதர்களையும் சம்பந்தப்படுத்தி ஒரு பெரிய யுத்தம் ஏற்படப் போவதைக் குறித்து இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

> *7 வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.*
> *8 வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று.*
> *9 உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.*
> *10 அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: "இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப் போனான்."*

"சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன்" சாத்தான். வானமண்டலங்களிலுள்ள அவனுடைய அரசிலிருந்து அவன் எப்படித் தள்ளப்பட்டான் என்று இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. பிறகு விசுவாசிகள் எப்படி சாத்தானை மேற்கொண்டார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட நபர் நேருக்கு நேர் மோதுவதை குறிப்பிடுகிறதைக் கவனியுங்கள்.

> *11 "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் (விசுவாசிகள்) சாட்சியின் வசனத்தினாலும் அவனை (சாத்தானை) ஜெயித்தார்கள்."*

அவர்களுடைய முக்கிய ஆயுதம் "சாட்சி". சாத்தானுடைய அரசை ஆட்டம் காண வைத்தது அவர்களுடைய சாட்சியாகும். அவர்களுடைய சாட்சி இரண்டு காரியங்கள் மேல் சார்ந்திருந்தது: தேவனுடைய வார்த்தை, இயேசுவின் இரத்தம். அவர்களுடைய சாட்சி, வார்த்தையிலும், இரத்தத்திலும் உள்ள வல்லமையை வெளிக்கொண்டு வந்தது.

இதனை நமது சொந்த வாழ்விலும் அப்பியாசப்படுத்தலாம். **இயேசுவின் இரத்தம் நமக்கு என்ன செய்திருக்கிறது என்பது குறித்து**

**வேதவசனம் கூறுவதை நமது சொந்த வாழ்க்கையின் அனுபவ சாட்சியாக நாம் கூறும்போது சாத்தானை நாம் மேற்கொள்ளுகிறோம்.** வார்த்தை மற்றும் இரத்தம் குறித்த சொந்த அனுபவ சாட்சியின் முக்கியத்துவத்தை நீங்கள் காணவேண்டும்.

பல விதமான முறைகளில் நாம் இதனைச் செய்யலாம். இதில் ஒரு முறை கர்த்தருடைய பந்தி, சிலசமயங்களில் இதனை நாம் இந்தக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதில்லை. வார்த்தை இரத்தம் இவற்றின் மீதுள்ள நமது விசுவாசத்தைக் குறித்து தொடர்ந்து நாம் கொடுக்கும் சாட்சியாக இது இருக்கிறது. 1 கொரி. 11:26ல் கர்த்தருடைய பந்தியைக் குறித்து பவுல் இவ்வாறு கூறுகிறார்.

> [26] ***ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.***

பாத்திரம் கர்த்தருடைய இரத்தத்தைத் தெரிவிக்கிறது என்று நமக்குத் தெரியும். எனவே கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குபெறும் போது தொடர்ந்து இயேசுக் கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நாம் சாட்சியாக அறிவிக்கிறோம்.

இயேசுவின் இரத்தத்தைக் குறித்து வேதம் கூறுவதைக் குறித்து பயனுள்ள முறையில் நாம் சாட்சிகொடுக்க வேண்டுமென்றால் இயேசுவின் இரத்தத்தைக் குறித்து வேத வசனம் என்ன கூறுகிறது என்பது குறித்து நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கும் ஐந்து முக்கியக் காரியங்களை வேத வசனம் தெரிவிப்பதை நாம் காணலாம்:

முதலாவது காரியம் எபேசியர் 1:7ல் கூறப்பட்டுள்ளது:

> [7] ***அவருடைய (கிறிஸ்துவின்) கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.***

இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கும் இரண்டு காரியங்களைக் குறித்து நாம் காண்கிறோம். முதலாவது மீட்பு (நாம் மீட்கப்பட்டோம்) இரண்டாவது மன்னிப்பு (பாவ மன்னிப்பு நமக்கு அளிக்கப்பட்டுள்ளது) 1 யோவான் 1:7ல் இது குறித்து நாம் வாசிக்கிறோம்:

> [7] ***அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய***

***இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.***

மூன்றாவதாக இரத்தம் நம்மைத் தொடர்ந்து சுத்திகரிக்கிறது. இரத்தத்தின் மூலமாய் தொடர்ந்து ஆவிக்குரிய சுத்திகரிப்பு நமக்கு உண்டாயிருக்கிறது. ரோமர் 5:9 இவ்வாறு கூறுகிறது:

***9 இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.***

நான்காவது நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். அதாவது நாம் நீதிமான்களாக மாற்றப்பட்டிருக்கிறோம். நீதிமான்களாக்கப்படுவது என்பதன் விளக்கம் நான் பாவமே செய்யாதது போல் நான் நீதிமானாக்கப்படுகிறேன். எப்படியெனில் பாவமே அறியாத நீதியாகிய கிறிஸ்துவின் நீதியினாலே நான் நீதிமானாக்கப்படுகிறேன்.

எபிரெயர்13:12 இவ்வாறு கூறுகிறது:

***12 அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.***

ஐந்தாவதாக, இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். பரிசுத்தமாக்குதல் என்றால் தூய்மையாக்குதல் அல்லது தேவனுக்கு முன் உறுதியாயிருத்தல் என்று பொருள்.

இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நமக்கு இந்த ஐந்துக் காரியங்களும் கிடைப்பதாக வேத வசனம் கூறுகிறது:

***முதலாவது நாம் மீட்கப்படுகிறோம்;***
***இரண்டாவது நாம் மன்னிக்கப்படுகிறோம்;***
***மூன்றாவது நாம் சுத்திகரிக்கப்படுகிறோம்;***
***நான்காவது நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம் (நீதிமான்களாக மாற்றப்படுகிறோம்);***
***ஐந்தாவதாக நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் (தூய்மையாக்கப்படுகிறோம்).***

இந்த ஐந்து காரியங்களும் நமது வாழ்வில் முழுவதுமாக பயனளிக்க வேண்டுமென்றால் நாம் இது குறித்து தனிப்பட்ட முறையில் சாட்சி கூற

வேண்டும். நமது பாவ அறிக்கையை தைரியமாகக் கூற வேண்டும். கீழ்கண்டவாறு நாம் கூறலாம்:

> இயேசுவின் இரத்தத்தின் மூலம் சாத்தானின் கைகளிலிருந்து நான் மீட்கப்பட்டேன். இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் எனது பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டன. இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி என்னைச் சுத்திகரிக்கிறது. இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன். நான் பாவமே செய்யாதது போல நீதிமானாக்கப்பட்டுள்ளேன். இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நான் பரிசுத்தமாக்கப்படுகிறேன்; தூய்மையாக்கப்படுகிறேன், தேவனுக்கு நேராக நிலை நிறுத்தப்படுகிறேன். நான் இனி ஒரு போதும் பிசாசின் எல்லைக்குள்ளாக இருக்கவில்லை.

இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கும் இந்த ஐந்து ஆசீர்வாதங்களையும் குறித்துத் தியானம் செய்யுங்கள்: மீட்பு, மன்னிப்பு, சுத்திகரிப்பு, நீதிமானாகுதல், பரிசுத்தமாதல். இதைக்குறித்து தனிப்பட்ட முறையில் நாம் சாட்சிபகரும்போது இந்த ஐந்து காரியங்களும் உங்களுக்குச் சொந்தமாகிறது என்ற உண்மையை மனதில் கொள்ளுங்கள். இந்தக் காரியங்களை தனிப்பட்ட முறையில் சாட்சி கொடுக்கும் போது சாத்தானை மேற்கொள்ளுகிறோம். "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் நமது சாட்சியின் வசனத்தினாலும் இதனைச் செய்ய முடியும்."

ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் மிகவும் ஊக்கமாகச் செயல்பட தேவன் நமக்குக் கொடுத்த ஆயுதங்களை உபயோகித்து தொடர்ந்து போராடி முன்னேற வேண்டும். நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது மற்றும் அதற்காகத் தேவனிடம் காத்திருப்பது மட்டும் போதாது. நாம் வெற்றி பெறும் போர் வீரர்களைக் கொண்ட சேனையைச் சேர்ந்தவர்கள். தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய அருட்செய்தியினை அறிவிப்பதின் மூலம் இவ்வுலகில் அநேகரை நீதிக்குட்படுத்தும் இப்படிப்பட்ட சேனை வீரர்கள் தேவை.

# சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள்

*நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும்
சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்
போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு
முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி
ஜாக்கிரதையாயிரு.*

*2 தீமோத்தேயு 2:15*

## முன்னுரை: மாணவர்களுக்கான அறிவுரை

### கேள்விகளுக்குப் பதில் எழுதும் முன்பாக இந்த அறிவுரைகளைப் படிக்கவும்!

உலகத்தில் இன்று கிறிஸ்தவ மதம் எங்கெல்லாம் பரவியுள்ளதோ அங்கெல்லாம் சில மக்கள் கிறிஸ்தவர்களாக இருக்க விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் பெலவீனர்களாகவும் பயந்த சுபாவம் உள்ளவர்களாகவும், சோர்வடைந்தவர்களாகவும் தோல்வி அடைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இதற்கெல்லாம் காரணம் ஒன்றே: தாங்களாகவே வேதத்தைக் கற்றுக்கொள்ளவும் அதில் கூறப்பட்டுள்ள போதனைகளை தங்கள் வாழ்வில் பயன்படுத்திக்கொள்ளவும் அவர்கள் கற்றுக்கொள்வதில்லை. இதனாலே தான் ஓசியா 4:6இல் "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்;. . . ." என்று தேவன் கூறுகிறார். வேதத்தில் கூறப்பட்டுள்ள சத்தியங்களை ஒருவர் தெரிந்துகொள்ளும் போதும் அந்த சத்தியங்களை தனது வாழ்வில் பயன்படுத்திக் கொள்ள அறிந்துகொள்ளும் போதும் வரும் பலன் ஒன்றுதான். அவை சமாதானம், வெற்றி, கனிதரும் வாழ்வு என்பதாகும்.

### 1. இந்த வேத பாடங்களின் நோக்கம்

இந்த சுயமாக வேதத்தைக் கற்றுக்கொள்ளும் பாடத்திட்டத்தின் நான்கு முக்கிய நோக்கங்கள்:

*(1) ஸ்திரமான கிறிஸ்தவ வெற்றிவாழ்வு வாழத் தேவையான அடிப்படை வேத அறிவை அளிப்பதாகும்;*

*(2) வேத வசனங்களை ஆராய்ந்து தேடி தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தங்களைச் சொந்தமாக்கிக் கொள்ளப் பழக்குவிப்பது ஆகும்.*

*(3) வேத வாக்கியத்தை ஆராய்ந்து அதன் சரியான அர்த்தத்தை நீங்களாகவே அறிந்துகொள்ள பயிற்சி அளித்தல்.*

(4) வேத வசனங்களின் மூலமாக ஆவிக்குரிய போதனைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய பழக்கத்தை ஏற்படுத்துவது.

## 2. வேத வசனக் குறிப்புகளின் தொகுப்பு

இந்தப் பாடங்கள் முழுவதிலும் வேதத்தின் பழைய மொழிபெயர்ப்பே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அனைவராலும் புரிந்து கொள்ளக் கூடிய நடையில் உள்ளது. இருப்பினும் வேத வாக்கியங்களிலுள்ள பெரிய சத்தியங்கள் யாவும் வேறு மொழிபெயர்ப்புகளினின்று மாறுபட்டிராது.

வேதத்திலுள்ள ஒவ்வொரு புத்தகமும் எங்குள்ளது என்பதையும் இந்தப் பாடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள புத்தகங்களைச் சுருக்கமாக அழைக்கும் முறையையும் நீங்கள் தெரிந்திருக்க வேண்டும். (இது குறித்து விவரமாக அறிய "வேதத்திலுள்ள புத்தகங்களை சுருக்கமாக அழைக்கும் முறை" குறித்த தொகுப்பு தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளதைப் பார்க்கவும்) வேத பகுதிகளின் குறிப்புகள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டிருக்கும்: முதலாவது, புத்தகம்; இரண்டாவது, அதிகாரம்; மூன்றாவது, வசனம். உதாரணமாக, ரோ.3:23 என்றால் ரோமருக்கு எழுதின நிருபம் 3ம் அதிகாரம் 23ம் வசனம் ஆகும். 1 யோவான் 2:14 என்றால் யோவான் எழுதின முதலாம் நிருபம் 2ம் அதிகாரம் 14ம் வசனம் ஆகும். அதிகாரங்கள் இல்லாத புத்தகங்களின் வசனங்களைக் குறிப்பிடும் போது புத்தகங்களுக்குப் பிறகு உடனே வசனங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். உதாரணமாக 3 யோவான் 2 என்றால் யோவான் எழுதிய மூன்றாம் நிருபம் 2ம் வசனம் ஆகும்.

## 3. இந்தப் பாடங்களைக் கற்றுக்கொள்ளும் முறை

ஒவ்வொரு கேள்வித்தாளுக்கும் முன்பாக **"முன்னுரை"** என்ற தலைப்பில் ஒரு சிறு பத்தி கொடுக்கப்பட்டிருக்கும். கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளில் அடங்கியுள்ள முக்கியப் போதனை குறித்து விரிவாக அதில் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குப் பதில் எழுதும் முன்பாக **"முன்னுரையை"** கவனமாகப் படிக்க வேண்டும்.

**"பாடம் 1: தேவனுடைய இரட்சிப்பின் திட்டம்"** இப்பாடத்தில் உள்ள முதல் கேள்வித்தாளில் 22 கேள்விகள் உள்ளன. ஒவ்வொரு கேள்வியின் முடிவிலும் அடைப்புகளுக்குள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வசனங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இந்தக் கேள்விகளுக்கான பதில் இந்த வசனங்களில் இருக்கும். ஒவ்வொரு கேள்விக்கும் பிறகு சிறு கோடுகள் போடப்பட்ட காலி இடம் இருக்கும். இதில் அந்தக் கேள்விக்கான பதிலை நீங்கள் எழுத வேண்டும். கேள்விகளுக்குப் பதில் எழுதும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(1) கேள்வியைக் கவனமாகப் படிக்கவும்.

(2) அடைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை கேள்விகளுக்குச் சரியான விடை கண்டுபிடிக்கும் வரைக்கும் நன்கு கவனமாகப் படிக்கவும்.

(3) நீங்கள் கண்டுபிடித்த பதிலை கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட காலி இடத்தில் சாதாரண நடையில் விரிவாக எழுதவும்.

சில சமயங்களில் ஒரு கேள்விக்கான பதில் இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒவ்வொரு பகுதிக்கான விடையை எழுத வரிசை எண் குறிக்கப்பட்டிருக்கும். (1) .......................... (2) ................................ (3) ........................ என்று வரிசை எண்கள் இருக்கும். ஒவ்வொரு எண்ணிலும் சரியான விடையை எழுத வேண்டும்.

இதனைச் சரியாகப் புரிந்து கொள்வதற்காக பாடம் 1ல் உள்ள முதல் இரண்டு கேள்விகளுக்கான சரியான பதில் கீழே தரப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கேள்விக்கான பதிலை எங்கே எப்படி எழுத வேண்டும் என்று தெரிந்து கொள்ளுங்கள்:

1. என்ன நோக்கத்திற்காக அனைத்து சிருஷ்டிகளும் சிருஷ்டிக்கப்பட்டன? (வெளி. 4:11)

**தேவனுடைய மகிழ்ச்சிக்காக**

.....................................................................................................

2. தேவன் பெற்றுக் கொள்ளத் தகுதியுடைய 3 காரியங்கள் யாவை? (வெளி. 4:11)

(1) **மகிமை** .............................. (2) **கனம்** .............................. (3) **வல்லமை** ........................

நீங்கள் இதற்கான பதிலை எழுதும்போது மேலே குறிப்பிட்ட பதிலை மட்டும் எழுதாதீர்கள். முதலாவது குறிப்பிடப்பட்டுள்ள வேத பகுதியைப் படித்து உங்கள் பதிலை அதில் எழுதுங்கள். பிறகு கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு சரிபாருங்கள். இதே போன்று முழுப் பாடத்தையும் முடிக்கும் வரைக்கும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் எழுதுங்கள்.

## 4. மனப்பாடப் பகுதி

ஒவ்வொரு கேள்வித்தாளின் ஆரம்பத்திலும் ஒரு வேத பகுதி மனனம்

செய்வதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும். நீங்கள் இதனை மனப்பாடம் செய்ய வேண்டும். அதற்கான முறை பின்வருமாறு:-

நீங்கள் ஒருசிறு காகித அட்டையை எடுத்துக் கொண்டு அதன் இடது மேல் பகுதியில் பாட எண்ணைக் குறிக்கவும். நடுவில் வேத வசனப் பகுதியையும் அதற்குக் கீழாக பாடத் தலைப்பையும் எழுத வேண்டும். முதல் அட்டை எப்படி இருக்க வேண்டும் என்ற மாதிரி கீழே காண்பிக்கப்பட்டுள்ளது:-

**பாடம் எண். 1**

**ரோமர் 6:23**

**தேவனுடைய மீட்பின் திட்டம் (1)**

இந்த அட்டையின் அடுத்த பக்கத்தில் அந்த வசனத்தையே எழுதவும்:-

**"பாவத்தின் சம்பளம் மரணம்;**
**தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய**
**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால்**
**உண்டான நித்தியஜீவன்."**

இப்படியாக மனன வசன அட்டைகளைத் தயார் செய்யுங்கள். பகலில் சமயம் கிடைக்கும் போது மனன வசனங்களை திரும்ப எடுத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். ஒழுங்காக வசனங்களை திரும்பப் பார்த்துக் கொள்வது மனனம் செய்வதில் முழு வெற்றியை அளிக்கும். இப்படியாக வசனத்தை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ளக் கற்றுக் கொள்வது மாத்திரமல்ல, வார்த்தை உங்கள் இருதயத்தில் இருந்து உங்களுக்கு வழி நடத்துதலையும் பலத்தையும் ஆவிக்குரிய ஆகாரத்தையும் பிசாசின்மேல் வெற்றியையும் மற்றவர்களின் இருதயத்தில் விதைக்க விதைகளையும் அளிக்கும்.

மனனம் செய்ய வேண்டிய வசனம் உள்ள பகுதியை புத்தகம், அதிகாரம், வசனம் எது என்று வசனம் சொல்லும் முன்பதாகவும் சொல்லி முடித்த பின்பும் கூற வேண்டும். உதாரணமாக முதலாவது மனப்பாடப்

பகுதியை இவ்வாறு கூற வேண்டும்: "ரோமர் 6:23 பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். ரோமர் 6:23". இந்த முறையில் நீங்கள் வசனத்தை மாத்திரமல்ல, வசனம் உள்ள வேத பகுதியையும் மனப்பாடம் செய்ய இயலும். இதனால் மற்றவர்களுக்கோ உங்களுக்கோ பயனுள்ள முறையிலும் சுலபமாகவும் வசனத்தை உபயோகிக்க ஏதுவாக இருக்கும்.

## 5. இந்தப் பாடங்களைக் கற்றுக்கொள்ளும் முறை

முதலாவது பாடத்தில் உள்ள கேள்விகளுக்கான பதிலை உங்கள் வேதத்தை மூடிவைத்துவிட்டு ஞாபகத்திலிருந்து அதற்கான இடத்தில் எழுத வேண்டும். இந்தப் பாடத்திற்கான சரியான பதில் கொடுக்கப்பட்டுள்ள பக்கத்தைப் புரட்டிப் பார்க்கவும். அதிலுள்ள சரியான விடைகளோடு உங்கள் விடைகளைச் சரிபார்க்கவும். ஒரு வேளை உங்கள் பதில் சரியான பதிலோடு ஒத்துப்போகவில்லை எனில் மீண்டும் கேள்வியையும் அதற்கான வேத பகுதியையும் படித்துப் பார்த்து சரியான பதிலுக்கான காரணத்தை அறிந்து கொள்ளுங்கள்.

சரியான பதில்கள் குறிப்பிடப்பட்டுள்ள பக்கத்திற்கு அடுத்த பக்கத்தில் பதில்களுக்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் இன்னும் அதிகமான விளக்கத்தைக் காணலாம். இந்த விளக்கக் குறிப்புகளை நன்கு படித்துத் தெரிந்து கொள்ள நேரம் ஒதுக்குங்கள். அதில் ஏதேனும் இன்னும் வேத பகுதிகள் குறிப்பிடப்பட்டிருப்பின் அவைகளையும் படித்துப்பாருங்கள்.

கடைசியாக, உங்கள் பதில்களுக்கான மதிப்பெண்கள் எவ்வளவு பெறும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அந்த மதிப்பெண்களை உங்கள் பதில்களுக்குக் கொடுங்கள். சரியான பதில்கள் கொடுக்கப்பட்ட பகுதியில் எப்படி மதிப்பெண்கள் அளிக்கப்படவேண்டும் என்ற முறை கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு கேள்விக்கு, 1 மதிப்பெண்ணுக்கு மேல் இருக்குமானால் விடை சரிதான் என்று நீங்கள் உறுதிசெய்து கொண்டாலொழிய அதற்கு முழு மதிப்பெண்கள் கொடுக்கக் கூடாது. மனப்பாடப்பகுதிக்கு உள்ள மதிப்பெண்களுக்கும் முக்கியமானதாகும்!

பாடம் 1ல் பெற்ற மதிப்பெண்களுக்கான கூடுதலை, சரியான விடைகளுக்குக் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்: 50% மேல் மதிப்பெண்கள் பெற்றால் "தேர்ச்சியடைந்ததாகவும்"; 70% மேல் "சிறந்த தேர்ச்சியாகவும்"; 80% மேல் பெறும்போது "மிகச் சிறந்த தேர்ச்சியாகவும்" கொள்ளலாம்.

முதலாவது பாடம், இரண்டாவது பாடம், என்று இதே முறையில்

இந்த முழுப் பாடத்தையும் முடிக்கவும். ஆனால் பாடம் 13 மற்றும் 14 கொஞ்சம் வித்தியாசமானவை. அது குறித்து அந்தப் பாடங்களின் ஆரம்பத்தில் விளக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் கேள்விகளுக்கும் உங்கள் பதிலை எழுதிய பின்பும் மனப்பாடப் பகுதியைப் படித்து முடித்த பின்பும் தான், சரியான விடைகளுள்ள பகுதியைத் திறந்து பார்க்கலாமே தவிர, அதற்கு முன்பதாகப் பார்க்கக் கூடாது என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்!

கடைசிப் பாடம் முடிந்தவுடன் "பாடங்களின் மதிப்பெண்கள்" என்ற பகுதி உள்ள பக்கத்திற்கு திருப்பிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற மதிப்பெண்களை எழுதி மொத்தம் எத்தனை மதிப்பெண்கள் என்று கூட்டிப்பார்க்கவும். பின்பு உங்களுடைய தகுதி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இருப்பினும் நீங்கள் பெறும் "மதிப்பெண்களைப்" பொறுத்து உங்கள் தகுதியை மதிப்பிட முடியாது. ஆனால் நீங்கள் இந்தப் பாடங்களை உண்மையாக ஆர்வத்தோடு படிப்பதன் மூலம் பெறும் ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் பொறுத்தே மதிப்பிட முடியும்.

**6. கடைசியாக தனிப்பட்ட முறையில் கூறும் அறிவுரை**

(1) *தேவன் வழிநடத்தும்படியாகவும் புரிந்துகொள்ளும் சக்தியைத்தரும்படியாகவும் ஒவ்வொரு பாடத்தையும் ஜெபத்தோடு ஆரம்பியுங்கள்.*

(2) *வேகமாகச் செய்யாதீர்கள். ஒரே தடவையில் அனைத்துப் பாடங்களையும் முடிக்க முயற்சிக்க வேண்டாம். ஒவ்வொரு வேத பகுதியின் அர்த்தத்தையும் சரியான முறையில் புரிந்துகொள்ளும்வரை அதனைத் திரும்பத் திரும்ப வாசித்துப்பாருங்கள். ஒரு வேத பகுதியின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள அதனோடு தொடர்புடைய மற்ற வசனங்களைப் படிப்பது மிகவும் உதவியாக இருக்கும்.*

(3) *தெளிவாகவும் அழகாகவும் எழுதுங்கள். தேவையில்லாமல் பதில்களை நீளமாக எழுத வேண்டாம். கூரான முனையுடைய பென்சிலாலோ பால் பாயின்ட் பேனாவினாலோ எழுதுங்கள்.*

(4) *மனப்பாடப் பகுதிக்கு சிறப்புப் கவனம் செலுத்துங்கள்.*

(5) *நீங்கள் கற்றுக் கொள்ளும் சத்தியங்களை உங்கள் வாழ்வில் பயன்படுத்த தேவன் உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.*

# வேதத்திலுள்ள புத்தகங்களைச் சுருக்கமாக எழுதும் முறையின் அட்டவணை

## பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள்

### I சட்டம்

| | |
|---|---|
| ஆதியாகமம் | ஆதி. |
| யாத்திராகமம் | யாத். |
| லேவியராகமம் | லேவி. |
| எண்ணாகமம் | எண். |
| உபாகமம் | உபா. |

### II சரித்திரம்

| | |
|---|---|
| யோசுவா | யோசு. |
| நியாயாதிபதிகள் | நியா. |
| ரூத் | ரூத் |
| I சாமுவேல் | I சாமு. |
| II சாமுவேல் | II சாமு. |
| I இராஜாக்கள் | I இராஜா. |
| II இராஜாக்கள் | II இராஜா. |
| I நாளாகமம் | I நாளா. |
| II நாளாகமம் | II நாளா. |
| எஸ்றா | எஸ்றா |
| நெகேமியா | நெகே. |
| எஸ்தர் | எஸ். |

### III கவிதை

| | |
|---|---|
| யோபு | யோபு |
| சங்கீதம் | சங். |
| நீதிமொழிகள் | நீதி. |
| பிரசங்கி | பிர. |
| உன்னதப்பாட்டு | உன். |

### IV பெரிய தீர்க்கதரிசிகள்

| | |
|---|---|
| ஏசாயா | ஏசா. |
| எரேமியா | எரே. |
| புலம்பல் | புல. |
| எசேக்கியேல் | எசே. |
| தானியேல் | தானி. |

### V சிறிய தீர்க்கதரிசிகள்

| | |
|---|---|
| ஓசியா | ஓசி. |
| யோவேல் | யோவேல் |
| ஆமோஸ் | ஆமோ. |
| ஒபதியா | ஒப. |
| யோனா | யோனா |
| மீகா | மீகா |
| நாகூம் | நாகூ. |
| ஆபகூக் | ஆப. |
| செப்பனியா | செப். |
| ஆகாய் | ஆகா. |
| சகரியா | சக. |
| மல்கியா | மல். |

# புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள்

## I சுவிசேஷங்கள்

| | |
|---|---|
| மத்தேயு | மத். |
| மாற்கு | மாற். |
| லூக்கா | லூக். |
| யோவான் | யோவான் |

## II சரித்திரம்

| | |
|---|---|
| அப்போஸ்தலர் | அப். |

## III பவுலுடைய நிருபங்கள்

| | |
|---|---|
| ரோமர் | ரோ. |
| I கொரிந்தியர் | I கொரி. |
| II கொரிந்தியர் | II கொரி. |
| கலாத்தியர் | கலா. |
| எபேசியர் | எபே. |
| பிலிப்பியர் | பிலி. |
| கொலோசெயர் | கொலோ. |
| I தெசலோனிக்கேயர் | I தெச. |
| II தெசலோனிக்கேயர் | II தெச. |
| I தீமோத்தேயு | I தீமோ. |
| II தீமோத்தேயு | II தீமோ. |
| தீத்து | தீத். |
| பிலேமோன் | பிலே. |
| எபிரெயர் | எபி. |

## IV பொதுவான நிருபங்கள்

| | |
|---|---|
| யாக்கோபு | யாக். |
| I பேதுரு | I பே. |
| II பேதுரு | II பே. |
| I யோவான் | I யோவான் |
| II யோவான் | II யோவான் |
| III யோவான் | III யோவான் |
| யூதா | யூதா |

## V தீர்க்கதரிசனம்

| | |
|---|---|
| வெளிப்படுத்தின விசேஷம் | வெளி. |

## பாடம் 1

# தேவனுடைய மீட்பின் திட்டம்

**முன்னுரை:**

பாவம் என்பது தேவனுக்கு விரோதமான உள்ளான ஆவிக்குரிய நிலை; இது வெளிப்படையான கீழ்ப்படியாமையின் செயல்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. இதன்படி நாம் அனைவருமே பாவிகள். நமது பாவ வாழ்க்கையினால் தேவனுக்குக் கொடுக்க வேண்டிய மகிமையை நாம் களவாடுகிறோம். பாவம், மூன்று வகையான விளைவுகளை ஏற்படுத்துகிறது: முதலாவது உள்ளான ஆவிக்குரிய மரணம், அல்லது தேவனுக்கு அந்நியராக மாறுதல்; இரண்டாவது சரீர மரணம்; மூன்றாவதாக தேவனுடைய சமுகத்தை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து துன்பமும் இருளும் உள்ள இடத்திற்குச் செல்லுதல். நமது பாவத்திலிருந்து, நம்மை மீட்க இயேசு வந்தார், பாவமில்லாதவராகிய அவர் நாம் மன்னிப்படையவும் நித்திய வாழ்வைப் பெறவும் நமது பாவங்களை அவரே ஏற்றுக்கொண்டு நமக்காக மரித்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்.

**மனப்பாடப்பகுதி: ரோ. 6:23** மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும். ☐

### அ. பாவமும் அதன் விளைவுகளும்

1. எந்த நோக்கத்திற்காக அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டன? (வெளி. 4:11) ..........
2. தேவன் பெற்றுக் கொள்ளத் தகுதியுடைய 3 காரியங்கள் யாவை? (வெளி. 4:11)
   (1) .......... (2) .......... (3) ..........
3. எல்லா மனிதரும் பாவம் செய்து என்ன ஆனார்கள்? (ரோ.3:23) ..........
4. தேவனை விட்டு மனிதர் விலகிப்போனபோது அவர்கள் செய்த முதல் இரண்டு பாவங்கள் என்ன? (ரோ. 1:21)
   (1) ..........
   (2) ..........
5. இதன் விளைவுகள் என்ன? (ரோ. 1:21)

(1) அவர்கள் மனதில்? ..............................................................................
(2) அவர்கள் இருதயத்தில்? .........................................................................

6. மனித இருதயத்தின் நிலை குறித்த இரு காரியங்களை எழுதுக. (எரே.17:9) (1) ..............................................................................
(2) ..............................................................................

7. இருதயத்தின் உண்மை நிலை யார் ஒருவருக்கு மட்டும் தெரியும்? (எரே. 17:10) ..............................................................................

8. மனித இருதயத்திலிருந்து புறப்படும் 13 பொல்லாத காரியங்களை எழுதவும். (மாற். 7:21,22)
(1) ........................................ (2) ........................................
(3) ........................................ (4) ........................................
(5) ........................................ (6) ........................................
(7) ........................................ (8) ........................................
(9) ........................................ (10) ........................................
(11) ........................................ (12) ........................................
(13) ........................................

9. நாம் நன்மை செய்ய அறிந்திருந்தும் நாம் செய்யாமற்போனால் தேவன் அதை என்னவென்று கூறுகிறார்? (யாக். 4:17)
..............................................................................

10. நமக்குப் பாவமில்லை என்று கூறுவோமேயானால் நமக்கு நாமே என்ன செய்கிறோம்? (1 யோவான் 1:8)
..............................................................................

11. நாம் பாவம் செய்யவில்லை என்று கூறினால் தேவனுக்கு நாம் என்ன செய்கிறோம்? (1 யோவான் 1:10)
..............................................................................

12. பாவம் எல்லா மனிதர் மேலும் என்ன விளைவைக் கொண்டு வந்தது? (ரோ. 5:12; 6:23 யாக். 1:15)
..............................................................................

13. மன்னிப்புப் பெறாத பாவிகளின் இறுதி முடிவு என்ன? (மத். 25:41 வெளி. 20:12–15)
..............................................................................

14. அக்கினிக்கடலுக்குள் செல்லும் எட்டுவிதமான மக்கள் யார் என்று எழுதவும். (வெளி. 21:8)
(1) ........................................ (2) ........................................

(3) .................................... (4) ....................................
(5) .................................... (6) ....................................
(7) .................................... (8) ....................................

## ஆ. கிறிஸ்துவின் மரணத்தின் மற்றும் உயிர்த்தெழுதலின் நோக்கம்

15. கிறிஸ்து உலகத்தில் வந்ததின் நோக்கம் என்ன? (1 தீமோ. 1:15)

........................................................................

16. கிறிஸ்து யாரை அழைக்கிறார்? யாரை ஏற்றுக் கொள்கிறார்? (மத். 9:13, லூக். 15:2)

........................................................................

17. கிறிஸ்து தாமே ஏதேனும் பாவங்கள் செய்தாரா? (எபி. 4:15, 1 பே. 2:22)

........................................................................

18. கிறிஸ்து நமக்காகச் சிலுவையில் எதைச் சுமந்தார்? (1 பே. 2:24)

........................................................................

19. என்ன நோக்கத்திற்காக கிறிஸ்து சிலுவையில் மரித்தார். (1 பே. 3:18)

........................................................................

20. கிறிஸ்துவைப்பற்றிய எந்த 3 காரியங்கள் சுவிசேஷத்திற்கானது என்று பவுல் கூறுகிறார்? (1 கொரி. 15:3–4)
(1) ........................................................................
(2) ........................................................................
(3) ........................................................................

21. கிறிஸ்து எப்போதும் உயிரோடிருக்கிறவராகையால் அவரிடத்தில் சேருகிறவர்களுக்கு அவர் என்ன செய்ய வல்லவராயிருக்கிறார்? (எபி. 7:25)

........................................................................

22. இயேசுவின் நாமத்தில் எல்லா மனிதருக்கும் கிடைக்கும் 3 காரியங்கள் யாவை? (லூக். 24:47, அப். 4:12)
(1) ........................................................................
(2) ........................................................................
(3) ........................................................................

மனப்பாடப்பகுதி: ரோ. 6:23

இந்த வசனத்தை மனப்பாடமாக இங்கே எழுதவும்

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

**இந்தப் பாடத்தில் உள்ள எல்லாக் கேள்விகளுக்கும் முதலில் விடை எழுதவும், விடை எழுதி முடிக்கும் வரை கீழே உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.**

# பாடம் 1: தேவனுடைய மீட்பின் திட்டம்

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

கேள்வி எண் பதில்கள் மதிப்பெண்கள்

1. தேவனுடைய மகிழ்ச்சிக்காக ........................................1
2. (1) மகிமை (2) கனம் (3) வல்லமை ........................................3
3. எல்லோரும் தேவ மகிமையற்றவர்களானோம் ........................................1
4. (1) அவர்கள் தேவனை மகிமைப்படுத்தவில்லை
   (2) ஸ்தோத்தரிக்கவில்லை ........................................2
5. (1) தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள் ........................................1
   (2) உணர்வில்லாத அவர்கள் இருதயம் இருளடைந்தது ........................................1
6. (1) எல்லாவற்றைப் பார்க்கிலும் திருக்குள்ளது ........................................1
   (2) மகா கேடுள்ளது ........................................1
7. கர்த்தர் (தேவன்) ........................................1
8. (1) பொல்லாத சிந்தனைகள் (2) விபசாரங்கள்
   (3) வேசித்தனங்கள் ........................................3
   (4) கொலை பாதகங்கள் (5) களவுகள்
   (6) பொருளாசைகள் ........................................3

(7) துஷ்டத்தனங்கள் (8) கபடு (9) காம விகாரம் ....................3
(10) வன்கண் (11) தூஷணம் (12) பெருமை ....................3
(13) மதிகேடு ....................1

9. தேவன் அதைப் பாவம் என்று கூறுகிறார் ....................1
10. நாம் நம்மை நாமே வஞ்சிக்கிறோம் ....................1
11. நாம் தேவனைப் பொய்யராக்குகிறோம் ....................1
12. மரணம் ....................1
13. நித்திய அக்கினி — அக்கினிக்கடல் — இரண்டாம் மரணம் ....................1
14. (1) பயப்படுகிறவர்கள் (2) அவிசுவாசிகள் ....................2
(3) அருவருப்பானவர்கள் (4) கொலைபாதகர்
(5) விபசாரக்காரர் ....................3
(6) சூனியக்காரர் (7) விக்கிரகாராதனைக்காரர்
(8) பொய்யர் ....................3
15. பாவிகளை இரட்சிக்க ....................1
16. கிறிஸ்து பாவிகளை அழைக்கிறார், இரட்சிக்கிறார் ....................1
17. ஒன்றும் இல்லை ....................1
18. நமது பாவங்களை ....................1
19. நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படிக்கு ....................1
20. (1) நமது பாவங்களுக்காக மரித்தார் (2) அவர் அடக்கம் பண்ணப்பட்டார் ....................2
(3) மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் ....................1
21. அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க ....................1
22. (1) மனந்திரும்புதல் (2) பாவமன்னிப்பு (3) இரட்சிப்பு..3

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ....................4

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். 3 தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 54

**50% — 27 70% — 38 80% — 43.**

# பாடம் 1: தேவனுடைய மீட்பின் திட்டம்

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

*(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)*

1–4. தேவன் நமக்குக் கொடுத்த பொறுப்புகளைச் செய்யத் தவறுவதே அடிப்படையாக ஒரு மனிதனின் பாவமாகும். தேவனை மகிமைப்படுத்தவே மக்கள் படைக்கப்பட்டனர். "அவர்கள் தேவனின் சாயலாகவும் அவருடைய மகிமையாகவும் உள்ளனர்". (1 கொரி. 11:7) தேவனை மகிமைப்படுத்தாத எந்தச் செயலும் பாவமே.

3. "எல்லாரும் தேவ மகிமையற்றவர்களானோம்". வில்லிலிருந்து ஒரு அம்பு குறி வைத்து எய்யப்படுகிறது. ஆனால் அது குறி தவறி முன்னாகவே விழுந்துவிடுகிறது. நமது "இலக்கு" "தேவனுடைய மகிமை". ஆனால் நாம் அனைவரும் இந்த இலக்கை அடையாமல் தவறிவிட்டோம். (பிலி. 3:14ஐப் பார்க்கவும்)

6–8. இந்த எல்லா வேத வாக்கியங்களும் "இருதயத்தைப்" பற்றிப் பொதுவாகக் கூறுகின்றன. இவைகள் எந்தவிதமான விதிவிலக்குமின்றி விழுந்துபோன முழு மனுக்குலத்தின் உள்ளான நிலையை விளக்குகின்றன.

8. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பாவங்களில் எல்லாவற்றையும் எல்லா மக்களும் செய்வதில்லை. ஆனால் அவற்றின் "வித்துக்கள்" எல்லா உள்ளங்களிலும் உள்ளன. ஒரு மனிதனின் குணாதிசயமும் சூழ்நிலையும் ஒன்று சேர்ந்து இவற்றில் எந்த "விதையை" முளைக்க வைத்து அதற்கான செய்கைகளை வெளிக்கொண்டுவரலாம் எனத் தீர்மானிக்கின்றன.

9. அநேக மக்கள் தாங்கள் "செய்யும்" காரியங்களுக்கு குற்ற உணர்வுடையவர்களாயிருப்பதுபோல "செய்யாமல்" வரும் காரியங்களுக்கு குற்ற உணர்வு அடைவதில்லை. மத். 25:3, 25, 45ல் புத்தியில்லாத கன்னிகைகள், உண்மையற்ற உக்கிராணக்காரன், வெள்ளாடுகள் போன்ற மக்கள் இவர்கள் அனைவரும் செய்யாமல் விட்ட காரியத்திற்காகத் தண்டிக்கப்பட்டனர்.

13. 2 வெவ்வேறான இடங்களை நாம் வரையறுக்க வேண்டும்: (1) "நரகம்" (எபிரெயு மொழியில் "ஷியோல்", கிரேக்க மொழியில் "ஹேடீஸ்"): உயிர்த்தெழுதலுக்கும் நியாயத்தீர்ப்புக்கும் முன்பாக உடல்களை விட்டுப் பிரிந்துசெல்லும் ஆவிகள் தங்கியிருக்கும் ஓர்

இடம். (லூக். 16:23) (2) "கெஹென்னா" அல்லது "அக்கினிக் கடல்". உயிர்த்தெழுதல் மற்றும் நியாயத்தீர்ப்புக்குப் பின் பொல்லாதவர்களுக்குக் கிடைக்கும் இறுதியான முடிவில்லாத நகரமாகும். (வெளி. 20:12–15).

14. நியாயத்தீர்ப்பு பெற்ற முதல் 2 வகையான மக்களைக் கவனியுங்கள்: "பயப்படுகிறவர்கள்", "அவிசுவாசிகள்", "மார்க்கசம்பந்தமான" மக்கள் எத்தனை பேர் இதில் உள்ளனர்?

18. "...அவர் (இயேசு) தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்". (எபி. 9:26) மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி பலியினாலே தற்காலிகமாக பாவ நிவிர்த்தி "உண்டாயிற்று" (எபி. 10:1–4). கிறிஸ்துவின் மரணத்தினாலே பாவம் முழுமையாக "கழுவப்பட்டது" (எபி. 10:11–18).

19. மன்னிக்கப்படாத பாவம் தேவனுக்கும் மனுக்குலத்துக்கும் நடுவில் பெரிய பிளவாக இருந்தது. (ஏசா. 59:2) சிலுவையின் மூலமாய் பாவம் கிறிஸ்துவால் பிரிக்கப்பட்டபோது தேவனுக்கு நேராய் மக்கள் திரும்பிச் செல்ல வழி திறக்கப்பட்டது.

20. "விசுவாசம்" "கிரியைக"ளினால் உண்டாகிறது. இந்த 3 சரித்திர நிகழ்ச்சிகளினடிப்படையிலேயே "சுவிசேஷம்" ஏற்பட்டது.

21. "முற்றும் முடிய" என்று கூறும்போது ஒவ்வொரு பாவியின் எக்காலத் தேவைக்கும் ஏற்றது என்று பொருள். கிறிஸ்து எல்லாவற்றிற்கும் போதுமானவர்.

## பாடம் 2

# தேவனுடைய மீட்பின் திட்டம்

(தொடர்ச்சி)

**முன்னுரை:**

எந்த ஒரு மதத்தின் மூலமோ, நற்கிரியைகளின் மூலமோ தேவன் நமக்கு இரட்சிப்பைத் தருவதில்லை. ஆனால் கிறிஸ்துவின் மேல் நாம் வைக்கும் தனிப்பட்ட விசுவாசத்தின் மூலமே இதனைத் தருகிறார். இரட்சிக்கப்படும்படிக்கு நாம் நமது பாவங்களை ஒப்புக்கொண்டு அறிக்கையிட வேண்டும் (பாவத்தை விட்டு முற்றிலுமாகத் திரும்புதல்); கிறிஸ்து நமக்காக மரித்து உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்க வேண்டும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை விசுவாசத்தின் மூலமாக நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு நமது சொந்த ஆண்டவர் என்று எல்லாருக்கும் முன்பாக அறிக்கையிட வேண்டும். இப்படியாக கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொண்ட பின்பு விசுவாசத்தின் மூலமாக அவர் நமது இருதயங்களில் தொடர்ந்து வாசம் செய்கிறார். மேலும் அவர் நமக்கு நித்திய ஜீவனையும் நீதியுள்ள வாழ்க்கை வாழவும் பாவத்தின் மேல் வெற்றி பெறவும் நமக்கு சக்தியையும் தருகிறார்.

**மனப்பாடப்பகுதி: யோவான் 1:12, 13** மனப்பாட அட்டை தயார் செய்யும் போது இதனைச் சரிபார்க்கவும். ☐

(ரோ. 6:23ஐ தினமும் திரும்பப் பார்க்கவும்)

### இ) நாம் எப்படி இரட்சிப்பைப் பெற முடியும்?

23. நாம் எப்போது இரட்சிப்பைப் பெற வேண்டும்? (நீதி. 27:1; 2 கொரி. 6:2)

.................................................................................................

24. நமது சொந்த நற்கிரியைகளின் மூலமாய் இரட்சிப்படைய முடியுமா? (எபே. 2:8,9 தீத். 3:5)

.................................................................................................

25. நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதன் மூலம் நாம் இரட்சிப்படைய முடியுமா? (ரோ. 3:20)

.................................................................................................

26. தேவனுடைய இரக்கத்தைப் பெற விரும்பினால் நாம் செய்ய வேண்டிய 2 காரியங்கள் யாவை? (நீதி. 28:13)
(1) ..............................
(2) ..............................

27. நாம் பாவங்களை அறிக்கையிடும்போது தேவன் நமக்குச் செய்யும் 2 காரியங்கள் யாவை? (1 யோவான் 1:9)
(1) ..............................
(2) ..............................

28. நமது இருதயத்திலுள்ள பாவங்களைக் கழுவி சுத்தம் செய்ய தேவன் எதைப் பயன்படுத்துகிறார்? (1 யோவான் 1:7)
..............................

29. நாம் இரட்சிக்கப்பட விரும்பினால் நாம் செய்ய வேண்டிய 2 காரியங்கள் என்ன? (ரோ. 10:9–10)
(1) நமது இருதயத்தில்? ..............................
..............................
(2) நமது வாயினால்? ..............................
..............................

30. கிறிஸ்துவினிடத்தில் நாம் வரும்போது அவர் நம்மை தள்ளிவிடுவாரா? (யோவான் 6:37)
..............................

31. நமது இருதயத்தை கிறிஸ்துவுக்குத் திறந்து தரும்போது நமக்கு அவர் தரும் வாக்குத்தத்தம் என்ன? (வெளி. 3:20)
..............................

32. நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது நமக்கு அவர் என்ன தருகிறார்? (யோவான் 1:12)
..............................

33. இதனால் நமக்குக் கிடைக்கும் அனுபவம் என்ன? (யோவான் 1:13)
..............................

34. நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது அவர் மூலமாக தேவன் நமக்கு என்ன தருகிறார்? (ரோ. 6:23).
..............................

35. நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்று நாம் அறிந்து கொள்ள முடியுமா? (1 யோவான் 5:13).
..............................

36. கிறிஸ்துவைக் குறித்து தேவன் கொடுக்கும் சாட்சி என்ன? (1 யோவான் 5:11) ..........

37. நாம் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது நமக்கு என்ன கிடைக்கும்? (1 யோவான் 5:12) ..........

**ச) உலகத்தையும் பிசாசையும் மேற்கொள்ள இரட்சிப்பு நமக்கு வல்லமையை அளிக்கிறது**

38. நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்பு நமது உள்ளத்தில் யார் வசிக்கிறார்? (கலா. 2:20, எபே. 3:17)

..........

39. கிறிஸ்து நமக்குக் கொடுக்கும் பெலத்தின் மூலமாய் நாம் என்ன செய்ய முடியும்? (பிலி. 4:13)

..........

40. நாம் கிறிஸ்துவை மனிதருக்கு முன்பாக அறிக்கையிட்டால் நமக்கு அவர் என்ன செய்கிறார்? (மத். 10:32)

..........

..........

41. நாம் கிறிஸ்துவை மனிதருக்கு முன்பாக மறுதலித்தால் அவர் நமக்கு என்ன செய்கிறார்? (மத். 10:33)

..........

..........

42. உலகத்தையும் அதன் சோதனைகளையும் எப்படிப்பட்ட மனிதன் ஜெயிக்க முடியும்?

(1) (1 யோவான் 5:4) ..........

..........

(2) (1 யோவான் 5:5) ..........

..........

43. தேவனுடைய பிள்ளைகள் உலகத்தை மேற்கொள்வது ஏன்? (1 யோவான் 4:4)

..........

..........

44. தேவனுடைய பிள்ளைகள் எந்த 2 காரியங்களின் மூலமாய் சாத்தானை ஜெயிக்கிறார்கள்? (வெளி 12:11)

(1) ..........

(2) ..........................................................................................

45. யாரைத் தம்முடைய பிள்ளையாக மோட்சத்தில் ஏற்றுக் கொள்வதாக தேவன் வாக்குப் பண்ணுகிறார்?(வெளி. 21:7)

..........................................................................................

**மனப்பாடப்பகுதி: யோவான் 1:12,13**

இந்த வசனங்களை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**இந்தப் பாடத்தின் எல்லாக் கேள்விகளுக்கும் விடை எழுதி முடிக்கும் வரை அருகில் உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.**

# பாடம் 2: தேவனுடைய மீட்பின் திட்டம்

(தொடர்ச்சி)

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 23. | இப்பொழுதே, இன்றே | 1 |
| 24. | முடியாது. | 1 |
| 25. | முடியாது. | 1 |
| 26. | (1) பாவங்களை அறிக்கையிட வேண்டும்<br>(2) பாவங்களை விட்டுவிட வேண்டும் | 2 |
| 27. | (1) பாவங்களை மன்னிக்கிறார் | 1 |
| | (2) எல்லா அநியாயங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறார் | 1 |
| 28. | இயேசு கிறிஸ்துவின் இரத்தம், (தேவனுடைய குமாரன்) | 1 |
| 29. | (1) தேவன், இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று விசுவாசிக்க வேண்டும். | 2 |

(2) கர்த்தராகிய இயேசுவை தேவன் என்று அறிக்கையிட வேண்டும் ..............................................................1

30. இல்லை ..............................................................1

31. "நான் உள்ளே வருவேன்" ..............................................................1

32. தேவனுடைய பிள்ளைகளாகும் அதிகாரம் ..............................................................1

33. நாம் தேவனால் பிறந்தவர்கள் ( < மறுபிறப்பின் அனுபவம்) ..............................................................1

34. நித்திய ஜீவன் ..............................................................1

35. ஆம் (யோவான் இதைப்பற்றி எழுதுகிறார்) ..............................................................1

36. கிறிஸ்துவால் நமக்கு நித்திய ஜீவன் உண்டு ..............................................................2

37. நித்திய ஜீவன் ..............................................................1

38. கிறிஸ்து நமது உள்ளங்களில் வசிக்கிறார் ..............................................................1

39. எல்லாவற்றையும் (நாம் என்ன செய்ய தேவன் விரும்புகிறாரோ அவற்றை) ..............................................................1

40. பரலோகத்திலுள்ள பிதாவிற்கு முன்பாக நம்மை அறிக்கைபண்ணுவார் ..............................................................1

41. பரலோகத்திலுள்ள பிதாவிற்கு முன்பாக நம்மை மறுதலிப்பார் ..............................................................1

42. (1) தேவனால் பிறப்பவன் (விசுவாசத்தின் மூலமாய்)..2

(2) இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பவன் ..............................................................1

43. ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் ( < பிசாசு) உங்களிலிருக்கிறவர் (< தேவன்) பெரியவர் ..............................................................2

44. (1) ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் (<கிறிஸ்து) ..............................................................1

(2) சாட்சியின் வசனத்தினால் ..............................................................1

45. ஜெயங்கொள்ளுகிறவனை ..............................................................1

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ..............................................................8

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். 3 தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 40

**50% — 20 70% — 28 80% — 32.**

# பாடம் 2: தேவனுடைய மீட்பின் திட்டம்

(தொடர்ச்சி)

### சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

*(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)*

24–25. கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைப்பதன் மூலம் கிடைக்கும் கிருபையே அன்றி மனிதன் தன்னைத்தான் இரட்சித்துக் கொள்வதையோ தன்னைத்தான் நீதிமானாக்கப்படுவதையோ வேதம் நிராகரிக்கிறது.

25. நியாயப்பிரமாணம் மனிதனை நீதிமானாக மாற்றக் கொடுக்கப்படவில்லை. அவன் பாவி என்றும் தன்னைத்தான் இரட்சிக்க முடியாது என்றும் தெரிவிக்கிறது. (ரோ.3:20; 7:7-13ஐப் பார்க்கவும்).

26. பாவத்தை "அறிக்கை" மாத்திரம் செய்து அதனை "விட்டுவிடாதிருப்பது" தேவனுடைய இரக்கத்தை பெறுவதற்குத் தடையாகும். (ஏசா. 55:7ஐப் பார்க்கவும்).

27. தேவன் பாவத்தை மன்னிக்கும் போது, பாவியின் இருதயத்தையும் சுத்தம் செய்கிறார். இப்படிக் கழுவி சுத்தம் செய்வதால் அறிக்கை செய்த பாவத்தை அந்தப் பாவி தொடர்ந்து செய்வதில்லை.

28. மனிதனின் பாவத்தைப் போக்க கிறிஸ்துவின் இரத்தத்தைத் தவிர வேறு பரிகாரம் இல்லை.

29. (2) "இயேசுவை கர்த்தர் என்று அறிக்கையிட வேண்டும்". (1 கொரி. 12:3 பிலி. 2:11).

31. லவோதிக்கேயா சபைக்கு இயேசு கூறியவைகள் வெளி. 3:20ல் கூறப்பட்டுள்ளது. அச்சபை மக்கள் கிறிஸ்தவர்களாக இருந்தும் கிறிஸ்து அவர்களுக்கு வெளியே இருந்தார். எனவே அவர் உள்ளேவர ஆவலுள்ளவராய் இருந்தார். இன்றைக்கு அநேக சபைகளின் விஷயத்தில் இது உண்மையாயிருக்கிறது அல்லவா? அவர் "உள்ளே வர" விருப்பம் தெரிவிப்பதை மொத்த சபைக்கும் கூறாமல் தனிப்பட்ட நபருக்குக் கூறுகிறார். ஆண்டவரை ஏற்றுக் கொள்வது தனிப்பட்ட நபருடைய தீர்மானத்தைப் பொருத்தது.

32. அதிகாரத்க்கை குறிக்கிறது.

33. யோவான் 3:1–7ல் "நாம் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. யோவான் 1:12–13ல் நாம் எப்படி அவருடைய பிள்ளைகளாகலாம் என்று கூறப்பட்டுள்ளது (தேவன்). அவரை நமது சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

34. ரோ. 6:23ல் குறிப்பிடப்பட்டுள்ள இரு காரியங்களைக் கவனியுங்கள்; (1) "சம்பளம்" = நாம் செய்த பாவங்களுக்குக் கிடைக்கும் பரிசு; (2) "கிருபைவரம்" = இலவசமாய் தேவனிடத்திலிருந்து கிடைக்கும் தேவனுடைய கிருபையின் ஈவு.

38. கிறிஸ்தவ வாழ்க்கை "விசுவாசத்தில்" ஆரம்பித்து தொடர்ந்து செல்கிறது. "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் நடந்துகொள்ளுங்கள்" (கொலோ. 2:6). விசுவாசத்தின் மூலம் இயேசுவை ஏற்றுக் கொள்ளுகிறோம். விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவுக்குள் நடக்கிறோம். (2 கொரி. 5:7).

39. "கிறிஸ்து கொடுக்கும் பெலத்தின் மூலமாய் நான் எல்லாவற்றையும் செய்ய முடியும்". (பிலி. 4:13).

40-41. கிறிஸ்துவே "நாம் அறிக்கை பண்ணுகிற பிரதான ஆசாரியன்" (எபி. 3:1). நாம் "அறிக்கை" பண்ணுகிறதைப் பொருத்துத் தான் பிரதான ஆசாரியனுடைய ஊழியம் நமக்கு பயனுள்ளதாய் இருக்கும். (எபி. 4:14, 10:21–23). கடைசியாக நமக்கு 2 காரியங்கள் உள்ளன: ஒன்று நாம் "அறிக்கையிட" வேண்டும் அல்லது "மறுதலிக்க" வேண்டும்.

44. "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும்" என்பதன் அர்த்தம்: கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு என்ன செய்கிறது என்று வேதம் கூறுவதைக் குறித்து தனிப்பட்ட முறையில் நாம் சாட்சி கூறுவதாகும். (1) மீட்பு (எபே. 1:7); (2) சுத்திகரிப்பு (I யோவான் 1:7); (3) நீதிமானாக்கப்படுதல் (ரோ. 5:9); (4) பரிசுத்தமாக்கப்படுதல் (எபி. 13:12).

45. ரோ. 12:21ஐ ஒப்பிட்டுப்பாருங்கள். கடைசியாக 2 காரியங்கள் நமக்கு இருக்கின்றன: ஒன்று நாம் மேற்கொள்ள வேண்டும், அல்லது மேற்கொள்ளப்பட வேண்டும்.

# பாடம் 3

# நமது உடல் நலம் குறித்த தேவனுடைய திட்டம்

***முன்னுரை:***

கீழ்ப்படியாமையினால் தேவனைவிட்டு தூரம் போன மனுக்குலம், தேவனுடைய பாதுகாப்பையும் ஆசீர்வாதத்தையும் இழந்து பிசாசின் சாபத்திற்குள்ளாக கடந்து வந்தது. இதன் மூலம் பிசாசு மனித உடல்களில் பெலவீனத்தையும் பலவிதமான வேதனைகளையும் நோய்களையும் கொண்டுவந்தான். இருப்பினும் தேவன் தம்முடைய இரக்கத்தினால் மனுக்குலத்தை ஆசீர்வதிக்கவும் பாவத்திலிருந்து மட்டுமல்ல நோய்களிலிருந்தும் நம்மை விடுவிக்கவும் சித்தங்கொண்டார். இதன் காரணமாகவே கிறிஸ்து சிலுவையில் நமது பாவங்களை மட்டுமல்ல, நமது நோய்களையும் சுமந்தார். எனவே கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் நமது சரீர சுகத்தையும் பாவ மன்னிப்பையும் நமது ஆத்துமாவில் சமாதானத்தையும் பெற முடியும்.

***மனப்பாடப்பகுதி: 1 பே. 2:24*** மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும். ☐

(முந்தைய மனப்பாடப்பகுதிகளைத் தினமும் திரும்பப் பார்க்கவும்)

**அ) பொது:**

**யார் சுகவீனத்தைக் கொண்டு வருகிறார்கள்? யார் சுகத்தைத் தருகிறார்கள்?**

1. ஆதாமையும் ஏவாளையும் முதன்முதலில் வஞ்சித்து தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போகத் தூண்டியது யார்? (ஆதி. 3:1–13, 1 யோவான் 3:8, வெளி. 12:9)

   ........................................................................................................

2. ஏன் வேதனை, நோய், மரணம் முதலில் மனுக்குலத்திற்கு வந்தது? (ஆதி. 3:16–19)

   ........................................................................................................

3. யோபுக்கு சுகவீனத்தைக் கொண்டுவந்தது யார்? (யோபு 2:7)

   ........................................................................................................

4. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பெண்ணுடைய சுகவீனத்திற்குக் காரணம் யார்? எப்படி? (லூக். 13:11,16)
..............................................................................................................

5. சுகவீனத்தினால் மக்களை துன்பப்படுத்துவது யார்? (அப். 10:38)
..............................................................................................................

6. அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு தேவன் என்ன செய்வதாக வாக்குக்கொடுக்கிறார்? (யாத். 15:26)
..............................................................................................................
..............................................................................................................

7. அவருக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் செய்கிற 2 காரியங்கள் என்ன? (யாத். 23:25)
(1) ..........................................................................................................
(2) ..........................................................................................................

8. சுகவீனம் தேவனுடைய பிள்ளைகளுக்கு வருகிறதா? அல்லது அவர்களுடைய சத்துருக்களுக்கு வருகிறதா? (உபா. 7:15)
..............................................................................................................

9. தாவீதுக்கு தேவன் செய்ததாகக் கூறும் 2 காரியங்கள் என்ன? (சங். 103:3)
(1) ..........................................................................................................
(2) ..........................................................................................................

10. தனது கிறிஸ்தவ நண்பன் எந்த 3 விதங்களில் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்று யோவான் விரும்புகிறார்? (3 யோவான் 2)
(1) ..........................................................................................................
(2) ..........................................................................................................
(3) ..........................................................................................................

11. கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலமாய் எத்தனை தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் சுதந்தரித்துக் கொள்ளலாம்? (2 கொரி. 1:19, 20)
..............................................................................................................

12. எந்த நோக்கத்திற்காக கிறிஸ்து உலகத்திற்கு வெளிப்படுத்தப்பட்டார்? (1 யோவான் 3:8)
..............................................................................................................

13. கிறிஸ்துவை என்ன நோக்கத்திற்காக தேவன் பரிசுத்த ஆவியினால்

அபிஷேகம் பண்ணினார்? (அப். 10:38).

---

14. யாருடைய சித்தத்தைச் செய்ய கிறிஸ்து வந்தார்? (யோ. 5:30; 6:38).

---

15. கிறிஸ்துவின் அற்புதங்களை அவரில் நிறைவேற்றியது யார்? (யோவான் 10:37, 38; 14:10)

---

16. தம்மிடத்தில் வந்த எத்தனை பேரை கிறிஸ்து சுகமாக்கினார்? (மத்தேயு 8:16; 12:15; 14:35,36 லூக். 4:40; 6:19)

---

17. எத்தனை வகையான நோய்களை கிறிஸ்து சுகமாக்கினார்? (மத்தேயு 4:23,24; 9:35)

---

18. கிறிஸ்து அநேகரை சுகமாக்கவில்லை, காரணம் என்ன? (மத். 13:58, மாற். 6:5,6)

---

19. தேவன் தன்னை மாற்றிக் கொள்பவரா? (மல். 3:6, யாக். 1:17)

---

20. கிறிஸ்து மாறுகிறவரா? (எபி. 13:8)

---

## ஆ) சிலுவையில் கிறிஸ்து மரித்ததன் நோக்கம்

21. நமக்காக கிறிஸ்து சுமந்த 3 காரியங்கள் என்ன? (மத். 8:17 1 பே. 2:24)
(1) ……………………
(2) ……………………
(3) ……………………

22. நமது வாழ்க்கையில் இதனால் ஏற்படும் 3 விதமான விளைவுகள் என்ன? (1 பே. 2:24)
(1) ……………………
(2) ……………………
(3) ……………………

23. கிறிஸ்து நமக்காக என்னவானார்? (கலா. 3:13)

---

24. கிறிஸ்து எதிலிருந்து நம்மை மீட்டார்? (கலா. 3:13)

..........................................................................................................

25. நியாயப்பிரமாணத்தின் சாபத்தினால் எத்தனை வகையான நோய்கள் ஏற்படுகின்றன? (உபா. 28:15, 21, 22, 27, 28, 35, 59–61)

..........................................................................................................

26. ஆசீர்வாதம் சாபம் இதில் நாம் எதைத் தெரிந்து கொள்ள தேவன் விரும்புகிறார்? (உபா. 30:19)

..........................................................................................................

**மனப்பாடப்பகுதி: 1 பே. 2:24**

(இந்த வசனம் கிறிஸ்துவைக் குறிக்கிறது) இந்த வசனத்தை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**இந்தப் பாடத்தின் எல்லாக் கேள்விகளுக்கும் விடை எழுதி முடிக்கும் வரை கீழே உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.**

# பாடம் 3: நமது உடல் நலன் குறித்த தேவனுடைய திட்டம்

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | சர்ப்பம் — பிசாசு — சாத்தான் | 1 |
| 2. | ஏனெனில் மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை | 1 |
| 3. | சாத்தான் — பிசாசு | 1 |
| 4. | பெலவீனப்படுத்தும் ஆவியால் சாத்தான் அவளைக் கட்டியிருந்தான் | 2 |
| 5. | பிசாசு | 1 |
| 6. | எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் | |

அவர்களுக்கு வரவிடுவதில்லை ....................................................2
7. (1) அவர்களுடைய அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார் ....................................................1
(2) வியாதியை அவர்களிடமிருந்து விலக்குவார் ........................1
8. தேவனுடைய பிள்ளைகளுடைய விரோதிகளுக்கு ........................1
9. (1) அவருடைய அக்கிரமங்களையெல்லாம் மன்னித்தார் ..........1
(2) அவருடைய நோய்களையெல்லாம் குணமாக்கினார் ............1
10. (1) உயர்வை அடைய வேண்டும் ....................................1
(2) சுகமாயிருக்க வேண்டும் ....................................1
(3) ஆத்துமா வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டும் ....................1
11. தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களும் ............................1
12. பிசாசினுடைய கிரியைகளை அழிக்க ....................................1
13. நன்மை செய்யவும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கவும் ....................................1
14. பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை ....................................1
15. பிதாவாகிய தேவன் ....................................1
16. எல்லாரையும், ஒவ்வொருவரையும் ....................................1
17. சகல வியாதிகளையும் ....................................1
18. மக்களுடைய அவிசுவாசத்தினால் ....................................1
19. ஒருபோதும் இல்லை ....................................1
20. ஒருபோதும் இல்லை ....................................1
21. (1) நமது பெலவீனங்கள் (2) நம்முடைய நோய்கள் (3) நமது பாவங்கள் ....................................3
22. (1) நமது பாவங்களுக்குச் சாகிறோம் ....................................1
(2) நீதிக்குப் பிழைக்கிறோம் ....................................1
(3) அவருடைய (கிறிஸ்துவின்) தழும்புகளால் குணமாகிறோம் ....................................1
23. சாபமானார் ....................................1
24. நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு ....................................1
25. எல்லா வகையான நோய்கள் ....................................1
26. ஆசீர்வாதம் ....................................1

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ....................................................4

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். 3 தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 40

**50% — 20 70% — 28 80% — 32.**

# பாடம் 3: நமது உடல் நலம் குறித்த தேவனுடைய திட்டம்

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

*(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)*

1–2. ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் மனித இனத்தின் அனைத்து பாடுகளுக்கும் காரணம் பிசாசுதான் என்பதைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. பிசாசைக் குறித்து, "அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்" என்று இயேசு கூறுகிறார் (யோவான் 8:44).

3–5. நோய்களுக்கெல்லாம் மூல காரணம் என்ன என்று ஆராய்வோமென்றால் பிசாசுதான் காரணம் என்று நாம் அறிந்து கொள்ளலாம். "பிசாசினுடைய வேலையில் இது ஒரு பகுதி."

6. வேறு ஒரு மொழிபெயர்ப்பு: "நான் யெகோவா உங்கள் குடும்ப வைத்தியர் என்றுள்ளது." (யாத். 15:26).

9. "அக்கிரமங்கள்", "நோய்கள்" இவற்றிற்கு முன்பாக "எல்லா" (All) என்ற வார்த்தை வருவதைக் கவனியுங்கள்.

10. காயு (Gaius) என்பவர் ஒரு முன் மாதிரியான விசுவாசி என்றும் "அவர் சத்தியத்தில் நடந்து", "விசுவாசிக்குரிய கடமையைச் செய்வதாயும்" யோவான் எழுதுவதைக் கவனியுங்கள். (3 யோவான் 3:5).

11. இன்றைய நாகரிக உலகில் உள்ள கொள்கைகள் சரீர சுகத்தை கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொள்ள முடியாதபடி தடைசெய்கின்றன. இதனைத் தவறு என்று 2 கொரி 1:20 நிரூபிக்கிறது. தேவனுடைய ***"எல்லா"*** வாக்குத்தத்தங்களும் **(இப்பொழுது)** "நமக்கு" (= கிறிஸ்தவர்களுக்கு) உரித்தாகின்றன. தனிப்பட்ட முறையில் உபயோகித்தல்: "என்னுடைய தேவைக்கு மற்றும் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் அமையும் ஒவ்வொரு வாக்குத்தத்தமும் எனக்கு உரித்தானது."

13. தேவனுடைய *3* தன்மைகளும் சுகமாக்கும் ஊழியத்தில் பங்குகொள்கின்றன. பிதா குமாரனை ஆவியினால் அபிஷேகிக்கிறார். இதன் விளைவு: அனைவருக்கும் சுகம்.

14-15 பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின் சரியான வெளிப்பாடு இயேசு கிறிஸ்து. கிறிஸ்து நிறைவேற்றின மற்ற காரியங்களைப்போலவே சுகமாக்குதலும் ஒரு ஊழியமே.

16–18 கிறிஸ்துவிடம் வந்த எந்த நோயாளியும் சுகமடையாமல் திரும்பிச் சென்றதாக சுவிசேஷங்களில் கூறப்படவில்லை.

19–20 சுவிசேஷத்தின் மாறாத தன்மை. தேவனின் மாறாத தன்மையின் அடிப்படையிலானது.

21. மத்தேயுவும் பேதுருவும் ஏசா. 53:4–5 உள்ள வசனங்களைக் குறிப்பிடுகின்றனர். ஏசா. 53:4ம் வசனத்தின் சரியான மொழிபெயர்ப்பு: "மெய்யாகவே அவர் நம்முடைய சுகவீனங்களை ஏற்றுக்கொண்டு நமது வேதனைகளைச் சுமந்தார்". இந்த வசனம் கிறிஸ்துவைப் பற்றிக் கூறுகிறது. 1 பே. 2:24ல் "குணமானீர்கள்" என்று கூறப்பட்டுள்ள அந்த வார்த்தை சரீர சுகத்தைக் குறிக்கும் கிரேக்க வார்த்தையை அடிப்படையாகக் கொண்டது. அந்த வார்த்தையிலிருந்து தான் "மருத்துவர்" என்ற வார்த்தையும் பெறப்பட்டது.

24. "நியாயப்பிரமாணத்தின் சாபம்" என்றால் நியாயப் பிரமாணத்தை மீறுவதினால் ஏற்படும் விளைவாகும். உபா. 28:15–68ல் இந்த சாபம் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இது எல்லா வகையான நோய்களையும் உள்ளடக்கியதாகும்.

26. இரண்டு எதிர்மறையான காரியங்களை முன்வைக்கிறார்: அ) "வாழ்வும் ஆசீர்வாதமும்"; ஆ) "மரணமும் சாபமும்". மக்கள் இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

# பாடம் 4

# நமது உடல் நலம் குறித்த தேவனுடைய திட்டம்

*(தொடர்ச்சி)*

**முன்னுரை:**

தேவனுடைய வார்த்தையைக் கேட்டு விசுவாசிப்பதன் மூலமாகவும், உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஜீவன் நமது உடலில் ஆட்கொள்ள தேவனுடைய ஆவியானவருக்கு இடமளிப்பதன் மூலமும் நமது உடலில் சுகம் கிடைக்கிறது. நாம் சுகம் பெறுவது மட்டுமல்ல. இயேசுவின் நாமத்தில் மற்றவர்களுக்கும் விடுதலையையும் சுகத்தையும் நாம் அளிக்க முடியும். இரண்டு வகையில் நாம் இதனைச் செய்யலாம். நோயாளிகளின் மேல் கை வைத்து ஜெபிக்கலாம் அல்லது சபையின் மூத்த விசுவாசிகளை அழைத்து இயேசுவின் நாமத்தில் அவர்கள் மேல் எண்ணெய் வைத்து ஜெபிக்கச் செய்யலாம்: விசுவாசத்தினால் நாம் இதைச் செய்யும்போது தேவன் தமது வார்த்தையை உறுதிப்படுத்தி நமது மூலமாய் கிரியை செய்து அற்புத சுகத்தையும் விடுதலையையும் அளிக்கிறார்.

**மனப்பாடப்பகுதி: மாற்கு 16:17, 18** மனப்பாட அட்டை தயார் செய்யும் போது சரிபார்க்கவும். ☐

(முந்தைய மனப்பாடப்பகுதிகளைத் தினமும் திரும்பப் பார்க்கவும்)

**இ) சுகம் பெறும் 3 வழிகள்:**

**(1) தேவனுடைய வார்த்தை (2) தேவனுடைய ஆவி**
**(3) நமது விசுவாசம்**

27. நம்மை சுகமாக்கவும், விடுதலையாக்கவும் தேவன் எதை அனுப்புகிறார்? (சங். 107:20)

..............................................................................................

28. தமது பிள்ளைகளுக்கு தேவனுடைய வார்த்தை கொண்டுவரும் காரியங்கள் இரண்டைக் குறிப்பிடவும் (நீதி. 4:20–22)

(1) ..............................................................................................

(2) ........................................................................................................

29. தேவனுடைய ஆவி நம்மில் வாசம் செய்யும் போது நமது சரீரத்திற்கு என்ன செய்கிறார்? (ரோ. 8:11)

........................................................................................................

30. நமது சரீரத்தின் மூலம் எதனை தேவன் வெளிப்படுத்த விரும்புகிறார்? (2 கொரி. 4:10,11)

........................................................................................................

31. தம்மிடத்தில் சுகம் வேண்டி வருபவர்களிடத்தில் தேவன் எதனை எதிர்பார்க்கிறார்? (மத். 9:28, 29 மாற். 2:5; 9:23 லூக். 8:50)

........................................................................................................

32. முடமான மனிதன் சுகம் பெற்றதை பேதுரு எப்படி விவரிக்கிறார்? (அப். 3:16)

........................................................................................................

........................................................................................................

33. லீஸ்திராவிலுள்ள முடவன் சுகமாக பவுல் அவனிடத்தில் எதைக் கண்டுகொண்டார்? (அப். 14:8–10).

........................................................................................................

34. விசுவாசம் நமக்கு எப்படி வருகிறது? (ரோ. 10:17)

........................................................................................................

## ச) விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம்

35. இயேசுவாகிய மேசியா தமது சீஷருக்குக் கொடுத்த 2 வகையான அதிகாரங்கள் யாவை? (மத். 10:1)

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

36. தமது சீஷர்கள் செய்ய வேண்டுமென்று இயேசு கட்டளையிட்ட 4 காரியங்களைக் குறிப்பிடுக. (மத். 10:8)

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

(3) ........................................................................................................

(4) ........................................................................................................

37. வலிப்பு நோயால் அவதிப்பட்டவனை சீஷர்களால் சுகமாக்க முடியவில்லை. அதற்கு இயேசு கூறும் 2 காரணம் என்ன? (மத்தேயு 17:20, 21 மாற். 9:29)

(1) ........................................................................................................

(2) ................................................................................................

38. அவரை விசுவாசிக்கிறவர்கள் செய்யக்கூடிய இரண்டு காரியங்களாக இயேசு எவற்றைக் குறிப்பிடுகிறார்? (யோ. 14:12)
(1) ................................................................................................
(2) ................................................................................................

39. இயேசுவின் நாமத்தில் வியாதியஸ்தர்களுக்கு விசுவாசிகள் என்ன செய்ய முடியும்? (மாற். 16:17,18)
................................................................................................
................................................................................................

40. அப்படிப்பட்ட வியாதியஸ்தர்களுக்கு என்ன நடைபெறும்? (மாற். 16:18)
................................................................................................

41. விசுவாசியான வியாதியுஸ்தன் என்ன செய்ய வேண்டும்? (யாக்கோபு 5:14)
................................................................................................

42. சபையின் மூப்பர் விசுவாசியான வியாதியஸ்தனுக்கு செய்ய வேண்டிய 2 காரியங்கள் என்ன? (யாக். 5:14)
(1) ................................................................................................
(2) ................................................................................................

43. அப்படிப்பட்ட விசுவாசிக்கு தேவன் செய்யும் 2 காரியங்கள் என்ன? (யாக். 5:15)
(1) ................................................................................................
(2) ................................................................................................

44. எப்படிப்பட்ட ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்? (யாக். 5:15)
................................................................................................

45. இயேசுவின் நாமத்தில் தேவன் செய்யும் 2 காரியங்கள் என்ன என்று சீஷர்கள் ஜெபிக்கின்றனர்? (அப். 4:30)
(1) ................................................................................................
(2) ................................................................................................

46. சீஷர்கள் வெளியே சென்று பிரசங்கிக்கும்போது தேவன் செய்யும் 2 காரியங்கள் யாவை? (மாற். 16:20)
(1) ................................................................................................
(2) ................................................................................................

**மனப்பாடப்பகுதி: மாற். 16:17, 18**

இந்த வசனங்களை மனப்பாடமாக இங்கே எழுதவும்

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

**இந்தப் பாடத்தில் உள்ள எல்லாக் கேள்விகளுக்கும் முதலில் விடை எழுதவும், விடை எழுதி முடிக்கும் வரை அருகில் உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.**

# பாடம் 4: நமது உடல் நலம் குறித்த தேவனுடைய திட்டம்

(தொடர்ச்சி)

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 27. | அவருடைய (தேவனுடைய) வார்த்தையை ............................... | 1 |
| 28. | (1) ஜீவன் (2) உடல் ஆரோக்கியம் ............................... | 2 |
| 29. | சாவுக்கேதுவான நம் சரீரங்களை உயிர்ப்பிப்பார் ............................... | 1 |
| 30. | கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவன் ............................... | 1 |
| 31. | விசுவாசம் ............................... | 1 |
| 32. | இயேசுவின் மேலுள்ள விசுவாசம் அவனைச் சுகப்படுத்தியது ............................... | 2 |
| 33. | சுகமாகும் என்ற விசுவாசம் அவனுக்கிருந்ததை ............................... | 1 |
| 34. | தேவ வசனத்தைக் கேட்பதன் மூலம் ............................... | 2 |
| 35. | (1) அசுத்த ஆவிகளைத் துரத்த ............................... | 2 |
| | (2) சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்க............................... | 2 |
| 36. | (1) வியாதி உள்ளவர்களைச் சொஸ்தமாக்க (2) குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ண ............................... | 2 |

(3) மரித்தோரை எழுப்ப (4) பிசாசுகளைத் துரத்த ..........2

37. (1) அவிசுவாசத்தினால் ..........1

(2) ஜெபத்தினாலும் உபவாசத்தினால் மட்டுமே இது வெளியேறும் ..........1

38. (1) அவர் செய்த கிரியைகளைச் செய்வான் (2) இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் ..........2

39. இயேசுவின் நாமத்தில் வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள் ..........1

40. அவர்கள் சொஸ்தமடைவார்கள் ..........1

41. சபையின் மூப்பரை வரவழைக்க வேண்டும் ..........1

42. (1) அவனுக்காக ஜெபிப்பார்கள் ..........1

(2) இயேசுவின் நாமத்தில் எண்ணெய் பூசி ஜெபிப்பார்கள் ..........1

43. (1) கர்த்தர் அவனை எழுப்புவார் ..........1

(2) பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும் ..........1

44. விசுவாசமுள்ள ஜெபம் ..........1

45. (1) அவருடைய கரத்தை நீட்டி சுகமாக்குவார் ..........1

(2) அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்வார் ..........1

46. (1) கர்த்தர் அவர்களுடனே கிரியை நடப்பித்தார் ..........1

(2) அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் ..........2

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ..........8

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். மூன்று தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 54

50% — 22 70% — 31 80% — 35.

# பாடம் 4: நமது உடல் நலம் குறித்த தேவனுடைய திட்டம்

(தொடர்ச்சி)

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

*(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)*

27–34 சங். 33:6ல் சிருஷ்டிப்புக்கு தேவன் பயன்படுத்தின காரியங்களைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. "கர்த்தருடைய வார்த்தையினாலும் . . . . அவருடைய வாயின் சுவாசத்தினாலும் (=ஆவி)" எல்லா சிருஷ்டிகளும் அவருடைய வார்த்தையும் ஆவியும் ஒன்றாகக் கிரியை செய்வதனால் உண்டாயின. இந்தக் காரியம் சுகப்படுத்தும் விஷயத்திலும் உண்மையே. அவருடைய வார்த்தையும் ஆவியும் ஒன்றாகக் கிரியை செய்யும் போது இது நடைபெறுகிறது. நமது விசுவாசத்தின் மூலமாய் இத்தகைய சுகமாகுதல் நமக்குக் கிடைக்கிறது.

28. நீதி. 4:20–22 "சுகம்" என்பதற்கு "மருந்து" என்றும் மற்றொரு பொருள் கூறலாம். இந்த வசனங்கள் தேவனுடைய மிகச்சிறந்த "மருந்து புட்டிகளாகும்". நான்கு வகையான முறைகளின்படியே அவற்றை எடுத்துப் பயன்படுத்த முடியும்: (1) "பங்கு பெறுதல்" (2) "செவிகொடுத்தல்" (தாழ்மையாகவும் போதனையைக் கேட்பவனாகவும் இருத்தல்) (3) "கண்களைவிட்டுப் பிரியாதிருக்க வேண்டும்". (4) "இதயத்தின் மையப்பகுதியில் இருக்க வேண்டும்". தேவனுடைய வார்த்தையைப் பெறுவதற்கான 4 வாயில்கள் மனது, செவிகள், கண் மற்றும் இதயமாகும்.

30. 2 கொரி. 4:10–11 இயேசுவின் மரணத்தை நாம் "நமது சரீரத்தில்" சுமந்து செல்ல வேண்டும் என்பதே தேவசித்தம். சுகம் பெறுதல், ஆரோக்கியம் பெலன் இவற்றை நம் உடலில் நாம் பெற்றுக் கொள்ள தேவன் விரும்புகிறார்.

34. ரோமர் 10:17 முதலாவது தேவனுடைய வார்த்தை "கேட்கவைக்கிறது". "கேட்பதன்" மூலம் "விசுவாசம்" பெருகுகிறது. "கேட்பது" குறித்து நீதி. 4:20–21ல் விவரிக்கப்பட்டுள்ளது.

35–36. புதிய ஏற்பாட்டில், ஊழியத்திற்காக ஒருவர் அனுப்பப்படும்போது சுகமாக்கவும் அசுத்த ஆவிகளினின்று விடுதலை அளிக்கவும் கட்டளை

கொடுக்கப்பட்டது. மத். 10:8யும் மத். 28:20யும் ஒப்பிட்டுப் பார்க்கவும். "நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் (=இந்த நாட்களில்)". கிறிஸ்து, தன்னுடைய முதல் 12 சீஷர்களோடு துவங்கிய அதே ஊழியம், இந்தக் கால முடிவு வரையிலும், வரப்போகும் ஒவ்வொரு சந்ததியின் சீஷர்களால் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து செய்வதற்கான வழியை அவர் ஏற்படுத்தினார்.

37. (2) இயேசு உபவாசித்தார். இதையே தமது சீஷரும் கடைபிடிக்க விரும்பினார். (மத். 6:16–18) ஆனால் இயேசு (மணவாளன்) தங்களோடு உலகத்தில் இருக்கும் வரை அவர்கள் இதைக் கடைப்பிடிக்கவில்லை. (மாற். 2:18–20).

38. எல்லாக் கிறிஸ்தவ ஊழியங்களுக்கும் இயேசுவின் ஊழியம் முன்மாதிரியானது. இத்தகைய ஊழியங்களைத் தம்மை விசுவாசிக்கும் ஊழியர்கள் மூலமாய் இயேசு தமது பிதாவினிடத்திற்குச் சென்றபின்பு அவர் அனுப்பிய பரிசுத்த ஆவியானவர் நிறைவேற்றுகிறார்.

39. மாற். 16:17–18ல் கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தம் "அவரை விசுவாசிக்கும்" அனைத்து விசுவாசிகளுக்கும் பொருந்தும்.

39–44 இதைக் குறித்து இன்னும் விவரமாக அறிந்து கொள்ள விரும்பினால் டெரிக் பிரின்ஸ் எழுதிய ஆவியால் நிரப்பப்பட்ட விசுவாசியின் கையேடு என்ற புத்தகத்தில் "கைகளை வைத்தல்" என்ற 5வது அத்தியாயத்தைப் படித்துப் பார்க்கவும்.

41. சுகவீனமான கிறிஸ்தவன் சபையின் மூப்பரை அழைக்கவில்லை என்றால் அவன் கீழ்ப்படியாதவன்.

45. அப். 4:30 இன்றும் கிறிஸ்தவ சபையின் ஜெபமாக இருக்க ஒரு மாதிரி ஜெபமாக உள்ளது.

# பாடம் 5

# வேதபுத்தகம்: தேவனுடைய வார்த்தை

***முகவுரை:***

உலகெங்கிலுமுள்ள அனைத்து மக்களும் பாவத்தினின்றும் வேதனையினின்றும் இருளிலிருந்தும் விடுபட உதவுவதற்காக தேவனுடைய மிகப்பெரிய பரிசாகக் கொடுக்கப்பட்டதுதான் தேவனுடைய வார்த்தையாகிய வேதபுத்தகம் ஆகும். (பைபிள்) வேதபுத்தகம் ஒரு சாதாரண புத்தகமல்ல. இதனை எழுதிய மக்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு தேவன் அவர்களுக்கு எழுதும்படியாகக் கொடுத்த உண்மைகளை அப்படியே எழுதிவைத்தனர். இதில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம். அவைகள் தேவனுடைய வல்லமையையும் அதிகாரத்தையும் உடையனவாக உள்ளன. தேவன் தாமே நம்மிடம் நேரடியாகவும் தனிப்பட்ட முறையிலும் பேசுவதாக நினைத்து நாம் வேதத்தைப் படிக்க வேண்டும். அது நமக்கு வெளிச்சத்தையும் அறிவையும், ஆவிக்குரிய ஆகாரத்தையும் சரீர சுகத்தையும் அளிக்கிறது. அது நம்மைக் கழுவுகிறது; சுத்திகரிக்கிறது; நம்மைக்கட்டி எழுப்புகிறது; தேவனுடைய சாயலோடு நம்மை இணைக்கிறது. பிசாசை மேற்கொள்ள வல்லமையையும் ஞானத்தையும் கொடுக்கிறது.

***மனப்பாடப்பகுதி: 2 தீமோ. 3:16, 17*** (மனன அட்டையைத் தயார் செய்யும் போது சரிபார்க்கவும்) ☐

(மாற். 16:17, 18ஐ (முந்தைய மனப்பாடப்பகுதிகளைத் தினமும் திரும்பப் பார்க்கவும்)

1. வேத வாக்கியங்களுக்கு இயேசு என்ன பெயர் கொடுக்கிறார்? (யோவான் 10:35)

.......................................................................................................

2. வேத வசனங்களின் அதிகாரம் குறித்து இயேசு எவ்வாறு கூறுகிறார்? (யோவான் 10:35)

.......................................................................................................

3. தேவனுடைய வார்த்தையைக்குறித்து தாவீது கூறும் 2 காரியங்கள் என்ன?

(1) (சங். 119:89) ..................................................................

(2) (சங். 119:160) ..................................................................

4. வேத வாக்கியங்கள் எப்படி கொடுக்கப்பட்டன?

(1) (2 தீமோ. 3:16) ..................................................................

(2) (2 பேதுரு 1:20–21) ..................................................................

5. ஒருவன் மறுபிறப்படையவும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் எந்த வகையான வித்தை அவன் இருதயத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்? (1 பேதுரு 1:23)

..................................................................

6. ஒரு கிறிஸ்தவனுக்கு வேத வசனம் தரும் 4 வகையான பயன்கள் யாவை? (1 தீமோ. 3:16)

(1) .................................... (2) ....................................

(3) .................................... (4) ....................................

7. தேவனுடைய வார்த்தையைப் படித்து கீழ்ப்படியும் ஒரு விசுவாசிக்குக் கிடைக்கும் பலன் என்ன? (2 தீமோ. 3:17)

..................................................................

..................................................................

8. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கும் ஆத்மீக ஆகாரம் என்ன? (1 பேதுரு 2:2, மத். 4:4)

..................................................................

9. தேவனுடைய வார்த்தைக்கு யோபு தரும் கனம் என்ன? (யோபு 23:12)

..................................................................

10. தேவனுடைய வார்த்தையை எரேமியா உட்கொண்டவுடன் அது அவருக்கு என்னவாயிற்று? (எரே. 15:16)

..................................................................

11. ஒரு கிறிஸ்தவ வாலிபன் எப்படிப் பரிசுத்தமாய் வாழ முடியும்? (சங். 119:9)

..................................................................

12. ஒரு கிறிஸ்தவன் ஏன் வேதவசனத்தை இருதயத்தில் வைத்து வைக்க வேண்டும்? (சங். 119:11).

..................................................................

..................................................................

13. வாலிபருக்குள் தேவனுடைய வசனம் நிலைத்திருப்பதனால் அது அவர்களுக்குள் ஏற்படுத்தும் 2 விளைவுகள் யாவை?

(1 யோவான் 2:14)
(1) ..............................
(2) ..............................

14. ஒவ்வொரு முறையும் பிசாசினால் இயேசு சோதிக்கப்படும்போது அவர் எவ்வாறு பதிலளித்தார்? (மத். 4:4, 7, 10)
..............................

15. ஆவிக்குரிய போராயுதங்களில் ஒன்றாக கிறிஸ்தவர்களுக்கு தேவன் கொடுத்த பட்டயம் எது? (எபே. 6:17)
..............................

16. கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் எவ்வாறு நடந்து செல்ல வேண்டும் என்பதைக் குறித்து தேவனுடைய வசனம் இருவகையில் தெளிவுபடுத்துவது என்ன? (சங். 119:105)
(1) ..............................
(2) ..............................

17. ஒரு கிறிஸ்தவனின் மனதில் தேவனுடைய வசனம் செய்யும் 2 காரியங்கள் யாவை? (சங். 119:130)
(1) .............................. (2) ..............................

18. வேத வசனத்தை கவனமாகப் படிக்கும் ஒரு விசுவாசியின் உடலுக்கு அது என்ன செய்கிறது? (நீதி. 4:20–22)
..............................

19. தேவனுடைய பிள்ளைகள் சுகவீனமாயிருக்கும்போதும் தேவையில் இருக்கும் போதும் தேவன் எதை அனுப்பி அவர்களை குணமாக்கி விடுவிக்கிறார்? (சங். 107:20)
..............................

20. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களில் தேவனுடைய வசனம் தமது பிள்ளைகளுக்குச் செய்யும் 4 காரியங்கள் என்ன?
(1) (யோவான் 15:3 எபே. 5:26) ..............................
(2) (யோவான் 17:17) ..............................
(3) (அப். 20:32) ..............................
(4) (அப். 20:32) ..............................

21. மேசியாவின் மேல் உள்ள அன்பை எப்படி ஒரு கிறிஸ்தவன் வெளிப்படுத்த முடியும்? (யோவான் 14:21)
..............................

22. யாரை இயேசு தமது தாயும் தமது சகோதரர்களும் என்று

கூறுகிறார்? (லூக். 8:21)

..........................................................................................

23. ஒரு விசுவாசிக்குள்ளாக எப்படி தேவனுடைய அன்பு பூரணப்படுகிறது? (1 யோவான் 2:5)

..........................................................................................

24. தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது நமது வாழ்க்கையில் ஏற்படும் இருவிதமான நிகழ்வுகள் என்ன? (2 பேதுரு 1:4)

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**மனப்பாடப்பகுதி: (2 தீமோ. 3:16, 17)**

இந்த வசனங்களை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**இந்தப் பாடத்தில் உள்ள எல்லாக் கேள்விகளுக்கும் முதலில் விடை எழுதவும், விடை எழுதி முடிக்கும் வரை கீழே உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.**

# பாடம் 5: வேதபுத்தகம்: தேவனுடைய வார்த்தை

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | தேவ வசனம் | 1 |
| 2. | தவறாதது | 1 |
| 3. | (1) வானங்களில் நிலைத்திருக்கிறது | 1 |
| | (2) அது ஆரம்பத்திலிருந்து சத்தியம் | 1 |
| 4. | (1) தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது | 1 |
| | (2) தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள் | 2 |
| 5. | தேவ வசனமாகிய அழிவில்லா வித்து | 2 |
| 6. | (1) உபதேசத்திற்கு (2) கடிந்துகொள்ளுதலுக்கு (3) சீர்திருத்தலுக்கு | 3 |
| | (4) நீதியைப் படிப்பித்தலுக்கு | 1 |
| 7. | தேறினவனாகவும் எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனுமாகிறான் | 2 |
| 8. | தேவனுடைய வார்த்தை | 1 |
| 9. | அவருக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் | 1 |
| 10. | சந்தோஷமாயும் இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாய் இருந்தது | 1 |
| 11. | அவருடைய வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்வதனால் | 2 |
| 12. | தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு | 1 |
| 13. | (1) பலவான்களாக்குகிறது | 1 |
| | (2) பொல்லாங்கனை (=சாத்தானை) ஜெயித்தார்கள் | 1 |
| 14. | எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையிலிருந்து பதிலளித்தார் | 1 |
| 15. | தேவ வசனம் | 1 |
| 16. | (1) கால்களுக்குத் தீபம் | 1 |

(2) பாதைக்கு வெளிச்சம் ........................................................1

17. (1) வெளிச்சம் (2) உணர்வடைதல் ....................................2

18. உடலுக்கு ஆரோக்கியம் ........................................................1

19. தமது (தேவனுடைய) வசனத்தை .............................................1

20. (1) சுத்தத் தண்ணீரைப் போல அது கழுவுகிறது, சுத்தம் செய்கிறது ........................................................................................1

(2) பரிசுத்தமாக்குகிறது (3) பக்திவிருத்தியடையச் செய்கிறது ........................................................................................2

(4) சுதந்திரத்தைக் கொடுக்கிறது ..............................................1

21. அவருடைய கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுவதின் மூலமாய் ............................................2

22. தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதின்படி செய்கிறவர்கள் ........................................................................................................1

23. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுவதனால் ......................1

24. (1) அவருடைய திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகிறோம் ....................................................1

(2) இச்சையினால் உலகத்திலுண்டாகும் கேட்டுக்குத் தப்புகிறோம் ........................................................................................................1

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ........................................8

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். மூன்று தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 49

**50% — 24 70% — 34 80% — 39.**

# பாடம் 5: வேத புத்தகம்: தேவனுடைய வார்த்தை

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

*(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)*

1–2. பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்ட அதிகாரமுள்ள தேவனுடைய வார்த்தை என்பதை இயேசு ஒப்புக் கொண்டார் என்பது தெளிவாகிறது. அவர் தமது போதனைகளில் இந்த வசனங்களை உபயோகித்தார். மேலும் இந்த வசனங்களின்படி கீழ்ப்படிந்து வாழ்க்கை நடத்தினார்.

3. தேவனுடைய வார்த்தை வானத்திலிருந்து அருளப்பட்டது. அவைகள் எழுதப்பட மனிதர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். ஆனால் அவற்றிற்கு மூல காரணமானவர் தேவனே.

4. (1) "தேவனால் ஏவப்பட்டு" என்பதற்கு "தேவனே மூச்சாக" (சுவாசமாக) அவைகளை வெளியேற்றினார் எனக் கொள்ளலாம். "சுவாசம்" "ஆவி" இவை இரண்டும் எபிரெயு மற்றும் கிரேக்க மொழியில் ஒரே பதத்தைக் குறிப்பதாகும். (வேதத்தின் அதிகாரம் மற்றும் அது அருளப்பட்டது ஆகியவை குறித்து முழுமையாக அறியவிரும்பினால் "ஆவியால் நிரம்பிய விசுவாசியினுடைய கைப்புத்தகம்" என்ற டெரிக் பிரின்ஸ் எழுதிய புத்தகத்தைப் படிக்கவும்)

5. "அழிவில்லாத வித்தாகிய தேவனுடைய வசனம்" விசுவாசத்தின் மூலம் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு பரிசுத்த ஆவியால் உயிர் பெற்று, தெய்வீக, நித்திய அழிவில்லா வாழ்வைக் கொடுக்கிறது.

6–8. கவனிக்கவும்: "வேத வாக்கியங்கள் எல்லாம்" (2 தீமோ. 3:16). "ஒவ்வொரு வார்த்தை" (மத். 4:4). முழு ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஒரு கிறிஸ்தவன் வேதத்திலுள்ள எல்லாப் பகுதிகளையும் படித்து வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும்.

8–10. ஆவிக்குரிய வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைக்கும் தேவனுடைய வார்த்தை ஆகாரமாக அமைகிறது: (1) பிறந்த குழந்தைகளுக்குத் தேவையான "பால்" (1 பேதுரு 2:2) (2) வளர்ச்சி அடைந்தவர்களுக்கு "அப்பம்" (மத். 4:4) (3) வயது வந்தவர்களுக்கு "பலமான ஆகாரம்" (ஆவிக்குரிய முதிர்ச்சி அடைந்தவர்கள்) (எபி. 5:12–14)

11. "வசனத்தின்படி காத்துக் கொள்வதனால்..." அதாவது தன்னுடைய வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் தேவனுடைய வசனத்தின் போதனையைப் பயன்படுத்துவதாகும்.

12. ஒருவர் இவ்வாறு கூறினார்: "தேவனுடைய வசனம் உன்னை பாவத்திலிருந்து காக்கும், அல்லது பாவம் உன்னை வேதவசனத்தினின்று பிரிக்கும்."

13–15. எபே. 6:13–17ல் 6 வகையான ஆவிக்குரிய ஆயுதங்களைப்பற்றி பவுல் கூறுகிறார். ஆனால் அவற்றில் எதிர்த்துத் தாக்கும் ஆயுதம் ஒன்றுதான். "அது ஆவியின் பட்டயமாகும்." விசுவாசிகள் அனைவரும் இதனை "எடுத்துப்" பயன்படுத்த வேண்டும்.

16. 1 யோவான் 1:7 "நாம் ஒளியிலே நடந்தால்...." நாம் நடக்க வேண்டிய "ஒளி" தேவனுடைய வார்த்தையாகும்.

17–19. கிறிஸ்தவர்களின் ஆவி, ஆத்மா, சரீரம் ஆகிய மூன்றையும் போஷிக்கிறது.

20. (4) கிறிஸ்துவில் நமக்குள்ள சுதந்திரம் என்ன என்பதையும் அதைப் பெற்றுக் கொள்வது எப்படி என்பதையும் வேத வசனத்தின் மூலமே அறிந்து கொள்கிறோம்.

21–23 "உலகத்திலிருந்து கிறிஸ்துவின் சீஷர் என்பதை பிரித்துக்காட்ட உதவும் உன்னதமான கருவி வேத வசனத்தின் படி காத்துக்கொள்வதேயாகும்."

"தேவனுடைய வசனத்தைக் குறித்த உங்கள் செயல்பாடு எப்படி உள்ளதோ அப்படித்தான் தேவனைக் குறித்தும் நீங்கள் நடந்து கொள்ளுவீர்கள்." நீங்கள் தேவனுடைய வசனத்தை நேசிப்பதற்கு மேல் தேவனை நேசிக்க முடியாது. அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிவதற்குமேலாக தேவனுக்குக் கீழ்ப்படிவது அரிது. அவருடைய வார்த்தையை கனப்படுத்துவதற்கு மேலாக தேவனை கனப்படுத்த முடியாது. அவருடைய வார்த்தை உங்கள் உள்ளத்தில், வாழ்க்கையில் அவருடைய வசனத்திற்கு எவ்வளவு இடம் கொடுத்திருக்கிறீர்களோ அதற்கு மேலாக தேவனுக்கு இடமளித்திருக்க முடியாது. (ஆவியால் நிரம்பிய விசுவாசியினுடைய கைப்புத்தகம், பகுதி 1 விசுவாசத்தின் அஸ்திபாரம் பக்கம் 20)

24. தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படிவதனால் தேவனுடைய சுபாவம் விசுவாசியை ஆட்கொண்டு பழைய இச்சைக்குரிய ஆதாமின் தன்மையை எடுத்துப் போடுகிறது.

## பாடம் 6

# பரிசுத்த ஆவியானவர்

**முன்னுரை:**

இயேசு, தமது பூமிக்குரிய ஊழியத்திற்கு முழுவதுமாக பரிசுத்த ஆவியானவரிடம் சார்ந்திருந்தார். யோர்தான் நதியில் பரிசுத்த ஆவியானவர் இறங்கியதற்கு முன்பாக அவர் எந்த ஒரு பிரசங்கமோ அற்புதமோ செய்யவில்லை. அதற்குப்பின்பு அவர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் அனைத்துக் காரியங்களையும் செய்தார். அவர் பரத்துக்கு ஏறிச்செல்லும்முன்பாக, பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாகவும் பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனாகவும் அவர்களது ஆவிக்குரிய தேவையைச் சந்திப்பவராகவும் இருப்பார் எனவும் அவர்களுக்கு வாக்குக்கொடுத்தார். பெந்தெகொஸ்தே நாளின் போது அவர்களனைவரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றபோது இந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது. கவனிக்கவும்: ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட இரு பதங்களாகிய "பரிசுத்த ஆவியானவர்", (Holy Spirit) "பரிசுத்த ஆவி" (Holy Ghost) ஆகிய இவ்விரு வார்த்தைகளும் மூல கிரேக்க பதத்தின் ஒரே வார்த்தையைக் குறிப்பனவாகும். எனவே இவ்விருவார்த்தைகளிலும் உள்ள அர்த்தத்தில் எந்த மாறுபாடும் இல்லை.

***மனப்பாடப்பகுதி: அப். 2:38, 39 மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும்.*** ☐

(முந்தைய மனப்பாடப்பகுதிகளைத் திரும்பிப்பார்க்கவும்)

1. இயேசு இந்த பூமிக்குரிய ஊழியத்தைச் செய்ய பிதாவாகிய தேவன் அவரை எதனால் அபிஷேகம் செய்தார்? (அப். 10:38)

.................................................................................................

2. இயேசுவின் மேல் யார் இறங்கிவந்து தங்குவதை யோவான்ஸ்நானகன் கண்டார்? (யோவான் 1:32-33)

.................................................................................................

3. தேவையுள்ள மக்களுக்கு உபதேசிக்கவும் ஊழியம் செய்யவும் தன்மீது என்ன இருப்பதாக இயேசு கூறுகிறார்? (லூக். 4:18)

.................................................................................................

4. பிசாசுகளை எந்த வல்லமையினால் துரத்துவதாக இயேசு

கூறுகிறார்? (மத். 12:28)

..........................................................................................

5. தான் பரலோகத்திற்குச் சென்றபின்பு தனது சீஷருக்கு பிதாவினிடத்திலிருந்து யாரை அனுப்புவதாக இயேசு கூறுகிறார்? (யோவான் 14:16, 26; 15:26)

..........................................................................................

6. தேற்றரவாளனைக் குறித்து இயேசு உபயோகிக்கும் இரு பதங்கள் யாவை?

(1) (யோவான் 14:17) ..........................................

(2) (யோவான் 14:26) ..........................................

7. சீஷருக்கு பரிசுத்த ஆவியானவர் செய்யும் 2 காரியங்கள் என்ன என்பதைக் குறித்து இயேசு கூறுவது என்ன? (யோவான் 14:26)

(1) ..........................................................................

(2) ..........................................................................

..........................................................................................

8. பரிசுத்த ஆவியானவர் சீஷர்களுக்கு வேறு என்ன முறையில் உதவி செய்வார் என்று இயேசு கூறுகிறார்? (யோவான் 16:13)

..........................................................................................

9. பரிசுத்த ஆவியானவர் இயேசுவை வெளிப்படுத்தும் 2 முறைகள் யாவை?

(1) யோவான் 15:26 ..........................................

(2) யோவான் 16:14 ..........................................

10. எதற்குப் பிறகு சீஷர்கள் வல்லமையான சாட்சியாக விளங்க வல்லமையைப் பெறுவார்கள் என்று இயேசு கூறுகிறார்? (அப். 1:8)

..........................................................................................

11. மக்களுக்கு இயேசு என்ன செய்வார் என்று யோவான் ஸ்நானகன் கூறினார்? (மாற். 1:8)

..........................................................................................

12. பரமேறிச் செல்லும் முன்பாக இயேசு தமது சீஷருக்கு என்ன வாக்குத்தத்தம் கொடுத்தார்? (அப். 1:5)

..........................................................................................

13. இந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் வரை சீஷர்கள் என்ன செய்ய வேண்டுமென்று இயேசு கூறினார்? (லூக். 24:49)

..........................................................................................

..........................................................................................

14. எந்த நாளில் சீஷருக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறிற்று? (அப். 2:1-4)

..........................................................................................

15. இயேசுவின் பூலோக ஊழியத்தின்போது சீஷருக்கு ஏன் பரிசுத்த ஆவியானவர் அருளப்படவில்லை? (யோவான் 7:39)

..........................................................................................

16. இயேசு மகிமையில் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்த பின்பு பிதாவினிடத்தினிலிருந்து எதைப் பெற்றுக் கொண்டார்? (அப். 2:33)

..........................................................................................

17. சீஷருக்கு பரிசுத்த ஆவியானவரை இயேசு பொழிந்தருளியதை அங்கிருந்த அவிசுவாசிகள் எவ்வாறு அறிந்து கொண்டனர்? (அப். 2:33)

..........................................................................................

18. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் சீஷர்கள் செய்த எந்த காரியத்தை அவிசுவாசிகள் கண்டனர்? (அப். 2:7-8)

..........................................................................................

19. கடைசி நாட்களில் தேவன் யார் மீது தமது ஆவியை ஊற்றுவதாக வாக்குத்தத்தம் அருளினார்? (அப். 2:17)

..........................................................................................

20. பரிசுத்த ஆவியின் வரம் யார் யாருக்கெல்லாம் வழங்கப்படுகிறது என்று பேதுரு கூறுகிறார்? (அப். 2:39)

..........................................................................................

..........................................................................................

21. அவரிடத்தில் வேண்டிக்கொள்ளும் தம்முடைய பிள்ளைகள் எல்லாருக்கும் தேவன் அளிக்கும் சிறந்த ஈவு என்ன? (லூக். 11:13)

..........................................................................................

**மனப்பாடப்பகுதி: அப். 2:38, 39**

இந்த வசனங்களை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..........................................................................................

..........................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

இந்தப் பாடத்தில் எல்லாக் கேள்விகளுக்கும் முதலில் விடை எழுதவும், விடை எழுதி முடிக்கும் வரை கீழே உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.

# பாடம் 6: பரிசுத்த ஆவியானவர்

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் | 1 |
| 2. | (பரிசுத்த) ஆவியானவர் | 1 |
| 3. | கர்த்தருடைய ஆவியானவர் | 1 |
| 4. | தேவனுடைய ஆவியினாலே | 1 |
| 5. | தேற்றரவாளன் | 1 |
| 6. | (1) சத்திய ஆவியானவர் | 1 |
| | (2) பரிசுத்த ஆவியானவர் | 1 |
| 7. | (1) எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார் | 1 |
| | (2) நான் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் | 2 |
| 8. | சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் | 1 |
| 9. | (1) அவர் என்னை (இயேசு)க் குறித்து சாட்சி கொடுப்பார் | 1 |
| | (2) என்னை (இயேசு) மகிமைப்படுத்துவார் | 1 |
| 10. | பரிசுத்த ஆவி உங்கள்மேல் வந்த பின்பு | 1 |
| 11. | அவர் பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் | 1 |
| 12. | நீங்கள் சில நாட்களுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் | 2 |
| 13. | உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் | |

எருசலேம் நகரத்தில் இருங்கள் ..................................................2

14. பெந்தெகொஸ்தே நாளின்போது ..................................................1

15. இயேசு இன்னும் மகிமைப்படாதபடியினால் ..................................1

16. பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தத்தை ..........................................1

17. அவர்கள் காண்பதினாலும் கேட்பதினாலும் ..................................1

18. அவிசுவாசிகள் தங்களின் சொந்த மொழிகளில் சீஷர்கள் பேசுவதைக் கேட்டனர் ..................................................2

19. மாம்சமான யாவர் மீதும் ..................................................1

20. உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் .................................................. 3

21. பரிசுத்த ஆவி .................................................. 1

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள்..................................................8

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். 3 தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 38

**50% — 19 70% — 27 80% — 30.**

# பாடம் 6: பரிசுத்த ஆவியானவர்

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)

1-5. "கிறிஸ்து" என்ற வார்த்தை "அபிஷேகிக்கப்பட்டவர்" என்று அர்த்தங்கொள்ளும் கிரேக்க மொழியிலிருந்து எடுக்கப்பட்டதாகும். "மேசியா" என்ற எபிரெயு வார்த்தைக்கும் "அபிஷேகிக்கப்பட்டவர்" என்று பொருள். யோவான்ஸ்நானனால் யோர்தான் நதியில் இயேசு ஞானஸ்நானம் பெற்றபின்பு பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கிய போது அவர் அபிஷேகிக்கப்பட்டவராகிய மேசியாவாக மாறுவதை சரித்திர சம்பவமாக நாம் காண்கிறோம். "கிறிஸ்து" அல்லது "மேசியா" என்ற பெயர், இயேசுவின் இந்தப் பூலோக ஊழியமானது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமாகவே நடைபெற்றது என்பதைக் குறிக்கிறது. அதே பரிசுத்த ஆவியின் "அபிஷேகம்" அனைத்துக் கிறிஸ்தவர்களின் வாழ்விலும் நிறைந்திருக்க வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாகும். "உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே." (2 கொரி. 1:21). "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, . . ." (1 யோவான் 2:27) "கிறிஸ்தவர்கள்" என்றால் "அபிஷேகிக்கப் பட்டவர்கள்" என்று பொருள். இயேசு எவ்விதம் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருந்தாரோ அவ்விதமே ஒரு சீடனும் பரிசுத்த ஆவியானவரை சார்ந்து வாழும்போது பயனுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழமுடியும்.

5-6. "தேற்றரவாளன்" = "பரிந்துபேசுபவர்" — "நம்மோடு இருப்பவர்" 1 யோவான் 2:1ல் இயேசுவுக்கு இந்தப் பெயர் கொடுக்கப்படுகிறது. ஒரு விசுவாசிக்காக பரலோகத்தில் கிறிஸ்து பரிந்து பேசுகிறார். பரிசுத்த ஆவியானவர் விசுவாசியின் மூலமாய் உலகத்தில் கிறிஸ்துவின் காரியங்களுக்குப் பரிந்து பேசுகிறார். (மத்.10:19–20 பார்க்கவும்)

6-9. யோவான் 16:7ல் இயேசு இவ்வாறு கூறுகிறார்: "... நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வாரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்." இயேசு பரலோகத்திற்குச் சென்று பரிசுத்த ஆவியானவரை சீஷரிடத்திற்கு அனுப்பியபோது இயேசு அவர்களோடு உலகத்திலிருந்தபோது அவரை அறிந்து கொண்டதைவிட இயேசுவைக் குறித்து சரியான முறையில் அறிந்து

கொண்டார்கள். பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவையும் அவரது ஊழியத்தையும் அவரது போதனைகளையும் மகிமைப்படுத்தி வெளிப்படுத்துவதன் மூலம் அவரது ஊழியத்தை நிறைவேற்றினார்.

11. "பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் கொடுப்பவர்" என்று யோவான்ஸ்நானகன் இயேசுவை அறிமுகப்படுத்தியது 4 சுவிசேஷத்திலும் முகவுரையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு முழுவதும் கிறிஸ்துவினுடைய ஊழியத்தின் இந்தக் காரியத்தைக் குறித்து வலியுறுத்திக் கூறுகிறது. கிறிஸ்தவ சபையும் இதனைச் செய்ய வேண்டும்.

12–13. சுவிசேஷங்களின் ஆரம்பத்திலும் முடிவிலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் வாக்குத்தத்தம் பற்றி கூறப்பட்டுள்ளது.

15–16. இயேசு தமது சிலுவை மரணத்தினாலே பரிசுத்த ஆவியின் வரத்தை ஒவ்வொரு விசுவாசிக்கும் சம்பாதித்தார். (கலா. 3:13–14 பார்க்கவும்). உயிர்த்தெழுந்து பரலோகம் சென்ற பின்பு பிதாவினிடத்திலிருந்து இந்த வரத்தைப் பெற்று தமது சீஷருக்குக் கொடுத்தார்.

17–18. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நவமான மொழி பேசும் வெளிப்படையான அனுபவம் மூலம் உறுதிப்படுத்தப்படுவதை புதிய ஏற்பாடு முழுவதும் நாம் காணலாம்.

18–21. இந்த நாட்களின் முடிவில் உலக முழுவதும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவதை தேவன் வாக்குப்பண்ணியுள்ளார். இந்த ஈவை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேதத்தினடிப்படையில் உரிமையுள்ளது.

# பாடம் 7

# பரிசுத்த ஆவியில் கிட்டும் ஞானஸ்நானத்தின் விளைவுகள்

***முன்னுரை:***

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், பரலோகத்திலிருந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்து அதன் மூலம் சிறந்த சாட்சிகளாகவும் ஆண்டவருக்கு ஊழியம் செய்பவர்களாகவும் மாற்றுகிறது. இதற்கு அடையாளம், பரிசுத்த ஆவியானவரிடமிருந்து பெறப்படும் மொழியில் (பாஷை) பேசுவதாகும். ஆனால் பேசுபவருக்கு இந்த மொழி புரியாது. தேவனோடு நேரடியாக இடைவிடாத தொடர்பு கொண்டு தனது ஆவிக்குரிய வாழ்க்கையைக் கட்டி எழுப்ப கிறிஸ்தவர்களுக்கு இது உதவி புரிகிறது. மேலும் பரிசுத்த ஆவியின் வரங்களும் கனிகளும் வெளிப்படும் சிறந்த வாழ்க்கைக்குள்ளாகவும் ஒரு கிறிஸ்தவனை இது நடத்திச் செல்லுகிறது. புதிய ஏற்பாட்டுத் திருச்சபையில் அனைத்து விசுவாசிகளுக்கும் இது ஒரு முக்கிய அனுபவமாக இருந்தது.

***மனப்பாடப்பகுதி: அப். 2:17, 18 மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும்.*** ☐

(முந்தைய மனப்பாடப்பகுதிகளைத் திரும்பிப்பார்க்கவும்)

1. பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டபோது அவர்களுக்கு நடந்தது என்ன? (அப். 2:4)
   ......................................................................................
   ......................................................................................

2. யாருடைய பிரசங்கத்தின் மூலம் சமாரியாவிலுள்ள மக்கள் இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்தார்கள்? (அப். 8:12)
   ......................................................................................

3. பேதுருவும் யோவானும் சமாரியாவுக்கு வந்தபோது அங்கே இருந்த கிறிஸ்தவர்களுக்காக எப்படி ஜெபித்தார்கள்? (அப். 8:15)
   ......................................................................................

4. சமாரியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் எப்படி பரிசுத்த ஆவியைப்

பெற்றுக்கொண்டார்கள்? (அப். 8:17)

.................................................................................

5. தர்சு பட்டணத்து சவுல் (பவுல்) எப்படி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்? (அப் 9:17)

.................................................................................

6. கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு பிரசங்கம் செய்தபோது அதனைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு என்ன நடந்தது? (அப். 10:44)

.................................................................................

7. பேதுருவும் அவரோடிருந்தவர்களும் கொர்நேலியுவின் வீட்டிலிருந்த எல்லா மக்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதை எப்படி அறிந்து கொண்டார்கள்? (அப். 10:45-46)

.................................................................................

8. எபேசுவிலுள்ள சீஷரைப் பார்த்து பவுல் கேட்ட கேள்வி என்ன? (அப். 19:2)

.................................................................................

9. எபேசுவிலுள்ள சீஷர் எப்படி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்? (அப். 19:6)

.................................................................................

10. இந்த சீஷர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் வந்தபோது என்ன நடந்தது? (அப். 19:6)

.................................................................................

11. தான் பாஷைகளை பேசும் அளவு குறித்து பவுல் எவ்வாறு கூறுகிறார்? (1 கொரி. 14:18)

.................................................................................

12. அந்நிய பாஷையில் பேசும் ஒரு கிறிஸ்தவன் செய்யும் 3 காரியங்கள் என்ன? (1 கொரி. 14:2, 4)

(1) ..........................................................................

(2) ..........................................................................

(3) ..........................................................................

13. அந்நிய பாஷையில் ஒரு கிறிஸ்தவன் ஜெபிக்கும் போது அவனுடைய எந்தப் பகுதி ஜெபத்தில் ஈடுபட்டிருக்கும்? (1 கொரி. 14:14)

.................................................................................

14. உண்மையாய் தேவனைத் தொழுது கொள்ளுபவர்கள் எப்படி அவரை தொழுது கொள்ள வேண்டும் என்று இயேசு கூறுகிறார்?

(யோவான் 4:23–24)

..............................................................................................

15. கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் எப்படி உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று யூதா கூறுகிறார்? (யூதா 20)

..............................................................................................

16. ஒரு கிறிஸ்தவன் அந்நிய பாஷையில் பேசும் போது அவன் அடுத்தபடியாக எதற்காக ஜெபிக்க வேண்டும்? (1 கொரி. 14:13)

..............................................................................................

17. சபையிலே அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் ஒரு கிறிஸ்தவன் எப்படி அந்நிய பாஷையிலே பேச வேண்டும்? (1 கொரி. 14:28)

..............................................................................................

18. எல்லாக் கிறிஸ்தவர்களும் அந்நிய பாஷைகளில் பேச வேண்டுமென்று பவுல் விரும்புகிறாரா? (1 கொரி. 14:5)

..............................................................................................

19. எத்தனை கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லலாம் என்று பவுல் கூறுகிறார்? (1 கொரி. 14:31)

..............................................................................................

20. கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வரங்களைக் குறித்து அறியாமலிருக்கலாமா? (1 கொரி. 12:1)

..............................................................................................

21. ஆவியின் வரங்கள் 9ஐயும் எழுதுக. (1 கொரி. 12:8-10)

(1) .............................. (2) ..............................

(3) .............................. (4) ..............................

(5) .............................. (6) ..............................

(7) .............................. (8) ..............................

(9) ..............................

22. ஆவியின் கனிகள் 9ஐயும் எழுதுக. (கலா. 5:22-23)

(1) .................... (2) .................... (3) ....................

(4) .................... (5) .................... (6) ....................

(7) .................... (8) .................... (9) ....................

23. ஆவியின் கனிகள் இல்லாமல் ஒரு கிறிஸ்தவனுக்கு ஆவியின் வரங்கள் கிடைக்குமா? (1 கொரி. 13:1–2)

..............................................................................................

24. ஆவியின் வரங்கள் இல்லாமல் ஒரு கிறிஸ்தவன் ஆவியின் கனிகளைக் கொண்டிருக்க முடியுமா?(1 கொரி. 12:31; 14:1)
..............................................................................................................

25. கடைசி நாட்களில் ஆவியானவர் ஊற்றப்படுவதன் மூலமாய் நடைபெறும் 3 இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்கள் யாவை? (அப். 2:17)
(1) ..........................................................................................................
(2) ..........................................................................................................
(3) ..........................................................................................................

26. கிறிஸ்தவர்கள் கூடியிருக்கும்போது நடைபெறும் 5 விதமான ஆவிக்குரிய நிகழ்ச்சிகள் யாவை? (1 கொரி. 14:26)
(1) ............................ (2) ............................ (3) ............................
(4) ............................ (5) ............................

**மனப்பாடப்பகுதி: அப். 2:17, 18**

இந்த வசனங்களை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

**இந்தப் பாடத்தின் எல்லாக் கேள்விகளுக்கும் விடை எழுதும் வரை அருகில் உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.**

# பாடம் 7: பரிசுத்த ஆவியில் கிட்டும் ஞானஸ்நானத்தின் விளைவுகள்

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசினார்கள் | 2 |
| 2. | பிலிப்புவின் பிரசங்கத்தின் மூலம் | 1 |
| 3. | அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி ஜெபித்தார்கள் | 1 |
| 4. | பேதுருவும் யோவானும் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது | 1 |
| 5. | அனனியா பவுல் மேல் கைகளை வைத்ததினால் | 1 |
| 6. | அவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் | 1 |
| 7. | அந்த மக்கள் பற்பல பாஷைகளைப் பேசி தேவனைப் புகழுகிறதைக் கேட்டார்கள் | 1 |
| 8. | நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? | 1 |
| 9. | பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது | 1 |
| 10. | அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனம் சொன்னார்கள் | 1 |
| 11. | உங்களெல்லாரிலும் அதிகமாய் (கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களெல்லாரையும் விட) | 1 |
| 12. | (1) அவன் தேவனிடத்தில் பேசுகிறான் (மனிதனிடத்தில் அல்ல) | 1 |
| | (2) அவன் இரகசியங்களைப் பேசுகிறான் | 1 |
| | (3) தனக்கும் பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான் | 1 |
| 13. | அவனுடைய ஆவி | 1 |
| 14. | ஆவியோடும் உண்மையோடும் | 1 |
| 15. | எப்பொழுதும் பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணுவதால் | 1 |
| 16. | அதன் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக | 1 |

17. தனக்கும் தேவனுக்கும் தெரியப்பேச வேண்டும் ........................1
18. ஆம் ........................................................................................1
19. அனைவரும் ..............................................................................1
20. இல்லை ....................................................................................1
21. (1) ஞானத்தை போதித்தல் (2) அறிவை உணர்த்துதல்...............2
(3) விசுவாசம் (4) குணமாக்கும் வரம் ........................................2
(5) அற்புதங்களைச் செய்தல் (6) தீர்க்கதரிசனம் ..........................2
(7) ஆவிகளைப் பகுத்தறிதல் (8) பற்பல பாஷைகள் பேசுதல் ........................................................................................ 2
(9) பாஷைகளை வியாக்கியானம் செய்தல் ....................................1
22. (1) அன்பு (2) சந்தோஷம் (3) சமாதானம் ....................................3
(4) நீடிய பொறுமை (5) தயவு (6) நற்குணம் ..................................3
(7) விசுவாசம் (8) சாந்தம் (9) இச்சையடக்கம் ..............................3
23. இல்லை ....................................................................................1
24. இல்லை ....................................................................................1
25. (1) உங்கள் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் ..............................................................................1
(2) உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள் ........................1
(3) உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்........................1
26. (1) சங்கீதம் (2) போதனை (3) அந்நிய பாஷை ..............................3
(4) இரகசியத்தை வெளிப்படுத்துதல் (5) வியாக்கியானம்.2

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ........................................8

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். 3 தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 59

**50% — 29 70% — 41 80% — 47**

# பாடம் 7: பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம் கிடைக்கும் பலன்கள்

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

*(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)*

1. "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" (மத். 12:34) பரிசுத்த ஆவியானவரின் முதல் வெளிப்பாடு விசுவாசியின் வாயிலிருந்து வருகிறது.

2–4. பிலிப்புவின் ஊழியத்தின் மூலம் சமாரியாவிலுள்ள திரளான மக்கள் அற்புதமாக இரட்சிப்படைந்து சுகம் பெற்றனர். ஆனால் அப்போஸ்தலருக்கு இது மட்டும் போதுமானதாக இல்லை. அனைத்துப் புதிய விசுவாசிகளும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறவேண்டுமென்று எதிர்பார்த்தனர். பேதுருவும் யோவானும் சமாரியாவில் செய்த ஊழியத்தின் மூலம் இது நடந்தேறியது. இது இரட்சிப்புக்கு அடுத்ததாக நடைபெற்ற பிரத்தியேக அனுபவமாகும்.

5. கைகளை வைப்பதன் மூலம் பரிசுத்த ஆவியைப் பெறுவது என்பது அப்போஸ்தலருடன் மட்டும் நின்றுவிடவில்லை. அனனியா ஒரு "சீஷன்" என்று அழைக்கப்பட்டவர் (அப். 9:10). மேலும் கைகளை வைப்பதினால் மட்டும் பரிசுத்த ஆவியானவர் அருளப்படவில்லை. அப். 2:2-4, 10:44-46ல் விசுவாசிகள் அனைவரும் கைகள் வைக்கப்படாமலேயே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டனர்.

8-10. சமாரியாவைப் போல எபேசுவிலும் சீஷர்கள் இரட்சிக்கப்பட்ட பின்பு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பிரத்தியேக அனுபவமாகப் பெற்றனர். அப். 2:4, 10:46ல் அவர்களுடைய அனுபவம் பல பாஷைகளைப் பேசுகிறதாக இருந்தது. (இங்கே தீர்க்கதரிசனம் உரைத்தனர்).

11–15. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றபின்பு பல பாஷைகளில் பேசும் அனுபவமானது சொந்த தனிப்பட்ட ஆராதனைக்கும் ஜெபத்துக்கும் மட்டுமேயாகும். ஒரு விசுவாசி தான் பேசுகிறதை அறியாதிருக்கிறான். ஆனால் அவனது ஆவி தேவனோடு தொடர்பு கொள்வதால் அவன் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளுகிறான்.

16–17. வியாக்கியானம் செய்யும் வரத்தின் மூலமாக விளங்காத மொழியில் பேசப்பட்ட காரியங்களின் அர்த்தத்தை கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ள முடிகிறது. சபைகளில் (அந்நிய பாஷை) விளங்காத மொழியில் சத்தமாகப் பேசப்படும் வார்த்தைகளுக்கு வியாக்கியானம் தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும். அப்படி வியாக்கியானம் செய்ய ஒருவருமில்லை எனில் அந்த விசுவாசி அந்நிய பாஷையில் பேசுவதை "தனக்கும் தேவனுக்கும்" மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும்.

19. "தீர்க்கதரிசனம்" என்பது பரிசுத்த ஆவியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையின் உந்துதலால் வெளிப்பாடுகளை பேசுபவரும் கேட்பவர்களும் புரிந்து கொள்ளும்படி பேசுவதாகும்.

21–24. "வரங்கள்" "கனிகள்" இரண்டிற்கும் முக்கிய வேறுபாடு உண்டு. "வரம்" என்பது திடீரென கொடுக்கப்படுவதும் பெற்றுக்கொள்வதுமான ஒரு செயலாகும். ஆனால் "கனி" என்பது நேரம், பிரயாசம், உழைப்பு இவற்றின் மூலம் உழைத்துப் பெறப்படுவதாகும் (2 தீமோ. 2:6) உதாரணமாக ஒரு கிறிஸ்மஸ் மரத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் பரிசுகளுக்கும் ஒரு ஆப்பிள் மரத்திலுள்ள பழங்களுக்கும் வித்தியாசம் உண்டு. ஆவிக்குரிய பிரகாரமாக வரங்களுக்குப் பதிலாக கனிகளும், கனிகளுக்குப் பதிலாக வரங்களும் அமைவதில்லை. எல்லாக் கிறிஸ்தவர்களும் இவ்விரண்டினையும் பெற்றிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். (உதாரணமாக "அன்பு" ஒரு "வரம்" என்று அழைக்கப்படுவதில்லை).

25-26. பரிசுத்த ஆவியானவர் அபரிமிதமாக ஊற்றப்படும்போது பலவிதமான இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகளைக் காணலாம். இதன் மூலமாக கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ள திறமை, கல்வி இவற்றிற்கும் மேலாக உயர்வான முறையில் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய முடியும்.

## பாடம் 8

# ஆராதனையும் ஜெபமும்

***முன்னுரை:***

ஜெபமானது கிறிஸ்தவர்கள் தேவனுடைய சமுகத்திற்கு நேராகக் கடந்து வந்து அவரை ஆராதித்து அவரிடத்திலிருந்து அவர்களுக்குத் தேவையான வழி நடத்துதலையும் உதவியையும் பெலத்தையும் பெற்றுக்கொள்ள உதவும் மிகப்பெரிய கருவியாக இருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தினமும் வேதம் வாசிக்கவும் ஜெபிக்கவும் தனியே நேரம் ஒதுக்க வேண்டும். ஜெபித்து பதிலைப் பெற்றுக் கொள்ள அறிந்துள்ள ஒரு கிறிஸ்தவனே, இவ்வுலகில் வல்லமையான மற்றும் பிறர்வாழ்வில் நல்லமுறையில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு மனிதனாக இருப்பான். பரிசுத்த ஆவியின் உதவியோடு தேவனுடைய வசனத்தில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளைக் கடைப்பிடித்து ஜெபிக்கக் கற்றுக் கொள்ளத் தேவையான காரியங்கள் இந்தப் பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

**மனப்பாடப்பகுதி: யோவான். 15:7 மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும்.**

(முந்தைய மனப்பாடப்பகுதிகளைத் திரும்பிப்பார்க்கவும்)

1. எத்தகைய மக்களை தேவன் தேடுகிறார்? (யோவான் 4:23, 24)
 ..................................................................................................
2. யாருடைய ஜெபத்தில் தேவன் பிரியப்படுகிறார்? (நீதி. 15:8)
 ..................................................................................................
3. எந்த வகையான ஜெபம் பெரிய காரியங்களை சாதிக்கும்? (யாக். 5:16) ..................................................................................
4. தேவன் நமது ஜெபத்தைக் கேட்க வேண்டுமாயின் எந்த 2 காரியங்களை நாம் செய்ய வேண்டும்? (யோவான் 9:31)
 (1) .......................................... (2) ..........................................
5. எதன் மூலமாய் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் நாம் தைரியமாய் பிரவேசிக்க முடியும்? (எபி. 10:19)
 ..................................................................................................
6. தேவனுடைய சமுகத்தில் எந்த 2 காரியங்களோடு நாம் பிரவேசிக்க

வேண்டும்? (சங். 100:4)
(1) .......................................... (2) ..........................................

7. கவலைப்படுவதற்கு பதிலாக ஒரு கிறிஸ்தவன் என்ன செய்ய வேண்டும்? (பிலி. 4:6)
..........................................................................................
..........................................................................................

8. யாருடைய நாமத்தில் நாம் ஜெபிக்க வேண்டும்? என்ன நோக்கத்தோடு ஜெபம் செய்ய வேண்டும்? (யோவான். 14:13)
..........................................................................................

9. தேவனிடத்திலிருந்து நாம் கேட்பதைப் பெற்றுக்கொள்ள 2 நிபந்தனைகள் என்ன? (யோவான் 15:7)
(1) ......................................................................................
(2) ......................................................................................

10. நமது ஜெபத்தைத் தடை செய்யும் 4 காரியங்கள் என்ன என்பது குறித்து கீழ்க்கண்ட வசனங்கள் கூறுகின்றன:
(1) (சங்.66:18) ......................................................................
(2) (யாக். 1:6,7) ......................................................................
(3) (யாக். 4:3) ......................................................................
(4) (1 பேதுரு. 3:7) ..................................................................

11. சாத்தானின் சக்திகளை அதமாக்க சில சமயங்களில் வேறு என்ன அவசியம்? (மாற். 9:29)
..........................................................................................

12. நாம் விரும்பும் காரியங்களைப் பெற்றுக் கொள்ள ஜெபத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? (மாற். 11:24)
..........................................................................................

13. நாம் ஜெபிக்கும்போது மற்றவர்கள் மேல் நமக்கு குறை ஏதும் இருக்குமாயின் முதலில் நாம் என்ன செய்ய வேண்டும்? (மாற்கு 11:25)
..........................................................................................

14. நாம் ஜெபிக்கும்போது மற்றவர்களை மன்னிக்கும்போது தேவன் நமக்கு என்ன செய்கிறார்? (மாற். 11:25)
..........................................................................................

15. நாம் மற்றவர்களை, மன்னிக்காத போது தேவன் நமக்கு என்ன செய்கிறார்? (மாற். 11:26)

..........................................................................................

16. நாம் தேவனுடைய சித்தப்படி ஜெபித்தால் எந்த 2 காரியங்களைக் குறித்து நம்பிக்கையாக இருக்கலாம்? (1 யோவான் 5:14,15)
(1) ..........................................................................................
(2) ..........................................................................................

17. எப்படி ஒவ்வொரு நாளையும் ஆரம்பிப்பதாக தாவீது கூறுகிறார்? (சங். 5:3)

..........................................................................................

18. ஒரு நாளின் எந்த 3 வேளைகளில் தாவீது ஜெபிப்பதாகக் கூறுகிறார்? (சங். 55:17)
(1) .............................. (2) ..............................(3) ..............................

19. ஒழுங்காக ஜெபிக்கும் நேரங்கள் தவிர எத்தனை முறை நாம் ஜெபிக்கலாம்? (எபே. 6:18 1 தெச. 5:17)

..........................................................................................

20. நமக்கு ஜெபிக்க பெலனில்லாத போதும் ஜெபிக்க அறியாமலிருக்கிறபோதும் தேவனுடைய சித்தப்படி ஜெபிக்க நமக்கு உதவுபவர் யார்? (ரோ. 8:26, 27)

..........................................................................................

21. நாம் தனியாக ஜெபிக்கும்போது என்ன செய்ய வேண்டுமென்று இயேசு கூறுகிறார்? (மத். 6:6)

..........................................................................................

22. இந்த வகையான ஜெபத்திற்கு பதில் எவ்வாறு கிடைக்கும் என்று இயேசு கூறுகிறார்? (மத். 6:6)

..........................................................................................

23. இயேசுவின் நாமத்தில் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி ஜெபிக்கும்போது என்ன நடக்கும் என்று இயேசு வாக்கு பண்ணுகிறார்? (மத். 18:20)

..........................................................................................

24. மற்ற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஜெபிக்கும்போது அவர்களோடு நமது நிலை எப்படி இருக்க வேண்டும்? (மத். 18:19)

..........................................................................................

25. யாருக்காக நாம் விசேஷமாக ஜெபிக்க வேண்டும்? (1 தீமோ. 2:1, 2)

..........................................................................................

26. எந்த சரீர அமைப்பில் ஜெபிக்க பவுல் கூறுகிறார்? (1 தீமோ. 2:8)

..........................................................................................

27. ஜெபிக்கும்போது எந்த 2 காரியங்களுக்கு எதிராக தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும்? (1 தீமோ. 2:8)
(1) .......................................... (2) ..........................................

28. நமது ஜெபம் கேட்கப்படும் போது அதன் பலன் என்ன? (யோவான் 16:24)
..........................................................................................

**மனப்பாடப்பகுதி: யோவான் 15:7**

இந்த வசனத்தை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

***இந்தப் பாடத்தின் எல்லாக் கேள்விகளுக்கும் முதலில் விடை எழுதவும், விடை எழுதி முடிக்கும் வரை கீழே உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.***

# பாடம் 8: ஆராதனையும் ஜெபமும்

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் மக்களை .......................... | 2 |
| 2. | செம்மையானவர்களின் ஜெபத்தில் .......................... | 1 |
| 3. | நீதிமானுடைய ஊக்கமான ஜெபம் .......................... | 2 |
| 4. | (1) தேவ பக்தியுள்ளவனாய் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் ................ (2) தேவனுடைய சித்தத்தைச் செய்ய வேண்டும் .......................... | 2 |
| 5. | இயேசுவின் இரத்தத்தினாலே .......................... | 1 |
| 6. | (1) துதியோடும் .................... (2) புகழ்ச்சியோடும் .................... | 2 |
| 7. | எல்லாவற்றையும் குறித்து விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும் .......................... | 3 |

8. இயேசுவின் நாமத்தில், குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக ........................................................................................................2
9. (1) நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும் ........................1
(2) அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருக்க வேண்டும் ....1
10. (1) நமது இருதயத்திலுள்ள அக்கிரமசிந்தை ...........................1
(2) சந்தேகத்தோடும் அலைபாயும் மனதோடும் இருத்தல் ..........1
(3) நமது இச்சைகளை நிறைவேற்றுதல், தவறான விண்ணப்பம் ........................................................................................................1
(4) புருஷன் மனைவியிடையே சரியான உறவற்ற நிலை ........................................................................................................1
11. உபவாசம் ........................................................................................1
12. நாம் ஜெபிக்கும்போது அவற்றைப் பெற்றுக் கொள்வோம் என நாம் விசுவாசிக்க வேண்டும் ..........................................1
13. நாம் அவர்களை மன்னிக்க வேண்டும் ....................................1
14. தேவன் நமக்கு மன்னிக்கிறார் ................................................1
15. தேவன் நம்மை மன்னிக்கமாட்டார் ..........................................1
16. (1) தேவன் நமக்குச் செவி கொடுக்கிறார் ................................1
(2) கேட்டவைகளைப் பெற்றுக் கொள்கிறோம் ...........................1
17. காலையில் ஜெபத்தோடு தேவனுக்கு நேராக ஆயத்தமாகி காத்திருப்பதாக கூறுகிறார் ..................................................2
18. (1) மாலை...... (2) காலை...... (3) மத்தியான வேளை......................3
19. எப்பொழுதும், இடைவிடாமல் ..................................................1
20. பரிசுத்த ஆவியானவர் ...........................................................1
21. அறைவீட்டுக்குள் பிரவேசித்து கதவைப்பூட்ட வேண்டும் ..........1
22. நமது பரலோக பிதா வெளியரங்கமாக பதிலளிப்பார் ..................................................................................1
23. இயேசு அவர்கள் நடுவே இருப்பதாக வாக்குப் பண்ணுகிறார் ........................................................................................................1
24. நாம் வேண்டிக்கொள்ளும் காரியத்தைக் குறித்து அவர்களோடு ஒருமனம் இருக்க வேண்டும் ..........................................................2
25. ராஜாக்களுக்கும் அதிகாரமுள்ள யாவருக்கும் ..........................1
26. பரிசுத்தமான கைகளை உயர்த்தி ..............................................1
27. (1) கோபம் (2) தர்க்கம் ...........................................................2

28. நிறைவான சந்தோஷம் ..........................................................................1

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ..........................................................4

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். 3 தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 49

**50% — 24 70% — 34 80% — 39.**

# பாடம் 8: ஆராதனையும் ஜெபமும்

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

*(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)*

வேதாகமம் முழுவதும்—குறிப்பாக புதிய ஏற்பாடும்—தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்க வல்லவர் என்றும் பதிலளிக்க விரும்புகிறவர் என்பதையும் வலியுறுத்திக் கூறுகிறது. (மத். 7:7–8 பார்க்கவும்) மக்கள் ஜெபிக்க விரும்புவதைவிட தேவன் அதிகமாக ஜெபத்திற்கு பதிலளிக்க விரும்புகிறார் என்பதே உண்மை. இருப்பினும் நமது ஜெபத்திற்குப் பதில் பெற வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். இந்தப் பாடத்தில் உள்ள பதில்கள் அநேகமாக இத்தகைய நிபந்தனைகளைப் பற்றியே விவரிக்கின்றன. அவைகள் கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளது:

5, 8, 23. **கிறிஸ்துவின் மூலம் மாத்திரமே தேவனுடன் உறவு:** பாவிகளாகிய நாம் கிறிஸ்துவின் தியாகத்தின் மூலமும் அவருடைய மத்தியஸ்தம் செய்யும் ஊழியத்தின் மூலமும் மாத்திரமே தேவனோடு ஒப்புரவாக முடியும். எனவே தான் நாம் இயேசுவின் பெயரின் மூலமும் அவருடைய இரத்தத்தின் மூலமும் தேவனிடத்தில் வரமுடிகிறது.

1, 4(1), 6, 7. **சரியான வழிமுறை:** ஆராதனை, நன்றி செலுத்துதல், துதி

1, 2, 3, 4(2); 9(1). **சரியான குணநலன்கள்:** உண்மை, நேர்மை, நீதி, கீழ்ப்படிதல் (கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மட்டுமே இது சாத்தியம்).

8, 10(3). **சரியான நோக்கம்:** தேவனுடைய மகிமைக்காக மாத்திரமே. நமது இச்சைகளை நிறைவேற்ற அல்ல.

10(4), 13, 14, 15, 24, 27(1). **மற்றவர்களுடன் சரியான உறவு:** சிறப்பாக நமக்கு நெருக்கமானவர்களுடன் சரியான உறவு.

9(2), 16, 25. **தேவனுடைய சித்தப்படி** ஜெபிப்பது குறித்து தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்துகிறது.

10(2), 12, 16(2), 27(2). **விசுவாசத்தின் மூலமும்** ஜெபிக்கும் போதே ஜெபத்திற்கு பதில் பெறுவது. "இப்பொழுதே அநுக்கிரக காலம்" (2 கொரி. 6:2).

17, 18, 19. **ஒழுங்காகவும், விடாப்பிடியாகவும்** ஜெபித்தல் (லூக். 18:1).

3, 11, 21, 26. **ஊக்கமாய் ஜெபித்தல், சுய மறுப்பு, ஒப்புக்கொடுத்தல்.**

20. இவை எல்லாவற்றிற்கும் நமது சொந்த முயற்சி, பெலன் இவற்றைச் சார்ந்திராமல் **பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட உதவியை** நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

22, 28. சரியான ஜெபத்திற்குக் கிடைக்கும் பலன்கள்.

# பாடம் 9

# தண்ணீர் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) எப்படி? எப்போது? ஏன்?

**முன்னுரை:**

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற். 16:16) என்று இயேசு தாமே கூறினார். தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் ஒன்றே: முதலாவது விசுவாசிக்க வேண்டும். பிறகு ஞானஸ்நானம் பெறவேண்டும். கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசம் நமது இருதயத்தினுள்ளே மாற்றத்தை ஏற்படுத்துகிறது. தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவது என்பது கீழ்ப்படிதலை வெளிப்படுத்தும் செயலாகும். இதன் மூலம் நமது இருதயங்களில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை நாம் வெளிப்படுத்துகிறோம். இந்தச் செயலின் மூலம் கிறிஸ்துவின் அடக்கத்திலும் அவரது உயிர்த்தெழுதலிலும் நாம் அவருடன் பங்கு கொள்ளுகிறோம். நம் பழைய பாவ வாழ்க்கையினின்றும் தோல்வியினின்றும் நாம் பிரித்தெடுக்கப்படுகிறோம். தண்ணீரிலிருந்து வெளிப்பட்டு ஒரு நீதியுள்ள வெற்றி வாழ்க்கை வாழ்கிறோம். இதனை நம்மிடத்தே உள்ள தேவ வல்லமையில் செயல்படுத்த முடியும். இந்தப் பாடத்தில் எப்படி, எப்பொழுது, ஏன் நாம் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்பது குறித்து வேத வசனங்களினடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ளது.

***மனப்பாடப்பகுதி: ரோமர் 6:4 மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும்.***

(தினமும் பழைய வசனங்களைத் திரும்பிப்பார்க்கவும்)

1. ஞானஸ்நானம் பெறுவதற்கான காரணம் என்ன என்று இயேசு கூறுகிறார்? (மத். 3:15)

   ..........................................................................................................

   ..........................................................................................................

2. இயேசு ஞானஸ்நானம் பெற்றதினால் மகிழ்ச்சியடைவதை எப்படி பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினார்? (மத். 3:16)

..............................................................................................................

..............................................................................................................

3. பிதாவாகிய தேவன் இயேசு ஞானஸ்நானம் பெற்றது குறித்து என்ன கூறினார்? (மத். 3:17)

..............................................................................................................

..............................................................................................................

4. ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு தண்ணீருக்குள் சென்றாரா? (மத். 3:16)

..............................................................................................................

5. ஒரு மனிதன் இரட்சிக்கப்படவேண்டுமானால் சுவிசேஷத்தை விசுவாசித்தபின்பு என்ன செய்ய வேண்டுமென்று இயேசு கூறுகிறார்? (மாற். 16:16)

..............................................................................................................

6. மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முன்பதாக அவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று சீஷர்களுக்கு இயேசு கூறுகிறார்? (மத். 28:19)

..............................................................................................................

7. இந்தச் செய்தியை யாருக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று சீஷர்களை அனுப்புகிறார்? (மத். 28:19)

..............................................................................................................

8. ஞானஸ்நானம் பெற்ற பின்பு மக்கள் என்ன செய்ய வேண்டுமென்று இயேசு எதிர்பார்க்கிறார்? (மத். 28:20)

..............................................................................................................

..............................................................................................................

9. ஞானஸ்நானம் பெறும் முன்பதாக மக்கள் என்ன செய்ய வேண்டுமென்று பேதுரு கூறுகிறார்? (அப். 2:38)

..............................................................................................................

10. எத்தனை பேர் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று பேதுரு கூறுகிறார்? (அப். 2:38)

..............................................................................................................

11. தேவனுடைய வார்த்தையை சந்தோஷமாக ஏற்றுக் கொண்ட மக்கள் என்ன செய்தார்கள்? (அப். 2:41)

..............................................................................................................

12. பிலிப்புவின் பிரசங்கத்தை விசுவாசித்த சமாரியாவின் மக்கள் என்ன செய்தார்கள்? (அப்போஸ்தலர் 8:12)

...................................................................................................

13. ஞானஸ்நானம் பெறும் முன்பதாக என்ன செய்ய வேண்டுமென்று மந்திரியிடம் பிலிப்பு கூறுகிறார்? (அப்போஸ்தலர் 8:37)

...................................................................................................

14. மந்திரி என்ன பதில் சொன்னார்? (அப்போஸ்தலர் 8:37)

...................................................................................................

...................................................................................................

15. மந்திரி ஞானஸ்நானம் பெறுவதற்கு தண்ணீருக்குள் சென்றாரா? (அப்போஸ்தலர் 8:38)

...................................................................................................

16. மந்திரி ஞானஸ்நானம் பெற்ற பின்பு எப்படி இருந்தார்? (அப்போஸ்தலர் 8:39)

...................................................................................................

17. கொர்நெலியுவும் அவருடைய நண்பர்களும் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியைப் பெற்ற பின்பு அவர்கள் அடுத்ததாக என்ன செய்ய வேண்டுமென்று பேதுரு கூறுகிறார்? (அப்போஸ்தலர் 10:44-48)

...................................................................................................

18. பவுலுடைய செய்தியைக் கேட்ட பின்பு பிலிப்புப்பட்டணத்து சிறைச்சாலை அதிகாரியும் அவரது குடும்பத்தினரும் என்ன செய்தனர்? (அப்போஸ்தலர் 16:29-33)

...................................................................................................

19. பவுலுடைய செய்தியைக் கேட்ட பின்பு எபேசு பட்டணத்து விசுவாசிகள் என்ன செய்தனர்? (அப்போஸ்தலர் 19:4, 5)

...................................................................................................

20. ஞானஸ்நானம் பெறும் போது கிறிஸ்துவின் எந்த இரண்டு அனுபவங்களை விசுவாசிகள் பின்பற்றுகின்றனர்? (ரோ. 6:4 கொலோ. 2:12)

(1) ................................................ (2) ................................................

21. ஞானஸ்நானம் பெற்ற பின்பு விசுவாசிகள் எப்படி வாழ வேண்டும் என்று பவுல் கூறுகிறார்? (ரோ. 6:4)

...................................................................................................

22. பல ஜாதி மக்கள் ஞானஸ்நானம் பெற்ற பின்பு அவர்களிடத்தில்

வேறுபாடு உண்டா? (கலா. 3:26-28)
..................................................................................................................

23. பழைய ஏற்பாட்டில் நடைபெற்ற இரண்டு தண்ணீர் ஞானஸ்நானங்களும் அவைகள் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட இடங்களையும் குறிப்பிடுக.

(அ) (1 கொரி. 10:1, யாத். 14:21, 22) ..............................................................

(ஆ) (1 பேது. 3:20,21, ஆதி. 6,7) ..................................................................

**மனப்பாடப்பகுதி: ரோமர் 6:4**

இந்த வசனத்தை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................

***இந்தப் பாடத்தில் உள்ள எல்லாக் கேள்விகளுக்கும் முதலில் விடை எழுதவும், விடை எழுதி முடிக்கும் வரை கீழே உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.***

# பாடம் 9: தண்ணீர் ஞானஸ்நானம்: எப்படி? எப்போது? ஏன்?

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" .................................... | 2 |
| 2. | தேவ ஆவியானவர் புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார் .................................... | 2 |
| 3. | "இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்" .................................... | 2 |
| 4. | ஆம் .................................... | 1 |
| 5. | அவன் ஞானஸ்நானம் பெற வேண்டும் .................................... | 1 |

6. அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டும் ..............................1
7. சகல ஜாதிகளையும் (எல்லா தேசத்தாருக்கும்) ..............................1
8. அவர் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ள வேண்டும் ..............................2
9. மனந்திரும்ப வேண்டும் ..............................1
10. ஒவ்வொருவரும் ..............................1
11. ஞானஸ்நானம் பெற்றார்கள் ..............................1
12. அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் ..............................1
13. முழு இருதயத்தோடும் விசுவாசிக்க வேண்டும் ..............................1
14. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன் ..............................1
15. ஆம் ..............................1
16. சந்தோஷத்தோடே தன் வழியே போனான் ..............................1
17. ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று ..............................1
18. அவர்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்..............................1
19. ஞானஸ்நானம் பெற்றார்கள் ..............................1
20. (1) அவருடைய மரணத்தை (2) அவருடைய உயிர்த்தெழுதலை ..............................2
21. புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ள வேண்டும் ..............................2
22. இல்லை ..............................1
23. (அ) இஸ்ரவேல் மக்கள் சிவந்த சமுத்திரம் வழியாய் கடந்து சென்றது ..............................2

(ஆ) நோவாவும் அவருடைய குடும்பமும் பேழை மூலமாக ஜலப்பிரளயத்தில் காக்கப்பட்டது ..............................2

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ..............................4

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். 3 தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 36

**50% — 18 70% — 25 80% — 29.**

# பாடம் 9: தண்ணீர் ஞானஸ்நானம்: எப்படி? எப்போது? ஏன்?

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)

1–4. இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெற்றாலும், அவர் யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற்ற மற்றவர்களைப் போன்றவரல்ல. யோவானின் ஞானஸ்நானம் "மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம்". இதனைத் தொடர்ந்து பாவ அறிக்கையும் செய்யப்பட வேண்டியதாயுள்ளது. (மாற். 1:4–5). ஆனால் இயேசுவிற்கு அவரிடம் அறிக்கையிட எந்தப் பாவமுமில்லை, மனந்திரும்ப வேண்டிய அவசியமுமில்லை. தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு இயேசு, இப்படி ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் ஒரு முன் மாதிரியை வைத்துப் போனார். இதனைக் குறிப்பிடுவதற்காகத்தான் இயேசு இப்படிக் கூறினார்: "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது".

"இப்படி" என்று கூறப்படுவதன் மூலம் ஞானஸ்நானத்தின் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது: தண்ணீருக்குள் சென்று தண்ணீரைவிட்டு வெளியே வருவதாகும். "நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்பது எல்லாக் கிறிஸ்தவர்களும் பின்பற்ற வேண்டிய முறைக்கு இது ஒரு முன்னோடியாயிருப்பதைக் குறிக்கிறது. "எல்லா நீதியையும் நிறைவேற்றுவது" என்பது எல்லாவிதமான நீதியையும் நிறைவேற்றி முடிக்க வேண்டியதன் காரணத்தை விளக்குவதாக அமைகிறது. முதலாவது கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையினால் ஒரு கிறிஸ்தவன் நீதிமானாக்கப்படுகிறான். இந்த உள்ளான நீதியின் விசுவாசம் வெளிப்படையான கீழ்ப்படிதலின் செயலாகிய ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் நிறைவடைகிறது. தேவனின் திரியேகத்துவமாகிய "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்" வெளிப்படையான ஒப்புதல் இந்தக் கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்கு உண்டு என்பதை நாம் இதன் மூலம் அறிந்து கொள்கிறோம். (இது குறித்து இன்னும் விளக்கமாக அறிந்து கொள்ள "யோர்தான் முதல் பெந்தெகொஸ்தே வரை" என்ற எனது புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்தைப் படிக்கவும்).

5, 6, 9, 13. ஞானஸ்நானம் பெறும் முன்பதாக கீழ்க்கண்ட 3 நிபந்தனைகளையும் ஒருவர் நிறைவேற்ற வேண்டும் (1) இந்த செயலின்

தன்மை, காரணம் குறித்து போதிக்கப்பட்டிருக்க வேண்டும்; (2) பாவ அறிக்கை; (3) இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும்.

7, 10, 11, 12, 17, 18, 19. இந்த ஞானஸ்நானத்தின் சட்டம் "எல்லா நாடுகளுக்கும்" உரியது என்று இயேசு தமது சீஷரிடத்தில் கூறுகிறார். இதில் எந்த விதிவிலக்கும் கிடையாது. புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள காரியங்களின் படியும் இந்தச் சட்டத்தின் நிறைவேறுதலின்படியும் எல்லாப் புதிய விசுவாசிகளும் காலதாமதமின்றி ஞானஸ்நானம் பெற்றனர். அநேக சமயங்களில், என்று மனமாற்றம் பெற்றார்களோ அன்றே ஞானஸ்நானம் பெற்றனர். மனமாற்றத்திற்கும் ஞானஸ்நானத்திற்கும் ஒருக்காலும் நீண்ட இடைவெளி இருக்கவில்லை. ஆனால் ஆதித்திருச்சபையில் கடைப்பிடிக்கப்பட்ட இந்த முறையானது இன்று நடைமுறைப்படுத்தப்படாத எந்தக் காரணமும் கிடையாது.

8, 20, 21. ஞானஸ்நானத்தின் மூலமாய் கிறிஸ்துவின் அடக்கம் பண்ணப்படுதலிலும் உயிர்த்தெழுதலிலும் கிறிஸ்தவர்கள் பங்கு பெறுவதை எல்லாருக்கும் முன்பாக அறிக்கையிடுகின்றனர். ஞானஸ்நானத்திற்குப் பிறகு இவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் கிருபையினாலும் புதிய நீதியின் வாழ்க்கை வாழ வேண்டும்.

23 (அ) 1 கொரி. 10:1–2ல் தேவனுடைய பிள்ளைகள் "மேகத்தினாலும் சமுத்திரத்திலுமாகிய" இரண்டு வகையான ஞானஸ்நானம் பெற்றதைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. "மேகத்தில்" பெறும் ஞானஸ்நானம் என்பது பரிசுத்த ஆவியில் பெறும் ஞானஸ்நானத்தையும் "சமுத்திரத்தில்" பெறும் ஞானஸ்நானம் தண்ணீரில் பெறும் ஞானஸ்நானத்தையும் குறிக்கிறது.

23 (ஆ) விசுவாசத்தின் மூலமாய் நோவாவும் அவனுடைய குடும்பத்தினரும் பேழைக்குள் (=கிறிஸ்துவுக்குள்) பிரவேசித்தனர். பிறகு பேழையின் மூலம் ஜலப்பிரளயத்தைக் கடந்தனர் (=ஞானஸ்நானம்). இதன் மூலம் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பி பழைய தேவனற்ற உலகிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டு புதிய ஒரு வாழ்க்கைக்குள்ளாகக் கடந்து வந்தார்கள்.

## பாடம் 10

# சாட்சி பகர்தலும் ஆத்தும ஆதாயம் செய்தலும்

*முன்னுரை:*

எங்குமுள்ள எல்லா மனிதருக்கும் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் மீட்பு உண்டாகியிருக்கிறது. இரட்சிப்பைப் பெற ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தையையும் கிறிஸ்துவின் சாட்சியையும் கேட்க வேண்டும். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்றும் இந்த வல்லமையினால் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் ஜீவிக்க வேண்டுமென்றும் இந்த வகையில் இயேசுவைக் குறித்த சாட்சி உலகத்தின் கடைசி மட்டும், உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் சென்றடையும் வரை தொடர்ந்து பரந்து விரிவடைந்து சென்று கொண்டே இருக்க வேண்டுமென்பதே தேவனுடைய திட்டமாக உள்ளது. இந்த முறையைப் பின்பற்றி அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒன்றாகச் சேர்ந்து உழைத்து கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக வேண்டும். சாட்சி பகரும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவிடமிருந்து பலனைப் பெற்றுக் கொள்வதுமன்றி அவர்களுடைய சாட்சியின் மூலம் ஆதாயப்படுத்தப்பட்ட ஆத்துமாக்களை மோட்சத்தில் கண்டு களிக்கும் சந்தோஷத்தையும் அடைவார்கள். உண்மையற்ற கிறிஸ்தவர்கள் தாங்கள் சாட்சி பகராததினால் இழந்து போன ஆத்துமாக்களுக்காக ஆண்டவரிடம் பதில் கூற வேண்டும்.

**மனப்பாடப்பகுதி: அப். 1:8** மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும். ☐

(தினமும் பழைய வசனங்களைத் திரும்பிப்பார்க்கவும்)

1. தன்னுடைய சீஷர்கள் தனக்கு என்னவாக இருக்க வேண்டுமென்று கிறிஸ்து விரும்புகிறார்? (அப். 1:8)

   ..........................................................................................

2. தன்னுடைய சீஷர்கள் எந்த மட்டும் சாட்சிகளாக விளங்கவேண்டுமென்று கிறிஸ்து கூறுகிறார்? (அப். 1:8)

   ..........................................................................................

3. காலம் முடிவதற்குள்ளாக எங்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும்? (மத். 24:14)

..............................................................................................

4. இயேசுவைக் குறித்த எந்த 3 காரியங்களுக்கு அவரும் மற்ற சீஷரும் சாட்சிகளாயிருப்பதாக பேதுரு கூறுகிறார்? (அப். 10:39–41)
(1) ..............................................................................................
(2) ........................................... (3) ........................................

5. கிறிஸ்துவுக்காக என்ன செய்ய வேண்டுமென்று பவுலுக்கு தேவன் கூறுகிறார்? (அப். 22:15)

..............................................................................................

..............................................................................................

6. இயேசுவை அறிந்துகொண்ட நாள் முதல் பவுல் தொடர்ந்து செய்து வரும் காரியம் என்ன? (அப். 26:22)

..............................................................................................

..............................................................................................

7. மெய் சாட்சி சொல்லுகிறவன் தனது சாட்சியின் மூலம் என்ன செய்கிறான்? (நீதி. 14:25)

..............................................................................................

8. ஞானமுள்ள கிறிஸ்தவன் என்ன செய்கிறான்? (நீதி. 11:30)

..............................................................................................

9. அந்திரேயா இயேசுவைச் சந்தித்த பின்பு யாரை இயேசுவிடம் அழைத்து வந்தார்? (யோவான் 1:35-42)

..............................................................................................

10. பிலிப்புவை இயேசு சந்தித்த பின்பு, பிலிப்பு யாரை இயேசுவிடம் அழைத்து வருகிறார்? (யோவான் 1:43–47)

..............................................................................................

11. பிறவிக் குருடனைப் பார்த்த பரிசேயர் கேள்வி கேட்ட போது, அவனது அனுபவத்திலிருந்து அவன் கூறின பதில் என்ன? (யோவான் 9:25)

..............................................................................................

12. எந்த இரண்டு காரியங்களைக் குறித்து நாம் பேசவேண்டும்? மற்றும் மற்ற மக்களுக்கு அறிவிக்க வேண்டும்? (1 நாளா. 16:8, 9)
(1) ........................................... (2) ........................................

13. கொரிந்துப் பட்டணத்தில் பவுலின் சாட்சியை மக்கள் எதிர்த்த

போது தேவன் பவுலிடம் என்ன கூறினார்? (அப். 18:9)

.......................................................................................................

14. எந்த ஆவியை தேவன் நமக்குக் கொடுக்கவில்லை என பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார்? (2 தீமோ. 1:7)

.......................................................................................................

15. மனுஷருக்கு பயப்படும் பயம் எதைக் கொண்டுவரும்? (நீதி. 29:25) .......................................................................

16. கிறிஸ்துவின் சாட்சியைக் குறித்து பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறும் அறிவுரை என்ன? (2 தீமோ. 1:8)

.......................................................................................................

17. பேதுருவும் யோவானும் இயேசுவைப் பற்றி பிரசங்கிக்கத் தடை செய்யப்பட்ட போது அவர்கள் கூறிய 2 பதில்கள் என்ன?

(1) அப். 4:20 ..........................................................................

(2) அப். 5:29 ..........................................................................

18. பேதுருவும் யோவானும் இயேசுவைப் பற்றி பிரசங்கிக்கத் தடை செய்யப்பட்டார்கள் என்பதைக் கேள்விப்பட்ட மற்ற சீஷர்கள் என்ன செய்தார்கள்? (அப். 4:24)

.......................................................................................................

19. சீஷர்கள் ஜெபித்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பின்பு அவர்கள் என்ன செய்தார்கள்? (அப். 4:31)

.......................................................................................................

20. மற்ற மக்களுக்கு முன்பாக தேவன் எசேக்கியேலுக்குக் கொடுத்த பதவி என்ன? (எசே. 3:17)

.......................................................................................................

21. பாவிகளை எச்சரிக்காவிட்டால் எசேக்கியேலுக்கு என்ன நேரிடும் என்று தேவன் கூறுகிறார்? (எசே. 3:18)

.......................................................................................................

22. எபேசுவிலே எல்லா மக்களுக்கும் முன்பாக எந்த 2 காரியங்களைக் குறித்து பவுல் சாட்சி கூறினார்? (அப். 20:21)

(1) ..........................................................................

(2) ..........................................................................

23. எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன் என்று பவுல் எப்படிக் கூற முடிந்தது? (அப். 20:26, 27)

.......................................................................................................

24. கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகளாய் வாழ்ந்தவர்களுக்குக் கிடைக்கும் இறுதி பலன் என்ன? (2 தீமோ. 4:8)

..........................................................................................

**மனப்பாடப்பகுதி: அப்போஸ்தலர் 1:8**

இந்த வசனத்தை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

***இந்தப் பாடத்தின் எல்லாக் கேள்விகளுக்கும் விடை எழுதி முடிக்கும் வரை கீழே உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.***

# பாடம் 10: சாட்சி பகர்தலும் ஆத்தும ஆதாயம் செய்தலும்

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | சாட்சிகள் | 1 |
| 2. | உலகத்தின் கடைசி பரியந்தம் | 1 |
| 3. | உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் | 1 |
| 4. | (1) அவர் செய்த எல்லாவற்றிற்கும் | 1 |
| | (2) அவரது மரணம் (3) அவரது உயிர்த்தெழுதல் | 2 |
| 5. | தான் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து சகல மனுஷருக்கும் சாட்சியாக இருக்கும்படி | 3 |
| 6. | சிறியோருக்கும் பெரியோருக்கும் வேத வசனம் உண்மை என்று சாட்சி கூறினார் | 3 |
| 7. | ஆத்துமாக்களை இரட்சிக்கிறான் | 1 |
| 8. | ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறான் | 1 |
| 9. | அவருடைய சகோதரனாகிய சீமோன் பேதுரு | 1 |

10. நாத்தான்வேல் ....................................................................................1
11. "நான் குருடனாயிருந்தேன் இப்பொழுது காண்கிறேன், இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" ..............................................................2
12. (1) அவருடைய செய்கைகளை (2) அவருடைய அதிசயங்களை ....................................................................................................................2
13. "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே" ...................................2
14. பயத்தின் ஆவி ..............................................................................1
15. கண்ணி .......................................................................................1
16. கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்து வெட்கப்படாமல் பேச வேண்டும் .....................................................................................2
17. (1) "நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துப் பேசாமலிருக்க முடியாது" ...........................................................2

(2) "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" ...............................................1
18. அவர்கள் ஒருமனப்பட்டு ஜெபித்தார்கள் ..........................................2
19. தைரியமாய் திருவசனத்தைப் பிரசங்கித்தார்கள் ..............................1
20. காவலாளன் (Watchman) ..............................................................1
21. அவன் இரத்தப் பழியை உன் (எசேக்கியேல்) கையில் கேட்பேன் ...................................................................................................................2
22. (1) தேவனிடத்தில் மனந்திரும்புதல் ..................................................1

(2) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தல் ..........................1
23. தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் அவர்களுக்கு அறிவித்தார் .................................2
24. நீதியின் கிரீடம் ..............................................................................1

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள்...................................................4

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். 3 தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 44

**50% — 22 70% — 31 80% — 35.**

# பாடம் 10: சாட்சி பகர்தலும் ஆத்தும ஆதாயம் செய்தலும்

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)

1. கிறிஸ்தவர்கள் ஒரு கொள்கைக்கோ ஒரு அனுபவத்திற்கோ அல்லது ஒரு சபைப் பிரிவிற்கோ சாட்சிகளாக இருக்க அல்ல **கிறிஸ்துவுக்கு மட்டுமே** சாட்சிகளாக இருக்க அழைக்கப்பட்டுள்ளனர். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்." (யோவான் 12:32) இயேசுவை உயர்த்திக் காட்டுவதே கிறிஸ்தவ சாட்சியாகும். இது பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே மாத்திரம் சாத்தியமாகும்.

4. அப். 1:21–22, மற்றும் 4:33 உடன் ஒத்துப் பார்க்கவும். எல்லோருடைய சாட்சியின் மையம் கிறிஸ்து மரித்தோரிலிருந்து **உயிர்த்தெழுந்ததேயாகும்**.

5–6. பவுலுடைய சாட்சி கிறிஸ்தவர்களுக்கு முன்மாதிரியானதாக உள்ளது. இது அவரது சொந்த அனுபவத்தினடிப்படையிலானது. கிறிஸ்துவை சுட்டிக்காட்டுவதாகவும் வேதவசனங்களை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது.

7–8. உண்மையான சொந்த சாட்சியே பயனுள்ளதாகவும் அநேகரை கிறிஸ்துவண்டை வழி நடத்துகிறதாகவும் அமைகிறது.

9–10. பிற்காலத்தில் அப்போஸ்தலருக்கெல்லாம் தலைவனாகவும் பிரதான பிரசங்கியாராகவும் பேதுரு விளங்கினாலும் அவரது சகோதரனாகிய அந்திரேயாதான் கிறிஸ்துவண்டை முதலாவது வந்தார். அவர்தான் பேதுருவை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தினார். பிறகு பிலிப்புவும் இதே போல் நாத்தான்வேலை இயேசுவிடம் நடத்தினார். எனவே அப்போஸ்தலர். தனிப்பட்ட ஆத்துமாக்களை இயேசுவிடம் வழி நடத்துவதற்கு முன்மாதிரியாயிருந்தனர்.

11. ஒருவர் இவ்வாறு கூறினார்: "அனுபவசாலிக்கு தர்க்கம் செய்பவனது தயவு தேவையில்லை".

12. கிறிஸ்தவர்களின் உரையாடல், காரியங்களை சாதிக்கக்கூடியதாகவும்

தேவனை மகிமைப்படுத்துவதாகவும் தன்னுடைய விசுவாசத்தையும் மற்றவர்களின் விசுவாசத்தையும் கட்டுவதாகவும் இருக்க வேண்டும்.

13–16, 19. கிறிஸ்தவ சாட்சிக்கு மிகப்பெரிய தடை "பயத்தின் ஆவியாகும்". இந்த ஆவி தேவனிடத்திலிருந்து வருவதல்ல என்று வேதம் திட்டமாகக் கூறுகிறது. எனவே ஒரு கிறிஸ்தவன் இந்தக் கண்ணியில் விழாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கான பரிகாரம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதேயாகும்.

17(2). தேவனுக்குக் கீழ்ப்படிவது மனிதனுக்குக் கீழ்ப்படிவது ஆகிய இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும் சூழ்நிலை ஏற்படும்போது பேதுரு, யோவான் ஆகியோர் கூறிய இந்தக் கூற்று இன்றைக்கும் நமக்குப் பயனுள்ளதாக உள்ளது.

18. சாட்சியைத் தடை செய்யும் தடுப்புச் சுவரை உடைத்தெரிய கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய ஆயுதம் ஜெபமாகும்.

20–23. பழைய ஏற்பாட்டில் எசேக்கியேலைப் போல புதிய ஏற்பாட்டில் பவுல், தான் யாருக்கெல்லாம் சாட்சியாயிருக்க சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அவர்களுக்கு சாட்சியாக இல்லாவிட்டால் அதற்காக தேவனிடத்தில் கணக்கொப்புவிக்க வேண்டுமென்று உணர்ந்திருந்தார். மேலும், தான் "எதையும் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் அறிவிக்க வேண்டுமென்றும்" அறிந்திருந்தார். இதனையே தேவன் எல்லாக் கிறிஸ்தவர்களிடமும் எதிர்பார்க்கிறார்.

# பாடம் 11

# செழிப்பான வாழ்வு குறித்த தேவனுடைய திட்டம்

***முன்னுரை:***

அவரை நம்பி அவருக்கு ஊழியம் செய்பவர்களை ஆசீர்வதிக்கவும் செழிப்படையச் செய்யவும் வேதாகமம் முழுவதிலும் தேவன் வாக்குத்தத்தங்களை அருளியிருக்கிறார். பொருள் சம்பந்தமான நிதிநிலைமை குறித்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள தேவன் நமக்குக் கொடுத்த விசுவாசத்தினடிப்படையிலான விதிமுறையைப் பின்பற்ற நாம் கற்றுக்கொள்ள வேண்டும். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்;. . . ." (லூக். 6:38) பணமாகவோ உற்பத்திப் பொருட்களாகவோ நமக்குக் கிடைக்கும் ஒவ்வொன்றிலும் நாம் பத்தில் ஒரு பாகத்தை தனியாக ஒதுக்கி வைக்க வேண்டும். இதற்கு தசமபாகம் என்று பெயர். இந்தத் தசமபாகத்திற்கு மேலாக காணிக்கைகளையும் நாம் கொண்டு வரவேண்டும். விசுவாசத்தோடு இதனை நாம் செய்யும் போது தேவன் அபரிமிதமாக நம்மை ஆசீர்வதிப்பது மட்டுமல்லாது நம்முடைய தேவைகளையும் சந்திக்கிறார்.

**மனப்பாடப்பகுதி: மத். 6:33** மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும். ☐

(இதற்கு முந்தைய மனப்பாட வசனங்களையும் திரும்பிப் பார்க்கவும்)

## அ. விருத்தியடைந்த தேவனுடைய ஊழியக்காரர்கள் குறித்த உதாரணங்கள்

1. ஆபிரகாமுக்கு தேவன் வெற்றியைக் கொடுத்த பின்பு தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் என்ன கொடுத்தார்? (ஆதி. 14:19–20)

.............................................................................................................

2. இதற்குப் பதிலாக தேவன் ஆபிரகாமுக்கு என்ன செய்தார்? (ஆதி. 24:1)

.............................................................................................................

3. தேவன் யாக்கோபுக்கு எந்த 3 காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்பினார்? (ஆதி. 28:20)
(1) ......................................................................................
(2) ......................................................................................
(3) ......................................................................................

4. அதற்குப் பதிலாக தேவனுக்கு என்ன தருவதாக யாக்கோபு வாக்குக்கொடுத்தார்? (ஆதி. 28:22)
......................................................................................

5. அதற்கு ஈடாக தேவன் யாக்கோபுக்கு என்ன செய்தார்? (ஆதி. 33:11)
......................................................................................

6. யோசேப்பு எத்தகைய மனிதன்? (ஆதி. 39:2)
......................................................................................

7. யோசேப்பு விருத்தியடைந்ததற்குக் காரணம் என்ன? (ஆதி. 39:2, 23)
......................................................................................

8. தனது நியாயப்பிரமாணம் குறித்து எந்த 3 காரியங்களை யோசுவாவுக்கு தேவன் கட்டளைகளாகக் கொடுத்தார்? (யோசுவா 1:8)
(1) ......................................................................................
(2) ......................................................................................
(3) ......................................................................................

9. இந்த மூன்று காரியங்களையும் செய்யும் போது யோசுவாவுக்கு தேவன் என்ன செய்வதாக வாக்குப் பண்ணினார்? (யோசுவா 1:8)
......................................................................................

10. தேவனுடைய நியமங்களையும் நியாயங்களையும் கைக்கொள்ளும்போது என்ன நடக்கும் என்று சாலொமோனுக்கு தாவீது வாக்குக்கொடுத்தார்? (1 நாளா. 22:13)
......................................................................................

11. உசியா தேவனைத் தேடினபோது தேவன் அவனுக்கு என்ன செய்தார்? (2 நாளா. 26:5)
......................................................................................
......................................................................................

12. எசேக்கியா தேவனை முழு இருதயத்தோடும் தேடினபோது அவனுக்கு என்ன நடந்தது? (2 நாளா. 31:21; 32:30)
......................................................................................

## ஆ. விருத்தியடைவது குறித்த தேவனுடைய வாக்குத்தத்தங்களும் அதற்கான நிபந்தனைகளும்

13. "அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" என்று ஒரு மனிதனைக் குறித்து தேவன் கூறுகிறார் (சங். 1:3)

______________________________

அ. அந்த மனிதன் செய்யக்கூடாத 3 காரியங்கள் எவை? (சங். 1:1)
(1) ______________________________
(2) ______________________________
(3) ______________________________

ஆ. அந்த மனிதன் செய்ய வேண்டிய 2 காரியங்கள் யாவை? (சங். 1:2) (1) ______________________________
(2) ______________________________

14. எந்த 2 காரியங்களில் தன்னை இஸ்ரவேல் மக்கள் வஞ்சித்ததாக தேவன் கூறுகிறார்? (மல். 3:8)
(1) ______________ (2) ______________

15. தேவனை வஞ்சித்ததினால் இஸ்ரவேல் மக்களுக்கு நேர்ந்தது என்ன? (மல். 3:9)

______________________________

16. எப்படி தன்னை "சோதிக்குமாறு" தேவன் கூறுகிறார்? (மல். 3:10)

______________________________

17. அப்படிச் செய்யும்போது இஸ்ரவேல் மக்களுக்கு என்ன செய்வதாக தேவன் வாக்குக் கொடுக்கிறார் (மல். 3:10)

______________________________

18. மற்றக் காரியங்களுக்கு முன்பதாக எந்த 2 காரியங்களைத் தேட வேண்டுமென்று கிறிஸ்து கூறுகிறார்? (மத். 6:33)
(1) ______________ (2) ______________

19. இதனால் கிறிஸ்துவின் எந்த வகையான வாக்குத்தத்தம் நமக்குக் கிடைக்கிறது? (மத். 6:33)

______________________________

20. நாம் கொடுக்கும்போது எந்த அளவினால் நமக்குத் திருப்பித் தரப்படுகிறது? (லூக். 6:38)

______________________________

21. தேவனுக்காக ஒவ்வொரு கிறிஸ்தவனும் எந்த அளவில் கொடுக்க

வேண்டுமென்று பவுல் அறிவுறுத்துகிறார்? (1 கொரி. 16:2)

................................................................................................

22. கிறிஸ்து எதற்காகத் தரித்திரரானார்? (2 கொரி. 8:9)

................................................................................................

23. எப்படிப்பட்ட மனிதனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்? (2 கொரி. 9:7)

................................................................................................

24. நாம் அதிகமாக அறுவடை பெற வேண்டுமெனில் முதலில் நாம் என்ன செய்ய வேண்டும்? (2 கொரி. 9:6)

................................................................................................

25. தேவனுடைய கிருபை நம்மில் பெருகும் போது எந்த இரு காரியங்கள் நமக்குக் கிடைக்கின்றன? (2 கொரி. 9:8)
(1) ................................................................................................
(2) ................................................................................................

26. எந்த வகையான மக்களுக்கு தேவன் நன்மையைத் தராமலிருக்கமாட்டார்? (சங். 84:11)

................................................................................................

27. யாருக்கு எந்த நன்மையும் குறைவுபடாமலிருக்கும்? (சங். 34:10)

................................................................................................

28. எதில் தேவன் மகிழ்ச்சியடைகிறார்? (சங். 35:27)

................................................................................................

**மனப்பாடப்பகுதி: மத். 6:33**

இந்த வசனத்தை மனப்பாடமாக இங்கே எழுதவும்

................................................................................................
................................................................................................
................................................................................................
................................................................................................

**இந்தப் பாடத்தின் எல்லா கேள்விகளுக்கும் விடை எழுதி முடிக்கும் வரை அடுத்த பக்கத்திற்குத் திருப்ப வேண்டாம்.**

# பாடம் 11: செழிப்பான வாழ்வு குறித்த தேவனுடைய திட்டம்

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | எல்லாவற்றிலும் தசமபாகம் | 1 |
| 2. | தேவன் ஆபிரகாமை எல்லாவற்றிலும் ஆசீர்வதித்தார் | 1 |
| 3. | (1) தன்னோடு இருக்க வேண்டும் | 1 |
| | (2) செல்லுமிடத்தில் அவரைக் (யாக்கோபை) காப்பாற்ற வேண்டும் | 1 |
| | (3) உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் கொடுக்க வேண்டும் | 1 |
| 4. | கர்த்தர் தனக்குத் தரும் எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்துவதாக | 1 |
| 5. | தேவன் யாக்கோபுக்கு அநுக்கிரகம் செய்தார் | 1 |
| 6. | அவன் காரியசித்தியுள்ளவனானான் (விருத்தி அடைந்தான்) | 1 |
| 7. | கர்த்தர் யோசேப்போடே இருந்து அவன் செய்வதை வாய்க்கப்பண்ணினார் | 2 |
| 8. | (1) உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக | 1 |
| | (2) இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டு | 1 |
| | (3) அதில் எழுதியிருக்கிறவைகளின்படி செய்ய கவனமாயிரு | 1 |
| 9. | அப்பொழுது உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், புத்திமானாய் நடந்துகொள்ளுவாய் | 2 |
| 10. | நீ பாக்கியவானாய் இருப்பாய் | 1 |
| 11. | தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார் | 1 |
| 12. | அவன் செய்த எல்லாக் காரியங்களும் சித்தி பெற்றன (தேவன் வாய்க்கும்படி செய்தார்) | 1 |
| 13. | (அ) (1) துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமல் | 1 |

(2) பாவிகளுடைய வழியில் நில்லாமல் ............................................1
(3) பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமல்..................1
(ஆ) (1) கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து .......................1
(2) இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்க வேண்டும் ............................................................................................1

14. (1) தசமபாகம் (2) காணிக்கை ...................................................2
15. தேசம் சபிக்கப்பட்டது ..............................................................1
16. தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையில் கொண்டுவந்து ................................................................................................1
17. வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப்பண்ணுவேன் ....................................................................2
18. (1) தேவனுடைய இராஜ்யம் (2) அவருடைய நீதி ........................2
19. மற்ற எல்லாக் காரியங்களும் கூடக் கொடுக்கப்படும்..................1
20. எந்த அளவில் கொடுக்கிறோமோ அந்த அளவில் .....................1
21. தேவன் அவனவனை ஆசீர்வதித்த அளவின்படி ........................1
22. அவருடைய தரித்திரத்தினாலே நாம் ஐசுவரியவான்களாகும்படி ................................................................................................1
23. உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் ....................................1
24. அதிகமாய் விதைக்க வேண்டும் .................................................1
25. (1) எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணம் ..........................1
(2) சகலவித நற்கிரியைகளிலும் பெருகும் நிலை ........................1
26. உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு ..................................................1
27. கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ..................................................1
28. தமது ஊழியக்காரரின் சுகத்தில் (செழிப்பில்) ...........................1

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் .......................................4

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். மூன்று தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 46

**50% — 23 70% — 32 80% — 37.**

# பாடம் 11: செழிப்பான வாழ்வு குறித்த தேவனுடைய திட்டம்

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)

1–5. "தசமபாகம்" செலுத்தும் பழக்கம் மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து ஆரம்பிக்கவில்லை. வேதத்தில் முதன் முதலாக தசமபாகம் செலுத்தியவர் ஆபிரகாம் ஆவார். ரோ. 4:11-12இல் "... நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கும்படிக்கும், அந்த அடையாளத்தைப் பெற்றான்." என்று கூறப்பட்டுள்ளது. தசமபாகம் கொடுக்கும் விசுவாசிகளனைவரும் "ஆபிரகாமின் அடிச்சுவடுகளில் நடப்பவர்களாகும்". ஆபிரகாம் தசமபாகம் செலுத்திய ஆசாரியன் மெல்கிசேதேக் ஆவார். எபி. 5, 6, 7, அதிகாரங்களில் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி வந்த பிரதான ஆசாரியன் என்று கிறிஸ்துவைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதன்படி அவரை விசுவாசிக்கிறவர்களிடமிருந்து தேவன் தசமபாகத்தைப் பெற்றுக் கொள்ளுகிறார்.

தசமபாகம் செலுத்துவதன் மூலம் ஆபிரகாமும் யாக்கோபும் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர். ஆதி. 32:10இல் யாக்கோபு இவ்வாறு கூறுகிறார்: "... நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்து போனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்". யாக்கோபு தேவனுக்கு தசமபாகம் செலுத்த ஆரம்பித்த போது அவரது கையில் ஒரு கோலைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால் இருபது ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு பெரிய ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பத்திற்குத் தலைவனாக மாறுகிறார்.

6–7. எந்த ஒரு சூழ்நிலையும் தேவன் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றத் தடையாக இருக்க முடியாது. சிறைச்சாலையில் கூட யோசேப்பு ஆசீர்வதிக்கப்பட்டிருந்தான். அதே போல் எகிப்துக்கு அதிபதியாய் மாறின போதும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தான். யோசேப்பு பெற்ற ஆசீர்வாதம் அவரது குணநலன்களின் மூலமாயும் தேவனோடு அவன் கொண்டிருந்த உறவின் மூலமாயும் கிடைத்ததாகும்.

8–9. தேவனுடைய மக்களை "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்கு"

நடத்திச் செல்ல யோசுவா அழைக்கப்பட்டார். இன்று கிறிஸ்தவர்கள் "நாட்டின் வாக்குத்தத்தங்களுக்குச்" செல்ல அழைக்கப்படுகிறார்கள். அப்பொழுதும் சரி இப்போதும் சரி இதற்கான நிபந்தனைகள் ஒன்றே. தியானம் செய்வது குறித்த முக்கியத்துவத்தைக் கவனியுங்கள். கேள்வி 13 (ஆ) (2) உடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

10-12. தாவீது முதல் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலம் வரைக்கும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து தேவனுடைய ஆலயத்தில் பணிவிடை செய்த எல்லா யூதா தேசத்து ராஜாக்களும் செழிப்பானவர்களாயிருந்தார்கள்.

13. சங். 1:1-3ல் ஏதோ குறிப்பிட்ட ஒரு சரித்திர நாயகனைப் பற்றிக் கூறப்படவில்லை. இந்த நிபந்தனைகளை நிறைவேற்றும் எல்லா விசுவாசிகளுக்கும் இது பொருந்தும்.

14-15. தேவனுடைய மக்கள் கர்த்தருக்குக் கொடுப்பதில் உண்மையாயிராவிட்டால் நாட்டுக்கே அது சாபத்தைக் கொண்டுவரும். இந்தக் கூற்று இன்றும் உண்மையானது.

16-21. தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்பட்ட நீதி 'விசுவாசமே' "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" (ரோ. 14:23). எபி. 11:6டன் ஒத்துப்பார்க்கவும். இந்த நிலையானது நமது பண விஷயங்களுக்கும் மற்றக் காரியங்களுக்கும் பொருந்தும்.

22. வேதத்தின்படி வறுமை பாவமே. உபா. 28:15-68ல் தேவனுடைய கட்டளையை மீறும்போது வரும் சாபங்கள் குறித்துக் கூறப்பட்டுள்ளது. வசனம் 48ல் "சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும்,. . . சத்துருக்களைச் சேவிப்பாய்; . . ." என்று வாசிக்கிறோம். இது வறுமையைக் குறிக்கும். கிறிஸ்து சிலுவையில் தாமே இந்த எல்லா சாபத்தையும் ஏற்றுக் கொண்டார் (கலா. 3:13-14). அவர் தாகமாயிருந்தார், பசியாயிருந்தார், நிர்வாணமானார், எல்லாவற்றிலும் குறைவுபட்டார். விசுவாசிகள் தேவனுடைய பரிபூரணத்தையும் தேவைகளில் நிறைவையும் பெற்றுக்கொள்ளவே இவ்வாறு அவர் நமக்காக ஆனார். (பிலி. 4:19 பார்க்கவும்).

23. "உற்சாகமாய்" என்றால் "சத்தமிட்டு மகிழ்ந்து" என்று பொருள்.

24. ஒரு விசுவாசி எவ்வாறு கவனமாய், — ஞானமாய் எந்த நிலம் நல்ல பலன் கொடுக்குமோ அங்கு விதைப்பதைப் போல தேவனுடைய ராஜ்யத்திற்கு நல்ல பலன் கிடைக்கத்தக்கதாய் கிறிஸ்தவர்கள் தேவனுக்குக் கொடுக்க வேண்டும்.

26–28. தமக்குக் கீழ்ப்படிந்து விசுவாசிக்கும் மக்களுக்கு தேவன் விரும்பிக் கொடுப்பது செழிப்பான வாழ்வு ஆகும்.

## பாடம் 12

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

*முன்னுரை:*

இயேசு கிறிஸ்து சுமார் 1900 வருடங்களுக்கு முன் இந்த உலகத்தில் அவதரித்த பொழுது, அவரது முதல் வருகையைக் குறித்து முன்னுரைக்கப்பட்ட அனைத்துத் தீர்க்கதரிசனங்களும் நிறைவேறின. அவர் இந்த உலகத்தை விட்டுப் பரலோகத்திற்குச் சென்ற பொழுது மீண்டும் இந்த உலகத்துக்கு நிச்சயமாக வரப்போவதாக அவரது சீஷர்களிடம் கூறிச் சென்றார். இயேசு கூறிய இந்த வார்த்தை அல்லாது வேதாகமம் முழுவதும் அவரது இரண்டாம் வருகையைக் குறித்த அநேகத் தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சொன்னால் அவரது முதல் வருகையை விட அவரது இரண்டாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் அதிகம். அவரது முதல் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் யாவும் அப்படியே நிறைவேறினபடியால் அவரது இரண்டாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்களும் அவ்வாறே நிறைவேறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்தப் பாடத்தில் கூறப்பட்டுள்ள வேத வாக்கியங்கள் யாவும் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்த தெளிவான வாக்குத்தத்தங்களைப் பற்றியனவாகும். மேலும் அந்த சமயத்தில் கிறிஸ்தவர்களுக்கு என்ன நேரிடும் என்பது குறித்தும் அவரது வருகைக்காக கிறிஸ்தவர்கள் எப்படி தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது குறித்தும் தெளிவாக அவைகள் எடுத்துரைக்கும்.

**மனப்பாடப்பகுதி: லூக். 21:36** மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும். ☐

(முந்தைய மனப்பாடப்பகுதிகளைத் தினமும் திரும்பப் பார்க்கவும்)

### அ. கிறிஸ்து திரும்ப வருவது குறித்த வாக்குத்தத்தங்கள்

1. இயேசு என்ன காரணத்திற்காக தனது சீடர்களை விட்டுப் பிரிந்து செல்வதாக் கூறுகிறார்? (யோவான். 14:2)

 ..........................................................................................................

2. தமது சீஷர்களை விட்டுப் பிரிந்து செல்லும்போது அவர்களுக்கு கிறிஸ்து என்ன வாக்குத்தத்தத்தை அளித்தார்? (யோவான். 14:3)

 ..........................................................................................................

3. கிறிஸ்து பரலோகத்திற்குச் சென்ற பின்பு தேவ தூதர்கள் என்ன வாக்குத்தத்தம் செய்தனர்? (அப். 1:11)

..............................................................................................

..............................................................................................

4. அனைத்துக் கிறிஸ்தவர்களும் எதிர்பார்க்கும் "மகிமையின் நம்பிக்கை" எது? (தீத். 2:13)

..............................................................................................

5. கிறிஸ்து திரும்ப வரும்போது கேட்கும் 3 சத்தங்கள் என்ன? (1 தெச. 4:16)

(1) .............................................. (2) ..............................................

(3) ..............................................................................................

## ஆ. கிறிஸ்தவர்களுக்கு என்ன நேரிடும்

6. கிறிஸ்து திரும்ப வரும்போது கிறிஸ்தவர்கள் அனைவரும் இறந்து விடுவார்களா? (1 கொரி. 15:51)

..............................................................................................

7. அந்தச் சமயத்தில் இறந்துபோன கிறிஸ்தவர்களுக்கு என்ன நேரிடும்? (1 தெச. 4:16)

..............................................................................................

8. கிறிஸ்தவர்களாக உயிரோடு இருப்பவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் ஏற்படும் 2 காரியங்கள் என்ன?

(1).(1 கொரி. 15:51) ..............................................................................................

..............................................................................................

(2) (1 தெச. 4:17) ..............................................................................................

..............................................................................................

9. இந்தக் கிறிஸ்தவர்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவார்களா? (1 தெச. 4:17)

..............................................................................................

10. நாம் தேவனை முகமுகமாய் சந்திக்கும்போது நம்மில் ஏற்படும் மாற்றம் என்ன? (1 யோவான் 3:2)

..............................................................................................

11. இந்த மாற்றத்தினால் கிறிஸ்தவனின் உடல் எவ்வாறு காட்சியளிக்கும்? (பிலி. 3:21)

..............................................................................................

12. உயிர்த்தெழுந்த கிறிஸ்தவனின் உடலைப் பற்றிக் கூறும்போது பவுல்

எந்த 2 வார்த்தைகளை உபயோகிக்கிறார்? (1 கொரி. 15:53)
(1) ........................ (2) ........................

13. அதன் பிறகு கிறிஸ்தவர்கள் பங்குபெறும் விருந்தைப் பற்றி வேதம் எவ்வாறு விவரிக்கிறது? (வெளி. 19:9)
........................

## இ. கிறிஸ்தவர்கள் எவ்வாறு ஆயத்தப்பட வேண்டும்

14. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு முன்பதாக அவருடைய மனைவி என்ன செய்வாள்? (வெளி. 19:7)
........................

15. அவள் என்ன வகையான உடை உடுத்தியிருப்பாள்? (வெளி. 19:8)
........................

16. அந்த மெல்லிய வஸ்திரம் எதைக் குறிக்கிறது? (வெளி. 19:8)
........................

17. 10 கன்னிகைகளில் கலியாணத்திற்குள் பிரவேசித்தவர்கள் யார்? (மத். 25:10)
........................

18. ஆண்டவர் மீண்டும் திரும்ப வரும்போது அவரைச் சந்திப்பேன் என்று நம்பிக்கையோடு இருப்பவன் அதற்காக எவ்வாறு ஆயத்தப்பட வேண்டும்? (1 யோவான் 3:3)
........................

19. இரட்சிப்பை அருளும்படி கிறிஸ்து இரண்டாம் தரம் யாருக்காக வெளிப்படுவார்? (எபி. 9:28)
........................

20. தேவனைச் சந்திக்க விரும்புகிறவர்கள் எந்த 2 காரியங்களைச் செய்ய வேண்டும்? (எபி. 12:14)
(1) ........................ (2) ........................

21. கிறிஸ்துவின் வருகையின்போது கிறிஸ்தவர்களிடம் காணப்படவேண்டிய 3 தகுதிகள் என்ன? (2 பேதுரு 3:14)
(1) ........................ (2) ........................ (3) ........................

22. கிறிஸ்து தமது வருகை திடீரென இருக்கும் எனக் கூறும் போது என்ன பதத்தை உபயோகிக்கிறார்? (வெளி. 3:3; 16:15)
........................

23. கிறிஸ்துவின் வருகையைக் குறித்த நாளையும் நாழிகையையும் அறிந்தவர் யார்? (மாற். 13:32)
..........................................................................................................

24. அவரது வருகைக்காக கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று கிறிஸ்து எச்சரிக்கிறார்? (மாற். 13:35–37)
..........................................................................................................

25. விழித்திருப்பதல்லாது கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று கிறிஸ்து கூறுகிறார்? (லூக். 21:36)
..........................................................................................................

26. ஆயத்தமாவதற்கு கிறிஸ்தவர்கள் எந்த 3 காரியங்களிலிருந்து விலகியிருக்க வேண்டுமென்று கிறிஸ்து எச்சரிக்கிறார்? (லூக். 21:34)
(1) .................................. (2) ................................ (3) ..............................

**மனப்பாடப்பகுதி: லூக். 21:36**

இந்த வசனங்களை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

**இந்தப் பாடத்தின் எல்லா கேள்விகளுக்கும் விடை எழுதி முடிக்கும் வரை அடுத்த பக்கத்திற்குத் திருப்ப வேண்டாம்.**

# பாடம் 12: கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | அவர்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம் செய்வதற்காகப் போகிறார் | 1 |
| 2. | திரும்பி வந்து அவர்களை அவரிடத்தில் சேர்த்துக் கொள்ளுவார் | 2 |
| 3. | இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் | 2 |
| 4. | மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலை | 2 |
| 5. | (1) ஆரவாரம் ........ (2) பிரதான தூதனுடைய சத்தம் | 2 |
| | (3) தேவ எக்காளம் | 1 |
| 6. | இல்லை | 1 |
| 7. | கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் | 1 |
| 8. | (1) மறுரூபமாக்கப்படுவார்கள் | 1 |
| | (2) கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் | 2 |
| 9. | இல்லை | 1 |
| 10. | அவருக்கு ஒப்பாயிருப்போம் | 1 |
| 11. | தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் | 1 |
| 12. | (1) அழியாமை ........ (2) சாவாமை | 2 |
| 13. | ஆட்டுக்குட்டியானவரின் (கிறிஸ்துவின்) கலியாண விருந்து | 1 |
| 14. | அவள் தன்னை ஆயத்தம்பண்ணினாள் | 1 |

15. சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் ............................1
16. பரிசுத்தவான்களின் நீதி ..................................................1
17. ஆயத்தமாயிருந்தவர்கள் ..................................................1
18. அவர் (கிறிஸ்து) சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான் ..............................................2
19. தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு ..........................1
20. (1) யாவரோடும் சமாதானமாயிருக்க வேண்டும் ..........................
(2) பரிசுத்தமாயிருக்க வேண்டும் ..............................................2
21. (1) சமாதானமுள்ளவர்களாய் ...... (2) கறையற்றவர்களாய் ......
(3) பிழையற்றவர்களாய் ..........................................................3
22. "திருடனைப்போல" ...................................................................1
23. பிதாவாகிய தேவன் ................................................................1
24. விழித்திருக்க வேண்டும் ..........................................................1
25. எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் ........................................1
26. (1) பெருந்தீனி ............. (2) குடிவெறி ....................................2
(3) லௌகீகக் கவலை ....................................................................1

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ..........................................4

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். மூன்று தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 44

**50% — 22 70% — 31 80% — 35.**

# பாடம் 12: கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

## சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)

1–5. "இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்". (மத். 18:16). கிறிஸ்து திரும்ப வருவது குறித்து 3 சாட்சிகள் உள்ளன. (1) கிறிஸ்து தாமே (யோவான் 14:3); (2) தேவதூதர்கள் (அப். 1:11); (3) அப்போஸ்தலனாகிய பவுல் (1 தெச. 4:16). கிறிஸ்துவின் வருகையின் முக்கியத்துவத்தைப் பாருங்கள்: "இந்த (அதே) இயேசுவானவர்..." "கர்த்தர் தாமே இந்த" "ஆசீர்வாதமான நம்பிக்கை" தான் கிறிஸ்தவ வாழ்வின் நோக்கமாகும்.

5(1): "ஆரவாரம்" என்பது கர்த்தரிடத்திலிருந்தே வெளிப்படும். ஏனெனில் அவரது சத்தம் மரித்தோரை எழுச் செய்யும் (யோவான் 5:28–29 பார்க்கவும்). (2) பிரதான தூதன் என்பது காபிரியேலைக் குறிப்பதாகும். அவருடைய முக்கியப் பணி: தேவன், மனிதர்களின் காரியங்களில் ஈடுபாடு கொள்வது குறித்து அறிவிப்பதாகும். (லூக். 1:19,26) (3) எக்காள சத்தம் தேவனுடைய பிள்ளைகளை ஒன்று சேர்க்கப் பயன்படும் (எண். 10:2-3).

6. "நித்திரை" என்பது "மரணத்தைக்" குறிக்கும் (அப். 7:60, 1 கொரி. 11:30 பார்க்கவும்). இந்த வார்த்தை குறிப்பாக கிறிஸ்தவர்களின் மரணத்தைக் குறித்து உபயோகப்படுத்தப் படுகிறது. ஏனெனில் உயிர்த்தெழுதலின்போது அவர்கள் எழுந்திருப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பதனால் ஆகும்.

6–8. கீழ்க்கண்ட ஒழுங்கின்படி காரியங்கள் நடைபெறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது: (1) இறந்த கிறிஸ்தவர்கள் மகிமையான சரீரத்தோடு எழுந்திருப்பார்கள். (2) உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்களும் அதே போல் நொடிப்பொழுதில் மகிமையான சரீரத்தோடு மறுரூபமாக்கப்படுவார்கள். (3) எல்லாக் கிறிஸ்தவர்களும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

10–12. கிறிஸ்தவனின் மகிமையான சரீரம் கிறிஸ்துவின் மகிமையின் சரீரத்திற்கொப்பாக இருக்கும். (இது குறித்து இன்னும் விவரமாக

அறிய விரும்பினால் "மரித்தோரின் உயிர்த்தெழுதல்" என்ற எனது புத்தகத்தின் எட்டாவது அத்தியாயத்தைப் படிக்கவும்).

13. மத். 8:11, 26:29 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

14-21, 24–25. கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப்பட விரும்பும் கிறிஸ்தவர்கள் ஊக்கத்தோடே அதற்காக தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். வெளி. 19:8ல் கூறப்பட்டுள்ள "நீதி என்பது பரிசுத்தவான்களுடைய நீதியான செயல்களைக் குறிக்கும்". விசுவாசத்தின் மூலமாய் கிறிஸ்துவினுடைய நீதியை நடைமுறைப்படுத்துவதாகும். பிலி. 2:12–13 பார்க்கவும். "தேவனே தமது தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்". இதற்குத் தேவையானவற்றை கீழ்க்கண்டவாறு சுருக்கமாகப் பட்டியலிடலாம்: (1) சுத்தம் (கரையில்லாத) (1 யோவான் 3:3, 2 பே. 3:14); (2) பரிசுத்தம் (எபி. 12:14); (3) சமாதானம் (=எல்லா மனிதரோடும் நல்லுறவு) (எபி. 12:14, 2 பே. 3:14); (4) குற்றமில்லாமை (=கிறிஸ்தவனின் கடமைகளில் உண்மையாயிருத்தல்) (2 பே. 3:14); (5) எதிர்பார்த்து காத்திருத்தல் (எபி. 9:28); (6) விழித்திருத்தல் (மாற். 13:37); (7) ஜெபத்தில் தரித்திருத்தல் (லூக். 21:36).

22. ஒரு "திருடனைப்போல" கிறிஸ்துவின் வருகை இருக்கும். ஆனால் அவருடையதை அவர் எடுத்துக்கொள்ளுவார். அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 கொரி. 15:23).

23. அந்த நேரம் வரும்போது பிதாவானவர் குமாரனிடம் கூறுவார். உடனே பரலோகம் செயல்படத்துவங்கும்.

26. (1) "குடிபோதைக்கு" முன்பதாக "பெருந்தீனியை" கிறிஸ்து எப்பொழுதும் கண்டிக்கிறார்.

(3) லூக். 17:27–28ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும். இங்கே குறிப்பிடப்பட்டவைகள் தாமே பாவமானவைகளல்ல. ஆனால் அவற்றில் ஈடுபடும்போது பாவமாகிறது.

# பாடம் 13

# கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்கள்

**முன்னுரை:**

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பதாக உலகத்தில் நடக்கும் சில விசேஷமான நிகழ்ச்சிகள் அவருடைய வருகையைக் குறித்து நம்மை எச்சரிக்கும் காரியங்களாக இருப்பதாக வேதம் கூறுகிறது. இந்தப்பாடத்தில் சில முக்கியமான அடையாளங்களைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. அவைகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன: (அ) **மதசம்பந்தமான அடையாளங்கள்** (ஆ) **உலகத்தில் நடைபெறும் அடையாளங்கள்.** ஒவ்வொரு பிரிவின் கீழும் அடையாளங்களுக்கான வேத வசனங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடத்தில் நீங்கள் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்ய வேண்டும்:

1. (அ) பிரிவிலுள்ள அடையாளங்களைப் படியுங்கள்
2. (அ) பிரிவின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேத வசனங்களையும் எடுத்துப் படியுங்கள்.
3. ஒவ்வொரு அடையாளத்திற்கும் கீழே உள்ள கோடிட்ட இடத்தில் அந்த அடையாளம் குறித்துக் கூறப்பட்டுள்ள வசனம் உள்ள வேத பகுதியைக் குறிக்கவும்.
4. இதே போல் (ஆ) பிரிவையும் செய்யுங்கள்.
5. ஒவ்வொரு அடையாளத்தின் முடிவிலும் ஒரு கட்டம் (☐) இருப்பதைப் பார்க்கிறீர்கள். இந்தப் பாடம் முழுவதும் முடித்த பின்பு மீண்டும் ஒருமுறை இந்த அடையாளங்களைப் படித்துப் பார்க்கவும். அந்த அடையாளங்கள் இவ்வுலகத்தில் நடைபெற்று விட்டதா என்பதைக் குறிக்கவும்.

(குறிப்பு: ஒவ்வொரு அடையாளத்திற்கும் பொதுவான ஒரு வேத வசனம் உள்ளது. அது மத். 24:9. இதில் மூன்று அடையாளங்களைப்

பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு அடையாளத்திற்கும் இவ்வசனத்தைக் குறிப்பிட வேண்டும்).

**மனப்பாடப்பகுதி: லூக். 21:28** மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும். ☐

(இதற்கு முந்தைய மனப்பாட வசனங்களையும் திரும்பிப் பார்க்கவும்)

## அ. மத சம்பந்தமான அடையாளங்கள்

1. உலக முழுவதும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுதல்
☐ ..........

2. உலகளாவிய சுவிசேஷப் பணி மற்றும் மிஷனரிப்பணி
☐ ..........

3. கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுதல் கொல்லப்படுதல் மற்றும் வெறுத்து ஒதுக்கப்படுதல் ☐
..........

4. கள்ளத் தீர்க்கதரிசிகள் ☐
..........

5. கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து வழுவிப்போதல் ☐
..........

6. பிசாசின் தந்திரங்களால் கிறிஸ்தவர்கள் வழிதப்பிப் போதல் ☐
..........

7. கிறிஸ்தவர்களுடைய அன்பு தணிந்து போதல் ☐
..........

**வேதாகமப் பகுதிகள்:**

மத். 24:12 1 தீமோ. 4:1 மத். 24:9 அப். 2:17 மத். 24:11 2 தெச. 2:3 மத். 24:14.

## ஆ. உலகத்தில் நடைபெறும் அடையாளங்கள்

8. உள்நாட்டுப் போர்கள் ☐
..........

9. பயணங்கள் அதிகரித்தல், அறிவுப் பெருக்கம் ☐

.................................................................................................

10. சீயோன் இயக்கத்தின் தோற்றம் இஸ்ரவேல் நாடு தோன்றுதல் ☐

.................................................................................................

11. எருசலேம் நகரம் புறஜாதியாரின் ஆதிக்கத்திலிருந்து மீட்கப்படுதல் ☐ ..........................................................

12. பரியாசக்காரர் கர்த்தருடைய வார்த்தையையும் கிறிஸ்துவின் வருகையையும் மறுத்துப் பேசுதல் ☐

.................................................................................................

13. மக்கள் உலகப் பிரகாரமான சந்தோஷத்தில் ஈடுபட்டு தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து மறந்துபோவது ☐

.................................................................................................

14. நீதி நியாயங்கள் மற்றும் நல்லொழுக்கங்கள் கெட்டுப்போதல் ☐

.................................................................................................

15. அக்கிரமம் அதிகமாகுதல் ("சட்டத்திற்குப் புறம்பாக நடத்தல்") ☐

.................................................................................................

16. பஞ்சங்களும் கொள்ளை நோய்களும் ☐

.................................................................................................

17. கொடிய நிகழ்ச்சிகள் அதிகரித்தல் மற்றும் அடிக்கடி பூமியதிர்ச்சிகள் ஏற்படுதல் ☐

.................................................................................................

18. துன்பங்கள், நாடுகளுக்குள் குழப்பங்கள் ☐

.................................................................................................

19. அந்திக்கிறிஸ்துக்கள் ☐

.................................................................................................

**வேதப் பகுதிகள்:**

மத். 24:12 லூக். 21:24 1 யோவான் 2:18 2 பே. 3:2–7 தானி. 12:4 மத். 24:7 லூக். 17:26–30 சங். 102:16 2 தீமோ. 3:1–5 லூக். 21:25.

***இந்தப் பாடத்தில் உள்ள எல்லாக் கேள்விகளுக்கும் முதலில் விடை எழுதவும், விடை எழுதி முடிக்கும் முன் அருகில் உள்ள பக்கத்தை மறைத்து வைக்கவும்.***

# பாடம் 13: கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்கள்

## சரியான பதில்களும் அதற்கான மதிப்பெண்களும்

| கேள்வி எண் | பதில்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | அப். 2:17 | 1 |
| 2. | மத். 24:14 | 1 |
| 3. | மத். 24:9 | 1 |
| 4. | மத். 24:11 | 1 |
| 5. | 2 தெச. 2:3 | 1 |
| 6. | 1 தீமோ. 4:1 | 1 |
| 7. | மத். 24:12 | 1 |
| 8. | மத். 24:7 | 1 |
| 9. | தானி. 12:4 | 1 |
| 10. | சங். 102:16 | 1 |
| 11. | லூக். 21:24 | 1 |
| 12. | 2 பே. 3:2–7 | 1 |
| 13. | லூக். 17:26–30 | 1 |
| 14. | 2 தீமோ. 3:1–5 | 1 |
| 15. | மத். 24:12 | 1 |
| 16. | மத். 24:7 | 1 |
| 17. | மத். 24:7 | 1 |
| 18. | லூக். 21:25 | 1 |
| 19. | 1 யோவான் 2:18 | 1 |

நீங்கள் எழுதிய மனப்பாடப்பகுதியை வேதத்தைக் கொண்டு சரிபாருங்கள்.

சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ........ 4

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். மூன்று தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

மொத்தம் 23

**50% — 11 70% — 16 80% — 18.**

## மூன்று முக்கியக் கேள்விகள்

இந்தப் பாடத்தில் கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கும் பத்தொன்பது விதமான அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன.

இதில் எத்தனை அடையாளங்கள் நிறைவேறினதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள்?

..........................................................................................

இவைகள் கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார் என்பதை எடுத்துக் காட்டுகின்றனவா?

..........................................................................................

அப்படியானால் நீங்கள் ஆயத்தமா?

..........................................................................................

# பாடம் 13: கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்கள்

### சரியான பதில்கள் குறித்த குறிப்புகள்

*(இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் முன்பக்கத்தில் உள்ள சரியான விடைகளின் எண்களைக் குறிக்கும்)*

1. "மாம்சமான யாவர்மேலும்" என்ற சொற்றொடர் முழு மனுக்குலத்தையும் குறிக்கிறது. தீர்க்கதரிசிகள் இந்த வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துவர். ஏசா. 40:5,6 எரே. 25:31, எசே. 21:4,5 பார்க்கவும். தேவனுடைய ஆவியானவரின் ஊற்றப்படுதலின் விளைவுகளை எல்லா மனிதகுலத்தின் பிரிவுகளும் உணர்வார்கள்.
2. தேவனுடைய ஆவியானவரின் ஊற்றப்படுதலின் விளைவே சுவிசேஷப் பணியும் மிஷனரிப் பணியுமாகும். இந்த அடையாளத்திற்குப் பின்பு வரும் விசேஷித்த குறிப்பு: "இதற்குப்பிறகு முடிவு வரும்" என்பதே.
3. இதற்கு முந்தைய நூற்றாண்டை விட இந்த நூற்றாண்டில் இரத்த சாட்சிகளாய் மரித்த கிறிஸ்தவர்கள் அதிகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. கம்யூனிசக் கொள்கைகளுடைய ஆட்சியில் கிறிஸ்தவர்கள் அதிகமாய் துன்புறுத்தப்பட்டனர்.

4–6. இந்தக் கடைசி நாட்களில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு உண்மையாயிராதபடி சாத்தான் மிகவும் தந்திரமாயும் வல்லமையாயும் கிரியை செய்கிறதை இந்த 3 அடையாளங்களும் வெளிப்படுத்துகின்றன. கடைசி நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் இரண்டு பிரிவுகள் மட்டுமே இருக்கும். அவைகள்: ஒன்று, "மணவாட்டி" (Bride) மற்றொன்று "வேசி". மணவாட்டி மணவாளனாகிய கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருப்பவள். வேசி கிறிஸ்துவுக்கு உண்மையாயிராமல் இருப்பவளாக வேதம் விவரிக்கிறது. வெளி. 17, 18 அதிகாரங்களைப் பார்க்கவும்.

7. இந்த அடையாளம் வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டுள்ள சபைகளில் கடைசியும் ஏழாவதுமான சபையாகிய லவோதிக்கேயா சபையைக் குறிக்கிறது. அவர்களின் பாவம் "குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருந்தது". (வெளி. 3:14–22) இந்த அன்புத் தாழ்ச்சிக்கு கீழ்க்கண்டவற்றில் அனைத்துமோ அல்லது ஏதாவது ஒரு காரணமாகவோ இருக்கலாம்: (1) அதிகமான உபத்திரவம்; (2) சாத்தானின் தந்திரம்; (3) பொருட்களின் நிறைவு.

8. இந்த நூற்றாண்டு இதற்கு முந்தைய நூற்றாண்டுகளைக் காட்டிலும் அதிகமான போர்கள், முக்கியமாக இரண்டு "உலகப் போர்"களைக் கண்டிருக்கிறது.

9. எப்படி இந்த இரண்டு காரியங்களும் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவும். அறிவின் வளர்ச்சி (அறிவியல்) பயணங்களை அதிகப்படுத்தியுள்ளது. அதே போல அதிகமான பயணங்களும் அறிவின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

10–11. நவீன கால வரலாற்றில் சீயோன் இயக்கத்தின் தோற்றம், இஸ்ரவேல் நாடு உதயமாதல், 1967ம் ஆண்டு நடைபெற்ற "ஆறு நாள் யுத்தம்" இவையாவும் பெரிய அற்புதங்கள். ஒருவர் "யூதர்கள் தேவனுடைய தீர்க்கதரிசன கடிகாரத்தில் நிமிடத்தைக் காட்டும் முள்ளாகும். அது நடு இரவு பன்னிரண்டு மணியை நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்றார்.

12. இதற்கு முந்தைய நூற்றாண்டில் (19ஆம் நூற்றாண்டு) வேதாகமம் பலவிதமான தாக்குதல்களுக்குள்ளாயிற்று. இந்தத் தாக்குதல்கள் வேதம் முன்னறிவித்த காரியங்களை உணர்த்துகிறது.

13–15,18. இந்த அடையாளங்கள் குறித்து நாம் தினமும் செய்தித்தாட்களில் படிக்கிறோம். லூக். 17:26ஐ ஆதி. 6:5, 12, 13 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். நோவாவின் காலத்திலிருந்த அக்கிரமங்கள் மூன்று. அவைகள்: (1) பொல்லாத நினைவுகள்; (2) பாலுறவில் சீர்கேடுகள்; (3) வன்முறை.

16. பஞ்சங்களும் கொள்ளை நோய்களும் போரின் விளைவுகளாகும். எனவே இவைகள் இரண்டும் ஒன்று சேர்ந்தே இருக்கும்.

17. முந்தைய நூற்றாண்டில் அதிகமான பூமியதிர்ச்சிகள் ஏற்பட்டதாக அறிக்கைகள் கூறுகின்றன.

19. "அந்திக் கிறிஸ்துவின் ஆவி" இரண்டுவிதமாகக் கிரியை செய்யும். முதலாவது, கிறிஸ்துவை தேவன் அவருக்கு அளித்த உன்னத நிலை மற்றும் அதிகாரத்திலிருந்து இறக்குவது. இரண்டாவது அதற்குப் பதிலாக வேறு ஒரு கிறிஸ்துவை ஏற்படுத்துவது. இந்த வகையில் இந்தத் தலைமுறையில் தோன்றிய மூன்று இயக்கங்களும் அந்திக்கிறிஸ்துக்களே. அவை: பாசிசம், நாசிசம், கம்யூனிசம் (பொதுவுடைமைக் கொள்கை). (இது தவிர வேறு அநேக மார்க்க சம்பந்தமான, அரசியல் சம்பந்தமான இயக்கங்களும் செயல்படுகின்றன). இருப்பினும் இந்த உலகம் 2 தெச. 2:3–12ல் கூறப்பட்டுள்ள "அந்திக்கிறிஸ்து"வின் வருகையை எதிர்நோக்கியிருக்கிறது.

# பாடம் 14

# திருப்புதல்

**முன்னுரை:**

இந்தக் கடைசிப் பாடத்தின் நோக்கம் என்னவெனில் இதற்கு முன்பதாக நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்களில் உள்ள முக்கியமான கருத்துக்களை உங்களது மனதில் பதியச் செய்வதேயாகும். பாடங்களைக் கற்றுக் கொள்வதில் "திரும்பிப் பார்த்தல்" மிகவும் முக்கியமான அம்சமாகும். இந்தக் கடைசிப் பாடத்தில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளை ஒவ்வொரு அடியாக கவனமாகப் பின்பற்றிச் செய்ய முற்படுவீர்களாயின் இதற்கு முந்தையப் பாடங்களில் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களையும் பயன்களையும் இன்னும் அதிகமான முறையில் பெற்றுக்கொள்வதோடு நீங்கள் எவ்வளவு அதிகமாகக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்று நீங்களே அறிந்துகொள்வீர்கள். மனப்பாடப்பகுதியைத் திரும்பிப் பார்க்க மறவாதீர்கள்!

**கடைசி மனப்பாடப்பகுதி: யாக்கோபு 1:25**

மனப்பாட அட்டை தயார் செய்தவுடன் சரிபார்க்கவும்.

(தினமும் முந்தைய மனப்பாடப் பகுதிகளைத் திரும்பிப் பார்க்கவும்) ☐

முதலாவது, இதற்கு முந்தைய 13 பாடங்களிலுமுள்ள கேள்விகளையும் அதற்கான பதில்களையும் படியுங்கள். ஒவ்வொரு கேள்விக்கும் சரியான விடையைப் புரிந்துகொண்டீர்களா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

இரண்டாவதாக, மனப்பாடப் பகுதியில் நீங்கள் மனனம் செய்த எல்லா வசனங்களையும் திரும்பிப்பார்க்கவும்.

மூன்றாவதாக, கீழே உள்ள பகுதி (அ) பகுதி (ஆ) இவற்றிலுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதவும்.

**பகுதி அ:** நீங்கள் கற்றுக் கொண்ட இந்தப் பாடங்கள் மூலமாய் வேதத்திலுள்ள 4 முக்கியக் கருத்துக்களை (உண்மைகளை) கீழே தரப்பட்டுள்ள அதற்குரிய இடத்தில் எழுதவும். அத்தகைய ஒவ்வொரு கருத்தும் இடம் பெற்றுள்ள வேத வாக்கியப் பகுதிகளைக் குறிப்பிடவும்.

**முதலாவது கருத்து** ........................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................

**வேதாகமப் பகுதி:** ................................................................................................
........................................................................................................................

**இரண்டாவது கருத்து** ..................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................

**வேதாகமப் பகுதி:** ................................................................................................
........................................................................................................................

**மூன்றாவது கருத்து** ....................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................

**வேதாகமப் பகுதி:** ................................................................................................
........................................................................................................................

**நாலாவது கருத்து** ........................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................

**வேதாகமப் பகுதி:** ................................................................................................
........................................................................................................................

**பிரிவு ஆ:** கீழே கொடுக்கப்பட்டுள்ள காலி இடத்தில் நீங்கள் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டதன் மூலம் உங்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள சில முக்கிய மாற்றங்களைப் பற்றி எழுதவும்.

..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

குறிப்பு: பகுதி (அ) மற்றும் (ஆ)விற்கு மதிப்பெண்கள் கிடையாது.

**கடைசி மனப்பாடப்பகுதி: யாக்கோபு 1:25**

இந்த வசனங்களை மனப்பாடமாக இங்கே எழுதவும்

..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

இந்த மனப்பாடப்பகுதிக்கு மதிப்பெண்கள்:

அனைத்தும் சரியாக எழுதியிருந்தால் 4 மதிப்பெண்கள் ..................4

(ஒவ்வொரு தவறுக்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படவேண்டும். மூன்று தவறுகளுக்குமேல் இருந்தால் மதிப்பெண்கள் கிடையாது.)

இந்தப் பாடத்திற்கான மொத்த மதிப்பெண்கள் 4

## இந்தப் பாடங்களுக்கான மதிப்பெண்கள்

**நீங்களாகவே உங்கள் தேர்வு முடிவுகளைக் கணிப்பது எப்படி:**

ஒவ்வொரு பாடத்திலும் நீங்கள் பெற்ற மதிப்பெண்களை அந்த அந்தப் பாடத்திற்கு நேராக வலது புறத்தில் கோடிட்ட இடத்தில் குறிக்கவும். மொத்த மதிப்பெண்களைக் கூட்டி அதனை தகுதிகாண் பட்டியலோடு ஒப்பிட்டுப்பார்த்து நீங்கள் பெற்றது தேர்ச்சியா, சிறந்த தேர்ச்சியா அல்லது மிகச் சிறந்த தேர்ச்சியா என்று அறிந்து கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| பாடம் 1 | .................................. | 54 | ................ |
| பாடம் 2 | .................................. | 40 | ................ |
| பாடம் 3 | .................................. | 40 | ................ |
| பாடம் 4 | .................................. | 44 | ................ |
| பாடம் 5 | .................................. | 49 | ................ |
| பாடம் 6 | .................................. | 38 | ................ |
| பாடம் 7 | .................................. | 59 | ................ |
| பாடம் 8 | .................................. | 49 | ................ |
| பாடம் 9 | .................................. | 36 | ................ |
| பாடம் 10 | .................................. | 44 | ................ |
| பாடம் 11 | .................................. | 46 | ................ |
| பாடம் 12 | .................................. | 44 | ................ |
| பாடம் 13 | .................................. | 23 | ................ |
| பாடம் 14 | .................................. | 4 | ................ |
| | மொத்தம் | 570 | |

தேர்ச்சி.................................. 50%......................285

சிறந்த தேர்ச்சி........................ 70%......................399

மிகச் சிறந்த தேர்ச்சி............. 80%......................456

* * * * *

# இந்தப் பாடங்களைக் கற்று முடித்ததற்கு வாழ்த்துக்கள்!

இனி வேதத்தைப் பற்றி இன்னும் ஆழமாக அறிந்து கொள்ள விரும்புவீர்கள்.

டெரிக் பிரின்ஸின் மற்ற புத்தகங்கள் பற்றிய பட்டியல் எங்களிடம் உள்ளது. தேவைப்படுவோர் எங்கள் முகவரிக்கு எழுதி பெற்றுக் கொள்ளுங்கள். இவைகள் வேதத்தைப்பற்றியும் தேவனுடைய திட்டத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள உங்களுக்கு உதவும்.

# ஆசிரியரைப்பற்றி. . .

டேவிட் பிரின்ஸ் இந்தியாவில் பெங்களூர் பட்டணத்தில் பிரிட்டிஷ் தம்பதியருக்குப் பிறந்தார். பிரிட்டனிலுள்ள பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களான ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றார். 1940 முதல் 1949 வரை கேம்பிரிட்ஜ்ஜில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் புராதன மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில் பேராசியராக இருந்தார். அராமியம் மற்றும் எபிரெய மொழியை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக் கழகத்திலும் கற்றார். மேலும் இவர் உலகத்திலுள்ள பல நவீன மொழிகளைப் பேசும் ஆற்றல் உள்ளவர்.

இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மருத்துவமனை ஊழியராகப் பணி புரிந்தபோது தன் வாழ்க்கையை மாற்றிய இயேசுவை நேருக்கு நேர் சந்திக்கும் அனுபவத்தைப் பெற்றார். அதைக் குறித்து அவர் பின்வருமாறு கூறுகிறார்:

> இந்த இயேசுவின் சந்திப்பினால், என்னில் ஆழமாக இரு கருத்துக்கள் பதிந்துவிட்டன: முதலாவது இயேசு ஜீவிக்கிறார் என்பது. இரண்டாவது வேதாகமம் என்றும் மாறாதது; எக்காலத்திற்கும் பொறுத்தமுள்ளது; தற்காலத்தில் நாம் பின்பற்ற வேண்டிய கருத்துக்களைக் கொண்ட நூல் என்பதாகும்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் பிரிட்டிஷ் இராணுவம் இவரை எங்கு பணியில் வைத்திருந்ததோ அங்கேயே தொடர்ந்து தங்கியிருந்தார். அந்த இடம் எருசலேம் பட்டணமாகும். லிடியா என்பவரை மணந்ததன் மூலம் லிடியாவின் குழந்தைகள் இல்லத்தில் வாழ்ந்த எட்டு பிள்ளைகளுக்கு இவர் வளர்ப்புத் தந்தையானார். இவர்கள் குடும்பமாக 1948ல் இஸ்ரவேல் நாடு உருவாவதைக் கண்டு களித்தனர். கென்யாவில் கல்வியாளராகப் பணிபுரிந்தபோது லிடியாவும் பிரின்ஸீம்

ஆப்பிரிக்கப் பெண்குழந்தை ஒன்றை ஒன்பதாவது குழந்தையாகத் தத்தெடுத்தனர். 1975ல் லிடியாவின் மரணத்திற்குப் பின் 1978ல் பிரின்ஸ் மறுமணம் செய்தார். லிடியாவைப் போல் ரூத்தையும், அவர்கள் எருசலேம் பட்டணத்தில் ஆண்டவருடைய ஊழியம் செய்து கொண்டிருந்த போது சந்தித்தார். ரூத்தின் பிள்ளைகள் மூவருடன் அவர்களுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் பன்னிரண்டு பேராயினர். மேலும், அவர்களுக்கு அநேகப் பேரப்பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளுமாக அவர்கள் குடும்பம் பெரியதானது.

இவரது சபைப் பாகுபாடற்ற நிலையினால் பலதரப்பட்ட இன, மத மக்கள் மத்தியிலும் இவர் பிரசங்கிக்க வழிவாசல் திறக்கப்பட்டது. நமது காலத்தில் சர்வதேச அளவில் சிறந்த வேத விற்பன்னராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இன்றைக்கு டெரிக் பிரின்ஸீடன் **(Today with Derek Prince)** என்ற தினந்தோறும் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சி உலகத்தின் பாதிக்கு மேல் உள்ள மக்கள் அரபி, ஐந்து சீன மொழிகள் (மண்டாரின், அமாய், கேன்டோனிஸ், ஷாங்கையீஸ், ஸ்வேடோ,) மங்கோலியன், ஸ்பேனிஷ், ரஷ்யன்,டோங்கன் ஆகிய மொழிகளில் கேட்கின்றனர். இவர் 50 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார், 500 ஒலி நாடாப் போதனைகளையும், 160 வீடியோ போதனைகளையும் வழங்கியுள்ளார். இவை அறுபதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'உலகளாவிய தலைவர்களின் அமைப்பு' (Global Outreach Leaders Programme) என்ற டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் மூலமாக இவரது புத்தகங்களும் ஒலி நாடாக்களும் மூன்றாவது உலக நாடுகள் கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா ஆகிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படுகின்றன. 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எருசலேம் பட்டணத்தில் வைத்து கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் தலைமையிடம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வட கரோலினா மாகாணத்திலுள்ள சார்லட் பட்டணத்தில் அமைந்துள்ளது. இதன் கிளை அலுவலகங்கள் ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, ஹாலந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, தென்னிந்தியா மற்றும் பிரிட்டனில் அமைந்துள்ளன.

**Write for a free catalogue of books, teaching tapes and Videos by:**

**DEREK PRINCE MINISTRIES - INDIA,**

18/32, MANGAMMAL SALAI,
RENGA NAGAR,
TRICHY - 620 021,
TAMIL NADU, S. INDIA.
PHONE: 00-91-431-2459464 / 2459664
FAX: 00-91-431-2459564
E-MAIL: r_m_c@vsnl.com

# 6 நூல்கள்

## உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தி, உங்கள் வாழ்வினை மாற்றியமைக்க

**தெய்வீகப் பரிமாற்றம்**
சுவிசேஷத்தின் முழு செய்தியும் ஒரு சரித்திர சம்பவத்தில் சுழல்கிறது: அது சிலுவையில் இயேசு மரித்த தியாக மரணமாகும்.

**சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருதல்**
சாபங்கள் எங்கிருந்து வருகின்றன, அவைகள் எவ்வாறு செயல்படுகின்றன, அவைகளிலிருந்து விடுபட்டு தேவனுடைய பரிபூரண ஆசீர்வாதங்களை அனுபவிப்பது எவ்வாறு என்பதை இங்கு காணலாம்.

**உங்களில் உள்ள தூய ஆவியானவர்**
இந்நூல் உங்களை பரிசுத்த ஆவியின் உதவியுடன் தேவனுடன் நெருங்கிய உறவு கொள்ள உதவக் கூடிய பகுதி.

**தேவனின் மருந்துப் புட்டி**
நோய்களை மேற்கொண்டு ஆரோக்கியத்துடன் வாழ உதவக்கூடிய தேவனுடைய வார்த்தையின் ஆற்றலை அனுபவிக்க உதவும் பகுதி.

**ஆவிக்குரிய போராட்டம்**
கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சாத்தானுடனும் அவனுடைய வல்லமையுடனும் போராடும் போராட்டம். இதை வாசிப்பதின் மூலம் வெற்றியின் பாதையில் நடைபோடலாம்.

**சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள்**
தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்வது எவ்வாறு என்றும் உங்களுடைய வாழ்க்கையை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதற்கு வழி இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

DPM
DEREK PRINCE MINISTRIES

ISBN 81-87858-84-2